

# வீணையில் உறங்கும் ராகங்கள்

இந்துமதி

# வீணையில் உறங்கும் ராகங்கள்

## 1

இன்றைக்குச் சீக்கிரம் விழிப்பு வந்துவிட்டது. இன்று மட்டுமில்லை; நாலு நாளாகவே இப்படித் தான் மூன்று மணிக்கும் நாலு மணிக்கும் தூக்கம் கலைந்து போகிறது. பாதி விழிப்பாகக்கூட இல்லை. மொத்தமாய் முகத்தை அலம்பின மாதிரி சடக்கென்று விழித்துக் கொள்கிறது. அதன் பின் படுக்கையில் படுத்துக் கொண்டிருக்கவும் முடிவதில்லை. ஏதாவது படிக்கவும் பிடிப்பதில்லை. ஜன்னல் ஓரத்தில் முழங்காலைக் கட்டிக்கொண்டு உட்காரத்தான் முடிகிறது. வானத்தைப் பார்க்கப் பிடிக்கிறது.

இப்போதும் அப்படித்தான் உட்கார்ந்து கொண்டிருந்தாள் யமுனா; வானத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஜன்னலடியில் இந்த மாதிரி அவளால் மணிக் கணக்கில் உட்கார முடியும். வீடு நிசப்தமாக இருக்கிறபோது, மனசு சரியில்லாத போது, இப்படி உட்காருவது வழக்கமாகிவிட்டது. அப்போது மட்டும் தான் என்பதில்லை, எந்த யோசனையும் இல்லாமல்-எந்தச் சலனமுமில்லாமல்-குழந்தையாகக் கிடக்கிறபோதும் அதுதான் இடம். அந்த வீட்டைப் பார்க்க வந்த அன்றே அவளுக்குப் பிடித்துப்போன இடம். 'இதுதான் நம்ம இடம்' என்று மனசுக்குள் ஒதுக்கி வைத்திருந்த இடம். அங்கே ஜிலுஜிலுவென்று காற்று வீசும். பக்கத்து மல்லிகைப் பந்தலிலிருந்து கம்மென்று வாசனை வரும். ஓரத்தில் இருக்கிற

குட்டைத் தென்னையின் சலசலப்புக் கேட்கும். மத்தியான நேரமானால் அணில்கள் துரத்தி விளையாடும். ஓணான் தலையைத் தூக்கித் திருட்டுப் பார்வை பார்க்கும். ஜன்னலில் வந்து உட்காருகிற ஒற்றைக் காக்கை வரட்வரட்டென்று கத்தும். ராத்திரி நேரத்தில் எப்போதாவது சுவர்க்கோழி இரையும்.

அந்த இடத்திலிருந்து பார்க்கிற போது எல்லாமே அழகாகத் தெரிகிறது. அவளுக்குப் பிடித்தமான அந்த ஒற்றை நட்சத்திரம் பளிச்சென்று கண்ணில் அடிக்கிறது. வானத்தின் நீலம், மாறுகிற மேகங்கள், மினுக்குகிற நட்சத்திரங்கள் என்று ஒவ்வொன்றாய்ப் பார்த்துக் கொண்டிருப்பது பழகிவிட்டது. இந்தப் பார்வைகள் மட்டும்தான் அலுக்காததாகத் தோன்றியது. இது மட்டுமில்லை, அவளுக்கு எதுவுமே அலுத்த தில்லை- இந்தத் தனிமையைத் தவிர, இந்தத் தனிமை கூட சில நேரங்களில்தான் அலுத்துப் போகிறது..

அப்பாவுக்கும் அப்படித்தான் இருந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். அந்தச் சந்தர்ப்பங்களில்தான் அவர் விஸ்கி பாட்டிலை வைத்துக் கொள்கிறார். இல்லாவிட்டால் கிளப்பிற்குப் போகிறார். ரம்மி ஆடுகிறார். நிறையப் பணத்தைத் தொலைத்துவிட்டு ராத்திரி பத்துக்கோ பதினொன்றுக்கோ வீட்டுக்கு வருகிறார்.

அப்பாவை நினைத்தபோது யமுனாவுக்குக் கஷ்டமாக இருந்தது. பெரிய நெருப்பை முழுங்கிவிட்டு அவர் படுகிற அவஸ்தை புரிந்தது. 'எத்தனை பெரிய நெருப்பு! அதை எப்படித் தாங்கிக் கொண்டார்? அப்பா, எப்படி முடிந்தது உங்களால்...? அந்த நெருப்பு இன்னும் உங்கள் மனசுக்குள் கனன்று கொண்டுதான் இருக்கிறதோ...? மேலே மூடின சாம்பல் மாதிரி உங்களின் கம்பீரம் அதை அடக்கிக் கொண்டிருக்கிறதோ? ஒரு சின்ன விசிறலில் சாம்பல் விலகி அது மறுபடியும் தன் அக்கினிக் கண்ணைக் காட்டுமோ...?'



ஆனால் அப்படியும் தெரியவில்லை. ஜானகி வீட்டை விட்டுப் போனபின், ஒரு சின்னக் காகிதத்தில் நாலு வரிகளில் அவள் தனக்குப் பிடித்த அந்தக் கிறிஸ்துவ இளைஞனோடு போய் விட்டதைத் தெரிவித்தபின் அப்பா மௌனமாகத்தான் இருந்தார். நிதானமாக அந்தக் கடிதத்தைப் படித்தார். படித்து விட்டுத் திருப்பி அவளிடமே கொடுத்தார்.

அப்பாவின் அந்த நிதானம், அமைதி, அப்போதைய அவருடைய முகம் எல்லாம் ஞாபகத்துக்கு வந்தன. அவளைப் பார்த்த பார்வை ஞாபகத்துக்கு வந்தது. சொன்ன வார்த்தைகள் ஞாபகத்துக்கு வந்தன.

''சரி. அவ அம்மா பொண்ணு. அப்படியே நடந்துண்டுட்டா. நீயாவது என் பொண்ணா நடந்துக்கப் போறியா இல்லே-அம்மா பொண்ணாகவே இருக்கப் போறியா...?''

அவள் அதற்குப் பதில் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. அப்படியே நின்றிருந்தாள். அவர் தன் அறைக்குப் போன பின்பும் அப்படித்தான் இருந்தாள். அவர் சொன்ன வார்த்தைகள் அவளுக்குப் புரிந்தன. அதன் அர்த்தம் புரிந்தது. அம்மாவைப் பற்றி அவளுக்கு எதுவும் தெரியாது. விவரம் தெரிந்த நாளிலிருந்து அப்பாதான் தெரியும். அப்பா மட்டும்தான் தெரியும். அவர்களை வளர்த்தது அவர்தான். யார் உதவியும் இல்லாமல் தானே வளர்த்தார். அதனால் அவர்களுக்கு அம்மாவின் தேவை இல்லாமல் போயிற்று. அவசியமில்லாததாக ஆயிற்று. அது அவசியம் என்று உணர ஆரம்பித்தபோது அம்மா பற்றிய கேள்விகள் ஒவ்வொன்றாய் மனசுக்குள் எழுந்தபோது ஜானகிதான் அப்பாவிடம் போய்க் கேட்டாள். அப்போதும் யமுனா எதுவும் கேட்கவில்லை. பேசாமல் நின்றிருந்தாள்.

ஜானகி கேட்டபோது அப்பா சாப்பிட்டுக் கொண்டிருந்தார். ஈயப் பாத்திரத்து ரசத்தைக் கரண்டி கரண்டியாய்த்

தட்டில் ஊற்றிக் கொண்டிருந்தார். ஜானகி போய் எதிரில் நின்றதும் தலையை நிமிர்த்தாமல் ''என்னம்மா...?'' என்று கேட்டார்.

ஜானகி தயங்கவில்லை. பயப்படவில்லை. குரல் தைரியமாய் வந்தது. ''எங்க அம்மா எங்கேப்பா...?''

அந்தக் கேள்வி அவருக்குள் அடியாக விழுந்திருக்க வேண்டும். கை சாப்பிடுவதை நிறுத்தியது. தலை சட்டென்று நிமிர்ந்தது. கண் ஜானகியையே பார்த்தது. ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் என்று அப்படியே போயிற்று. அவரிட மிருந்து பதில் எதுவும் வரவில்லை. பின் பாதி சாப்பாட்டில் கையை உதறிக்கொண்டு எழுந்துவிட்டார். தன் அறைக்குப் போய்க் கதவை மூடிக்கொண்டார். அன்று அவர் ஆபீசுக்குப் போகவில்லை. வெளியில் எங்கும் போகவில்லை. யாரோடும் பேசவில்லை. அறையை விட்டும் வரவில்லை. இவர்களும் சாப்பிடவில்லை. பள்ளிக்கூடம் போகவில்லை. பேச்சு எதுவும் இல்லை. சுவரில் சரிந்து உட்கார்ந்தார்கள். பன்னிரண்டு, ஒன்று என்று கடிகாரம் மட்டும் அடித்துக்கொண்டே போயிற்று. மூன்று அடிக்கிறவரை எண்ணினார்கள். பின் தரையில் படுத்துத் தூங்கிப் போய் விட்டார்கள்.

அதன்பின்பு அப்பா வந்து எழுப்பினதுதான் தெரியும். அவர் எழுப்பினபோது ராத்திரி மணி பத்தோ, பதினொன்றோ ஆகியிருக்க வேண்டும். வழக்கமாக எழுப்புகிற மாதிரி, ''அம்மாடி.... எழுந்திருங்கம்மா...'' என்று தட்டித்தான் எழுப்பினார். குரலில் கோபம் இல்லை. முகத்திலும் இல்லை. கண் மட்டும் சிவந்து போயிருந்தது. அப்பா அழுதிருக்க வேண்டும். இல்லை. எந்தச் சந்தர்ப்பத்திலும் அவர் அழக் கூடியவர் இல்லை. அதனால் அதிகம் குடித்திருக்க வேண்டும்...



அப்பா விளக்கைப் போட்டுக் கொண்டு சமைய லறைக்குப் போனார். ஒரு பெரிய கிண்ணத்தில் மோர் சாதத்தைக் கலந்து கொண்டு வந்தார். அவர்களை உட்காரச் சொல்லிச் சாப்பிட வைத்தார். தானே அந்தப் பாத்திரங்களை எடுத்துக் கொண்டு போய் அலம்பினார். பின் அவர்களைப் பார்த்து,

''போய் படுக்கையில் படுத்துக்கோங்கோ'' என்றார். அவர்கள் படுத்துக் கொண்டதும் விளக்கை அணைத்து விட்டுத் தானும் தன் அறைக்குப் படுக்கப் போனார்.

அதன் பின் மறுபடியும் அம்மாவைப் பற்றி எதுவும் கேட்கவில்லை. கேட்பதற்கும் தைரியம் வரவில்லை. கேட்டுத் தெரிந்து கொள்ள வேறு யாரும் இல்லை. ஆனால் அம்மாவைப் பற்றின கேள்விகள் மட்டும் மனசுக்குள் முள்ளாகத்தான் குத்திக் கொண்டிருந்தன.

ஜானகி வீட்டை விட்டுப் போன அன்று அந்த முள்ளும் எடுத்து எறியப்பட்டது. அப்பா தானாகத்தான் அதை எடுத்தெறிந்தார். அல்லது வாய் தவறிப்போய் எறிந்திருக்க வேண்டும். அது எடுக்கப்பட்டபோது ஏற்பட்ட ரணமும் வலியும்... அதை அப்பா எப்படித் தாங்கிக் கொண்டார் என்று நினைத்து மனசு பிரமித்தது. எப்படிப்பட்ட ஹிம்ஸை அது! எத்தனை பெரிய ஹிம்ஸை. மனசை அலைய அலைய வைக்கிற ஹிம்ஸை. பார்வையை வெறிக்க வைக்கிற ஹிம்ஸை. சாப்பாடில்லாமல், தூக்கமில்லாமல்... எத்தனை பகல்கள்... எத்தனை ராத்திரிகள்...

'அம்மா... இந்த அப்பாவோடு நீ பத்து வருஷங்கள் குடித்தனம் நடத்தியிருப்பாயா? இந்தப் பத்து வருஷப் பழக்கத்தை-வெறும் பழக்கம்தானா அது? பழக்கம் மட்டும் தானா? அப்படியே இருந்தாலும் அதை ஒரே நாளில் உதறி யெறிந்துவிட்டுப் போக எப்படி மனசு வந்தது? நீ போன போது

எங்களுக்கு விவரம் தெரியாத வயசுதான். கவுனைப் போட்டுக்கொண்டு குதித்து ஓடின வயது. இரட்டைப் பின்னல் அசையப் பள்ளிக்கூடம் போன வயது. சாக்லெட்டைக் காக்காய்க் கடி கடித்துப் பங்கிட்டுக் கொண்ட வயது. அந்த வயசில் எங்களை விட்டு ஏன் போனாய்? எதற்காகப் போனாய்? அப்படி அப்பாவிடம் என்ன குறை உனக்கு? கூடப் போன அந்த மனிதரிடம் என்ன நிறை...?'

இதெல்லாம் அவளுக்குப் புரியவில்லை. புரியாத ஒரு விஷயத்தை வைத்துக் கொண்டு அம்மாவைக் குறை சொல்லவும் முடியவில்லை. அம்மா செய்தது சரியா தவறா என்று முடிவு செய்யும் தகுதி தனக்கில்லை என்று நினைத்தாள். இதில் சம்பந்தப்பட்டவர் அப்பா. அவர் செய்ய வேண்டிய முடிவு அது...

ஆனால் ஜானகி...? ஜானகியைப் பற்றி அவளால் முடிவு செய்ய முடிந்தது. அவளை நினைக்கிறபோது மனசுக்குள் கோபம் வந்தது. இருபது வருஷமாய்க் கொட்டி வளர்த்த அப்பாவின் பிரியத்தை ஒரு வெள்ளைக் காகிதத்தின் நான்கு வரிகளில் முடித்துக்கொண்டு போனது தாங்க முடியாததாக இருந்தது. அப்பாவுக்கு அவளிடம் பிரியம் அதிகம். தான் ஆசைப்பட்ட மாதிரி அவள் முதல் பெண்ணாகப் பிறந்துவிட்ட பிரியம். அது அவர் பார்வையில் தெரியும். அவளை 'ஜானு...' என்று கூப்பிடுகிறபோது குரல் குழைந்துபோகும். முகம் முழுதுமே மலர்ந்து சிரிக்கும். அவள், பார்வைக்கு அம்மா மாதிரி இருந்திருக்க வேண்டும். அந்த உயரம்-வேகவைத்து உரித்த சேப்பங்கிழங்கு மாதிரி வெள்ளை வெளேரென்ற நிறம். கால் முட்டியைத் தொடுகிற நீளமான கூந்தல்... ஜானகி அழகுதான். யமுனாவைவிட அழகு...

யமுனா அப்பா மாதிரி. உயரம், பார்வை, பேச்சு எல்லாமே அப்பா. நிறம்கூட அப்பாவின் நிறம்தான். மஞ்சள் கலந்த மலையாளத்து வெள்ளை. பார்த்த உடனே சட்டென்று



மனசைப் பிடித்து நிறுத்துகிற அதே கம்பீரம். நடையில்-பார்வையில்-பேச்சில் எல்லாவற்றிலும் அந்தக் கம்பீரம் தெரியும். எதிரில் வருகிறவர்களை மரியாதையாகச் சிரிக்க வைக்கிற கம்பீரம். கூட்டத்தில் ஒதுங்கி வழி விட வைக்கிற கம்பீரம். பக்கத்தில் நெருங்கத் தயங்க வைக்கிற கம்பீரம். அதுதான் எல்லாரையும் மிரட்டியிருக்க வேண்டும். அவளைத் தனியாக ஒதுக்கியிருக்க வேண்டும். உயரத்தில் நிறுத்தியிருக்க வேண்டும்.

ஆனால் ஜானகி அப்படி இல்லை. அவளால் அந்த மாதிரி தனியாக நிற்க முடிந்ததில்லை. யாரையும் ஒதுக்க முடிந்ததில்லை. முகம் முழுதும் சிரிப்பும்-வாய் நிறைய வார்த்தையுமாய் எல்லாரோடும் பேச முடிந்தது. சுலபமாகப் பழக முடிந்தது. ஒரு நிமிஷப் பழக்கம் அவளுக்குப் போதுமானதாய் இருந்தது. அப்பாவைப் பற்றி-யமுனாவைப் பற்றி-பார்த்தே இருக்காத அந்த அம்மாவைப் பற்றியெல்லாம் சொல்ல முடிந்தது. அவளுடைய அழகு கூட அடக்கமான அழகாக இல்லை. மருட்டுகிற அழகாகத்தான் இருந்தது. ரம்பை, ஊர்வசி என்று படங்களில் பார்க்கிற மாதிரி ஒரு அழகு. கிட்டே கூப்பிடுகிற அழகு. சிரித்துப் பேசுகிற அழகு. அவளுக்குத் தன் அழகைப் பற்றித் தெரிந்திருந்தது. அதன் பலத்தைப் பற்றித் தெரிந்திருந்தது. அதுவே அவளுடைய பலவீனமாகவும் போயிற்று. அது புரிந்துதான் அப்பா அவளைப் போர்த்த நினைத்தாரோ...? அதனாலேயே அவள் அந்தப் போர்வையை உதறிக் கொண்டு அப்படிப் போய் விட்டாளோ...?

அப்பா சொல்லி அவள் எதையும் கேட்டதில்லை. அப்பா மீது அவளுக்கு வெறுப்பு ஏற்பட்டு வெகு நாளாகியிருந்தது. அம்மாவைப் பற்றி அவர் எதுவும் சொல்லாமற் போனதிலிருந்து அவள் அவரை ஒதுக்க ஆரம்பித்தாள். தனக்கும் அவருக்குமிடையில் பெரிதாக ஒரு பள்ளத்தை

வெட்டிக் கொண்டாள். அவரைப் பற்றி நிறையக் கற்பனைகள் பண்ணத் தொடங்கினாள். அவர் ஒரு குடிகாரராக-பெண்டாட்டியை அடிப்பவராக-நிறையப் பெண்களோடு சம்பந்தப்பட்டவராக -'ஒருவேளை அம்மாவைக் கொலை பண்ணியிருக்காரோ...' என்ற சந்தேகத்தில் கொலைகாரராக...

இப்படியெல்லாம் அவள் மனசில் தான் உருவாகி இருப்பதை அப்பாவால் ஏன் புரிந்து கொள்ள முடியவில்லை? தன்னை அவள் ஒதுக்குவதை எப்படி உணர்ந்து கொள்ள முடியாமற் போயிற்று. அதை நினைத்த போது யமுனாவின் வருத்தம் அதிகமாயிற்று. அவரை அலட்சியப்படுத்தின தெல்லாம் மனசுக்குள் வந்து போயிற்று.

அவர் அவளுக்குப் பிடிக்கும் என்று சப்போட்டாப்பழம் வாங்கிக் கொண்டு வருவார். அன்று அவளுக்கு அது பிடிக் காமற் போகும்.

''ஏம்மா... பழம் சாப்பிடலே...?''

''இல்லேப்பா, பிடிக்கலே, வயிறு சரியாயில்லே...''

''ஜானு... இந்தாம்மா. மூணு டிக்கெட் 'புக்' பண் ணிட்டேன். நீ பார்க்கணும்னு யமுனாகிட்டே சொல்லிண் டிருந்தியே, அந்தப் படம்தான்; நாளைக்கி சாயந்திரம் சீக்கிரம் வந்துடறேன். ரெடியா இருங்கம்மா போகலாம்...''

மறுநாள் சாயந்திரம் சரியாக ஐந்து மணிக்கு அவர் வரும்போது அவள் ஒரு மூலையில் படுத்துக் கொண்டிருப் பாள். நெற்றிப் பொட்டில் அமிர்தாஞ்சனம் நெடியடிக்கும். அப்பா பக்கத்தில் போய் மெதுவாகத் தொட்டுப் பார்ப்பார். ''என்னம்மா உடம்புக்கு?'' என்று இதமாகக் கேட்பார். அவள் சடக்கென்று அந்தக் கையை விலக்குவாள். ''காலையிலிருந்து ஒரே தலைவலி'' என்று முணு முணுப்பாள். அவர் இன்னும் இதமாக ''பரவாயில்லேம்மா, டிக்கெட் போனால் போகட்டும்.



இன்னொரு நாள் பார்த்துக்கலாம்'' என்று சொல்லிவிட்டுத் தலைவலி மாத்திரை வாங்க மறுபடியும் வெளியில் போவார்.

அவர் போவதைப் பார்க்கும்போது யமுனாவிற்குப் பாவமாக இருக்கும். 'அப்பா... புரிந்து கொள்ளுங்களேன்!' என்று மனசு அரற்றும்.

எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் பண்ணினதும் அவர் தானே ஸ்டெல்லாவிலிருந்தும் எஸ்.ஐ.இ.டியிலிருந்தும் அப்ளி கேஷன் ஃபாரம் வாங்கிக் கொண்டு வந்தார்.

அவள் அதை வாங்கி மேஜை மீது போட்டாள். தான் மேலே படிக்கப் போவதில்லை என்பதைத் தீர்மானமாகச் சொன்னாள். அதைக் கேட்டதும் அவர் அதிர்ச்சியடைந்தார்.

''படிக்கப் போறதில்லையா...? என்னம்மா இது...''

''இல்லே... எனக்குப் படிக்கணும்னு தோணலே...''

''படிக்கத் தோணலியா? பின்னே என்ன செய்யப் போறே...?''

''ஒண்ணும் செய்யப் போறதில்லை, சும்மாத்தான் இருக்கப் போறேன்...''

''என்னம்மா இப்படிப் பதில் சொல்றே? ஒண்ணுமே செய்யாமல் எப்படி இருக்க முடியும்?''

''என்னால் முடியும்'' என்றாள் ஜானகி.

அதற்கு மேல் அவரால் ஒன்றும் கேட்கவும் முடிய வில்லை. ஜானகியைப் பற்றி அவர் மனசில் நிறையக் கனவுகள் இருந்திருக்க வேண்டும். அவளை ஒரு டாக்டராக- இல்லா விட்டால் ஐ.ஏ.எஸ். அதிகாரியாக-அல்லது ஒரு பெரிய புரொஃபஸராக ஆக்கிப் பார்க்க நினைத்திருக்க வேண்டும். அவையெல்லாம் கலைந்து போன வருத்தம் முகத்தில் தெரிந்தது. ஏமாற்றம் தெரிந்தது. ஆனாலும் அவர் ஒன்றும்

சொல்லவில்லை. இரண்டு நாள் கழித்து மறுபடியும் கெஞ்சுகிற குரலில் நிதானமாகக் கேட்டுப் பார்த்தார்.

''காலேஜில் சேர்ந்து படிக்கப் பிடிக்கலைன்னா விட்டுடு. வேற ஏதாவது படியேன். டீச்சர்ஸ் ட்ரெய்னிங் சேரேன். டைப்ரைட்டிங் கத்துக்கோயேன்...''

''நான் எந்த வேலைக்கும் போறதா இல்லே...''

''வேலைக்குப் போக வேணாம்மா. உனக்கு ஒரு பொழுது போக்கா இருக்குமேன்னு...''

''எனக்கு இப்படியே பொழுது போறது. அனாவசியமா-நீங்க எதுக்குக் கவலைப்படறேள்...?''

அதன் பின் அவர் அதைப்பற்றிப் பேசவே இல்லை. ஜானகி வீட்டில் இருக்க ஆரம்பித்தாள். கொஞ்சம் கொஞ்சமாக சமைக்க ஆரம்பித்தாள். காப்பி போட ஆரம்பித்தாள். டிபன் பண்ண ஆரம்பித்தாள். வீட்டில் அவளை மட்டும் தனியாக விட்டுப் போக அப்பா பயந்திருக்க வேண்டும். அதனாலேயே வேறு வீடு தேடத் தொடங்கினார். லஸ் கார்னருக்கு அருகில் நான்கு குடித்தனங்கள் இருக்கிற ஒரு வீடாகப் பார்த்தார். தினமும் ஆபீசுக்குப் போகும் முன் அந்த வீட்டுக்கார அம்மா விடம்,

''குழந்தை தனியாக இருக்கா. கொஞ்சம் பார்த்துக் கோங்கோ...'' என்று சொல்லிவிட்டுப் போவார்.

அந்தக் குழந்தை அந்த மாதிரி ஒரு கடிதத்தை எழுதி வைத்துவிட்டுப் போனபின் அப்பா மனசுக்குள் உடைந்து போயிருக்க வேண்டும். வெளியில் எதுவும் சொல்லவில்லை. வழக்கமாய்க் குளிக்கிற மாதிரி குளித்தார். நிதானமாகச் சாப்பிட்டார். கொஞ்ச நேரம் பேப்பர் படித்தார். பின் படுக்கப் போய்விட்டார். யமுனாவும் ஒன்றும் கேட்கவில்லை. வீடு நிசப்தமாக- அமைதியாக இருந்தது.



மறுநாள் ராத்திரி எட்டு மணி இருக்கும். ''யமுனா, கொஞ்சம் என் கூட வாம்மா'' என்று அப்பா அவளை வெளி யில் அழைத்துக்கொண்டு போனார். காம்பவுண்டுச் சுவரும் தோட்டமுமாய் இருந்த தனி வீடு ஒன்றைக் காட்டினார். வீடு சின்னதாக அழகாக இருந்தது. இரண்டு படுக்கையறைகள், வரவேற்பு அறையும், சாப்பாட்டு அறையும் சேர்ந்து பெரிசாக ஒரு ஹால்-பின்னால் சின்னதாகச் சமையற்கட்டு. கதவைத் திறந்து கொண்டு போனால் சிமெண்ட் பூசின இடத்தில் கிணறும், துவைக்கிற கல்லும். அப்படியே நடந்தால் வாசல் வரும். வாசலில் நாலைந்து தென்னை மரங்கள்-குட்டையாய் மலையாளத் தென்னை. ஓரத்தில் நந்தியாவட்டை, பக்கத்தில் செம்பருத்தி, மல்லிகைப் பந்தல் போட்டு மொட்டுக் கட்டி யிருந்தது. காற்று ஜிலுஜிலு வென்று வந்தது. யமுனாவிற்கு அந்த வீடு பிடித்திருந்தது. வீட்டுக்காரரும் நல்லவராக இருந்தார். எப்போதும் சிரித்துக் கொண்டிருந்தார். குரல் உயராமல் பேசினார்.

''வீட்டை நன்றாகப் பார்த்துக்கறீங்களோ இல்லையோ, தோட்டத்தை மட்டும் நன்றாகப் பார்த்துக்கோங்கோ. ஒரு இலை, ஒரு செடி கூட வாடக் கூடாது. சின்னத் துளிர்கூட வதங்கக்கூடாது. அப்படிக் குழந்தை மாதிரி பார்த்துப் பார்த்துக் கவனிச்சது.''

அதைக் கேட்டு அப்பா லேசாகப் புன்னகை செய்தார். ''கவலைப்படாதீங்கோ. இவளுக்கும் செடி கொடின்னா பிரியம்தான். நன்னா கவனிச்சுப்பாள்...''

திரும்பி வரும்போது யமுனா மெதுவாகக் கேட்டாள்.

''வீடு யாருக்கப்பா...?''

''நமக்குத்தான்...''

''நமக்கா?''

''ம்.. காவலா இருக்கும்னுதான் நாலு குடித்தனத்துக்கு நடுவில் வீட்டைப் பார்த்தேன். வசதி போறாதுன்னு தெரிஞ்சும் அங்கே போனேன். இப்போது எது காவல்-யார் காவல்ங்கறதே புரியலே. மனசைவிடப் பெரிய காவல்காரனும் இல்லே, மகா திருடனும் இல்லே. இது தெரிஞ்சப்புறம் அங்கே இருந்து ஏன் கஷ்டப்படணும்? அதனாலதான் தனியா-வசதியா இருக்கிற இந்த வீட்டைப் பார்த்திருக்கேன்; உனக்குப் பிடிச்சிருக்கா...?''

அவள் பிடித்திருப்பதாகத் தலையாட்டினாள். பேச முடியாமல் தொண்டையை அடைத்தது. கண்களில் நீர் கட்டியது. 'இந்த அப்பாவை எப்படி ஏமாற்றத் தோன்றியது? ஜானகி, நீ ஏன் இப்படிச் செய்தாய்...?'

தான் அந்த மாதிரி எதுவும் செய்துவிடக் கூடாது என்று நினைத்துக் கொண்டாள். இந்த அப்பாவை நோகச் செய்யக் கூடாது, அவர் மனசைக் கஷ்டப்படுத்தக் கூடாது. அவருக்குப் பிடிக்காததாக ஒன்றும் செய்யக் கூடாது...

மறுநாளே அவர்கள் அந்த வீட்டுக்குக் குடி வந்தார்கள்.

## 2

ஐந்து மணிக்கு அலாரம் அடித்தது. தினமும் அது ஐந்துக்குத்தான் அடிக்கும். இன்றும் அப்படித்தான் அடித்தது. ஒரு அடங்கிய சத்தத்தோடு இனிமையாக அடித்தது. 'என்னைக் கொஞ்சம் நிறுத்தேன்...' என்று கெஞ்சுகிற மாதிரி அடித்தது. ஜன்னல் பக்கத்திலிருந்து எழுந்து வந்த யமுனா செல்லமாய் அதன் தலையில் தட்டினாள். அது சட்டென்று வாயை மூடிக் கொண்டது. 'ஏன் என்னை அடித்தாய்...?' என்கிறாற் போல் அவளைத் தன் பச்சைக் கண்களால் பார்த்தது. ஒரு சின்னக் குழந்தையின் கோபமாய் அது பளிச்சிட்டது. முரண்டு பிடித்து



விழித்துப் பார்க்கிற குழந்தை... அதைப் பார்த்த யமுனாவிற்குச் சிரிப்பு வந்தது. தினமும் அது இப்படித்தான் பார்க்கும். அவளுக்கும் இதே சிரிப்பு வரும். அந்தப் பச்சைக் கண்களின் பளிச்சிடலில் மிஸஸ் மில்லரின் ஞாபகமும் வரும். கோலிக் குண்டு மாதிரி என்ன கண்கள்? அதில் அந்த மாதிரி ஒரு பச்சை எப்படி வர முடியும்? நீல நிறமாய் இருந்து அவள் பார்த்திருக்கிறாள். சாம்பல் நிறத்தில் பார்த்திருக்கிறாள். பழுப்பு நிறத்தில் பார்த்திருக்கிறாள். ஆனால், அந்த மாதிரி ஒரு பச்சை...? மனத்தின் பசுமைதான் கண்களில் இப்படிப் பிரதிபலிக்கிறதோ...?

மிஸஸ் மில்லரை நினைக்கிறபோது அந்தக் கண்களும் முகமும், குழந்தைச் சிரிப்பும்தான் நினைவுக்கு வருகின்றன. ஐம்பது வயதுக்கு மேல் இப்படி ஒரு பிஞ்சு முகமா! முகம் மட்டுமில்லை; மிஸஸ் மில்லரின் மனசு கூடக் குழந்தைதான். அன்று மிஸஸ் மில்லர் லீவு எடுத்திருப்பது சட்டென்று ஞாபகத்துக்கு வந்தது. தன் நாட்டிலிருந்து வந்திருக்கிற யாருடனோ கன்னியாகுமரிக்குப் போகப் போவதாகச் சொன்னாள். சனிக்கிழமை கூட அரை நாள் தான் வேலை செய்தாள். போகும் போது யமுனாவைப் பார்த்து 'திங்கட் கிழமை என் வேலையையும் கொஞ்சம் சேர்த்துக் கவனி.ஐ வில் பி பேக் ஒன்லி ஆன் ட்யூஸ்டே...' என்று சொல்லிவிட்டுப் போயிருந்தாள். திங்கட்கிழமைகளில் வேலை அதிகமிருக்கும். பரீட்சை சமயமாக இருப்பதால் ரெஃபரென்ஸ் செக்ஷனுக்கு நிறையப் பேர் வருவார்கள். 'க்ளைமேட்டாலஜி பை ட்ரிவார்த்தா எங்கே மேடம்?' என்று கேட்டுக் கொண்டு, ஜியாகிரஃபி ஸ்டூடண்ட் ஒருவன் வருவான். அதை எடுத்துக் கொடுத்துவிட்டு வந்தால் ''கான்டெம்பரரி எக்கனாமிக்ஸ் எங்கே இருக்கும்னு தெரியுமா? தேடிப் பார்த்தும் கிடைக்க வில்லை!'' என்று எக்கனாமிக்ஸ் மாணவி ஒருத்தி கேட்பாள். இந்த மாதிரி கேட்பவர்களுக்கு உதவி செய்ய வேண்டும்.

குறிப்பிட்ட தேதிக்குள் திரும்பி வராத புஸ்தகங்களுக்கு ரிமைண்டர் லெட்டர் அனுப்ப வேண்டும். இதன் நடுவில் மிஸஸ் மில்லருக்காக புக் செக்ஷனையும் கவனித்தாக வேண்டும். மிஸஸ் மில்லருக்கு இவளுடைய ரசனையில் நம்பிக்கை அதிகம். மிஸஸ் மில்லர் மட்டுமில்லை, தமிழ்ப் புத்தகப் பிரிவின் சீஃப் லைப்ரேரியன் சாந்தா ராமசாமிக்கும் இவள் தான் புஸ்தகங்களைத் தேர்ந்தெடுப்பாள்.

ஹால் கடிகாரம் ஐந்தரை அடிப்பதைக் கேட்டதும் யமுனா எழுந்து கொண்டாள். தினமும் இந்த நேரத்திற்குக் காப்பி தயாராகிவிடும். சூடாக ஒரு டம்ளர் குடித்த பின்புதான் வேலை ஓடும். குக்கரில் அரிசியும் பருப்பும் கழுவி வைத்து விட்டுப் பின் குளிக்கப் போவாள். அவள் குளிக்கும்போது மணி ஐந்தரை அடிக்கும். இன்று நேரமாகி விட்டது. இன்னும் பால்கூட வாங்கிக் கொண்டு வரவில்லை. பால் வாங்கப் போவதை நினைத்ததும் மனசு சந்தோஷமாயிற்று. வாசல் கதவைத் திறக்கும்போது ஜில்லென்று காற்று முகத்தில் அடிக்கும். மார்கழிக் குளிர் உடம்பை நடுக்கும். பக்கத்துக் காம்பவுண்ட் ஓரத்திலிருந்து மரமல்லிகை வாசனை வரும். கேட் பக்கத்தில் கொத்துக் கொத்தாய் அரளி பூத்திருக் கும். அந்த இருட்டில் நட்சத்திரங்களாய் நந்தியாவட்டை மின்னும். லேசாக மிதந்து கொண்டு திருப்பாவை இன்னிசை யாக வரும்...

இந்த மாதத்திற்கு மட்டும் இப்படிப்பட்ட ஓர் அழகு எங்கிருந்து வருகிறது என்று ஆச்சரியப்பட்டாள். வளைகாப்பு நடந்து முடிந்த பெண் மாதிரி இது என்ன அழகு! ஏழுமணிக்கும் பிரியாத இருட்டின் அழகு-உடம்பை நடுக்குகிற பனியின் அழகு-வாசல் கோலத்தின் நடுவில் கையகலத்திற்கு வைக்கப் பட்ட பூசணிப் பூக்களின் அழகு... இவள் வீட்டில் ஏழு மணிக்குக் குறைந்து கோலம் போடப் போவதில்லை. அப்படியே போட்டாலும் பெரிசாக அழகாகப் போட்டுக் கொண்டிருக்கப் போவதில்லை. இரண்டு முக்கோணங்களை மேலும் கீழும் கம்பியாய் இழுத்து நடுவில் ஒரு சுழி சுழித்தால் தீர்ந்து போகும். கேட்டால் அந்த வேலைக்காரி சிரிப்பாள். ''எனக்கு இதுக்கு மேல வராது கண்ணு. வேணும்னா நீயே போட்டுக்க!'' என்பாள். எனக்குத் தெரிந்தால் நான் ஏன் உன்னைக் கேட்கிறேன்...என்று இவள் மனசுக்குள் நினைத்துக் கொள்வாள். ஜானகி இருந்தால் விதம் விதமாகக் கோலம் போடுவாள். கோலத்திற்காகத் தனியாக ஒரு நோட்டுப் புஸ்தகமே வைத்துக் கொண்டிருந்தாள். கம்பிக்கோலம், இழைக் கோலம், பொட்டுக்கோலம் என்று ஏதேதோ சொல்லு வாள். பெரிதாய் வட்டமாய் தெளிக்கப்பட்ட தண்ணீருக்கு நடுவில் தேராக ஒரு நாள் ஓடும். மறுநாள் தாமரைப்பூ மலர்ந்திருக்கும். அதற்கும் அடுத்த நாள் பாம்பு பாம்பாக நெளியும். போட்ட கோலம் அவளுக்குக் கலையவே கூடாது. காலில் படக் கூடாது. ஜானகி இருந்த போது வீடு, அழகாக மட்டுமில்லை. சௌகரியமாகவும் இருந்தது. காப்பி, டிபன், சமையல் எல்லாம் அவளுடையதாக இருந்தன. யமுனாவிற்கு அந்தச் சுமைகள் எதுவும் இல்லை. இப்போது ஐந்து மணியிலிருந்தே பரபரத்துக் கொண்டு ஓட வேண்டிய தாய் இருக்கிறது.

ஜானகியின் நினைவில் மூழ்கிப் போனவள் நேர மானதை நினைத்துக் கொண்டு அவசரமாக எழுந்தாள். விளக்கைப் போடாமல், அந்த இருட்டிலேயே தலை வாரிக் கொண்டாள். புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டாள். செருப்பில் கால் நுழைந்ததும் பால் பாட்டி யோடு கிளம்பினாள்.

வீட்டிலிருந்து பால் பூத் வெகு தூரத்தில் இல்லை. இரண்டு நிமிஷ நடைதான். பழைய வீட்டிலிருந்தபோது சற்று தூரம். பக்கத்துத் தெருவில் திரும்பி கோடிக்குப் போக வேண்டும். அப்போதெல்லாம் ஜானகியும் கூட வருவாள்.

இந்த மார்கழிக் குளிருக்கு 'உஸ் உஸ்' என்று அரற்றுவாள். 'இப்படியாவது பாலுக்குப் போகாவிட்டால் என்ன...?' என்று முணு முணுப்பாள். 'நீ வேணும்னா தூங்கேன். நான் போயிட்டு வரேன்' என்றாலும் கேட்க மாட்டாள். வீட்டிற்கு வருவதற்குள் அவள் கை விரல்கள் சில்லிட்டுப் போகும். அதை யமுனாவின் கன்னத்தில் வைத்துக் காட்டுவாள். அப்பா கூட நிறையத் தரம் பாலுக்குப் போக வேண்டாமென்று சொல்லிப் பார்த்து விட்டார். சாயந்திரம் மாதிரி வேலைக்காரியே வாங்கிக் கொண்டு வரட்டும் என்றார். ஆனாலும் யமுனா கேட்க வில்லை. விடியற்காலையில் எழுந்து கொஞ்ச தூரம் நடப்பது இதமாகத்தான் இருந்தது. முக்கால் இருட்டும்-லேசான சப்தங்களுடன்-குளிர்ச்சியாக வீசுகின்ற காற்றும்-சில வீடு களில் தண்ணீர் தெளிக்கிற ஓசையும்-எப்போதாவது போகிற வேகமான கார்களின் ஹாரனும் ஒரு வித்தியாசமான திரைப் படத்தின் அழகான காட்சியாகத் தோன்றின. அதிலும் இப்போ தெல்லாம் வானத்தில் புதுசு புதுசாய் நட்சத்திரங்கள் தெரியும். காற்றாடியாய்ச் சில நட்சத்திரங்கள், குவியலாகக் குவித்து வைத்துள்ள நட்சத்திரங்கள்...இன்னும் கொஞ்சநாள் போனால் இதையெல்லாம் பார்க்க முடியாது. இவை மறைந்து வேறு நட்சத்திரங்கள் தோன்றிவிடும். இந்த அழகுகளை யெல்லாம் தவறவிட்டுவிட்டுக் கட்டிலில் தலைவரையில் போர்த்திக் கொண்டு தூங்குவது என்பது அவளால் முடியாத காரியம்.

அவள் போனபோது பால்பூத்தில் யாருமில்லை. ஒரு சின்னக் கைவிளக்கை ஏற்றி வைத்துக்கொண்டு பால் கொடுக்கிற அந்தப் பையன் மட்டும்தான் இருந்தான். ஏதோ புஸ்தகம் படித்துக் கொண்டிருந்தான். அவன் பரிட்சைக் காகப் படிப்பதாக நினைத்தாள் யமுனா. அவன் பி. காம் இரண்டாவது வருஷம் படிப்பது அவளுக்குத் தெரியும். ஆறு மாதத்திற்கு முன்புதான் அவன் இந்தப் பூத்திற்கு வந்தான். தன் பெயர் மணி என்று அறிமுகப்படுத்திக் கொண்டான். ஈவினிங் காலேஜில் படிப்பதாகச் சொன்னான். இது தனக்குப் 'பார்ட் டைம்' வேலை என்றும் சொன்னான். அவனுடைய பேச்சுக் களை அவள் ஒரு புன்னகையோடு கேட்டுக் கொண்டிருப்பது வழக்கம். ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டிருந்தவன் அவளைப் பார்த்ததும் சட்டென்று எழுந்து நின்றான். முகம் முழுவதும் மலர்ச்சியால் புன்னகை செய்தான். குட்மார்னிங் சொன்னான்.



''உங்களோட கதையைத்தான் படிச்சிண்டிருக்கேன்...'' என்றான்.

அப்போதுதான் அவன் கையிலிருந்த புஸ்தகத்தைப் பார்த்தாள் யமுனா. அது அவள் எழுதுகிற பத்திரிகை; அதில் அவளுடைய நாவல் வந்து கொண்டிருந்தது. 'சுமை தாங்கிகள்' என்ற அந்த நாவல் நிறையப் பேர் மனசைக் கவர்ந்து கொண்டிருந்தது. நிதரிசனமான வாழ்க்கையின் தினசரி நிகழ்ச்சிகளையே தன் நாவலில் சித்தரித்திருந்தாள் அவள். அவன் கூட அவளுடைய வாசகன் என்று அறிமுகமானவன். ஒவ்வொரு வாரமும் தவறாமல் அதைப் பற்றி ஏதாவது பேசுவான். இப்போதும் அவனுடைய கை, கார்டில் தேதி பார்த்துக் குத்தியது. பாட்டிலை எடுத்துக் கொடுத்தது. காலி பாட்டிலை உள்ளே வைத்தது. வாய் மட்டும் மடமடவென்று பேசியது.

''எப்படி இந்த மாதிரி எழுதறீங்கன்னு ஆச்சரியமாக இருக்கு. எனக்கு ஒரு லெட்டர் கூடச் சரியாக எழுத வராதுங்க. ஒரு வரிக்கும் அடுத்த வரிக்குமே தொடர்பு விட்டுப் போகும். நீங்க மட்டும் எப்படி இப்படி எழுதறீங்க...?'' இதை அவன் ஒரு நூறுதரமாவது சொல்லியிருப்பான். அதனால் யமுனா வெறுமனே புன்னகை செய்தாள். ''என்ன சிரிக்கிறீங்க. உண்மையாகத்தான் சொல்றேன். அது மட்டுமில்லீங்க. உங்க எழுத்தைப் படிச்சதுக்கப்புறம்தான் நான் வானத்தையே நிமிர்ந்து பார்க்க ஆரம்பிச்சேன். இந்த மாதிரியெல்லாம் நட்சத்திரங்கள் உண்டு என்பதைக் கவனிக்க ஆரம்பிச்சேன்.

உங்களுக்கு மட்டும் இதெல்லாம் எப்படிக் கண்ணில் படுது...?''

அவள் மறுபடியும் புன்னகை செய்தாள். பால்பாட்டில் ஈரம் விரல்களில் சில்லிட்டது. அந்தக் குளிர்ச்சியை அநுபவித்துக் கொண்டு பேசாமல் நின்றிருந்தாள்.

''உங்க கதையிலே வருகிற நிறைய விஷயம் எனக்குப் பிடிச்சிருக்கு. சில சம்பவம் எல்லாம் எங்க வீட்ல நடக்கிற மாதிரி இருக்கு. 'அட! இவங்க எப்போ நம்ம வீட்டுக்கு வந்து பார்த்தாங்க!' என்று ஆச்சரியமாகவும் இருக்கு. இதை யெல்லாம் பத்தி உங்ககிட்ட நிறையப் பேசணும்னு தோணுது. ஒரு நாள் உங்க வீட்டுக்கு வரலாம்னு பார்க்கிறேன். வரலாமா...?'' என்று கேட்டான்.

அவள் மலர்ச்சியோடு ''ஓ எஸ்... வாங்களேன். தாராளமாக வாங்க...'' என்றாள்.

''வீடு தெரியும். வலது கைத் திருப்பத்திலே மூணாவது வீடு. பச்சை கேட் போட்டிருக்குமே அதுதானே...? வாசல்லே நாகலிங்க மரம் கூட இருக்குமே...''

''இல்லே... அதுக்கு முந்தின வீடு. சின்னதாய் மர கேட் போட்டிருக்கும்.''

''ஓ அதுவா... உங்களுக்கு எப்போ சௌகரியப்படும்னு சொன்னீங்கன்னா அன்னிக்கு வரேன்.''

''எனக்கு ஞாயிற்றுக்கிழமை மட்டும்தான் லீவு. அப்போது வாங்களேன்..''

''வரேன், கட்டாயமா வரேன்'' என்றான் அவன், மிகுந்த சந்தோஷத்தோடு.

யமுனா திரும்ப வந்தபோது வானம் சாம்பல் நிறத்திற்கு மாறத் தொடங்கி இருந்தது. சைக்கிள் காரியரில் பேப்பர் களோடு, பேப்பர்க்காரப் பையன் ஒருவன் போனான். சின்னப்



பெட்டிக் கடையின் பலகைகளை அகற்றிக் கடையைத் திறந்து கொண்டிருந்தார்கள். டீக்கடை வாசலில் கூட்டம் சேர ஆரம்பித்திருந்தது. கார்ப்பரேஷன் குப்பை வண்டி ஒன்று மெதுவாக நகர்ந்து போய்க் கொண்டிருந்தது. மணி ஆறாகி இருக்கும் என்று நினைத்துக் கொண்டே அவள் வீட்டுக்குள் நுழைந்தாள். அப்பா கையில் 'ஹிண்டு' பேப்பரோடு வராந்தா வில் காத்துக் கொண்டிருந்தார்.

''ஏம்மா இவ்வளவு லேட்...?''

''பால் பூத்திலே அந்தப் பையன் பேச ஆரம் பிச்சுட் டாம்பா. அதனாலே கொஞ்சம் நேரமாயிடுத்து.''

''அடடா.. இன்னிக்குத் திங்கட்கிழமை இல்லே? உன் கதை வந்திருக்குமே. அந்தப் பேப்பர்க்காரப் பையன் அடிக்கடி இப்படி மறந்து போறான். இன்னிக்குக் கூடப் பத்திரிகை போடாமல் வெறும் ஹிண்டுவை மட்டும் போட்டுட்டுப் போயிருக்கான்.''

''நான் போறபோது ஞாபகப்படுத்திட்டுப் போறேன்பா. உங்களுக்கு வேணும்னால் ஆபீசுக்குப் போறச்சே ஒன்னு வாங்கிண்டு போங்கோ...''

''சரிம்மா. இன்னும் காப்பி ஆகலையாம்மா...?''

''இதே ஒரே நிமிஷம்...''

அவள் உள்ளே போனாள். பில்டரில் பொடியைப் போட்டுத் தட்டினாள். பாலைக் காய்ச்சி இறக்கினாள். இரண்டு டம்ளர்களில் திட்டமாய் சர்க்கரை போட்டுக் கலந்தாள். அப்பாவுக்குக் கொடுத்துவிட்டுத் தானும் குடித்தாள். குக்கரை வைத்து முடித்ததும் குளிக்கப் போனாள். குளிக்கும்போது, தான் எழுதின அந்த முதல் கதையை நினைத்துப் பார்த்தாள். அம்மாதான் அவளுடைய முதல் கதாபாத்திரம். அவளை வைத்துத்தான் அந்தக் கதையை எழுதினாள். ''காவல்கள்'' என்ற தலைப்பில் அது அனுப்பின நாலு வாரத்துக்கெல்லாம்

பிரசுரமாயிற்று. கதைக்குப் போடப்பட்டிருந்த படம் கூட ஜானகி மாதிரியே இருப்பதாகப் பட்டது. அன்று சாயந்திரம், அதை அப்பாவிடம் கொடுத்துப் படிக்கச் சொன்னாள். அவர் படித்து முடிக்கிறவரை எதிர் சோபாவில் உட்கார்ந்திருந்தாள். முடித்து அவர் பத்திரிகையை டீபாயில் வைத்து விட்டு நிமிர்ந்தபோது அவர் முகத்தைப் பார்த்தாள்.

''நீ கதை எழுதுவேங்கிறதே எனக்குத் தெரியாது. அதுவும் இவ்வளவு நன்னா எழுதுவேன்னு நினைச்சுக் கூடப் பார்க்கலைம்மா...'' அவள் லேசான புன்னகையோடு பேசாமல் நின்றாள்.

''மனசை விட மனுஷாளுக்கு வேற காவல் எதுவும் இல்லேன்னு நீ சொல்லியிருக்கிறது நன்னா இருக்கு. இதை ஜானகி படிக்கணும்னு தோணறதும்மா. இப்போ எங்கே இருக்காளோ... எப்படி இருக்காளோ?'' அவர் ஒரு நிமிஷம் மௌனமாய் இருந்தார். பின் ஏதோ நினைத்துக் கொண்ட மாதிரி சொன்னார்;

''இந்தக் கதை ரொம்ப நன்னா வந்திருக்கு. இது உன்னோட முதல் கதைன்னு சொன்னால் நம்பறது கஷ்டம். அப்படி எழுதியிருக்கே. இட்ஸ் ரியலி குட். கீப் இட் அப்...''

அப்பா கொடுத்த தைரியம் அடுத்தடுத்து நாலைந்து சிறுகதைகள் பிரசுரமான உற்சாகம்-நாவல் எழுதுகிற அளவில் மனசுக்குள் தேங்கிப்போன அனுபவங்கள்-''எக்ஸ்க்யூஸ் மி நீங்க மிஸ் யமுனா தானே? உங்க கதை...'' என்று ஆரம்பித்துப் பேசுகிற முகங்கள்.

ஒவ்வொன்றாய் நினைத்துக் கொண்டே குளித்து முடித்தாள். பின் சமைத்து-ரவா உப்புமா பண்ணி- மத்தியானத்திற்கு, தனக்கும் அப்பாவிற்கும் இரண்டு பொட்டலங்கள் கட்டி வைத்து-டிரஸ் பண்ணிக் கொண்டு வந்தபோது அப்பா தயாராக இருந்தார். அவர் போட்டுக் கொண்டிருந்த அந்த க்ரே



கலர் சூட்டையும்-வெள்ளை வெளேரென்று ஒரு சுருக்கம் கூட விழாத அந்த முகத்தையும்- வகிட்டின் ஆரம்பத்தில் விழுந்திருந்த லேசான வழுக்கையையும்-அந்தக் கண்களின் அமைதியையும்-உருவத்தின் கம்பீரத்தையும் பார்த்தபோது 'இவரை விட்டுப் போக அம்மாவுக்கு எப்படி மனசு வந்தது' என்பதை மறுபடியும் நினைத்துக் கொண்டாள். இரண்டு பேரும் ஒன்றாக உட்கார்ந்து சாப்பிட்டார்கள். வீட்டைப் பூட்டிக் கொண்டு கிளம்பின போது, ''ராத்திரி எனக்காகச் சாப்பிடக் காத்துக் கொண்டிருக்காதே யமுனா, நீ சாப்பிட்டு விடு. எனக்குக் கொஞ்ச நேரமாகும்'' என்றார் அவர்.

அவள் புரிந்து கொண்டாள். அப்பா இன்று கிளப்பிற்குப் போகப் போகிறார். அவர் வருவதற்குப் பத்தோ பதினொன்றோ கூட ஆகும். அது வரை தனியாக உட்கார்ந்திருக்க வேண்டும். எழுத முடிந்தால் ஏதாவது எழுதலாம். இல்லாவிட்டால் படிக்க ஒரு புஸ்தகம் கொண்டு வர வேண்டும். வில்லியம் ஃபாக்னரின் 'ஸோல்ஜர்ஸ் பே' இன்னும் படிக்கவில்லை. அதைக் கொண்டு வரலாம்.

அவள் பஸ் ஸ்டாப்பில் வந்து நின்றபோது சில வழக்கமான முகங்கள்-லேசான புன்சிரிப்புகள்- குட்மார்னிங்குகள்-கதையின் இந்த அத்தியாயத்தைப் பற்றின விமரிசனங்கள்... இவர்கள்... எல்லாம் ஏன் தன்னைப் பார்த்ததும் கதையைப் பற்றிப் பேசியே ஆக வேண்டும் என்று நினைக்கிறார்கள்?

இது என்ன ஃபார்மாலிடி? ஆனால், பார்த்ததும் சிரிக்கிற மாதிரி-குட்மார்னிங் சொல்கிற மாதிரி இதுவும் பழகிவிட்டது. இது இல்லாவிட்டால் ஏமாற்றமாகக் கூட இருக்கும் என்று தோன்றியது. இந்த விசாரிப்புகளில் நிச்சயமாக ஒரு சந்தோஷம் இருக்கத்தான் செய்கிறது...

ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் பஸ் வந்தது. வழக்கம் [illegible] இருந்தது. கண்டக்டர் அவளைப் பார்த்ததும்

மெதுவாகச் சிரித்தான். இருபது பைஸா டிக்கெட் ஒன்றைக் கிழித்துக் கொடுத்தான். ''லேடீசுக்கு இடம் விடுங்க சார். ப்ளீஸ் கொஞ்சம் முன்னால நகர்ந்து போங்க...'' என்று லேசான குரலில் நிதானமாகச் சொன்னான். உதட்டின் சிரிப்பு மாறாமல் சொன்னான். தினமும் காலையில் யமுனா எட்டு நாற்பதுக்கு வருகிற இந்த பஸ்ஸில்தான் வருவாள். இதே கண்டக்டர்தான் இருப்பான். இதுவரை அவன் சிடுசிடுத்து அவள் பார்த்த தில்லை. கோபப்பட்டுப் பார்த்ததில்லை. குரல் அதிர்ந்து கேட்டதில்லை. நூறு ரூபாய் நோட்டு ஒன்றை நீட்டி இருபது பைஸா டிக்கெட் கேட்டால் கூட 'ஸாரி சார். சில்லறை இல்லை' என்று சிரித்துக் கொண்டே பதில் சொல்லுவான். கிட்டத்தட்ட அவனுக்கு இருபத்தைந்து வயசு இருக்கும். படித்தவன். எக்னாமிக்ஸ் பி.ஏ. ஆனாலும், இந்த வேலையில் சேர்ந்ததற்கான சலிப்பு அவனிடம் எப்போதும் தெரிந்த தில்லை. காத்திருந்து அவனுடைய பஸ்ஸில் ஏறுகிற நிறையப் பேரை அவள் பார்த்திருக்கிறாள். 'பிரபாகர்' என்று அவனை பெயர் சொல்லி கூப்பிட்டுக் கேட்டிருக்கிறாள். அந்த பஸ்ஸில் வருகிறவர்களுக்கெல்லாம் ஏதோ சொந்தப் பஸ்ஸில் பிரயாணம் செய்கிறாற் போன்ற உரிமையை அவன் ஏற்படுத்தி யிருந்தான்...

யமுனா பின்னால் ஆறுபேர் உட்காரக் கூடிய அந்த நீளமான ஸீட் ஓரத்தில் கம்பியைப் பிடித்துக்கொண்டு நின்றாள். உட்கார இடம் கிடைக்காத நாட்களில் அங்கேதான் நிற்பாள். அங்கே அப்படி நிற்பது அவளுக்குப் பிடிக்கும். இந்த பஸ் பிரயாணமே அவளுக்குப் பிடித்தமான ஒரு விஷயம்தான். அதனால்தான் அப்பாவோடு காரில் போகாமல் பஸ்ஸில் போய்க் கொண்டிருந்தாள்.

இந்த பஸ்ஸில் இந்த நேரத்திற்கு வருகிறவர்கள் கல்லூரி மாணவிகள்தான். பஸ் முழுவதும் விதம் விதமான வர்ணங் களில் அழகாக இருக்கும். பெல்பாட்டமும் மாக்ஸியும்



பளிச்சிடும். நுனி நாக்கின் ஆங்கில உச்சரிப்புக் கேட்கும். அலையலயாய் சிரிப்புச் சத்தம் கேட்கும். ஸ்டெல்லா மேரிஸ் வந்ததும் பஸ் காலியாகிவிடும். அவர்களுக்குப் பின்னால் படிப்பை முடித்து வேலை கிடைக்காத இளைஞர் பட்டாளம் ஒன்று வரும். அவர்களோடு காலேஜ் வாசலில் இறங்கும். பின் அப்படியே நடந்து டிரைவ்-இன்னுக்குப் போகும். ஒரு கப் காப்பி, ஒரு பாக்கெட் சிகரெட் என்று ஒருமணி நேரத்தை ஓட்டும். அங்கு போரடிக்கும்போது லைப்ரரிக்குள்ளும் வந்து உட்காரும். உருப்படியாய் எதையும் படிக்காமல் கண் ஒவ்வொன்றிலும் மேயும். முன்பெல்லாம் அது யமுனா மீதும் மேய்ந்ததுண்டு. 'ஹௌ எபௌட் எ கப் ஆப் காஃபி?' என்று துணிச்சலாய்க் கேட்டதுண்டு. கம்பீரமான பார்வையோடு கூடிய ஒரு மறுப்பை வாங்கிக் கொண்டதுண்டு.

இன்று அந்தக் கூட்டத்தில் பாதிப்பேரைக் காண வில்லை. வேறு ஏதாவது அவசர வேலை இருந்திருக்கும் அல்லது இண்டர்வியூ எதற்காவது போயிருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டாள். பக்கத்தில் இரண்டு பெல்பாட்டங் கள் அன்று வகுப்பைக் கட் பண்ணி விட்டுச் சினிமாவிற்குப் போவதைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். அதைக் கவனித்த யமுனாவிற்குச் சிரிப்பு வந்தது.

''நோ மேன்... மேஜர் அவர் முடிஞ்சதுமே போயிடலாம் மேன்.''

''வீ வில் கோடு டு எமரால்ட் டுடே....''

''மை குட்நெஸ்! திரும்பவும் ரஜினிகந்தாவா! ஆர் யு க்ரேஸி...?''

''யா... க்ரேஸி ஆஃப்டர் அமோல் பாலேகர்.''

''அமோல் பாலேகர்! ஹி ஈஸ் மேரிட் யா...''

''ஸோ வாட்...?''

அந்த 'ஸோ வாட்' டைக் கேட்டுத்தான் யமுனா சிரித்தாள். இவர்களுக்கு எல்லோமே சுலபமாக இருப்பதை நினைத்துக் கொண்டாள். தன்னால் மட்டும் ஏன் அந்த மாதிரி இருக்க முடியவில்லை என்று கேட்டுக்கொண்டாள். இவர்கள் படிக்கிற அதே கல்லூரியில்தான் அவளும் படித்தாள். இரண்டு வருஷங்களுக்கு முன்னால் இதே பஸ்ஸில் இதே மாதிரிதான் புஸ்தகங்களோடு போனாள். ஆனால் இவளுக்கும் அவர் களுக்குமிடையில் எத்தனை வித்தியாசங்கள்...?

இந்த மாதிரி அவள் உரத்த குரலில் பேசினதில்லை. டிரைவ் இன்னில் உட்கார்ந்து அரட்டையடித்ததில்லை. பெல்பாட்டமும், மாக்ஸியும் போட்டுக் கொண்டதில்லை. மனசைப் பகிர்ந்து கொள்கிற மாதிரி சினேகிதிகள் கூட யாரும் இருந்ததில்லை. நினைவு தெரிந்ததிலிருந்து அவளுக்குப் புஸ்தகங்கள்தான் சினேகிதிகள், விளையாட்டுக் கருவிகள், பொழுது போக்குகள். ஒரு புஸ்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு மூலையில் உட்கார்ந்து விட்டால் எதுவும் தெரியாது. யார் பேசினாலும் கேட்காது. குளியல், சாப்பாடு, தூக்கம் எல்லாமே மறந்து போகும். புஸ்தகம்.. அப்பா அவளுக்குச் சலிக்காமல் வாங்கி கொடுத்திருக்கிறார். ஹிக்கின்பாதம்ஸ் பக்கம் போகும்போதெல்லாம் ஒரு கட்டுப் புஸ்தகம் வீட்டுக்கு வரும். ஆல்பர்ட்காமு, கஃப்கா, ஜே.கே. எல்லாரையும் அவளுக்கு அப்பாதான் அறிமுகப்படுத்தினார். அதே மாதிரி கல்கி, அகிலன், நா.பா. என்று படித்துக் கொண்டிருந்தவள், கொஞ்சம் கொஞ்சமாக ஜானகி ராமனையும், லா.ச.ராவையும் படிக்க ஆரம்பித்தாள். மௌனியையும். கு.ப.ராவையும் தெரிந்து கொண்டாள்.

டிரைவ் இன் வாசலில் பஸ் நின்றதும் கீழே இறங் கினாள். ரோடைக்கடந்து எதிர்ப்பக்கம் போனபோது பக்கத்துச் சர்ச்சிலிருந்து மணிச் சத்தம் கேட்டது. மரங்களும், செடிகளும் நிறைந்த அந்த சர்ச் அழகாக இருந்தது. தினமும் நினைத்துக் கொள்கிற மாதிரி இன்றும் 'இதற்குள் ஒரு நாள் போக வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள். வேலையில் சேர்ந்த இந்த ஒரு வருஷத்தில் இதையே நிறையத் தரம் நினைத்துவிட்டாள். ஆனால் ஒரு நாள் கூடப் போக முடிந்த தில்லை. 'முடியாமல் என்ன? போக வேண்டும் என்ற திடமான நினைப்பு இல்லை' என்று தனக்குள் சொல்லிக் கொண்டாள்.



லைப்ரரிக்குள் நுழையப் போனபோது வெளிநாட்டுக் கார் ஒன்று வேகமாய் வெளியில் போயிற்று. உடனே நீலமும்-சிவப்பும்-பச்சையுமாய் வர்ணமடித்த அந்த மூங்கில் கட்டை குறுக்கில் விழுந்தது. அதன் நடுவில் வெள்ளை வட்டத்தில் ஸ்டாப் என்ற சிவப்பு எழுத்துக்கள் பெரிசாய் எழுதப்பட்டிருந்தன. வாசலில் நின்று கொண்டிருந்த கூர்க்கா அவளைப் பார்த்ததும் விளையாட்டாக சல்யூட் அடித்தான். அவளும் சிரித்துக் கொண்டே உள்ளே போனாள்.

லான் ஓரத்தின் செம்பருத்திச் செடிகள் தீப்பந்தங்களாகப் பூத்திருந்தன. பக்கத்தில் சூரியகாந்திகள் மஞ்சள் பூசின முகங்களாகச் சிரித்தன. மஜந்தாவில்-வயலட்டில், ரோஸ் நிறத் தில் ஒழுங்காகக் கத்தரித்து விடப்பட்ட போகன் வில்லாக்கள், துலுக்க சாமந்திச் செடிகள், அரளிகள், குரோட்டன்ஸ்கள்... மற்ற லைப்ரரிகளைப் போல் அது வெறும் கட்டடத்தில் ஆரம்பிக்க வில்லை. புல்வெளியும், செடிகளும், பூக்களும், மரங்களு மாய்ப் பசுமையில் பளிச்சிட்டது.

கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு யமுனா உள்ளே நுழைந்ததும் சில்லென்று ஏர்-கண்டிஷன் குளிர்ச்சி உடம்பைத் தாக்கியது. கண்ணெதிரே சுவரில் ஒரு காடு அழகான மாடர்ன் ஆர்ட்டில் தொங்கியது. எதிரில் வந்து கொண்டிருந்த சீஃப் லைப்ரேரியன் கார்த்திகேயன் அவளைப் பார்த்ததும் அழகாகச் சிரித்துக் கொண்டே குட் மார்னிங் சொன்னார்.

புன்னகையோடு திரும்பி குட்மார்னிங் சொல்லி விட்டுத் தன் இடத்துக்குப் போனாள் யமுனா.

# 3

**டை**ப் அடித்துக் கொண்டிருந்தாள் யமுனா. அது ஒரு ரிமைண்ட்டர் லெட்டர். 'எவ்யூஃப்ரம் தி ப்ரிட்ஜ்' என்ற ஆர்தர் மில்லரின் புஸ்தகத்துக்கான ரிமைண்டர் லெட்டர். அதே புஸ்தகம் லைப்ரரியில் மூன்று உண்டு. எல்லாமே வெளியில் போயிருந்தன. அதற்காக ஒருவர் ரிசர்வ் கார்டு எழுதிக் கொடுத்திருந்தார். லைப்ரரிக்கு வருகிற போதெல்லாம் கேட்டு விட்டும் போயிருந்தார். ராஜாராம் என்பவர் எடுத்துக்கொண்டு போய் எத்தனையோ நாளாகிவிட்டன. 'டியூ டேட் பாரா'கி யிருந்தது. ஒரு தரம் ரிமைண்ட் பண்ணியாகிவிட்டது. இது இரண்டாவது கடிதம்...

''இன்னும் டைப் பண்ண நிறைய லெட்டர்ஸ் இருக்கா...?'' சுபாஷிணி இவளைத் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்.

''இன்னும் மூணு லெட்டர் பாக்கியிருக்கு; ஏன்...?''

''எனக்குக் கொஞ்சம் ஹெல்ப் பண்ண முடியுமான்னு கேட்டேன். லுக், ஹௌ மெனி பீப்பிள் ஆர் வெயிட்டிங்...''

புஸ்தகங்களை எடுத்துக் கொண்டு நிறையப் பேர் எண்ட்ரி போடக் காத்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் கடிதத்தைப் பாதியில் நிறுத்திவிட்டு எழுந்து போனாள் யமுனா. ஸ்டாம்ப் பேனாவால் மெம்பர்ஷிப் கார்டில் ட்யூ டேட்டைப் போட்டுக் கொடுத்தாள். புஸ்தகங்களின் பின்னால் இருந்த கார்டிலும் தேதி குறித்து எடுத்து வைத்துக் கொண்டாள். கண் வரிசையாய்ப் புஸ்தகங்களின் பெயர் மீது ஓடிற்று. பின் அவைகளை எடுத்தவர்களின் முகங்களைப் பார்த்தது. கை தானாக எண்ட்ரி போட்டுக் கொடுத்துக் கொண்டிருந்தது.

'எக்ஸ்க்யூஸ் மி மேடம்!' நடுவில் ஒரு குரல் கேட்டதும் யமுனா நிமிர்ந்து பார்த்தாள்.



''எஸ்? ...''

''ஐ வாண்ட்டு டு பிகம் எ மெம்பர் ஹியர்...''

''ஓ ஷ்யூர். வாட் ஆர் யு ப்ளீஸ்...?''

''ஐம் எ ஸ்டூடண்ட்.''

''அப்படின்னா உங்க காலேஜிலிருந்து ஐடின்டிஃபி கேஷன் சர்டிபிகேட் கொண்டு வரணும்.''

''ஓ...! அது இல்லாமல் மெம்பராக முடியாதா...?''

''நோ ப்ளீஸ்...''

''ஓ.கே. தென் ஐ வில் கம் வித் அன் ஐடின்டிஃபிகேஷன் கார்ட்.''

''மோஸ்ட் வெல்கம்!'' என்று லேசாகச் சிரித்தாள். அவன் நகர்ந்ததும் இன்னொரு வழுக்கைத் தலை மனிதர் தன் கார்டு தொலைந்து போய் விட்டதாகத் தெரிவித்தார். ஆனால், அவசரமாக அந்த இன்ஜினீரிங்ஹேண்ட் புக் தேவையாய் இருப்பதாகச் சொன்னார். யமுனா புஸ்தகத்தை வாங்கிப் பார்த்தாள். அவருடைய முகத்தைப் பார்த்தாள். பின் அட்ரஸை எழுதி வாங்கிக் கொண்டு புஸ்தகத்தைக் கொடுத்தாள். அடுத்த தரம் வரும்போது முடிந்தால் தொலைந்துபோன அந்தக் கார்டைத் தேடிக் கொண்டு வரச் சொன்னாள். இல்லாவிட்டால் ஒரு கடிதம் எழுதித் தரவேண்டும் என்பதைத் தெரியப்படுத்தினாள்.

மீண்டும் மேஜைக்குப் போய் அடிப்பதற்கு வசதியாக டைப் ரைட்டரை நகர்த்திக் கொண்டபோது கார்த்திகேயன் அவளைக் கூப்பிட்டார். அவளுக்கு போன்கால் வந்திருப்பதைத் தெரியப்படுத்தினார். அவள் எழுந்து அவருடைய அறைக்குப் போனாள்.

அந்தப் பத்திரிகை ஆபீஸிலிருந்துதான் வந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். துணை ஆசிரியர்கள்

யாராவது கூப்பிடுவார்கள். கதையின் அடுத்த அத்தியாயத்தில் ஏதாவது சந்தேகம் வந்திருக்கும். இல்லை யென்றால் ஒரு வரியையோ அல்லது வார்த்தையையோ நீக்க வேண்டியிருக்கும். அதற்கு முன் அவளுக்குப் போன் பண்ணியிருப்பார்கள். வேறு யாரும் அவளுக்குப் போன் பண்ணுவதில்லை. அப்பா கூடப் பண்ணுவதில்லை. அவள் ரிஸீவரை எடுத்து ஹலோ சொன்னபோது அந்தக் கட்டைக் குரல் புதுசாக இருந்தது. இதற்கு முன் கேட்டிருக்காததாக இருந்தது.

''குட்மார்னிங், ஐ'ம் தயா ஸ்பீக்கிங்.''

''தயா...?''

''எஸ். தயா...''

அவள் தன் ஞாபகத்தில் அந்தப் பெயரைத் தேடினாள். பிடிபடவில்லை. அதனால் ''விச் தயா ப்ளீஸ்?'' என்று கேட்டாள்.

''எந்த தயான்னு சொன்னால் உங்களுக்குப் புரியும்னு யோசிக்கிறேன். எப்படிச் சொன்னாலும் புரியாது. அதனால் உங்களோட ரீடர்னே அறிமுகப்படுத்திக்கறேன். உங்ககிட்ட கொஞ்சம் பேச வேண்டியிருக்கு...''

''ரிகார்டிங் வாட்...?''

''எதைப் பத்தின்னு சொன்னால்தான் பேசுவீங்களா?''

''அஃப்கோர்ஸ். எதைப் பத்தின்னே தெரியாம எப்படிப் பேச முடியும்...?''

''உங்க கதையைப் பத்தின்னுதான் வச்சுங் கோங்களேன்.''

அவள் கொஞ்சம் யோசித்தாள். அந்தக் குரல்-அதில் தெரிந்து முரட்டுத்தனம்-பேசப்பட்ட விதம் எல்லாம் அவளைத் தயங்க வைத்தன.



யமுனா பதில் சொல்லத் தயங்கி நிற்கும்போதே எதிர்முனை இளைஞன் அவசரப்பட்டான்.

''என்ன சத்தத்தையே காணோம். ஏதாவது தயக்கமாக இருந்தால் வேணாம்...''

''நோ. நாட் லைக் தட்...''

''தென் வாட்? ...''

''என்னாலே எப்போ பேச முடியும்னு யோசிச்சேன். லஞ்ச் டயத்திலேதான் கொஞ்சம் ஃப்ரீயா இருப்பேன். அப்போ வாங்களேன்.''

''ம் ஹூம்... சரி வரேன். லைப்ரரியிலேயா பேசப் போறோம்...?''

''ஒய் நாட்...?''

''இல்லே முடியுமான்னு பார்க்கறேன். லெட் அஸ் ஸீ...'' என்று அவன் போனை வைத்துவிட்டான். 'யார் இந்த தயா? என்ன பேசப் போகிறான்... குரலுக்கே இவ்வளவு முரட்டுத்தனமிருந்தால் அவன் எப்படியிருப்பான்...'

அவள் தன் இடத்திற்குத் திரும்பி வந்தாள். கடிகாரத்தில் மணி பார்த்தாள். அவன் வருவதற்கு இன்னும் அரைமணி நேரம் இருந்தது. கடிதங்களை டைப் பண்ணி முடித்து டெஸ்பாட்சிற்கு அனுப்பினாள். ரிசர்வ் பண்ணின புஸ்தகங்களை அடுக்கி வைத்தாள். திரும்பி வந்தவைகளை ட்ராலியில் போட்டு எடுத்துக் கொண்டு போகச் சொன்னாள். அதற்குள் பீரியாடிகல் ஸெக்ஷனிலிருந்து சுபாஷிணி வருவதைப் பார்த்தாள். அன்று சுபாஷிணி வழக்கத்தைவிட அழகாய் இருப்பதாய் அவளுக்குப் பட்டது. அந்த வெள்ளைக் கைத்தறிப் புடவையில் கூட அவள் அழகாய் இருப்பது ஆச்சரியமாய் இருந்தது.

சுபாஷிணியைப் பார்க்கிற போதெல்லாம் யமுனாவிற்கு இந்த ஆச்சரியம் வரும். இவளால் எப்படி இந்த மாதிரி இருக்க முடிகிறது என்ற ஆச்சரியம். தேடித் தேடிப் படித்து அறிவை வளர்த்துக் கொண்டு மனசால் மட்டும் எப்படிக் குழந்தையாக இருக்க முடிகிறது என்ற ஆச்சரியம். வெறும் எம்.ஏ. மட்டும் போதாது என்று சுபாஷிணி வேறு என்னவெல்லாமோ படித்திருந்தாள். ஜெர்மன், பிரெஞ்சு, லத்தீன் என்று எதிலெல்லாமோ டிப்ளமா வாங்கியிருந்தாள். அவளுக்குத் தெரியாத பாஷையே இருக்காதோ என்ற கூட நினைக்கத் தோன்றும். ப்யூன் ரங்கசாமியிடம் சரளமாகத் தெலுங்கில் பேசுவாள். பசவப்பாவோடு லஞ்ச் நேரத்தில் உட்கார்ந்து ''ஊட்டா ஏனு...?'' என்ற ஆரம்பிப்பாள். உன்னி கிருஷ்ணனோடு மலையாளம்-பிரேம்சந்தோடு இந்தி- ராகவாச்சாரியோடு சம்ஸ்கிருதம். யார் இந்த சுபாஷிணி...? எந்த ஊரைச் சேர்ந்தவள் என்று எதுவும் தெரியாது. 'உனக்கு ஊர் மைசூரா?' என்று கேட்டால், அப்படித்தான் வைத்துக் கொள்ளேன் என்பாள். 'ஆர் யு எ மலையாளி' என்ற கேள்வி வந்தால் ''ஒய்? ஏம் ஐ லுக்கிங் லைக் தட்...?'' என்று திருப்பிக் கேட்பாள். யமுனாவிற்கு அவள் ஒரு வங்காளியாகத்தான் இருக்க வேண்டுமென்று தோன்றும். அவளுடைய கண்களைப் பார்க்கும்போதுதான் அப்படித் தோன்றும். ஆனால், எல்லா வங்காளிகளிடமும் தெரிகிற ஒரு ஆழமான அமைதி சுபாஷிணியிடம் இல்லை. குதிக்கிற அருவி மாதிரி எப்போதும் கலகலவென்று பேச்சு. பேச்சுக்கு முன்னால் சிரிப்பு. முகம் முழுதும் மலர்ந்து அவள் சிரிக்கிறபோது அழகாக இருக்கும். சிரிக்காமல் அவளால் இருக்க முடியாது. பேச முடியாது. வேலை செய்ய முடியாது. எப்போதும் இந்த மாதிரி எப்படிச் சிரித்துக் கொண்டே இருக்க முடிகிறது என்று யமுனா மறுபடியும் ஆச்சரியப்பட்டாள்.



உதட்டில் கீறலான ஒரு புன்னகையோடு சுபாஷிணி அவளருகில் வந்தாள். யமுனாவும் அவளைப் பார்த்து மெதுவாகச் சிரித்தாள். ''சுபா, ஐ'ம் வெயிட்டிங் ஃபார் எ பர்ஸன். கொஞ்சம் பேச வேண்டியிருக்கு. லஞ்ச்சிலிருந்து வர நேரமானால் பார்த்துக் கொள்கிறீர்களா...?'' என்று கேட்டாள். சுபாஷிணி அது யார் என்ன என்றெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கவில்லை. சரி என்று தலையாட்டினாள். அவளிடம் யமுனாவிற்குப் பிடித்த விஷயங்களில் இதுவும் ஒன்று...

ஒரு மணி இருக்கும். தயா வந்தான். கையில் நீல நிற ஹெல்மெட்டோடு கௌண்டர் பக்கத்தில் வந்து நின்றான்.

'மிஸ் யமுனா ப்ளீஸ்?' என்றான். ''ஐயம் யமுனா...'' என்று எழுந்து வந்தாள் அவள். அவன் ''தயா'' என்று மட்டும் சொல்லிக் கொண்டான். அவளையே ஒருதரம் நேராகப் பார்த்தான். 'தான் ஏமாறவில்லை' என்கிறாற் போல் முகபாவம் இருந்தது. குரலில் இருந்த முரட்டுத்தனம் முகத்திலும் தெரிந்தது. பெரிய கண்களின் பார்வை பளிச்சென்று அடித்தது. மாநிறமாய் நடுத்தர உயரத்தில் வெளிர், நீல நிற உடையோடு நின்று கொண்டிருந்தான்.

''ஸோ-இப்போ எங்கே போய்ப் பேசப் போறோம்?'' என்று கேட்டான்.

''இங்கேதான்...''

''இங்கேயா...?''

''ஏன், இந்த இடத்திற்கு என்ன...?''

''என்னாலே இப்படியெல்லாம் பேச முடியாது. [illegible]யம் லைப்ரரியில் உட்கார்ந்து பேசவே முடியாது. எனக்கு [illegible]மாகப் பேசணும். பொறுமையாகப் பேசணும். அதனால் [illegible] இன்னிற்குப் போய்ப் பேசலாமே...?''

''ஐ'ம் ஸாரி மிஸ்டர் தயா! அப்படியெல்லாம் போய் எனக்குப் பழக்கமில்லை. எதுவானாலும் இங்கேயே பேசுங்கள்....''

அவன் ஒரு நிமிஷம் பேசாமலிருந்தான். அவளுடைய பேச்சினால் பாதிக்கப்பட்டவனாகத் தெரிந்தான். தன்னை அலட்சியப்படுத்துவதாகக் கூட நினைத்தான். அதனாலேயே இன்னும் அழுத்தமாகப் பேச வேண்டுமென்று நினைத்தான். தலையை ஆட்டிக் கொண்டு ''ஓ கே'' என்றபடி எதிரில் இருந்த நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். நேராக முகத்தில் அடிக்கிற மாதிரி பேச்சை ஆரம்பித்தான்:

''நான் போனில் ஐ'ம் யுவர் ரீடர்னு சொன்னது தப்பு. ஐ'ம் நாட் யுவர் ரெகுலர் ரீடர். இன்ஃபாக்ட் உங்க முதல் கதை 'காவல்களை' அபத்தம்னு ஒதுக்கினவன். அதற்குப் பின்னால் உங்க எழுத்து எதையும் படிக்கலே. பட், இந்த நாவலை என்னால அப்படி ஒதுக்க முடியலே...''

அவள் தன் முகபாவம், மாறாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் மேலும் தொடர்ந்து பேசினான்:

''என்னுடைய இந்தப் பேச்சு உங்களைக் கோபப் படுத்தறதோ என்னவோ...?''

''எதுக்குக் கோபப்படுத்தணும்?''

''சில பேரால விமரிசனத்தைத் தாங்கிக்க முடியற தில்லே...''

''என்னால முடியும் ...''

''ம்ஹூம்... தட்ஸ் ரியலி குட்...ம், என்ன சொல்லிண்டிருந்தேன்? எஸ். இந்த நாவல்லே நிறைய இடம் நன்னா வந்திருக்கு. எத்தனையோ விஷயங்கள் என்னை பாதிச்சிருக்கு. என்னைமாதிரியே உங்க கதையிலே வர்ற அவனும் ஆகாசத்தைப் பார்த்துண்டு உட்கார்ந்திருக்கான். நட்சத்திரத்தைப்பத்திப்



பாட்டுப் பாடறான். டு பி வெரி ப்ளெயின் வித்யு... நான் லவ் பண்ணின மாதிரியே ஒரு பொண்ணை லவ் பண்ணிட்டு அவ கிடைக்காமல் திண்டாடறான்.''

அவன் கண்களில் சட்டென்று ஒரு சோகம் தெரிந்தது. எதிர்ச் சுவரையே பார்த்துக் கொண்டிருந்தான். முகம் மாறிப் போயிற்று. கையிலிருந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் போட்டுவிட்டு இன்னொன்றைப் பற்ற வைத்துக் கொண்டான்.

''இந்த மாதிரி லவ் பண்றதும், அது ஃபெயிலாப் போறதும் சாதாரணம்தான். ஆல்மோஸ்ட் எல்லார் வாழ்க்கையிலும் நடக்கறதுதான். ஒருவேளை உங்க வாழ்க்கையிலும் நடந்திருக்கலாம். கதையைப் படிச்சதும் அப்படித்தான் நடந்திருக்கணும்னு முடிவு பண்ணினேன். இல்லாவிட்டால் இப்படி பவர்ஃபுல்லா வராது...''

மேஜை மீது ஊன்றிக்கொண்டிருந்த கைகளை எடுத்த யமுனா மெதுவாகச் சிரித்தாள்.

''என்ன சிரிக்கிறீங்க?''

''நீங்கள்லாம் ஒரு கதையோட அதை எழுதறவங்களை எவ்வளவு சுலபமா ஐடின்டிஃபை பண்ணிப் பார்த்துடறீங்க''

''ஏன், இந்த ஐடின்டிஃபிகேஷன் தப்புன்னு சொல் றீங்களா...?''

''இது சரியா இருக்கும்னு எப்படி முடிவு பண்ணி னீங்க...?''

''அதுதான் சொன்னேனே. இல்லாவிட்டால் அந்த மாதிரி எழுத வராதுன்னு...''

அவள் மறுபடியும் லேசாகச் சிரித்தாள்.

''அது சொந்த அனுபவமாகத்தான் இருக்கணும்னு என்ன அவசியம் மிஸ்டர் தயா...? எனக்குத் தெரிந்த என்னோடு பழகுற யாருடையதாகவும் இருக்கலாம் இல்லையா...?''

''ஓ எஸ். நிச்சயமாக இருக்கலாம். அந்த மாதிரி ஒரு அனுபவமில்லாமல் இப்படி எழுத முடியாதுன்றது என்னுடைய தீர்மானம். இதையாவது ஒத்துக்கறீங்களா மிஸ் யமுனா...?''

''எக்ஸாட்லி. அதைத்தான் நானும் சொல்ல வந்தேன். எழுதற எல்லாமே என்னுடைய அனுபவமாக மட்டும் இருக்காதுன்னுதான் சொல்ல வரேன்.''

''நான் அப்படியில்லை மிஸ் யமுனா! என்னைப் பற்றித்தான் என்னால் எழுத முடியும். எனக்குள்ளேயே நிறைய விஷயம் இருக்கு. அதையே முடிக்க முடியலே. அப்புறம்தான் அடுத்தவங்களோட விஷயத்துக்குப் போக முடியும்?''

யமுனாவின் முகம் ஒருதரம் பளிச்சிட்டது. கண்களில் பிரகாசம் தெரிந்தது:

''நீங்ககூட எழுதறீங்களா என்ன...?''

''ஓ எஸ். நிறைய எழுதுறேன். நான் மட்டுமில்லை. என் பிரண்ட்ஸ் எல்லாருமே எழுதறாங்க, ஆனால் நீங்க எழுதற பத்திரிகைகளில் நாங்க எழுதறதில்லே. வீ டோண்ட் செல் அவர் ஸ்டோரீஸ்...''

''யு மீன் நான் எழுதற பத்திரிகையிலே எழுதினா எழுத்தை விற்கறதாக அர்த்தமா...?''

''என்வரை அப்படித்தான்.''

''ஓ.கே. நீங்க எதுக்காக எழுதறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா மிஸ்டர் தயா?''

''என்னோட திருப்திக்காக...''

''அதற்காக மட்டும்தான் எழுதறீங்களா...?''

''ஆமாம்.''

''தென், ஒய் டு யு ஸெண்ட் இட் ஃபார் பப்ளிகேஷன்...?''



''அப்படீன்னா...?''

''எதற்காகப் பிரசுரத்திற்கு அனுப்பறீங்கன்னு கேட்டேன்?''

''இது என்ன கேள்வி...? படிக்கப்படணும்னு அனுப்பறேன்.''

''ஸோ- யு வாண்ட் டு பி ரெகக்னைஸ்ட், இல்லையா...?''

''அஃப்கோர்ஸ். நாம எல்லாருமே ரெகக்னிஷனுக்காகத்தான் பாடுபடறோம்.''

''அதைத்தான் நானும் சொல்ல வந்தேன் மிஸ்டர் தயா! எனக்காக மட்டும்தான் எழுதறேன்னு நீங்க இனி மேல் சொல்லாதீங்க. அப்படி உங்களுக்காக மட்டும் எழுதிக்கறதானால்-எழுதி முடிச்சதும் உங்க மேஜை டிராயரில் போட்டுடணும். நினைக்கிற போதெல்லாம் எடுத்துப் படிச்சுத் திருப்திப் படணும். அப்படியில்லாமல் உங்க எழுத்து ஒரு பத்திரிகையில் பிரசுரமாறபோது அது நம்மை எல்லோரும் படிக்கணும்- பாராட்டணும் என்பதற்காகத்தான். அதே காரணத்திற் காகத்தான் நானும் எழுதறேன். எழுதணும் என்கிற அர்ஜ். எழுதறேன். நான் எழுதற அந்தப் பத்திரிகையில் உங்களுக்கு இல்லாத சில சௌகரியங்கள் எனக்கு இருக்கு. நான் நினைக்கிற அந்த ரெகக்னிஷன் எனக்குச் சுலபமாகக் கிடைச்சுடறது. நிறையப் பேர் நம்மைப் படிக்கிறாங்கிற திருப்தியும் இருக்கு. அவர்கள் பணம் கொடுக்கிற காரணத்தால் எங்கள் எழுத்தை நாங்கள் விற்பதாக அர்த்தமாகாது. வசதி இருக்கு. கொடுக்கறாங்க. இன்ஃபாக்ட் நீங்க நினைக்கிற மாதிரி அந்தப் பத்திரிகைகளில் கதை வர்றது என்பது அவ்வளவு சுலபமான விஷயமில்லை, மிஸ்டர் தயா...''

அவன் மௌனமாகக் கேட்டுக் கொண்டிருந்தான். ஆஷ்ட்ரேயில் சாம்பல் சாம்பலாய்த் தட்டிக் கொண்டிருந்தான்.

ஒரு நிமிஷம் போனபின் அவளே மறுபடியும் பேச்சை ஆரம்பித்தாள்.

''நீங்க எந்தப் பத்திரிகையில் எழுதறீங்கன்னு நான் தெரிஞ்சுக்கலாமா?''

அவன் சிகரெட்டை அணைத்துப் போட்டுவிட்டு சுவாரஸ்யமாய் நிமிர்ந்தான்.

''ஓ.எஸ். கட்டாயம் தெரிஞ்சுக்கணும். தெரிஞ்சுக்கறது மட்டுமில்லை. வாங்கியும் படிக்கணும். இட்வில் ஹெல்ப் யு எ லாட்...'' என்று சொல்லி விட்டுக் கையில் கொண்டு வந்திருந்த இலக்கியப் பத்திரிகையை அவளிடம் கொடுத்தான். அவள் அதைப் புரட்டிப் பார்ப்பதற்கு முன், ''என்ன பெயரில் எழுதறீங்க?'' என்று கேட்டாள்.

''சொந்தப் பெயர்தான். நாங்க யாரும் புனைபெயரில் எழுதறதில்லை.''

அவள் அதைக் கடைசிப் பக்கம்வரை பார்த்தாள். அவன் கவிதை ஒன்றைப் படித்தாள். புதுக்கவிதை, ஜப்பானிய ஹைகூ மாதிரி நான்கே வரிகள். சற்று முன் அவன் சொன்ன அவனுடைய அந்தக் காதல் தோல்வி அதில் பிரதிபலித் திருந்தது. அவள் பத்திரிகையை மூடிக் கையில் வைத்துக் கொண்டாள்.

''நீங்க கவிதைகூட எழுதுவதுண்டா...?''

''நான் கவிதை தான் எழுதறது. கதை எழுதறதில்லை. இப்போதுதான் முதல் கதை எழுதலாம்னு தோணறது!'' அவள் எதுவும் சொல்லவில்லை. எதையோ நினைத்துக் கொண்ட மாதிரி அவன் சரேலென்று எழுந்தான். ஹெல்மெட்டையும், சிகரெட் பாக்கெட்டையும் எடுத்துக்கொண்டான்.

''அப்போ நான் வரட்டுமா?'' என்று கேட்டான். அவளும் எழுந்து நின்றாள்.



''இந்தப் பத்திரிகை என்கிட்டே இருக்கட்டுமே, படித்துவிட்டுத் தரேனே...''

''ஓ. எஸ். படிச்சதும், எப்படியிருக்குன்னு சொல் லுங்கோ. வேணும்னா மீதிப் பத்திரிகை எல்லாத்தையும் கூடக் கொண்டு வந்து தரேன். ரைட்டோ. அப்ப நான் வர்ரேன்.''

அவன் போன பின்பும் அவனுடைய முகமும்-அந்தப் பெரிய கண்களும் பேச்சும் யமுனாவின் மனசைச் சுற்றிக் கொண்டிருந்தன. 'என்ன சொல்ல வந்தான், இவன்? எதைச் சொல்லிவிட்டுப் போகிறான்? உங்க கதையைப் பற்றிப் பேச வந்திருக்கேன் என்று சொல்லிவிட்டுத் தன்னைப் பற்றிப் பேசிவிட்டுப் போகிறானே...'

மீண்டும் வந்து தன் மேஜையில் உட்கார்ந்தபோது மணி மூன்றடித்தது.

# 4

**லை**ப்ரரியை விட்டு யமுனா கிளம்பினபோது சுபாஷிணி தானும்கூட வருவதாகச் சொன்னாள். சுபாஷிணி இதுவரை அவளுடன் வந்ததில்லை. வேறு யாரோடும் போனதில்லை. தினமும் அவளை அழைத்துக் கொண்டு போக யார் யாரோ வருவார்கள். ஒரு வெள்ளை ஓல்க்ஸ் வேகனும்-சிவப்பு நிற ஃபியட்டும் அடிக்கடி வரும். அதில் வருகிறவர்களை யமுனா பார்த்திருக்கிறாள். நாற்பது வயசில் பெரிய கம்பெனியின் எக்ஸிக்யூடிவ் மாதிரி தெரிவார்கள். அவர்களைத் தவிர ஒரு வெளிர் நீல நிற ஸ்கூட்டரும் வரும். அதில் வருகிறவன் மற்றவர்கள் மாதிரி இல்லாமல் வித்தியாசமானவனாய் இருப்பான். சுபாஷிணியை விட வயதில் சின்னவனாய்த் தெரிவான். குறுந்தாடி வைத்துக்

கொண்டு எப்போதும் சிரிக்கிற முகத்தோடு இருப்பான். சாயந்திரம் மட்டும்தான் அவன் வருவான் என்பதில்லை; எப்போது வேண்டுமானாலும் வருவான். சுபாஷிணி வேலையாக இருந்தால் முடித்துவிட்டு வரும்வரை பொறுமையாகக் காத்திருப்பான். புஸ்தகங்கள் படிப்பான். பத்திரிகைகள் பார்ப்பான். அதுவும் இல்லையென்றால் சுவரில் மாட்டியிருக்கிற ஓவியங்களை ரசித்துக் கொண்டு நிற்பான்.

சுபாஷிணி அவனை அறிமுகப்படுத்தியிருக்கிறாள். அவன் ஒரு பெரிய ஆர்ட்டிஸ்ட் என்று சொல்லியிருக்கிறாள். அனில் செளத்ரி என்று கையெழுத்திட்ட அவனுடைய ஓவியம் ஒன்றைக் காட்டியிருக்கிறாள். நெருப்பு மாதிரி சிவப்பு வர்ணத்தின் நடுவில் தெரிந்த அந்தப் பிச்சைக்காரப் பெண்ணின் முகம் யமுனாவை இரண்டு நாட்கள் தூக்கமில்லாமல் அடித்திருக்கிறது. அந்தக் கண்கள்-அதில் தெரிந்த சோகம்.. வெறும் வர்ணங்களில் அப்படிப்பட்ட ஒரு முகத்தை எப்படிக் கொண்டு வர முடிந்தது...!

மறுநாள் அவன் லைப்ரரிக்கு வந்தபோது அவனிடம் அந்த ஓவியத்தைப் பற்றிச் சொன்னாள். அது தன்னைத் தூங்கவிடாமல் ஹிம்சை பண்ணினதைச் சொன்னாள். அதைக் கேட்டதும் அவனுடைய முகத்தின் சிரிப்பு ஒருதரம் மாறி மீண்டும் பளிச்சிட்டது. தானும் அதே மாதிரி தூக்கமில்லாமல் தவித்திருப்பதைச் சொன்னான். ஹெளரா மெயிலில் பார்த்த அந்தப் பெண்ணைப் பற்றிச் சொன்னான். ஒரு வாரம் கனவில் அந்த முகம் துரத்திக் கொண்டே வந்ததைச் சொன்னான். ஒரு நாள் பாதி ராத்திரியில் எழுந்து உட்கார்ந்துகொண்டு அதை வரைய ஆரம்பித்ததைச் சொன்னான்.

அவன் பேசினபோது யமுனா அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். அவன் முகத்தில் ஒரு வசீகரம் தெரிந்தது. எல்லா வங்காளிகளையும் போல் அவனுக்கும் அழகான



பெரிய கண்கள். ஆமாம்-அமைதியாய்ப் பார்க்கிற கண்கள். பார்வையிலேயே பேசுகிற கண்கள். இந்த மாதிரி தீட்சண்யமான கண்கள் வங்காளிகளுக்கு மட்டும் எப்படி வருகிறது என்று நினைத்துக் கொண்டாள்.

அடுத்த நாள் அவன் தன் மற்ற ஓவியங்களையும் கொண்டு வந்து காட்டினபோது அந்த மாதிரி நிறைய சோகங்களை அவன் வர்ணப்படுத்தியிருப்பதைப் பார்த்தாள். அவனுடைய முகத்தின் சிரிப்பிற்கும், ஓவியத்தின் சோகத்திற்கும் நடுவில் விழுகிற பெரிய பள்ளத்தைப் புரிந்து கொண்டாள். அவனுடைய அந்த முகத்தின் சிரிப்புகூட மனத்தின் சோகத்தையே பிரதிபலிப்பதாக நினைத்தாள். அந்த மனசில் அப்படி என்ன கஷ்டம் இருக்கும்? மத்தியானம் வந்து போன அந்த தயா மாதிரி ஏதாவது ஏமாற்றம் இருக்கும்...வேறு என்னவாக இருக்க முடியும்? அவன் மட்டுமில்லை; இந்த சுபாஷிணிகூட அப்படித்தான். அவளுடைய அடிமனசிலும் இந்த மாதிரி ஒரு பெரிய சோகம் இருக்கிறது. அதை மறைக்க அல்லது மறந்து போகத்தான் இவர்கள் இப்படிச் சிரிக்கிறார்கள்; சிரித்துச் சிரித்தே கஷ்டங்களை விரட்டிவிடப் பார்க்கிறார்கள்.

இந்த மாதிரி கஷ்டப்படும் போதெல்லாம் சிரிக்க யாருக்கு வரும்? எத்தனை பேருக்கு இது சாத்தியம்? தன்னாலும் அந்த மாதிரி சிரிக்க முடிந்தால் எவ்வளவு வசதியாக இருக்கும்? முடியாது. அவளால் அப்படிச் சிரிக்க முடியாது. அது சிரிக்கிற முகமில்லை. புன்சிப்பாகக் காட்டுகிற முகம்கூட இல்லை. அதற்காகக் கடுகடுக்கிற முகமுமில்லை. அது ஒரு தனி முகம். சாந்தமான முகம். நிதானமான முகம். அதில் அந்த மாதிரி ஒரு சிரிப்பைப் பார்ப்பது என்பது கஷ்டமான விஷயம்தான்.

"அப்படி என்ன பலமான யோசனை? போகலாமா...?-தன் மேஜை டிராயரைப் பூட்டிக் கொண்டு சுபாஷிணி

பக்கத்தில் வந்து நின்றாள். யமுனா திரும்பிப் பார்த்தாள். 'போகலாம்..' என்று தலையாட்டினாள். இரண்டுபேரும் படியிறங்கி கான்கிரீட் தரையில் நடந்தார்கள். கேட் அருகில் வந்ததும் கூர்க்கா உடம்பை வளைத்து விளையாட்டாகச் 'சலாம்' சொன்னான்.

சுபாஷிணி சிரித்துக் கொண்டே, ''க்யா பையா, தூ சாய் பீலியா?'' என்று கேட்டாள். கூர்க்கா சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டே, ''ஹா.. ஹா...பீலியேஜி...!'' என்று பதில் சொன்னான்.

'தினமும் என்னைப் பார்த்தும்தான் இந்த கூர்க்கா சல்யூட் அடிக்கிறான். இந்த மாதிரி ஏதாவது கேட்க வேண்டுமென்று ஏன் தனக்குத் தோன்றவில்லை? கேட்டு அவனைச் சந்தோஷப் படுத்த வேண்டுமென்பது தெரியவில்லை...? இந்த மாதிரிச் சின்னச் சின்ன விஷயங்களைக் கூடத் தவறவிடாமல் இந்த சுபாஷிணி எப்படி இவ்வளவு கவனமாக இருக்கிறாள்...?'

வாசலைத் தாண்டி பஸ் ஸ்டாப்பை நெருங்கினதும் சுபாஷிணி நடையைச் சற்று நிதானமாக்கினாள். ''ஆர் யு டயர்ட்?'' என்று யமுனாவைப் பார்த்துக் கேட்டாள்.

''இல்லை. ஏன்...?''

''உன்னால் முடியும்னா இப்படியே நடந்து போயிட லாமே..! ஐ ஃபீல் லைக் டாக்கிங் டு யு...''

லைப்ரரியிலிருந்து கிளம்புகிறபோதே யமுனா இந்த வார்த்தைகளை எதிர்பார்த்தாள். எதையோ மனசுவிட்டுப் பேச நினைப்பதால்தான் சுபாஷிணி தன்னோடு வருவதாகச் சொல்கிறாள் என்று நினைத்தாள். அதனால் 'நடந்து போகலாமா...?' என்று கேட்டதும் உடனே தலையாட்டினாள். இரண்டு பேரும் மெதுவாக நடக்க ஆரம்பித்தார்கள். கொஞ்ச தூரம் வரை மௌனமாகவே போயிற்று. பேச வேண்டிய விஷயத்தை யோசிக்கிற அமைதியாக இருந்தது. பின் ஒரு



ஆரம்பம் கிடைத்த மாதிரி சட்டென்று ஆரம்பித்தாள் சுபாஷிணி...

''இன்னிக்கு நான் இப்படி உன்னுடன் நடந்து வர்றது லைப்ரரியிலே எல்லாருக்கும் ஆச்சரியமான விஷயமாக இருக்கும். என்னை அழைச்சுண்டு போக யாரும் வரலை. அந்த தாடிவாலா கூட வரலையேன்னு கேள்வியாய்க் கேட்டுண்டி ருப்பாங்க...!''

-அதைச் சொல்கிறபோது கூட முகத்தின் சிரிப்பு மாறவில்லை. வார்த்தைகளில் எந்த வருத்தமும் இல்லை. சாதாரணமாக எப்போதும் பேசுகிற மாதிரிதான் பேசினாள். இதைக்கூட எப்படி இவள் சிரித்துக் கொண்டே சொல்கிறாள் என்று நினைத்து யமுனா அவள் முகத்தைப் பார்த்தாள்.

''என்ன அப்படிப் பார்க்கறே?'' என்று மறுபடியும் சிரித்தாள் சுபாஷிணி.

''என்னைப் பத்தி யார் என்ன பேசிக்கிறாங்கன்னு எனக்கு நன்னாத் தெரியும். அதையெல்லாம் பத்தி எனக்குக் கஷ்டம் எதுவுமில்லை. எந்தக் கோபமும் இல்லை. அவங்க பேசறதைத் தப்புன்னு எப்படிச் சொல்ல முடியம்? எது தப்பு, எது சரின்னு நம்ம யாருக்கு சரியாப் புரியறது? நம்ம மனசுக்குப் பிடிச்சதாக நடந்தால் அதை சரின்னு சொல்லிடறோம். பிடிக்காததாக இருந்தால் தப்புன்னு நினைச்சுக்கறோம். அந்த மாதிரி மனசு எல்லோருக்குள்ளேயும் ஒண்ணு இருக்குங்றது நிறையப் பேருக்கு மறந்து போயிடறது. நமக்குத் தப்பாய்ப் படறது அவங்க மனசுக்கு ஏன் சரியாப் படக்கூடாதுன்னு நினைச்சுக்க மாட்டேங்கறாங்க. நமக்குள்ளே இருக்கிற அந்த 'இன்னர் வாய்ஸ்'தான் முக்கியம். நான் அது சொல்கிற மாதிரிதான் நடப்பேன். மத்தவங்க மனசையோ-உடம்பையோ நோகடிக்காத எந்த விஷயமும் சரியான விஷயம் தான். சரி தப்புன்னு சொல்றதுக்கெல்லாம் நான் வச்சுண்டிருக்கிற அளவுகோல் இதுதான்...''

வேகமாக அலறிக் கொண்டு போன மோட்டார் சைக்கிளின் சத்தத்தில் அவள் ஒரு நிமிஷம் பேச்சை நிறுத்தினாள். ''எவ்வளவு வேகமாகப் போறான் பாரு...'' என்று சொல்லிக் கொண்டாள். சத்தம் தேய்ந்து மறைகிற வரை பேசாமல் இருந்தாள். அதன் பின்பு பார்வை எது எதிலோ அலைந்தது. எதிரில் வந்து கொண்டிருந்த மனிதர்களைப் பார்த்தது. உயர்ந்து வானத்தைப் பார்த்தது. நட்சத்திரங்களைப் பார்த்தது. பின் யமுனாவின் முகத்திற்குத் திரும்பியது...

''இந்த விஷயம்கூட-நான் இப்படி நிறையப் பேரோட போறதுகூட என்வரைதப்பாப் படலே. தப்பாப் பட்டிருந்தால் அதை நான் செய்திருக்க மாட்டேன். ஒரு வேளை எனக்கு அம்மா அப்பா இருந்திருந்தால் நான் வேறே சுபாஷிணியாக நடந்திருக்கக்கூடும்! இதற்குள் எனக்குக் கல்யாணமாகியிருக்கலாம். என் பையன் ஸ்கூலில் படிக்கிறவனாகக்கூட இருக்கலாம். அல்லது என் மீது பிரியமாக-பிரியம்னா, உடம்பைப் பத்தின பிரியமில்லே-மனசைப் பத்தின பிரியமாய் இருக்கிற யாராவது இருந்திருந்தால் என் போக்கு மாறுபட்டிருக்கலாம். சின்ன வயசிலிருந்தே எனக்கு யாருமில்லாமல் போய்விட்டதுதான் இதற்கெல்லாம் காரணமோ என்னமோ...? அப்போதிலிருந்தே நான் இப்படித்தான் பட்சியாய்ப் பறந்துண்டிருக்கேன். எப்பவும் சந்தோஷமாக இருக்கணும்னு நினைச்சுண்டிருக்கேன். எல்லாரையும் சந்தோஷப் படுத்தணும்னு முடிவு பண்ணியிருக்கேன்...

''எனக்குத் தெரிந்து நான் யார் மனசையும் புண்படுத்தினதில்லை. யாரையும் கஷ்டப்படுத்தினதில்லை. என் செய்கையால் யாரும் பாதிக்கப்பட்டதுமில்லை. இப்போ என்னோட - என்னை அழைச்சுண்டு போகக் கார்லே வராங்களே... அவங்கள்ளாம்கூட என்னை மாதிரித்தான். என்னை மாதிரின்னா என் மனசு மாதிரின்னு சொல்ல வரலே; உடம்பு மாதிரின்னு சொல்ல வந்தேன். என் மாதிரி



தனிக்கட்டைன்னு சொல்றேன். ஒண்ணு பெண்டாட்டி செத்தது; பிள்ளை குட்டி யாருமில்லாதது. இன்னொன்று பிரம்மச்சாரி. அதாவது, இதுவரைக்கும் கல்யாணம்னு ஒண்ணு பண்ணிக்கலே. மத்தது டைவர்ஸி.

''என்கிட்டே வரவங்கள்லாம் இப்படித்தான் வராங்க. கை நிறையப் பணமும், மனசு மூலையில் ஊனமுமாகத்தான் வராங்க. அந்த ஊனத்துக்கு நான்தான் மருந்து போட்டுக் கட்ட வேண்டியதாய் இருக்கு. பஞ்சு வச்சு துடைக்க வேண்டியதாய் இருக்கு. அப்படி எந்த ஊனமுமில்லாமல் சும்மா வர்ற யாரையும் நான் ஏத்துக்கறதில்லே. வெறுமனமே சிரிச்சுப் பேசி அனுப்பிச்சுடறது. முக்கியமாய், கல்யாணமாகிப் பெண்டாட்டி பிள்ளை குட்டிகளோட இருக்கிறவர்களாக இருந்தால் வாசலிலேயே நிக்க வச்சு அனுப்பிடறது. அப்படி வர்றவங்களைப் பார்த்தால் மனசுக்குள்ளே 'சுள்'ளுனு ஒரு கோபம் வரும். இவங்களுக்கெல்லாம் எதுக்குக் கல்யாணம்னுகூடத் தோணும். தனக்குன்னு ஒருத்தியைத் தேடிண்டிருக்கிற போது அவளைச் சந்தோஷப்படுத்தத் தெரியணும்; தானும் சந்தோஷமாக இருக்கத் தெரியணும். அது தெரியாதவன் இங்கே வந்து மட்டும் சந்தோஷப்படப் போறானா என்ன...? இதைப் பக்குவமாய் எடுத்துச் சொல்லிப் புரியவச்சு அனுப்பிடறது...

''இதெல்லாம் தெரியாமல் இது எனக்குப் பொழுது போக்குன்னோ தொழில்னோ மீதிப்பேர் பேசிக்கிறதைக் கேட்கிறபோது மனசுக்குக் கஷ்டமாகத்தான் இருக்கு. ஒரு நிமிஷம் 'சுரீர்'னு எறும்பு கடிக்கிற மாதிரி வலிக்கிறது. இதையெல்லாம் எடுத்துச் சொல்லி அவங்களுக்கெல்லாம் புரிய வைக்க முடியாதுன்றதாலே பேசாமலே இருக்கேன். அது அவங்க சுபாவம்னு வெறுமனே சிரிச்சிட்டுப் போயிடறேன். வேற என்ன செய்ய முடியும் சொல்லு...?''

அந்தக் கேள்வி மனசை உலுக்க அவளை நிமிர்ந்து பார்த்தாள் யமுனா.

சுபாஷிணி கேட்ட கேள்வி சிறிது நேரம் யமுனாவைத் திணற அடித்தது. எதுவும் பேச முடியாமல் போயிற்று. நெஞ்சுக்குள் சின்ன வலியாக எட்டிப் பார்த்தது. அந்தக் குரலும்-முகமும்-உதட்டின் சோகமான சிரிப்பும்-'என்ன செய்ய முடியும் சொல்லு...?' என்ற அந்தக் கேள்வியும் எப்போதும் மறக்காது என்று தோன்றியது. சுபாஷிணியை நினைக்கிறபோதெல்லாம் கூடவே அந்தக் கேள்வியும் வந்து போகும். அவள் பேசினதெல்லாம் ஞாபகத்துக்கு வரும். மனசுக்குள் சிலிர்ப்பாக ஒன்று ஓடும். 'என்ன பிறவி இவள்!' என்று வியந்து போகும். அப்போதும் அதே வியப்பு தோன்ற, கூடவே மெதுவாக நடந்தாள்.

மியூஸிக் அகாடமியின் எதிரில் சிக்னலுக்காக ஒரு நிமிஷம் நின்றார்கள். 'சாலையைக் கடந்து உட்லண்ட்ஸ் வருகிறவரை பேச்சு எதுவும் இல்லை. சுபாஷிணியும் மௌனமாகத்தான் நடந்தாள். அதன்பின் பேச ஆரம்பித்த போது குரல் அதே தெளிவில் இருந்தது. எந்த மாறுதலும் இல்லாமல் ஒரே த்வனியில் வந்தது...

''திடீர்னு ஏன் இதையெல்லாம் இவள் நம்மகிட்டே சொல்றான்னு நீ சந்தேகப்படலாம். ஒரு காரணமாகத்தான் சொல்றேன். நான் சொல்றதையெல்லாம் நீ புரிஞ்சுப்பேன்னுதான் சொல்றேன். இதுவரை நிறையப் பேர் என்கிட்டே வந்திருக்காங்க. மனசுக்குப் பிடிச்ச மாதிரியெல்லாம் நடந்திருக்காங்க. எதையோ நினைச்சுண்டு பணமாகத் தந்திருக்காங்க; தராமலும் போயிருக்காங்க. ஆனால் இதுவரை யாரும் என்னை நேசிக்கிறதாகச் சொன்னதில்லை. நேசிக்கிற மாதிரி நடந்தது கூட இல்லை. இந்த சுபாஷிணி யார்-இவள் மனசுக்குள் என்ன இருக்கும் என்றெல்லாம் யோசித்ததில்லை.



என்னுடைய ஆசைகள் என்னவாக இருக்கும் என்ற கவலை எதுவும் பட்டதில்லை..

''இப்போது ஒரு ஆத்மா என்னை நேசிக்கிறதாகச் சொல்கிறபோது-என்னைப் பற்றி நிறைய அக்கறைப்பட்டு-நிறைய கவலைகள் படுகிறபோது-என்னுடைய சின்னச்சின்ன ரசனைகளையெல்லாம் மதிக்கிறபோது-'ஐ'ம் ஸாரி. ஐ நீட் யுவர் கம்பெனி'ன்னு சொல்கிறபோது-வீட்டுக்கு வந்து உட்கார்ந்து ஹக்ஸ்லி-சாத்ரே-ஜே.கே.-ன்னு புஸ்தகங்களைப் பத்திப் பேசறபோது-வெறுமனே ரெகார்ட்-ப்ளேயரை ஆன் பண்ணி மணிக்கணக்கில் கேட்டுவிட்டு எழுந்து போகிற போது, இப்படிக்கூட உண்டான்னு எனக்கு சிலிர்த்துப் போகிறது. இதைவிட வேற என்ன வேணும்னு தோணறது. இதற்கு எனக்குத் தகுதி உண்டான்னு மனசு உடைஞ்சு போறது. என்னோட இந்த முப்பதஞ்சு வயசிலே இந்த மாதிரி ஒரு பேச்சைக் கேட்டதில்லே.. இப்படி ஒரு பிறவியைப் பார்த்ததில்லே. இதற்காக எதுதான் செய்யக் கூடாதுன்னு தோணறது. செய்ய முடியுமான்னு சந்தேகமாகவும் இருக்கு...

''ஒருத்தனுக்குன்னு மனசை ஒதுக்கி வச்சுண்டப்புறம் அவனை மட்டும் சந்தோஷப்படுத்தினால் போறும்னு நினைக்கிறவள் நான். அதே மாதிரியே நினைக்கிற பிறவிதான் அதுவும்! 'எப்போ நீ எனக்காக மட்டுமேன்னு, உன் மனசை ஒதுக்கிக் கொடுக்கறியோ அப்போ உன்கிட்டே வரேன். அதிலிருந்து-வி ஷெல் ஸ்டார்ட் லிவ்விங் டு கெதர்'னு... அது பிடிவாதம் பிடிக்கிறதைப் பார்த்தால் பயமாக இருக்கு. இதுவரை அந்த மாதிரியெல்லாம் யாருக்கும் நான் என் மனசை ஒதுக்கியதில்லை. இப்போதுகூட அது முடியுமான்னு சந்தேகமாக இருக்கு. வேற எந்த சந்தேகமும் இல்லே. பழக்க தோஷத்தினாலே-மாட்டேன்னு சொல்ல முடியாத காரணத்தினாலே, அந்த நல்ல மனசைக் கஷ்டப் படுத்திடுவேனோங்கிற

சந்தேகம். அப்படிச் செய்துவிடக் கூடாதேன்னு பயம். ஒரு மாசமா நான் ஒண்ணும் புரியாமல் இப்படியே தவிச்சுண்டிருக்கேன்..''

சுபாஷிணியைத் திரும்பிப் பார்த்தாள் யமுனா. அவளை அப்படியே சேர்த்துக் கட்டிக் கொள்ள வேண்டும் போல் இருந்தது. 'இதற்குமேல் பேசாதே' என்று சொல்லத் தோன்றியது. அப்பாவின் ஞாபகம் வந்தது. ஜானகியின் ஞாபகம் வந்தது. பார்த்தே இருக்காத அந்த அம்மாவின் ஞாபகம் வந்தது. சட்டென்று அனில் சௌத்ரியின் ஞாபகம் -இவள் சொன்ன அந்த ஆத்மா அனில் சௌத்ரி தான் என்பது புரிந்தது. அவனுக்காக-அந்தப் பிரியத்திற்காக எதைச் செய்தால்தான் என்ன என்று தோன்றியது.

'சுபாஷிணி, அவனைச் சந்தோஷப்படுத்தேன். அவன் கேட்கிற மாதிரி அவனோடு இரேன். எத்தனை நாள்தான் இப்படியே ஓடிக்கொண்டிருப்பாய்? அலுப்பாக இல்லையா உனக்கு? அயர்ச்சியாக இல்லையா...? எங்கேயாவது சாய்ந்து உட்கார்ந்து கொள்ளலாம் போல் இல்லை? அவன் உனக்குக் கிடைத்திருக்கிற ஒரு நல்ல சாய்மானம். உன்னோடு உனக்குச் சரியாகப் பேசக்கூடிய ஒரு துணை. அதை இழந்து விடாதேயேன்! ப்ளீஸ்..'

யமுனா இதையெல்லாம் அவளிடம் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. சட்டென்று சுபாஷிணியின் கையைப் பற்றிக் கொண்டாள். விரலை மெதுவாக ஒருதரம் அழுத்தினாள். அதில் மனசில் இருந்ததையெல்லாம் சொல்லி விட்ட மாதிரி தோன்றியது. சுபாஷிணியும் அதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். யமுனாவின் அந்தக் கையை விடாமல் பற்றிக் கொண்டாள். அப்படியே சிறிது தூரம் நடந்தாள். எலியட்ஸ் ரோடின் திருப்பத்தில்-தன் வீட்டின் தெருக்கோடியில் மறுபடியும் பேச ஆரம்பித்தாள்.



''வீட்டுக்குதான் வாயேன் யமுனா! நீ ஒரு தரம் கூட என் வீட்டுக்கு வந்ததில்லையே...?''

அந்த அழைப்பைத் தட்ட முடியாமல் யமுனா தலையாட்டினாள். அந்தத் தெருவை அவள் நிறையத் தரம் பார்த்திருக்கிறாள். அதைக் கடந்தும் போயிருக்கிறாள். ஆனாலும் ஒரு நாள்கூட அதனுள் நுழைந்ததில்லை. அவளுக்கு மிகவும் பிடித்தமான தெரு அது. அதைத் தெரு என்று கூடச் சொல்ல முடியாது. இரண்டு பக்கத்திலும் பத்து வீடுகள் இருக்கிற ஒரு முட்டுச் சந்து. அதை எல்லோரும் தென்னந் தோப்புச் சந்து என்றுதான் சொல்வார்கள். வரிசை வரிசையாய்த் தென்னை மரங்கள் நின்று தோப்பாகக் காட்டுகிற இடம். சிலுசிலுவென்று காற்று வீசுகிற இடம். தார் போட்டு மூடப்படாத இடம். காவி பூசின மாதிரி செம்மண்ணின் அழகு தெரிகிற இடம். சின்னத் தூறலாய் நான்கு விழுந்தால்கூடப் போதும்! 'கம்'மென்று வாசனை வரும். ஓர் அடி எடுத்து வைத்தால் நலங்கு பூசின மாதிரி பாதத்தின் ஓரங்கள் சிவந்து போகும்.

அந்த இடம் மட்டுமில்லை; சுபாஷிணியின் வீடுகூட அப்படித்தான் இருந்தது. அதே மாதிரி ஓர் அழகு. அமைதியான அழகு. மனசுக்கு இதமான குளிர்ச்சி. உள்ளே நுழைந்ததும் சுபாஷிணி கொளுத்தி வைத்த ஊதுவத்தி வாசனை. சோபா-நாற்காலி என்று ஒன்றுமில்லை. தரையில் சுவர் ஓரமாக நீளமாய்ப் போடப்பட்ட திவான் மெத்தைகள். நடுவில் ஒட்டகத்தின் முதுகு மாதிரி ஒரு டீப்பாய். பச்சை-நீலம்-சிவப்பு என்று கற்கள் பதித்த ஜெய்பூர் டீப்பாய். ஒரு பெரிய கண்ணாடி ஷெல்ஃப் முழுதும் புஸ்தகங்கள். பக்கத்தில் இன்னொரு ஷெல்ஃபில் கலைப் பொருட்கள். கேரளத்து யானைகள்-சந்தனத்தால் ஆன தஞ்சாவூர் கோயில்-காஷ்மீரத்து மரச் சிலைகள்- வலை வீசுகிற ஒரு மீனவப் பெண்-லண்டனின் மாடல் -பிக்பென் மணிக்கூண்டு-ஒரு ஈபில்டவர்-ஒரு எகிப்திய

பிரமிட்-ஐதர் அலி காலத்திய பழைய கடிகாரம்... அறையின் ஒவ்வொரு மூலையிலும் ஆளுயரத்தில் மரச் சிலைகள். தலையில் கூடையோடு நிற்கிற ஒரு கிராமத்துப் பெண்-வயசான சுருக்கங்கள் முகத்திலும் உடம்பிலும் தெரிய நிற்கிற கிழவன்-ஒரு காட்டுவாசி-சிரிக்கிற புத்தர். எதிர் சுவரில் வருகிறவர்களின் கண்ணில் படுகிற மாதிரி அனில் சௌத்ரியின் அந்தப் பிச்சைக்காரப் பெண்ணின் ஓவியம். சட்டென்று அந்தப் பெண் மறைந்து அந்த இடத்தில் அதே பாவத்தில் அனில் சௌத்திரியே நின்று கொண்டிருக்கிற மாதிரி தோன்றியது யமுனாவிற்கு.

''உங்க வீடு எனக்குப் பிடிச்சிருக்கு. ரொம்ப அழகா வச்சுண்டிருக்கீங்க...'' என்றாள்.

சுபாஷிணி சிரித்துக் கொண்டே எழுந்து போனாள். ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் திரும்பி வந்தாள். ஒரு பெரிய ட்ரேயில் டீயும் பிஸ்கட்டுகளும் கொண்டு வந்தாள். டீயைக் கலந்து, ''ம்... சாப்பிடு...'' என்று யமுனாவின் பக்கம் நகர்த்தினாள். ஒரு பிஸ்கட்டை எடுத்து டீயில் தோய்த்துக் கடித்துக் கொண்டே பேசினாள். பேச்சு சுவாரஸ்யமாய்ப் போயிற்று.

சுபாஷிணிதான் பேசினாள். கல்கத்தாவில் தான் பிறந்த வீட்டைப் பற்றிச் சொன்னாள். தன் பதினைந்தாவது வயதில் கார் விபத்தில் ஒன்றாக இறந்து போன பெற்றோர்களைப் பற்றிச் சொன்னாள். காலேஜில் படித்த விதத்தைச் சொன்னாள். பின் வேலை தேடி மெட்ராசுக்கு வந்ததைச் சொன்னாள்.

''அப்படியானால் அனில் சௌத்ரியை எங்கே பார்த்தீர்கள்...?''

சுபாஷிணி கண் அகல அவளை நிமிர்ந்து பார்த்தாள். 'நான் சொன்ன அந்தப் பிறவி அனில் சௌத்ரி தான் என்பதை எப்படித் தெரிந்து கொண்டாய்...?' என்று கேட்கிற மாதிரி



இருந்தது. கூடவே ஒரு புன்சிரிப்பும் ஓடியது. மெதுவான குரலில், ''கல்கத்தாவில்தான்'' என்றாள்.

''வேலைக்காக அலைந்து கொண்டிருந்தபோது ஒரு இன்டர்வ்யூவில் பார்த்தேன்.''

''ஹௌ டிட் ஹி கம் டு மெட்ராஸ்?''

''பிகாஸ் ஐ ஹேவ் கம் டு மெட்ராஸ்!'' என்று சிரித்தாள்.

அந்தச் சிரிப்பைப் பார்த்துக் கொண்டே யமுனா கேட்டாள்:

''உங்ககிட்ட மனசுவிட்டு ஒண்ணு கேட்கலாமா, சுபாஷிணி?''

''ஓ எஸ். தாராளமாகக் கேட்கலாம்.''

''உண்மையான பதிலாக வருமா...?''

''நான் ரொம்ப ரொம்ப அவசியமானால் தவிரப் பொய் சொல்றதில்லை.''

''டோண்ட் யு லவ் அனில் சௌத்ரி...?''

சுபாஷிணி மென்மையாகச் சிரித்தாள். ''ஐ லவ் எவ்ரிபடி'' என்றாள்.

''தட்ஸ் டிஃபரண்ட். மீதிப்பேரை விரும்பறதுக்கும் அனிலை விரும்பறதுக்கும் வித்தியாசமிருக்கா இல்லையா? உங்க மனசின் மூலையில் அனில் சௌத்ரிக்குத் தனியாக ஒரு இடம் இருக்கா இல்லையா...?''

சுபாஷிணி ஒரு நிமிஷம் யோசித்தாள்.

பின் பதில் சொல்ல ஆரம்பித்தபோது அழைப்பு மணி மெதுவாய் ஒலித்தது. சுபாஷிணி, 'கம் இன் ப்ளீஸ்' என்றதும் கர்ட்டனை விலக்கிக் கொண்டு அனில் சௌத்ரி உள்ளே வந்தான். யமுனாவைப் பார்த்ததும், ''வாட் எ ப்ளெஸண்ட் ஸர்ப்ரைஸ்!'' என்றான்.

சிரித்துக் கொண்டே எழுந்து நின்றாள் யமுனா.

# 5

மெதுவாக நடந்தாள் யமுனா. அவசரம் எதுவுமில்லாத நிதானமான நடை. மனசுக்குள் யோசித்துக் கொண்டே ஆமையாய் நடக்கிற நடை. சுபாஷிணியின் வீட்டிலிருந்து பதினைந்து நிமிஷ நடைதான். சாதாரண நடைக்குப் பதினைந்து நிமிஷம். காலைச் சற்று வேகமாக எட்டிப் போட்டால் பத்து நிமிஷம் போதும். ஆனால் அவளுக்கு சீக்கிரம் வீட்டுக்குப் போகப் பிடிக்கவில்லை. வீட்டின் அந்த நிசப்தத்தில் மனசின் சந்தோஷத்தைக் கலைத்துக் கொள்ளப் பிடிக்கவில்லை. மனசு சந்தோஷமாக இருந்தது. சொல்ல முடியாத சந்தோஷம். இதுவரை அனுபவித்திருக்காத சந்தோஷம். சுபாஷிணியையும் அனில் சௌத்ரியையும் நினைத்தபோது அந்த சந்தோஷம் இன்னும் அதிகமாயிற்று.

அனில் சௌத்ரி அவள் புறப்படும்போது உள்ளே வந்ததும்-சுபாஷிணி அவனை ஒரு குளிர்ந்த புன்னகையுடன் வரவேற்றதும்-மென்மையாக சிரித்துத் தன்னைப் பார்த்துத் தலையைச் சாய்த்து 'ஹலோ' என்று சொன்னதும்-அந்த இருவரின் நட்பையும் உறவையும் நினைத்தாலே வியப்பாக இருந்தது. இந்த மாதிரிகூட இருக்க முடியுமா என்று தோன்றியது.

உடனே, ஜானகியின் ஞாபகமும் வந்தது. அவள் மீதிருந்த கோபமெல்லாம் போய் அவளைப் பற்றி மென்மையாக நினைத்துப் பார்க்க முடிந்தது. பாவம் ஜானகி... அவளுக்குச் சேர்த்து அணைத்துக் கொள்கிற மாதிரி அன்பும் ஆதரவும் தேவையாய் இருந்திருக்கிறது. சாருவதற்கு ஆதாரமாய் ஒரு துணை தேவைப்பட்டிருக்கிறது. அவளால் எப்போதும் தனியாய் நிற்க முடிந்ததில்லை. மனசுக்குள் ஸ்திரமான எந்த முடிவும் இருந்ததில்லை. எதைப்பற்றியும்



நடுவில் நின்று யோசிக்கும் சக்தியில்லை. அப்படி இருந்திருந்தால் இந்த மாதிரிப் போயிருக்க மாட்டாள். அப்பாவிடம் கூட இப்படி நடந்து கொண்டிருக்க மாட்டாள்...

அப்பா...!

அப்பாவை நினைத்ததும் எப்போதும் ஏற்படுகிற நெகிழ்ச்சி அப்போதும் ஏற்பட்டது. அப்பா மாதிரி அத்தனை பிரியத்தையும்-கஷ்டங்களையும்- ஏமாற்றங்களையும் சுமந்து கொண்டு யாரால் இருக்க முடியும்? அத்தனைக்கும் அவர் ஒடிந்து போகாமல் இருக்கிறார். நிமிர்ந்து நிற்கிறார். எப்போதாவது அந்த நிமிரல் சற்று ஆட்டம் காண்கிறது. அந்த சந்தர்ப்பங்களில்தான் அவர் 'கிளப்'பிற்குப் போகிறார். குடிக்கிறார், சீட்டாடுகிறார். அவர் இப்படி 'கிளப்'பிற்குப் போவது-குடிப்பது-சீட்டாடுவது எல்லாமே தன்னைத்தானே ஏமாற்றிக் கொள்ளத்தான் என்று பட்டது. 'இது என்ன தண்டனை? யார் கொடுத்த தண்டனை? எதற்காக அவர் இப்படித் தனக்குள் வதைபட்டுச் சாகிறார்? இந்த மாதிரி தன்னை மறக்கப் பிரயத்தனப் படுவதெல்லாம் மனசுக்காகவா...? அல்லது உடம்புக்காகவா...? அம்மா போனதும் அவர் ஏன் இன்னொரு கல்யாணம் பண்ணிக் கொள்ளவில்லை?

அதற்கு உடனே அவளுக்குப் பதில் கிடைத்தது. நாங்கள்தான் காரணம் என்பது புரிந்தது. தானும்-ஜானகியும் தான் காரணம். அதை நினைத்ததும் அப்பா அவள் மனசில் இன்னும் உயர்ந்து போனார். எப்போதும் அவர் அவள் மனசில் உயர்ந்துதான் இருக்கிறார். இப்போது அந்த உயரம் இன்னும் கொஞ்சம் அதிகமாயிற்று. இந்த விஷயத்தில் எவ்வளவு ஸ்திரமாக இருந்திருக்கிறார் என்று தோன்றியது. மனசை எப்படிப் பக்குவப்படுத்தியிருக்கிறார்! இதற்காக அவர் எத்தனை நாள் பாடுபட்டிருக்க வேண்டும்? இது எத்தனை பெரிய விஷயம்! அப்பா..எப்படி முடிந்தது உங்களால்...? ஒரு

ரிஷி மாதிரி நிற்க முடிந்தது? தபஸில் இருக்கிற மாதிரி இருக்க முடிந்தது? இதுவும் ஒரு தபஸ்தான். அவர்களை வளர்த்து ஆளாக்க வேண்டும் என்ற எண்ணத்தை ஆகுதியாக வளர்த்துக் கொண்ட தபஸ்...

ஆனாலும் அவர் மீண்டும் கல்யாணம் பண்ணிக் கொண்டிருக்க வேண்டும் என்றே தோன்றியது. அப்படிப் பண்ணிக் கொண்டிருந்தால் அவர் மனசின் கதவுகள் தாராளமாகத் திறந்து கொண்டிருக்கும். அவருக்கு ஒரு வடிகால் கிடைத்திருக்கும். நெஞ்சின் அடியில் பட்ட காயத்தின் வலி மறந்து போயிருக்கும். அவர் சாதாரணமானவராக இருந்திருப் பார். கலகலப்பாகப் பேசியிருப்பார். சந்தோஷமாகச் சிரித்திருப்பார். கோபம் வந்தால் வெளியில் காண்பித்திருப் பார். இப்படி எல்லாவற்றையும் போட்டு இறுக்கி மூடித் தனக்குள்ளேயே அவஸ்தைப் பட்டிருக்கமாட்டார். கல்யாணம் என்று கூடப் பண்ணிக் கொண்டிருந்திருக்க வேண்டாம். தனக்குப் பிடித்த மாதிரி மனசைப் பகிர்ந்து கொள்கிறார்போல் ஒரு துணையை மட்டுமாவது தேடிக் கொண்டிருக்கலாம்...!

அதைக்கூடச் செய்யவில்லை அவர். இத்தனை நாளையும் இப்படியே தள்ளி விட்டார். தன்னை மரக்கட்டை மாதிரி மாற்றிக்கொண்டு விட்டார். இப்போது அவருக்கு என்ன வயசு இருக்கும்...? அதிகம் போனால் நாற்பத்தைந்து இருக்குமா...? இருக்காது. ஒன்றிரண்டு குறைச்சலாகத்தான் இருக்கும். 'என்னோட இருபத்திரண்டாவது வயசிலே ஜானகி பிறந்துட்டா...' என்று எப்போதோ அவர் சொன்னது நினைவுக்கு வந்தது. இப்போது அவருக்கு வயசு நாற்பத்தி நாலு. இந்த வயசுக்குள் இப்படி ஒரு வெறுமை உணர்ச்சியா? இத்தனை சலிப்பா...? பாவம் அப்பா...!

''மணி என்னம்மா ஆறது?'' என்ற குரல் கேட்டு சட்டென்று நின்றாள். வெள்ளை வெளேரென்று நெற்றி நிறைய விபூதியோடு கிழவர் ஒருவர் இவளைப் பார்த்துப் புன்னகை செய்தார். அவளும் அதே புன்னகையோடு கைக்கடிகாரத்தில் மணி பார்த்தாள். ஏழு ஐந்து.



''அம்மாடி! ஏழாயிடுத்தா...? வரேம்மா!'' என்று சொல்லிவிட்டுப் பரபரப்போடு நகரத் தொடங்கினார். சற்று ஓடுகிற மாதிரிகூட இருந்தது. பாரியான அந்த உடம்பைத் தூக்கிக் கொண்டு ஓட முடியவில்லை என்பது தெரிந்தது. அவர் கையில் ஒரு பெரிய காக்கிப் பை இருந்தது. அது மிகவும் கனமாக இருந்திருக்க வேண்டும். பை இருந்த கையின் தோள் சரிய அவரே அந்தப் பக்கம் சாய்ந்து நடந்தார். உள்ளே அரிசி, மளிகைச் சாமான்கள் இப்படி ஏதாவது இருக்கும் என்று நினைத்துக் கொண்டாள்.

மீண்டும் நடக்க ஆரம்பித்தபோது நடை சற்று வேகமாகியது. இன்னும் சில நிமிஷங்களுக்கெல்லாம் வீட்டில் இருக்கலாம்... இன்றைக்கு அப்பா வருவதற்கு மணி பதினொன்றாகும். எல்லோரும் தூங்கிவிட்ட ராத்திரியின் நிசப்தத்தில் அவள் வீட்டின் இரும்பு கேட் திறக்கப்படுகிற சத்தம் மட்டும் பெரிசாகக் கேட்கும். அப்பா காரிலிருந்து இறங்கித் தடுமாறாமல் நடந்து வருவார். பர்ஸைத் திறந்து டிரைவரிடம் பத்து ரூபாய் நோட்டு ஒன்றை எடுத்துக் கொடுப்பார். அவன் ''குட் நைட்'' சொன்னதும், பதிலுக்கு ''குட் நைட்'' சொல்வார். ''கேட்டைப் போட்டுண்டு போ வின்சென்ட்'' என்பார். எவ்வளவு குடித்தாலும் அவருக்கு அந்த நிதானம் மட்டும் தப்பாது.

ஏனோ, அன்று அப்பா வீட்டில் இருக்க வேண்டுமென்று தோன்றியது. அவரோடு பேசவேண்டும் போலிருந்தது. மத்தியானம் வந்த அந்த தயாவைப் பற்றிச் சொல்ல வேண்டும். சுபாஷிணியைப் பற்றிச் சொல்ல வேண்டும். அனில் சௌத்ரி பற்றி... ஆனால் அவர் தான் அன்று வர நேரமாகும் என்பதைக் காலையிலேயே சொல்லிவிட்டுப் போயிருந்தாரே...! அவர் வீட்டில் இருந்தால் அவளுக்குப் பொழுது போகும்.

ஏதாவது புஸ்தகத்தைப் பற்றிப் பேசுவாள். லைப்ரரியில் நடந்த விஷயங்களைப் பற்றி சொல்வாள். அனேகமாய் பேச்சு அவளுடையதாகத்தான் இருக்கும். அவர் வெறும் தலையை மட்டும் ஆட்டிக் கேட்டுக் கொண்டிருப்பார்.

பின் எழுந்து போய் சூடாக ஏதாவது சமைப்பாள்! பொரித்த ரசம்-பருப்புத் துவையல்-வற்றல் குழம்பு இப்படி ஒன்றின் வாசனை வரும். அப்பா இல்லாவிட்டால் வெறும் மோர் சாதம் மட்டும்தான். தொட்டுக் கொள்ள எலுமிச்சை ஊறுகாய், அத்தோடு அவள் சாப்பாடு முடிந்து விடும். அவளுக்கு சாப்பாட்டைப் பற்றின கவனம் எதுவுமில்லை. தனியான ருசிகள் இல்லை. நான்கு ரொட்டித்துண்டுகள் கூடப் போதும்!

ஆனால் அப்பாவுக்காகத்தான் அவள் புஸ்தகத்தைப் பார்த்து விதம் விதமாய் சமைக்க ஆரம்பித்தாள். கூடவே கொஞ்சம் நெய் வாசனை வர சமைப்பாள். 'அம்மா இருந்திருந்தால் அவருக்கு எப்படிச் சமைத்துப் போட்டிருப்பாள்' என்ற ஆதங்கத்தோடு சமைப்பாள். ஆனால் அவர் இதுவரை அவளிடம் ஒன்றும் கேட்கவில்லை. ஞாயிற்றுக் கிழமைகளில் கூட ஒரு கப் காபி அதிகம் கேட்பதில்லை. 'சாப்பிடுவது என் கடமைகளில் ஒன்று...' என்கிற மாதிரி சாப்பிடுவார். அவளாக, 'இன்னிக்கு பூசணிக்காய் கூட்டு எப்படிப்பா இருக்கு...?' என்று கேட்டால், 'ஓ... நன்னா இருக்கும்மா...! ரொம்ப நன்னா இருக்கு. இன்னும் ஒரு கரண்டி போடும்மா!' என்பார். அந்த ஒரு கரண்டி அதிகம் கேட்பது தன்னைச் சந்தோஷப்படுத்தத்தான் என்பது அவளுக்குத் தெரியும்.

ஆனால் ஒன்றும் சொல்லாமல் சிரித்துக் கொள்வாள். அதை நினைத்ததும் அப்போதும் சிரிப்பு வந்தது. மெதுவாகத் தனக்குள் சிரித்துக் கொண்டாள்.



தெரு முனையில் திரும்பி வீட்டை நெருங்கினபோது வாசல் கேட் திறந்திருப்பது தெரிந்தது. உள்ளே போகன்வில்லா வளைவின் கீழ் கார் ஒன்று நிறுத்தப்பட்டிருந்தது. வெள்ளை வெளேரென்ற அழகான ஓல்க்ஸ் வாகன். ஒரு சின்ன முயல் குட்டி பதுங்குகிற பாவனையில் அது நிற்பதாக நினைத்துக் கொண்டாள். அருகில் போய் தடவிக் கொடுக்க வேண்டும் போலிருந்தது. எப்போதுமே அவளுக்கு ஓல்க்ஸ் வாகன் பிடிக்கும். அதிலும் வெள்ளை நிற ஓல்க்ஸ் வாகன் அதிகம் பிடிக்கும். அது ஒரு பூனைக்குட்டி மாதிரி-பாமரேனியன் நாய்க்குட்டி மாதிரி இருக்கிறாற்போல் தோன்றும். அன்று மட்டும் பதுங்குகிற முயல் குட்டியாகத் தெரிந்தது.

சட்டென்று அது யாருடைய காராக இருக்கும் என்ற யோசனையும் வந்தது. அவளுக்குத் தெரிந்த யாரிடமும் ஓல்க்ஸ் வாகன் இல்லை. ஒருவேளை அப்பாதான் வீட்டுக்கு வந்திருக்கிறாரோ என்ற சந்தேகம் ஏற்பட்டது. 'எதற்காக இப்போது வந்திருக்கிறார்? ஏன் கிளப்பிற்குப் போகவில்லை? உடம்பு ஏதாவது சரியில்லையோ? இந்தக் கார் 'கிளப்' மெம்பர்கள் யாருடையதாகவாவது இருக்குமோ? அப்பாவைப் படுக்க வைத்து அழைத்துக் கொண்டு வந்திருப்பார்களோ...?'

பரபரவென்று நடந்து உள்ளே போனாள். வராந்தாவில் செருப்பைக் கழட்டினபோது அப்பா ஹால் சோபாவில் உட்கார்ந்திருப்பது தெரிந்தது. யாருடனோ சுவாரசியமாய் பேசிக் கொண்டிருந்தார். இவளைப் பார்த்ததும் சந்தோஷமாகச் சிரித்தார். ''வாம்மா!'' என்று முகம் மலரக் கூப்பிட்டார். அப்பாவின் அந்த மலர்ச்சி அவளுக்குப் புதுசாக இருந்தது. அப்பாதானா இவர்? இப்படிக்கூட இவருக்குச் சிரிக்க வருமா? சந்தோஷமாகப் பேசத் தெரியுமா...? இவ்வளவு சுவாரசியமாய் யாரோடு பேசிக் கொண்டிருக்கிறார்?

அவள் பார்த்தபோது எதிர் சோபாவில் உட்கார்ந்திருந்த அவனும் திரும்பிப் பார்த்தான். அந்தப் பெரிய கண்களின்

பேசுகிற பார்வை 'சட்'டென்று அவள் மனசைத் தொட்டது. படத்தில் பார்க்கிற விவேகானந்தர் கண் மாதிரி-சுபாஷ் சந்திர போஸ் கண் மாதிரி என்ன அமைதியான கண்கள்! நீள நீளமாய் அடர்த்தியாய் எத்தனைக் கறுப்பான இமைகள்! என்ன கம்பீரமான பார்வை. அன்பாய்ப் பார்க்கிற பார்வை. கனிவாய்ப் பார்க்கிற பார்வை. தெளிவாய்ப் பார்க்கிற பார்வை. ஒரு நிமிஷம் அதிலிருந்து மீள முடியாமல் அப்படியே நின்றாள் யமுனா.

அப்பா யமுனாவைக் கூப்பிட்டு அறிமுகப்படுத்தினார்.

''ஹி ஈஸ் மிஸ்டர் சுதாகர்... என்னோட கிளப் பிரெண்ட்ஸிலே ஒருத்தர். இன் ஃபாக்ட் இவர் ஒருத்தர்தான் பிரண்டுன்னு சொல்லணும். நாங்க ரெண்டு பேரும் லான்ல நாற்காலியை இழுத்துப் போட்டுண்டு உட்கார்ந்தால் மணிக்கணக்கில் பேசுவோம். நேரம் போறதே தெரியாது....''

அவன் எழுந்து நின்று கை கூப்பினான். யமுனாவும் கை குவித்தாள்.

''இவ என்னோட ரெண்டாவது டாட்டர், சுதாகர்! பேரு யமுனா. லைப்ரரியிலே வேலை பார்க்கறா. உன்னை மாதிரியே நிறையப் படிப்பா. நீ கைக்குக் கிடைக்கிற புஸ்தகத்தை யெல்லாம் படிப்பே. இவள் அப்படி இல்லை. வெறும் பொழுதைப் போக்கப் படிக்கிறதில்லை. இவளுடையது ஸீரியஸ் ரீடிங். ரீடிங் மட்டும் ஸீரியஸ் இல்லே-எல்லாத்துலேயும் இவள் சீரியஸ்தான்...''

அதைக் கேட்டு அவன் மெதுவாகச் சிரித்தான்.

''என்ன சுதாகர் சிரிக்கறே...?''

''இல்லே. அவங்களுக்கு இருக்கிறதாக நீங்க சொன்ன அந்த சீரியஸ்நெஸ்ஸை நினைச்சுப் பார்த்தேன். இன்னும் எத்தனை நாளைக்கு இப்படி இருக்க முடியும்னு தோணித்து.



கொஞ்ச நாளானால் அவங்களுக்கும் அது அலுத்துப் போயிடும். மனசு இலேசாகிறபோது தானே குறைஞ்சுப் போயிடும். அப்புறம் எல்லாத்துக்கும் சிரிக்கத் தோணும். வாய்விட்டுச் சிரிக்க முடியலைன்னாலும், மனசுக்குள்ளே யாவது அந்தச் சிரிப்பு இருந்துண்டுதான் இருக்கும்...''

'சட்'டென்று பிறையிலே விளக்கேற்றி வைத்த மாதிரி இருந்தது. யமுனாவிற்குப் பிரகாசமாகத் தெரிந்தது. அப்பா மட்டும் அதைக் கேட்டு, ஒரு நிமிஷம் யோசித்தார். பின்.. ''நான் அப்படி நினைக்கலை சுதாகர்!'' என்றார். ''எனக்கும் இந்த லைஃப்போட சீரியஸ்நெஸ் பிடிக்கலை. கொஞ்சம் சுலபமா இருக்கணும்னு தோணறது. மனசுக்குள் பாரமா அழுத்திண்டிருக்கிறதை உதறி எறிஞ்சுட்டு லேசாக்கிக்கணும் போல இருக்கு. ஆனால் நீ சொல்ற மாதிரி சிரிக்க முடியுதா என்ன?

''மனசுக்குள் எப்பவும் சிரிச்சுண்டே இருக்கணும்னு சொல்றியே-அது எல்லாருக்கும் சாத்யமாற காரியமா? உன்னால் அது முடியும். உனக்கு எதையும் சுவையாக எடுத்துக்கத் தெரியும். நெருப்பை முழுங்கிட்டுக்கூட உன்னால் சிரிச்சுண்டு நிற்க முடியும். என்னால் அதெல்லாம் முடியாது. யமுனாகூட என்னை மாதிரிதான்; சுலபமாகச் சிரிக்கத் தெரியாதவள் தான். ஆனால் அவளுக்கு வாழ்க்கையின் கஷ்டங்கள் என்னைப் போல், அவ்வளவு சுமையாகத் தெரியலை. அதற்குக் காரணம் சுமையாகிற அளவுக்கு அவளுக்குக் கஷ்டம் வரலை. வரவும் வேண்டாம். வந்த கொஞ்ச கஷ்டத்தையும் அவள் ரஸிக்கத் தெரிஞ்சுண்டிருக்கா. கதையா எழுதக் கத்துண்டிருக்கா. யு நோ, ஷி ஈஸ் எ ரைட்டர்...''

''ஈஸ் இட்...!'' அவன் அவளைத் திரும்பிப் பார்த்தான். உதட்டில் லேசாகப் புன்சிரிப்பாய் ஓடிக் கொண்டிருந்தது. எப்போதும் சிரித்துக் கொண்டிருக்கிற முகமாகத் தெரிந்தது.

முகம் சிரிக்காத நேரங்களில் மனசுக்குள் அந்தச் சிரிப்பு இருந்து கொண்டிருக்கும் போலிருந்தது. மென்மையாய் வருடிக் கொடுக்கிற சிரிப்பு. குழந்தையாய்ச் சிரிக்கிற சிரிப்பு. சிரிப்பு மட்டுமில்லை; பார்வையும் அப்படித்தான் இருந்தது. நேராகப் பார்க்கிற பார்வை. எதிரில் இருப்பவர்களைக் குளிர வைக்கிற பார்வை. எந்தக் குறுகுறுப்பும் விஷமத்தனங்களும் இல்லாத பார்வை.

ஆனால் அனில் சௌத்ரி மாதிரி அவன் பார்வையிலும் ஒரு சோகம் இருக்கிறாற் போல் அவளுக்குப் பட்டது. முகத்திலும் அந்தச் சோகம் தெரிகிற மாதிரி இருந்தது. அவனும் கிட்டத்தட்ட அனில் சௌத்ரி மாதிரிதான் இருந்தான். அந்தக் குறுந்தாடியையும்-வெள்ளைப் பைஜாமா வையும்-தோளில் தொங்குகிற நீளமான பையையும் சேர்த்துப் பார்த்தால் இவன் அப்படியே அனில் சௌத்ரிதான். அதே நிறம், அதே உயரம், அதேபோல் கண்ணியமான உருவம். ஆழமாய் அமைதியாய்ப் பார்க்கிற கண்கள். பிரகாசமான கண்கள்... ஆனால் இவற்றுக்கெல்லாம் அடியில் இருப்பதாக அவள் நினைத்துக் கொண்டிருக்கிற அந்தச் சோகம்...?

'நான் ஏன் யாரைப் பார்த்தாலும் அவர்களிடம் ஒரு சோகம் இருக்க வேண்டுமென்று நினைக்கிறேன்? ஒரு வேளை எனக்கு அந்தச் சோகம்தான் பிடிக்கிறதோ? அதனால் தான் அதையே எல்லோரிடமும் எதிர்பார்க்கிறேனோ...?'

சுதாகரின் குரல் கேட்டு சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அவன் குரல் தழைய நிதானமாகப் பேசினான்;

''அப்பா என்னிடம் நிறைய விஷயங்களைச் சொல்லி யிருக்கிறார். அநேகமாக நாங்கள் மனசு விட்டுப் பேசாத விஷயமே இருக்காது. அப்படி இருக்கிறபோது நீங்க எழுதற விஷயத்தை மட்டும் எப்படிச் சொல்லாமல் விட்டு விட்டார் என்பதுதான் புரியவில்லை?''



அவளும் அதே மாதிரி சிரித்துக் கொண்டு அவனைப் பார்த்தாள். சற்று முன்பு அப்பா அவனிடம், 'அவளுக்குச் சுலபமாக சிரிக்கத் தெரியாது' என்று சொன்னதை நினைத்துக் கொண்டாள். அவளும் மெலிசான குரலில் பேச்சை ஆரம் பித்தாள். ''சொல்லக் கூடாதுன்னு அவர் சொல்லாமல் இருந்திருக்க மாட்டார். மறந்து போயிருப்பார். இல்லா விட்டால் இது என்ன பெரிய விஷயம் என்ற பேசாமல் இருந்திருக்கலாம்.''

''நோ. நோ. நான் அப்படி நினைக்கலே...'' என்று அவசரமாகக் குறுக்கிட்டான் அவன்: ''ஐ நோ யுவர் ஃபாதர் வெரி வெல். என்கிட்டே சொல்லக்கூடாதுன்னு அவர் நினைச்சிருக்கவே மாட்டார். மறந்துதான் போயிருக்கணும். நீங்க சொன்ன மாதிரி 'இது என்ன பெரிய விஷயம்'னும் பேசாமல் இருக்கலை. உங்க எழுத்தை அந்த மாதிரி சாதாரண விஷயமா அவர் நினைக்கவும் இல்லை. அப்படி நினைத் திருந்தால், 'ஷி ஈஸ் எ ரைட்டர்'னு பெருமையாக இப்போது அறிமுகப்படுத்தியிருக்க மாட்டார். ஐ கேன் அண்டர்ஸ்டாண்ட் ஹிம்...''

அதைக் கேட்டு அவள் பேசாமல் இருந்தாள். மனசுக்குள் குளிர்ச்சியாய் ஒரு சந்தோஷம் ஏற்பட்டது. ரொம்பவும் உற்சாகமாகக்கூட இருந்தது. அப்பாவிடம் அவனுக்கிருந்த நம்பிக்கை அவளை ஆச்சரியப்படுத்தியது. 'இது என்ன நம்பிக்கை? எப்படி ஏற்பட்டது இது? வயசு ஒரு தடையாக இல்லாமல் இவர்களால் எப்படி இந்த மாதிரி பழகிக் கொள்ள முடிகிறது?'

''நீங்க எந்தப் பத்திரிகையில் எழுதறீங்கன்னு தெரிஞ் சுக்கலாமா...?''

அவள் சொன்னாள். அதைக் கேட்டதும், ''ஐ யாம் ஸாரி'' என்று அவன் வருத்தமாய்ப் புன்னகை செய்தான்:

''ப்ளீஸ், வேண்டாம்'' என்று அவளைத் தடுத்தான் சுதாகர்: ''இப்போ எட்டு மணிக்கு எதுக்குக் காபி? நேராகச் சாப்பிட்டு விடலாமே... உங்க ரெண்டு பேருக்கும் எந்த அசௌகரியமும் இல்லேன்னா கிளம்பி வாங்களேன்! வெளியில் எங்கேயாவது போய்ச் சாப்பிடலாம்?''

யமுனா அப்பாவைப் பார்த்தாள். அவர், ''உனக்கு ஏதாவது வேலை இருக்காம்மா?'' என்று கேட்டார்.

''இல்லேப்பா! முக்கியமா ஒண்ணுமில்லே...''

''அப்படின்னா போகலாமாம்மா?''

அவள் 'சரி' என்று தலையாட்டினாள். உள்ளே போய் முகத்தை அலம்பி உடை மாற்றிக் கொண்டு வந்தாள். வெள்ளையில் சின்னச்சின்ன சிவப்பு ரோஜாக்கள் போட்ட வாயில் புடவை. நீளமான கையும் உயர்ந்த கழுத்தும் கொண்ட சிவப்புச் சட்டை. கை, கழுத்து காது எதிலும் எந்த நகையும் இல்லை. நெற்றியில் சின்னதாய் கறுப்புப் பொட்டு. தலையை இலேசாக வாரித் தளரப் பின்னியிருந்தாள். எளிமையான உடையிலும் அந்த உயரத்தில் கம்பீரமாக இருந்தாள். மென்மையான அவளை ஒருதரம் பார்த்த சுதாகர் டிரைவிங் சீட்டில் உட்கார்ந்து கொண்டான். காரில் ஏறினபோது அப்பா, ''மறுபடியும் கிளப்பிற்கே போகலாமா சுதாகர்? நிதானமாகப் பேசிண்டு சாப்பிட வசதியாய் இருக்கும்...'' என்றார்.

''ஷி ஈஸ் அவர் கெஸ்ட் டுடே. அதனால் அவங்களைக் கேளுங்கள். சரின்னு சொன்னால் போகலாம்...'' என்றான்.

''என்னம்மா?'' என்று திரும்பி யமுனாவைப் பார்த்தார் அவர்.

''உங்களுக்கு எங்கே இஷ்டமோ அங்கே போகலாம்பா'' என்ற பதில் வந்ததும், சுதாகர் இக்னிஷனை ஆன்பண்ணி கியரை மாற்றினான். கொஞ்ச நேரத்தில் காரின் வேகம் அதிகமாயிற்று.

# 6

**அ**ந்தக் கிளப்பிற்கு யமுனா வருவது அதுதான் முதல் தடவை. இதற்கு முன் அப்பா நிறைய தரம் கூப்பிட்டிருக்கிறார். தீபாவளிக்கு முதல் நாள்ராத்திரியும்-டிஸம்பர் முப்பத்தோராம் தேதியும் தவறாமல் கூப்பிடுவார். ''இன்னிக்கு கிளப் ரொம்ப நன்னா இருக்கும்மா! கலர் கலரா லைட்டெல்லாம் போட்டு டெகரேட் பண்ணியிருக்கும். எத்தனையோ பார்ட்டி நடக்கும். கெஸ்ட்டா நிறையப் பேர் வருவா. நீங்களும் வாங்கம்மா'' என்பார். ஆனால் அவள் ஒருதடவைகூடப் போனதில்லை. ஜானகி போயிருக்கிறாள். போய்விட்டு வந்து குழந்தை மாதிரி கண் அகல எல்லாவற்றையும் சொல்லியிருக்கிறாள். சரியாகப் பன்னிரண்டு மணிக்கு எல்லாரும் எழுந்து நின்றது-'ஹேப்பி நியூ இயர்' சொன்னது-டான்ஸ் ஆடினது-கண்ணாடி டம்ளர்கள் மோத சியர்ஸ் சொல்லிக் கொண்டது...

''நீ வரலையே யமுனா! அப்பா என்னை யார் யாருக்கோ அறிமுகப்படுத்தி வச்சார். முகர்ஜின்னு வெள்ளையா உயரமா அமிதாப்பச்சன் மாதிரி ஒருத்தன் என் கையைப் பிடிச்சுக் குலுக்கினான். அந்த ராம்வர்மா என்னை டான்ஸ் ஆடக் கூப்பிட்டான். சந்திரசேகர்னு ஒருத்தன் அப்பாகிட்ட வந்து, 'யு ஆர் வெரி லக்கி டு ஹேவ் ஸச் எ ப்யூட்டிபுல் டாட்டர்'னு சொன்னான்.'' இதையெல்லாம் சொல்கிறபோது அவள் முகம் பூவாய் மலரும். குரல் சந்தோஷமாக வரும். உதட்டில் பெரியதாய் ஒரு சிரிப்பு ஓடும். 'எப்படி இந்த மாதிரி விஷயத்துக்கெல்லாம் இவளால் சந்தோஷப்பட முடிகிறது?' என்று யமுனாவிற்கு ஆச்சரியமாய் இருக்கும்.

அப்பாவுக்கும் அதே ஞாபகம் வந்திருக்க வேண்டும். மெதுவாக நடந்துகொண்டே, ''நீ இப்பத்தான் முதல்

தடவையாக கிளப்புக்கு வரே இல்லே...?'' என்று கேட்டார். அவள் 'ஆமாம்' என்று தலையாட்டினாள்.

''ஜானகி ரெண்டு மூணுதரம் வந்திருக்கா. அவளுக்கு இங்கேயெல்லாம் வரதுன்னா ரொம்பப் பிடிக்கும்...'' அதைச் சொன்ன அவரது குரல் கம்மிப் போயிருந்தது. லேசாய் கரகரத்தது. அந்த இருட்டில் அவளால் அவர் முகத்தைப் பார்க்க முடியவில்லை. ஆனாலும், அவரைப் புரிந்து கொள்ள முடிந்தது. அவர் ஜானகியைப் பற்றி நினைப்பது இதுதான் முதல் தடவை என்பதில்லை. இந்த மாதிரி நிறையத் தரம் நினைத்துக் கொண்டிருக்கிறார். சின்னச் சின்ன உருளைக் கிழங்கை முழுசாய்க் கறி பண்ணும்போது- வாசலில் சப்போட்டாப் பழம் போகும்போது- ரேடியோவில் அவளுக்குப் பிடித்த பாட்டு வரும்போது-அவளுடைய கோல நோட்டுப் புஸ்தகம் கண்ணில் படும்போது...

அந்த அளவிற்கு ஜானகி அவர் மனதில் பதிந்து போயிருப்பதைப் புரிந்து கொண்டாள். அப்போதெல்லாம் ஆறுதலாக எதாவது சொல்ல வேண்டும் போலிருக்கும். ஆனால், அந்தச் சந்தர்ப்பத்தில் எந்த வார்த்தைக்கும் அர்த்தமிருக்காது என்றும் தோன்றும். அதனால் பேசாமல் இருப்பாள். அவரை மென்மையாய் ஒரு பார்வை பார்ப்பாள். 'அப்பா... கொஞ்சம் உங்கள் மனசைக் கட்டுப்படுத்திக் கோங்களேன்...' என்கிற மாதிரி பார்ப்பாள். அவர் அதைப் புரிந்து கொள்வாரோ என்னமோ... மேலே எதுவும் பேச மாட்டார். மௌனமாய் இருப்பார். அப்போதும் அப்படித்தான் இருந்தார். நிதானமாக நடந்து வந்தார். யமுனாவும் ஒன்றும் பேசவில்லை. கையைக் கட்டிக் கொண்டு கூடவே நடந் தாள். தூரத்தில் தெரிந்த ஸ்விம்மிங்பூலையும்-டென்னிஸ் கோர்ட்டையும்-பரந்து விரிந்திருந்த லானையும்-அதில் போடப்பட்டிருந்த பிரம்பு நாற்காலிகளையும் பார்த்துக்



கொண்டே வந்தாள். கொஞ்சம் தயங்கி நின்றாள். அப்பா அவளைத் திரும்பிப் பார்த்தார்.

''என்னம்மா நின்னுட்டே? இங்கேயே உட்காரலா மாம்மா?'' என்று கேட்டார். அவள் 'சரி' என்று தலையாட்டி னாள். அவர் காலியாகக் கிடந்த மேஜையருகில் போய் அவளுக்காக நாற்காலி ஒன்றை நகர்த்திப் போட்டார். பின், தானும் ஒன்றில் உட்கார்ந்து கொண்டார். 'என்ன இன்னும் சுதாகரைக்காணோம். காரைப் பார்க் பண்ணிட்டு வர இத்தனை நேரமா?' என்று தனக்குள் சொல்லிக் கொண்டார். ஒரு பெரிய தட்டில் துணி விரித்து ஒரே ஒரு லிம்கா பாட்டிலை மட்டும் வைத்துக்கொண்டு போன அந்த பேரரைக் கூப்பிட்டார். ''ரெண்டு ஃபரெஷ் லைம். ரெண்டு பாட்டில் பீர்'' என்று ஆர்டர் பண்ணினார். அந்த பேரர் போனதும், அவளைப் பார்த்து, ''யு நோ சுதாகர் நெவர் ட்ரிங்க்ஸ்'' என்றார். பின் ஒரு நிமிஷம் ஏதோ யோசித்தார். மறுபடியும் அவளைப் பார்த்து,

''சுதாகரைப் பத்தி நீ என்னம்மா நினைக்கறே?'' என்று கேட்டார்.

மேலிருந்து பாய்ந்து தண்ணீரில் குதித்து அலைகளாக எழுப்பின அந்த வெள்ளைக்காரச் சிறுமியையே பார்த்துக் கொண்டிருந்த யமுனா திரும்பி அப்பாவைப் பார்த்தாள். நெற்றியில் சின்னச் சுருக்கமாய் ஒன்று ஓடியது. 'எதற்காக இதைக் கேட்கிறீர்கள்?' என்கிறாற்போல் பார்வை இருந்தது. அதை அவர் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஏதோ யோசிக்கிற மாதிரி இருந்தார். தலையைக் குனிந்து தரையைப் பார்த்துக் கொண்டிருந்தார். ஒரு நிமிஷம் அப்படியே போயிற்று. மீண்டும் நிமிர்ந்து அவளைப் பார்த்தபோது பார்வை மென்மையாய் இருந்தது. குரல் நிதானமாக வந்தது:

''அம்மா... உன்கிட்ட மனசுவிட்டுப் பேசணும்னு கொஞ்ச நாளாகவே நினைச்சுண்டிருந்தேன். அதுக்கு இன்னிக்குத்தான்

சந்தர்ப்பம் கிடைச்சது. நீ என்னைப் புரிஞ்சுப்பேன்னு நினைக்கிறேன். அதே மாதிரி நானும் உன்னைப் புரிஞ்சுக்கணும்தான் இப்ப இந்தப் பேச்சையே ஆரம்பிக்கிறேன். நான் அதிகம் சொல்ல வேணாம். அனாவசியமா சுத்தி வளைச்சுப் பேசவேணாம். நீ புத்திசாலிப் பொண்ணு. கதையெல்லாம் எழுதறவள். மனுஷ மனஸை மதிக்கிறவள். உனக்கு ஒரு கோடி காட்டினால் கூடப் போதும்! அனேகமா இதற்குள்ளேயே நீ புரிஞ்சுண்டிருக்கலாம்.''

அவர் அவள் முகத்தைப் பார்த்தார். அதில் எதையோ தேடுகிற மாதிரி பார்த்தார். ஆனால் அதில் எந்த பாவமும் இல்லாமற் போகவே, மீண்டும் பேச்சைத் தொடர்ந்தார்:

''சுதாகரை நீ பார்க்கணும்னுதான் வீட்டுக்கு அழைச்சுண்டு வந்தேன். அவனை மாதிரி இன்னொரு பிறவியைப் பார்க்கவே முடியாதோன்னு தோணும். இந்தச்சின்ன வயசுலே இப்படிப்பட்ட மனசு எப்படி வந்ததுன்னு ஆச்சரியமாகக்கூட இருக்கும். அவன் பேசறதைக் கேட்கக் கேட்க 'இவன் ஏன் எனக்குப் பிள்ளையாகப் பிறக்கலை'ன்னு ஒரு ஏக்கம்கூட வரும். பின், பிள்ளையாகப் பிறந்தால் தானான்னு என்னை நானே சமாதானப் படுத்திப்பேன். ஹி ஈஸ் ரியலி எ க்ரேட் பர்ஸன்.''

பேரர் அவர் ஆர்டர் பண்ணினதைக் கொண்டு வந்து வைத்தார். அப்பா எலுமிச்சம் பழச்சாற்றை அவள் பக்கம் நகர்த்தினார். சுதாகருக்காக ஒரு டம்ளரை மூடி வைத்தார். பின் பீர் பாட்டிலைத் திறந்து நுரை ததும்ப ஊற்றிக் கொண்டார். அவளைப் பார்த்து ''ஜூஸை எடுத்துக்கோம்மா...'' என்றார். பின் நிதானமாகக் கிளாஸை உறிஞ்சிக்கொண்டு பேச ஆரம்பித்தார்:

''சுதாகரை எனக்குக் கிட்டதட்ட ரெண்டு வருஷமாகத் தெரியும். முன்னெல்லாம் தூரத்திலிருந்து மட்டும் பார்த்துக்



கொண்டிருப்பேன். அப்புறம் மெதுவாக சிரிக்கிறது, 'விஷ்' பண்றது, இப்படி ஆரம்பிச்சது-இப்போ இவ்வளவு நெருக்கமாய் வந்து நிக்கறது. இங்கே வேற யாரோடயும் நான் இப்படிப் பேசறதில்லை, பழகறதில்லை. கொஞ்சம் தள்ளியே நின்னுடறது. பழகற மீதிப் பேர் எல்லோரும் வெறும் சீட்டாடற பிரெண்ட்ஸ். குடிக்கிற பிரண்ட்ஸ். அவ்வளவு தான். யாரும் மனசைத் தொடற பிரெண்ட் இல்லே. சுதாகர் என்னோட சீட்டாறதில்லை. குடிக்கிறதில்லை, அதனால் தானோ என்னவோ கொஞ்சம் நெருங்கி வந்து மனசைப் பிடிச்சுண்டுட்டான். லான் ஓரத்துல கூடை நாற்காலியைப் போட்டுண்டு உட்கார்ந்தால் மணிக்கணக்கிலே பேசுவோம். நான் டம்ளர் டம்ளராக குடிச்சுண்டிருப்பேன். அவன் எனக்கு விஸ்கி கலந்து கொடுத்துண்டே பேசுவான். 'என்னமாய்ப் பேசறான் பாரு'ன்னு நினைச்சு மனசெல்லாம் சிலிர்த்துப் போகும். 'நீ என் கூடவே வந்துடேன்'னு கூப்பிடலாம் போல இருக்கும். அவனுக்கு என்னைப் பத்தித் தெரியும். உங்கம்மாவைப் பத்தித் தெரியும், ஜானகியைப் பத்தித் தெரியும். உன்னைப் பத்தியும் தெரியும்!''

மேஜை மீது ஆள்காட்டி விரலால் தண்ணீர்க் கோலம் போட்டுக் கொண்டிருந்த யமுனா சட்டென்று அவரை நிமிர்ந்து பார்த்தாள்.

''என்னம்மா அப்படிப் பார்க்கறே...? அவனுக்கு நம்மைப் பத்தி எல்லாம் தெரியும்மா... எதையும் மனுஷத்தனத்தோட அணுகத் தெரியும். அதனால் தான் அவன் உன்னைக் கல்யாணம் பண்ணிண்டால் எப்படி இருக்கும்னு நினைச்சுப் பார்த்தேன். அவனைப் பார்க்கிற போதெல்லாம் இந்த நினைப்பு வந்து ரொம்பச்சந்தோஷப்படும். அவனை விட ஒரு நல்ல மாப்பிள்ளையை என்னால உனக்குத் தேடித்தர முடியாதுன்னு தோணித்து. அவனும் உன்னால சந்தோஷப்படுவான்னு தோணித்து. இந்த சந்தோஷத்தை விட வேற

என்னம்மா வேணும்...?''-அவர் அதை மிகவும் மென்மையாகக் கேட்டார். அவள் முகத்தைப் பார்த்துக் கொண்டே கேட்டார். அதற்கும் பேசாமல் இருக்கவே மீண்டும் தானே பேச்சை ஆரம்பித்தார்:

''இதையெல்லாம் சுதாகர் கிட்டே சொன்னபோது உன்னை மாதிரியே அவனும் பேசாமல்தான் இருந்தான். சிறிது நேரம் கழித்து என்னை ஒரு பார்வை பார்த்தான். 'இதெல்லாம் நிஜம்தானே?' என்று கேட்கிற மாதிரி பார்த்தான். பின், ''நான் தமிழ் பேசறவன் இல்லை. உங்களைச் சேர்ந்தவன் இல்லை. நான் மைசூர்க்காரன். கன்னடம் பேசறவன்'னு சொன்னான். நான், 'நீ மனுஷன். மனுஷனா இருக்கத் தெரிஞ்சுண்டிருக்கே. அதுதான் பெரிசு. வேறே எதுவும் பெரிசில்லே'ன்னு சொன்னேன். அதைக் கேட்டு கொஞ்ச நேரம் யோசிச்சான். 'அப்படீன்னா முதல்ல உங்க டாட்டரைக் கேளுங்க, இதற்கு அவங்க சம்மதம்தான் ரொம்ப முக்கியம். அவங்களுக்கு நான் யாருன்னு தெரியாது. நான்னு சொன்னால் சுதாகர்னு பேர் இருக்கிற இந்த உருவமில்லை. உள்ளுக்குள் இருக்கிற இன்னொரு சுதாகர். அதை அவங்க புரிஞ்சுக்கணும். அதே மாதிரி அவங்களையும் நான் புரிஞ்சுக்கணும். இது எவ்வளவு முக்கியம்னு உங்களுக்குத் தெரியும். உங்களைவிட வேறு யாரும் நன்றாகத் தெரிஞ்சுண்டிருக்க முடியாது. ஸோ-ப்ளீஸ் அலொவ் அஸ் டு அண்டர்ஸ்டாண்ட் ஈச் அதர்' னு... சொன்னான்...''

அவர் மூச்சு விடுகிற மாதிரி கொஞ்சம் நிறுத்தினார். இன்னொரு பாட்டிலைத் திறந்து கிளாஸை நிரப்பினார். அதைக் கையில் எடுத்துக்கொண்டு அவளைப் பார்த்தார். குரலை தழைத்துக் கொண்டு இன்னும் நிதானமாகப் பேசத் தொடங்கினார்;

''அம்மா.. நான் என் மனசில் இருந்ததைச் சொல்லிட்டேன். நீ உனக்குத் தோணறதைச் சொல்லலாம். பயப்படாமல் தைரியமாகச் சொல்லலாம். தயங்காமல் சொல்லலாம். நான் எதற்கும் உன்னைக் கட்டாயப்படுத்த மாட்டேன். கட்டுப் படுத்த மாட்டேன். இதுவரை நான் யாரையும் எதற்கும் கட்டுப்படுத்தினதில்லை. உனக்கு சுதாகரை பிடிக்கல்லேன்னா தாராளமாச் சொல்லிடு. வேற யாரையாவது மனசிலே நினைச்சுண்டிருந்தா அதையும் சொல்லிடு. உன் சந்தோஷம்தான் எனக்கு முக்கியம். அதே மாதிரி அந்தப் பிள்ளையோட சந்தோஷமும் முக்கியம். ஒரு நல்ல மனசைக் கஷ்டப் படுத்திடக் கூடாது. 'ஸோ-ஐ லீவ் இட் டு யு, நீ அவனோட பழகிப் பாரு. அவனை உனக்குப் பிடிச்சால் நான் சந்தோஷப் படுவேன். பிடிக்கல்லேன்னா அதற்காக வருத்தப்பட மாட்டேன். எனக்குப் பிடிக்கிறதேன்னு நீ சரி சொல்லிடக் கூடாது. அப்படியே உனக்குப் பிடிச்சாலும் ஒருத்தரைப் பிடிக்கிறதில் நிறைய விதம் இருக்கு. இது எந்த விதம்னு முடிவு பண்ணிக்கோ. இன்னிக்கே இதுக்கு நீ பதில் சொல்லணும்னு நான் நினைக்கலை. நன்னா யோசிச்சுப் பாரு. நிதானமா யோசி. ஒரு மாசம்... ஒரு வருஷம் ஆனாலும் சரி, எப்போ உன் முடிவைச் சொல்றியோ அதுவரைக்கும் நான் காத்திண்டிருப்பேன்.''



அதுவரை எதுவும் பேசாமல் கேட்டுக் கொண்டிருந்த யமுனாவிற்கு இப்போது ஏதாவது சொல்ல வேண்டும் போலிருந்தது. நிறையப் பேச வேண்டும் போலிருந்தது. ஆனால் பேச்சு வரவில்லை. தொண்டையை அடைத்துக் கொண்டது. மனசு நெகிழ்ந்து போயிற்று. உடம்பு ஒரு தரம் நடுங்கிற்று. கண்ணில் நீர் கட்டி சின்ன அரும்பாக விழி ஓரத்தில் எட்டிப் பார்த்தது. அவள் மெல்லப் பேச ஆரம்பித்தபோது சுதாகர் சிரித்துக் கொண்டே வந்தான். முன் நெற்றியில் விழுந்த தலைமுடியை ஒதுக்கிவிட்டுக் கொண்டு வந்தான். அருகில் வந்ததும் கார் சாவியை மேஜை மீது போட்டான். இரண்டு பேருக்கும் நடுவில் இருந்த நாற்காலியை இழுத்துப் போட்டுக்

கொண்டு உட்கார்ந்தான். பின் அப்பாவைப் பார்த்து 'ஸாரி' சொன்னான். ''காரைப் பார்க் பண்ணிட்டு வரும்போது சங்கர நாராயணன் நின்னுண்டிருந்தார். விஷ் பண்ணினவுடனேயே பேசப் பிடிச்சுண்டுட்டார். அதனாலதான் கொஞ்சம் நேரமாகி விட்டது...''

''தட்ஸ் ஆல்ரைட் சுதாகர். உன் ஜூஸை மூடி வச்சிருக்கேன். எடுத்துக்கோ...'' அவன் அதைக் கையில் எடுத்துக் கொண்டான். பின் இரண்டு பேரையும் பார்த்து, ''உங்களுக்கு...?'' என்றான். அப்பா ஆயிற்று என்று தலையாட்டினதும் மெதுவாய் ஒரு தரம் உறிஞ்சினான். ''மீதியெல்லாம் ஆர்டர் பண்ணியாச்சா?'' என்று கேட்டான். அப்பா, ''இல்லை, நீ வரணும்னுதான் காத்துண்டிருக்கேன்'' என்றார். அவன் மெனுக் கார்டைப் படித்து விட்டு யமுனாவிடம் நீட்டினான். பக்கத்தில் நின்று கொண்டிருந்த பேரரை அருகில் கூப்பிட்டான். அவர்கள் சொன்னதை பென்ஸிலால் குறித்துக் கொண்டு பேரர் போனதும் அப்பா தன் இடத்தை விட்டு சட்டென்று எழுந்தார். ''ஐ யம் சாரி சுதாகர்! ராம்நாத்தை எட்டு மணிக்கு இங்கே சந்திக்கிறதாகச் சொல்லியிருக்கேன். முக்கியமான ஒரு எக்ஸ்போர்ட் ஆர்டர் விஷயமா பேச வேண்டியிருக்கு. இப்போ அவர் பில்லியர்ட்ஸ் ஆடி முடிச்சதும் பிடிச்சால்தான் உண்டு. அப்புறம் பிடிக்கவே முடியாது. நீ கொஞ்சம் எக்ஸ்க்யூஸ் பண்ணணும் சுதாகர்...''

''ஓ. எஸ். போயிட்டு வாங்க சார். தாராளமா போயிட்டு வாங்க...''

அவர் யமுனாவின் பக்கம் திரும்பினார், ''என்னம்மா... போகட்டுமா?'' என்று கேட்டார்.

''போங்கப்பா, இதுக்கு என்னைக் கேட்கணுமாப்பா?'' என்றாள் அவள்.



''நீங்க ரெண்டு பேரும் சாப்பிட்டுடுங்கோ. எனக்காகக் காத்துண்டிருக்க வேணாம். அவர்கிட்டே போனால் சீக்கிரம் வரமுடியாது'' என்று சொல்லிவிட்டுப் போனார்.

லானில் நடந்து அவர் கட்டடத்துக்குள் நுழைகிற வரை பார்த்துக் கொண்டிருந்த யமுனா, பின் சுதாகரின் பக்கம் திரும்பினாள். அவனும் லேசான புன்னகையோடு அவளைப் பார்த்தான். அந்தக் கண்களைப் பார்த்தான்.

'எத்தனை அழகான கண்கள்!' என்று நினைத்துக் கொண்டான்.

# 7

**சு**தாகருக்கு அம்மா ஞாபகம் வந்தது. அம்மாவுக்கு அழகான கண்கள். நல்ல நீளமான கண்கள். ஈரத்தில் பளபளக்கிற கண்கள். எதிரில் இருப்பவர்களைக் கட்டிப் போடுகிற கண்கள். நேராகப் பார்க்கத் தயங்க வைக்கிற கண்கள்... மனசின் கம்பீரத்தை வெளியில் காட்டுகிற கண்கள்.

யமுனாவிற்குக்கூட அதே மாதிரி கண்கள்தான்! அதுதான் அவனுக்கு அம்மாவை நினைவுபடுத்தியது. வெறும் கண்கள் மட்டும்தான் அம்மா மாதிரி. வேறு எதுவும் இல்லை. அம்மாவுக்கும் அவளுக்கும் நிறைய வித்தியாசம் இருந்தது. அம்மா கலகலப்பானவள். நன்றாகப் பேசக் கூடியவள். எப்போதும் சிரித்துக் கொண்டிருப்பவள். எதற்கும் சிரிப்பவள்...

அந்தச் சிரிப்பும்-கண்களும் முகமும்தான் அவளை அந்த உயரத்தில் நிறுத்தியிருக்கிறது. அதிலிருந்து சரிந்து போகாமல் தாங்கிக் கொண்டிருக்கிறது. அத்தனை புகழையும் சேர்த்துத் தந்திருக்கிறது. வெறும் புகழ் மட்டுமில்லை; நிறையக் கஷ்டங்களையும் கூடத்தான். அம்மா பட்ட கஷ்டங்கள்

ஒவ்வொன்றாய் நினைவுக்கு வந்தது. பணமில்லாத கஷ்டம். பொருளில்லாத கஷ்டம். துணையில்லாத கஷ்டம். அப்புறம் நிறையப் பணமாய் வந்த கஷ்டம். மாறி மாறி ஒவ்வொருராய்த் துணையாய் வந்த கஷ்டம்...

இதையெல்லாம் யமுனா புரிந்து கொள்ள வேண்டு மென்று நினைத்தான். அதன் ஆழங்களோடு புரிந்து கொள்ள வேண்டும். அம்மாவின் குறைகளையும் சேர்த்துப் புரிந்து கொள்ளவேண்டும். புரிந்து கொள்கிற மாதிரி தான் சொல்ல வேண்டும். அமைதியாக நிதானமாகப் பேச வேண்டும்.

மெதுவாக அவளைப் பார்த்துப் புன்னகை செய்தான்.

''இப்போதுதான் நீங்க முதல் தடவையாய் கிளப்புக்கு வரீங்க... இல்லே...?'' என்று கேட்டான்.

அவள் 'ஆமாம்' என்று தலையாட்டினாள். ''பட் ஐ ஹேவ் ஸீன் யுவர் ஸிஸ்டர் ஹியர். அவங்க ரெண்டு மூணுதரம் வந்திருக்காங்க...''

''ம்...''

''அப்போ பேசியிருக்கேன். குழந்தை மாதிரி சிரிச்சுண்டு கலகலப்பாகப் பேசுவாங்க...''

யமுனா மௌனமாக இருந்தாள். அவனும் சட்டென்று பேசுவதை நிறுத்தினான். கூடவே சிரிப்பும் நின்றது.

'' ஐ யம் ஸாரி'' என்றான் வருத்தப்படுகிற குரலில்; ''உங்களை அனாவசியமாய்க் கஷ்டப்படுத்திட்டேனோ என்னமோ?''

''நோ... நோ... அதெல்லாம் ஒண்ணுமில்லே. ஜானகியின் ஞாபகம் வந்தது...''

''அதைத்தான் சொல்றேன். அவங்களை ஞாபகப்படுத்தி உங்களைக் கஷ்டப்படுத்திட்டேனோன்னு வருத்தமாய் இருக்கு...''



அவள் அதை மறுக்கிற மாதிரி புன்சிரிப்பாகச் சிரித்தாள். பளிச்சென்று விளக்கேற்றின மாதிரி இருந்தது. 'எப்போதாவது சிரிக்கிற இவள் சிரிப்பு எவ்வளவு இயல்பாக இருக்கிறது' என்று நினைத்துக் கொண்டான். சிறிது நேரம் மௌனமாய் உட்கார்ந்திருந்தான். தூரத்தில் எங்கோ பார்த்துக் கொண்டிருந்தான். ஃபிளட் லைட்டின் வெளிச்சத்தில் இரண்டு பேர் டென்னிஸ் விளையாடிக் கொண்டிருந்தார்கள். ஸ்கோர் சொல்கிற சத்தம் தெளிவாகக் கேட்டது. பந்து ராக்கெட்டில் அடிபடுகிற சத்தம் வந்தது. கைதட்டுகிற சத்தம், உற்சாகப் படுத்துகிற சத்தம், சிரிக்கிற சத்தம்... ஒரு நிமிஷம் விளை யாட்டைக் கவனித்தான். பின் மெல்லத் திரும்பி அவள் முகத்தைப் பார்த்தான்.

''அப்பா உங்ககிட்டே எல்லாம் சொல்லியிருப்பார்னு நினைக்கிறேன்...'' என்று குரலைத் தழைத்துக் கொண்டு பேச ஆரம்பித்தான்.

அவள் பார்வை ஒரு தரம் உயர்ந்து மீண்டும் தாழ்ந்தது.

''பத்து நாளைக்கு முன்னால் அவர் என்கிட்டேயும் பேசினார். உங்ககிட்டே என்னவெல்லாம் சொன்னாரோ, அதையெல்லாம் என்னிடமும் சொன்னார். உங்களிடமும் சொல்லப் போவதாகச் சொன்னார். அநேகமாக எல்லா வற்றையும் சொல்லியிருப்பார்னு நினைக்கறேன்...''- தயங்கி அவளை ஒரு தரம் பார்த்துவிட்டு மீண்டும் தொடர்ந்தான்.

''...அவர் சொல்ல வேண்டியதைச் சொல்லிருப்பார். அதே மாதிரி நான் சொல்ல வேண்டிய விஷயங்களும் இருக்கு. நீங்க சொல்ல நினைக்கிறதும் இருக்கலாம். அதையெல்லாம் அப்பாவால் பேசிவிட முடியாது. அவர் இதிலெல்லாம் நேரிடையாகச் சம்பந்தப்பட்டவர் இல்லை. சம்பந்தப்பட்ட நீங்களும் நானும்தான் பேசிக் கொள்ள வேண்டும். இன்று அதெல்லாம் பேசப்படணும்னுதான் அப்பா என்னை வீட்டுக்கு

அழைச்சுண்டு வந்தார். உங்களையும் இங்கே கூட்டிக் கொண்டு வந்திருக்கார்...''

பேரர் அவன் ஆர்டர் பண்ணின பராத்தாவையும்-ஆலு மட்டரையும் கொண்டு வந்து வைத்தார். நீளமான ஒரு கண்ணாடி ஜாடிக்குள் அழகாகச் சுற்றி பூ மாதிரி மடித்து வைக்கப் பட்டிருந்த நாப்கின்களையும் கொண்டு வந்தார். மேலே என்ன வேண்டும் என்பதையும் கேட்டுக் கொண்டார். அவன் இரண்டு ஐஸ்க்ரீம்களும் இரண்டு கப் காபியும் ஆர்டர் பண்ணினான்.

பேரர் போனதும் நாப்கின்கள் இருந்த கண்ணாடி ஜாடியை எடுத்துப் பார்த்தான். வெள்ளை நாப்கின்கள் ஒவ்வொன்றும் லில்லிப் பூக்களாய் விரிந்து கிடந்தன. அதை அப்படியே பார்த்துக் கொண்டிருக்க வேண்டும் போல் இருந்தது. ஒரு பெண்ணின் கைகள் தான் அதைப் பண்ணி யிருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டான். எடுத்துப் பிரிக்க மனசு வரவில்லை. அதைப் பிரிக்கிற போது பூவை இதழ் இதழாகக் கிள்ளிப் போடுகிற குற்ற உணர்ச்சி ஏற்படும் என்று தோன்றியது. அதனால் நாப்கின்னை எடுக்காமல் ஜாடியை மேஜை மீது வைத்து விட்டான். அவனையே பார்த்துக் கொண்டிருந்த யமுனா, ''பிரிக்க மனசு வரலே, இல்லே...?'' என்று கேட்டாள் அவள். 'ஆமாம்' என்று தலையாட்டினான்.

''அழகாக இருக்கிற எதையும் கலைக்க மனசு வரமாட்டேன் என்கிறது. இது மட்டும்தான் என்பதில்லை; இந்த மாதிரி நிறைய விஷயங்கள். பூ மாதிரி பண்ணின தித்திப்புக்கள்-கேக்குகள் எதையும் நான் தொடமாட்டேன். பண்டிகை நாட்களில்கூட இப்படித்தான். வேலைக்காரி பெரிதாய் காவி கட்டி கோலம் போட்டு விட்டுப் போவாள். அதில் பெரிய தேராக ஒன்று நகரும். கிளிகளாகக் கொஞ்சும். பாம்புகள் படமெடுக்கும். ஒரு நாள் முழுவதும் பார்த்துக்



கொண்டே நிற்கலாம் போல இருக்கும். கொஞ்ச நேரம் பால்கனியில் நின்று பார்த்துக் கொண்டிருப்பேன். பின் கீழேயும் இறங்கி வந்து பார்ப்பேன். கால் பட்டுக் கலைந்து விடுமோ என்று தாண்டித் தாண்டி பாத நுனியால் நடந்து போவேன். அன்று முழுசும் காரைக்கூட வெளியில் எடுக்க மாட்டேன். கொஞ்ச நேரம் நான் உள்ளே போய் விட்டுத் திரும்பி வந்து பார்த்தால் எல்லாம் கலைந்து கிடக்கும். வரிவரியாய் கார் சக்கரம் உருண்டு கிடக்கும். கிளிகள் நசுங்கிக் கிடக்கும். ஷூ கால்களில் மிதிக்கப்பட்டு பாம்புகள் செத்துக் கிடக்கும். தேரின் நடுப்பாகம் முறிந்து போயிருக்கும்.

''அம்மாவைப் பார்க்க வருகிற யாரும் வாசல் கோலத்தைப் பார்த்துக் கொண்டிருப்பதில்லை. நின்று அதை யெல்லாம் கவனிக்க அவர்களுக்கு நேரமும்- பொறுமையும் இல்லை. ஒரு வேளை அவர்கள் எடுக்கிற படங்கள் எதிலாவது ஹீரோயின் கோலம் போடுகிற மாதிரி ஒரு ஸீன் வந்தால் கவனிப்பார்களோ என்னமோ? ஆனால், அந்தப் படங்களைப் பார்த்தால் அப்படியும் தெரியவில்லை!'' - அவன் சொல்லி விட்டு மெதுவாகச் சிரித்தான். பற்கள் வரிசையாய் நல்ல வெள்ளையில் பளிச்சிட்டன.

சிரிப்பு நின்றதும், ''நான் ஏதோ பேச ஆரம்பித்து எங்கேயோ போய்விட்டேன் பாருங்கள்'' என்றான். குரல் அதற்காக வருத்தப்படுகிற மாதிரி இருந்தது. சிறிது நேரம் பேசாமல் இருந்தான். எதையோ யோசிக்கிற மாதிரி இருந்தான். யோசித்த விஷயம் கிடைத்த மாதிரி சட்டென்று பேச ஆரம்பித்தான்.

''அப்பா சொன்னதைப் பற்றி நீங்க என்ன முடிவுக்கு வரப் போகிறீங்களோ தெரியாது. நீங்க எந்த முடிவுக்கு வந்தாலும் அதை நான் சந்தோஷமாக ஏத்துப்பேன். அப்பா உங்களைப் பார்க்கணும்தான் என்னை உங்க வீட்டுக்கு

அழைச்சுண்டு வந்தார். ஆனால், அதற்கு முன்னாலேயே உங்களைப் பற்றி நிறைய சொல்லியிருக்கார். அதிலிருந்து யாருக்கும் உங்களைப் பிடிக்கும்-யாராலும் நீங்கள் விரும்பப்படுவீர்கள் என்று தெரிந்தது. நான் மட்டும் அதற்கு விலக்கு இல்லே. நீங்க நிறைய விஷயங்களில் என்னோடு ஒத்துப் போவீங்கன்னு மனசுக்குப் பட்டது. அந்த ஒற்றுமை பெரிய விஷயம்னு தோணித்து. உங்களைப் போலவே நானும் அமைதியானவன். அதிகம் பேசாதவன். கலகலப்பாகப் பழகாதவன். நிறைய சிரிக்காதவன். ஆனால், உங்களை மாதிரி எழுதத் தெரியாதவன்...

''அப்பா சொன்னதிலிருந்தே உங்களை எனக்குப் பிடித் திருந்தது. இப்போ நேரில் பார்த்த பின்னாலும் பிடித்திருக்கு. இதை நான் மறைக்க வேண்டிய அவசியம் இல்லே. இதுவரை யாரையும் நான் இப்படி நினைச்சதில்லே. யாரும் என் மனசில் இருந்ததில்லை. இருக்கிற அளவுக்குப் பழகினதும் இல்லை, இவ்வளவு தூரம்-இவ்வளவு நெருங்கி நான் பேசுகிற முதல் பெண்ணே நீங்கள்தான்...

''அதே மாதிரி உங்க மனசிலே யாரும் இல்லேன்னா-என்னை உங்களுக்குப் பிடிச்சிருந்தால்- கல்யாணம் பண்ணிக்கணும் என்கிற முடிவுக்கு வர்றதாக இருந்தால்-அப்படி வருவதற்கு முன்னால் உங்களுக்கு இன்னும் சில விஷயங்கள் தெரிஞ்சிருக்கணும்னு நினைக்கிறேன். அப்போ தான் என்னை முழுசாப் புரிஞ்சுக்க முடியும். உள்ளுக்குள் இருக்கிற அந்த இன்னொரு சுதாகரையும் தெரிஞ்சுக்க முடியும். ஒருத்தரோடு ஒருத்தர் பழகறத்துக்கே இது அவசியம்னா-ஒருத்தரோடு ஒருத்தர் சேர்ந்து வாழப்போறதுக்கு இன்னும் அவசியம்.''

ஒரு நிமிஷம் நிறுத்தி அவள் முகத்தை ஒரு தரம் பார்த்தான். பார்வை மென்மையாக இருந்தது. மனசை வருடிக் கொடுக்கிற மாதிரி இருந்தது. சில வினாடிகள் அப்படியே



பார்த்துக் கொண்டிருந்தான். பின், குரல் இன்னும் தழைய நிதானமாகப் பேச ஆரம்பித்தான்:

''வாழ்க்கைங்கறது ரொம்ப அழகானது யமுனா! அதிலும் கல்யாணங்கிறது இன்னும் அழகான விஷயம்னு சொல்லத் தோணறது. அது வெறும் படுக்கையைப் பகிர்ந்துக்கறது மட்டுமில்லை. குழந்தைகள் பெறுவது மட்டும் இல்லை. அதற்கெல்லாம் மேலே வாழ்க்கையையே பகிர்ந்துக் கறது. மனசைப் பகிர்ந்துக்கறது. சந்தோஷத்தைப் பகிர்ந்துக் கறது. கஷ்டங்களைப் பகிர்ந்துக்கறது. இப்படி எல்லாத்தையும் பகிர்ந்துக்கணும்னா அதற்கு ஒரு பரந்த மனசு வேணும். விட்டுக் கொடுக்கிற சுபாவம் வேணும். ஒருத்தரை ஒருத்தர் புரிஞ்சுக்கிற சக்தி வேணும். நாம வாழறதே சந்தோஷமாக இருக்கத்தான். மற்றவர்களையும் சந்தோஷப் படுத்தத்தான்.

''நான் சொல்ல நினைக்கிற விஷயங்களை அப்பாவால் சொல்லிவிட முடியாது. அப்படியே சொன்னாலும் என்னைப் போல் சொல்ல வராது. ஏனென்றால் இதன் அழுத்தங்கள் அவருக்குப் புரியாது. ஆழங்கள் தெரியாது. அவர் நேரடியாகச் சம்பந்தப்பட்டவர் இல்லை. பாதிக்கப்பட்டவர் இல்லை. அதனால் என்னுடைய உணர்ச்சிகளை என்னை மாதிரி அவருக்குச் சொல்ல வராது. பட்டுன்னு போட்டு உடைச்சுடு வாரோன்னு பயமாக இருந்தது. அதனால்தான் இதை யெல்லாம் நானே உங்ககிட்டே சொல்லணும்னு நினைச்சேன். அதற்கு அப்பாகிட்ட பெர்மிஷனும் கேட்டேன். அவர்கிட்ட நான் எதையும் மறைச்சதில்லை. அதே மாதிரி உங்ககிட்டேயும் மறைக்கணும்னு நினைக்கலை...''

அவன் கொஞ்சம் நிறுத்தினான். ஐஸ் வாட்டரை எடுத்துக் குடித்தான். தூரத்தில் எங்கோ பார்த்தான். பின் பார்வை எது எதிலோ அலைந்தது. நிமிர்ந்து வானத்தைப் பார்த்தது. கிளப்பின் கட்டடத்தைப் பார்த்தது. வருகிற கார்களைப் பார்த்தது. எழுந்து போகிற மனிதர்களைப்

பார்த்தது. கடைசியில் அவள் முகத்தில் பதிந்தது. குரல் கரகரவென்று வந்தது.

''யு நோ, மை மதர் ஈஸ் ஏன் ஆக்ட்ரஸ்!''-சொல்லி விட்டு மீண்டும் அவளைப் பார்த்தான். அவள் கண்களைப் பார்த்தான். அதில் எதையோ தேடுகிற மாதிரி பார்த்தான். ஆனால், எந்த பாவமும் இல்லை. பார்த்த பார்வையில் ஒரு மாறுதலும் இல்லை.

'நிஜமாகவா..?' என்று அகலக்கூட இல்லை. 'அப்படியா...?' என்ற ஆச்சரியமில்லை. அதே அமைதியில் கிடந்தது. அதே நிதானத்தில் கிடந்தது.

அந்த அமைதியைப் பார்த்து மனதுக்குள் வியந்து கொண்டான் அவன்.

## 8

நிசப்தமாக இருந்தது. திடீரென்று சூழ்ந்து கொண்ட நிசப்தமாகத் தோன்றியது. அதுவரை கேட்டுக் கொண்டிருந்த பேச்சுக் குரல்கள் இல்லை. கண்ணாடித் தம்ளர்கள் மோதுகின்ற சப்தம் இல்லை. டென்னிஸ் பந்து ராக்கெட்டில் அடிபட வில்லை. தண்ணீரில் குதித்துக் கொண்டிருந்த அந்த வெளி நாட்டுக் குழந்தைகள் இல்லை. நடமாடிக் கொண்டிருந்த 'பேரர்'கள் இல்லை. காற்றில் மிதந்து வந்த அமெரிக்க சென்ட்டின் வாசனை இல்லை. நுனி நாக்கின் ஆங்கில உச்சரிப்பு இல்லை. மெலிசாய் சிரிக்கிற சிரிப்பு இல்லை. எல்லாம் 'சட்'டென்று அடங்கிப் போய்விட்டது. எல்லாரும் ஒரே சமயத்தில் எழுந்து போன மாதிரி நிசப்தமாகி விட்டது. கிளப் அமைதியாய் விட்டது. விளக்குகள் அணைக்கப்பட்டு அனேகமாய் எல்லா இடமும் இருட்டாகி விட்டது.



சுதாகரும் - யமுனாவும் அந்த இருட்டில்தான் உட்கார்ந்து கொண்டிருந்தார்கள். தூரத்து ட்யூப் லைட்டின் வெளிச்சம் அடித்தது. நட்சத்திரங்களின் மினுங்கல் தெரிந்தது. முகம் பார்க்கிற அளவிற்கு மங்கல் வெளிச்சமாக வந்தது. உடம்பு நடுங்குகிற அளவில் குளிர் அதிகமாயிற்று. யமுனா புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்துக்கொண்டு உட்கார்ந் திருந் தாள். சுதாகரும் மௌனமாக இருந்தான். சிறிது நேரம் அப்படியே போயிற்று. பின் சுதாகர்தான் முதலில் பேச ஆரம்பித்தான். விட்ட இடத்திலிருந்து தொடர்ந்து பூ கோர்த்த மாதிரிப் பேசிக் கொண்டு போனான்...

''அம்மா நடிச்ச படங்களை நீங்க பார்த்திருக்கலாம் யமுனா! ஷி ஈஸ் எ வெரி குட் ஆக்டரஸ். முன்னெல்லாம் கன்னடத்துலேயும் மராட்டியிலேயும் தான் ஆக்ட் பண்ணி னாங்க. இப்போ நிறையத் தமிழ்ப் படங்களிலும் நடிக்கறாங்க. முதல்ல அவங்க ஸ்டேஜ் ஆர்ட்டிஸ்டாகத்தான் இருந்தாங்க. மராட்டி ஸ்டேஜிலே அம்மாவைத் தெரியாதவர் யாருமே இருக்க முடியாது. அவங்க சினிமாவுக்கு வந்தது மியர் ஆக்ஸிடெண்ட்தான்.

''பூனா இன்ஸ்டிட்யூட்லேருந்து ஒருத்தர் அம்மாவை வச்சு எக்ஸ்பிரிமெண்டலா ஒரு படம் எடுத்தார். அது ஸக்சஸ்ஃபுல்லாகவே நிறைய புரொட்யூஸர்ஸ் வீட்டைத் தேடிவர ஆரம்பிச்சாங்க. வழக்கமான படங்களாக நிறையக் கொண்டு வந்தாங்க. அம்மா எதையும் ஏத்துக்கலை. எல்லாப் படங்களையும் மறுத்துட்டாங்க. வித்தியாசமான படங்கள் மட்டும்தான் பண்ணுவேன்னு பிடிவாதமாக இருந்தாங்க.

''முதல் ஐந்தாறு படங்களுக்குத்தான் அந்தப் பிடிவாதம் நின்றது. பின் கொஞ்சம் கொஞ்சமாகக் குறைஞ்சு போச்சு. மாட்டேன்னு சொல்ல முடியாத சில முகங்களுக்காக-மறுக்க முடியாத காரணங்களுக்காக-சில சாதாரணப் படங்களிலும்

நடிக்க ஆரம்பிச்சாங்க. இப்போ முழுநேர கமர்ஷியல் ஆர்ட்டிஸ்டாகவே மாறிட்டாங்க. அதிலிருந்து அவங்களால் வெளியில வரமுடியலை. வர விடவும் மாட்டாங்க. அவங்க இப்படி சாதாரணப் படங்களிலெல்லாம் நடிக்கிறதுதான் எனக்கு வருத்தமே தவிர வேற எந்த வருத்தமும் இல்லை. எந்த கஷ்டமும் இல்லை...

''இதுவரை நான் அம்மாவை ஒன்றும் சொன்னதில்லை. எதுவும் கேட்டதில்லை. இது அவளுடைய வாழ்க்கை. அவளுக்கு மட்டுமே சொந்தமான வாழ்க்கை. யாருமில்லாமல் தனித்து நின்று போராடி வெற்றி பெற்ற வாழ்க்கை. நிறைய அடிபட்டு-காயம் பட்டு-இடறி விழுந்து-எழுந்து நின்ற வாழ்க்கை. ஸ்திரமாகக் காலை ஊன்றிக் கொண்ட வாழ்க்கை. அதில் தலையிட எனக்கு எந்த உரிமையும் இல்லை. எந்தத் தகுதியும் இல்லை.

''அம்மா தனக்குப் பிடித்தவர்களோடு பிடித்த மாதிரி வாழ்க்கை நடத்துகிறாள் என்றால் அதுவும் அவளுடைய விஷயம்தான். அவளுக்குச் சொந்தமான விஷயம். அதைப் பற்றி எனக்கு நிறையக் கருத்து வேறுபாடுகள் இருக்கலாம். அதனால், எனக்குள் நிறையக் காயங்கள் ஏற்படலாம். நிறைய வலிகள் தோன்றலாம். ஆனாலும் அது அவளுடைய விஷயம். அவளுடைய நல்லது அவளுக்குத் தெரியும். அதே மாதிரி கெட்டதும் தெரியும். நான் சொல்லித்தரணும் என்கிற அவசியமில்லை. ஷி நோஸ் வாட் ஷி வாண்ட்ஸ்.''

பேரர் அவன் ஆர்டர் பண்ணின ஐஸ்க்ரீம்களைக் கொண்டு வந்தார். ''உடனேயே காபியும் வேண்டுமா?'' என்று கேட்டார். சுதாகர், 'வேண்டாம்' என்று தலையாட்டினான். ''கொஞ்ச நேரம் போகட்டும்'' என்றான். பேரர் போனதும் யமுனாவைப் பார்த்தான். ''சாப்பிடுங்கள்'' என்று சொல்லி விட்டு, தன் ஸ்பூனை எடுத்துக் கொண்டான். நீளமான அந்தக் கோப்பையிலிருந்த ஐஸ்கிரீமில் ஒரு ஸ்பூன் எடுத்துச் சாப்பிட்டுப் பார்த்தான். பின் கொஞ்சம் தயங்கின மாதிரி அவளைப் பார்த்தான்.



''இதையெல்லாம் சொல்கிறபோது முதல் முதலாக எங்க வீட்டுக்கு வந்த அந்த டான்ஸ் மாஸ்டர் ஞாபகம் வரது. அதையும் உங்ககிட்ட சொல்லணும்னு தோணறது. எனக்கு நினைவு தெரிந்து நான் அம்மாவோடு சேர்த்துப் பார்த்த முதல் மனிதர் அவர்தான். பாகவதர் கிராப் வைத்துக் கொண்டு நெற்றியில் சந்தனப்பொட்டோடு அழகாக இருப்பார். வெள் ளை வெளேரென்று மடிப்புக் கலையாமல் பட்டு வேஷ்டி யாகவே உடுத்துவார். அம்மா அவரோடு மூணு நாலு வருஷங் கள் வாழ்க்கை நடத்தினாள். நான்கூட அவரை 'அப்பா'ன்னு கூப்பிட ஆரம்பிச்சேன். ஆனால் திடீரென்று ஒருநாள் அவர் வருவதை நிறுத்திவிட்டார். அம்மாவுக்கும்- அவருக்கு மிடையில் என்ன நடந்ததென்று எனக்குத் தெரியாது. அவர் வராததன் சோகம் மட்டும் அம்மாவின் முகத்தில் தங்கிப் போய் இருந்தது. அவளுடைய சிரிப்பு கொஞ்சம் குறைந் திருந்தது. பார்வையின் பிரகாசம் மங்கிப் போயிருந்தது...

''சில நாட்கள்தான் அவள் அப்படி இருந்தாள். மறுபடியும் திடீரென்று ஒருநாள் அவள் முகம் பளிச்சிட்டது. பழைய சிரிப்பு வந்தது. அம்மா புதுசா யாரோ ஒருத்தருடன் வீட்டுக்கு வர ஆரம்பித்தாள். அந்த மனிதர் உயரமும் பருமனுமாய் இருந்தார். முகம் மட்டும் குழந்தையின் முகம் மாதிரித் தெரிந்தது. அவரும் கொஞ்ச நாள் தான். அதற்குப் பின் இன்னும் இரண்டு மூன்று பேர்கள்... ஆனால் வீட்டுக்கு வருகிற யாரோடும் நான் பேசுவதில்லை. சிரிப்பதில்லை. ஏதோ அவசர வேலை இருக்கிற மாதிரி பரபரவென்று வீட்டை விட்டு வெளியில் வந்து விடுவேன். இல்லாவிட்டால் மொட்டை மாடியில் போய் நின்று கொண்டிருப்பேன். வானத்தை வெறித்துக் கொண்டிருப்பேன்...''

சொல்லிவிட்டு அவன் எங்கோ பார்த்தான்... ஆழமாய்ப் பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. குரல் 'கரகர' வென்று வந்தது. மனசில் இருப்பதையெல்லாம் சொல்லி முடிக்கிற வேகம் தெரிந்தது. பார்வையைத் திருப்பாமல் அவன் மேலே பேசிக்கொண்டு போனான்.

''ஆனால் இப்போது வருகிற டாக்டர் ராமனாதன் வித்தியாசமானவர். மனுஷத்தனம் நிறைந்தவர். நல்ல ரசனை உள்ளவர். அந்த ரசனைதான் அம்மாவைத் தேடிக் கொண்டு வரச் சொல்லியிருக்க வேண்டும். தன்னுடனேயே அவளை நிறுத்திக் கொண்டிருக்க வேண்டும். ஹி ஈஸ் ஆல்ஸோ எ ஸென்ஸிடிவ் பர்ஸன். ஐ லைக் ஹிம் வெரி மச். அவரே எனக்கு அப்பாவாக இருந்திருக்கக் கூடாதான்னு சில சமயங்களில் எனக்குத் தோணும். பட், ஐ டோண்ட் கால் ஹிம் ஃபாதர். என்னைப் பொறுத்தவரை அந்த வார்த்தைக்கு அர்த்த மில்லாமல் ஆகிவிட்டது. வெறும் வார்த்தையாகவே போய்விட்டது.

''உங்கப்பா உங்களைப் பற்றியெல்லாம் பேசறபோது-அந்தப் பொறுப்பையும் பொறுமையையும் பார்க்கிறபோது-அவருடைய பிரியத்தை நினைக்கிறபோது-நான் எவ்வளவு பெரிய விஷயத்தை என் வாழ்க்கையில் இழந்திருக்கிறேன் என்பது தெரியும். கூடவே அம்மாவின் நினைப்பு வரும். இழந்தது நான் மட்டுமில்லை. அம்மாவும் கூடத்தான் என்பது புரியும். எனக்கே அப்பாவின் அண்மை இவ்வளவு தேவையாக இருக்கிறபோது அம்மாவுக்கு இன்னும் எவ்வளவு தேவையாக இருந்திருக்கும் என்று நினைத்துக் கொள்வேன். அப்படி அவளை நினைக்கிறபோது மனசு ரொம்பக் கஷ்டப்படும். அவளுடைய அலைச்சல்களுக்கான காரணம் புரியும். ஒவ்வொருவரிடமாய் அவள் தேடுகிற அந்த ஸெக்யூரிட்டி புரியும். அவள் இழப்பு எவ்வளவு பெரிசு என்பதும் புரியும். ஆனாலும், அவள் நிதானத்தைக் கைவிட்டதில்லை. அழுதும் புலம்பினதில்லை. தன் வாழ்க்கையைச் சோகமாக்கிக் கொண்டதில்லை. எனக்கு யார் அப்பாவோ அவரை நினைத்து வருத்தப்பட்டதுமில்லை. உள்ளுக்குள் என்ன இருக்குமோ தெரியாது. ஆனால், அம்மா எதையும் வெளியில் காட்டிக் கொண்டதில்லை.



''அதைப் பார்க்கிறபோது எனக்குப் பிரமிப்பாக இருக்கும். வாழ்க்கையை எவ்வளவு சுலபமாக ஏற்றுக் கொண்டிருக்கிறாள் என்பது தெரியும். எல்லாவற்றையும் அதன் போக்கில் எப்படி அனுசரிக்கிறாள்? அந்த மாதிரி யாரால் இருக்க முடியும்? எத்தனை பேருக்கு வரும்? அதற்கு எவ்வளவு திடமான மனசு வேணும்... திமிசு போட்டுத் தட்டின தரை மாதிரி எப்படி அழுந்திப் போயிருக்கணும். எத்தனைப் பிடிவாதம்! எவ்வளவு வைராக்கியம்!

''இதையெல்லாம் பார்க்கிறபோது அவள்கூட ஒரு ஸந்யாசிதான்னு எனக்குத் தோணும். விருப்பு, வெறுப்பை மறந்துபோன ஸந்யாசி. உடம்பைப் பெரிசாக நினைக்காத ஸந்யாசி. இந்த ஸந்யாசம் ரொம்பப் பெரிய விஷயம்தான். அம்மாவால் மட்டுமே முடிகிற விஷயம். ஐ லைக் ஹர் ஆஸ் எ வுமன்; ஐ லைக் ஹர் ஆஸ் எ மதர். அவளை எல்லோராலும் புரிஞ்சுக்க முடியாது. எல்லோராலும் ஏத்துக்க முடியாது. எல்லோருக்கும் அவளைப் பிடிக்கவும் பிடிக்காது. அப்படிப் பிடிக்கணும் என்கிற அவசியமில்லை. எல்லோரும் அவளைப் புரிஞ்சிக்கணும் என்கிற தேவை இல்லே. ஆனால் நீங்க புரிஞ்சுக்கணும்னு நினைக்கிறேன் யமுனா. உங்களுக்குப் பிடிக்கணும்னு ஆசைப்படறேன். உயர்ந்த ஒரு மனசாலத்தான் அவளைப் புரிஞ்சுக்க முடியும். அவங்களுடையது அப்படிப் பட்ட மனசுன்னு தெரிஞ்சுண்டுதான் இதை எல்லாம் சொல்றேன். இல்லாவிட்டால் சொல்லியிருக்க மாட்டேன். நாம் நல்ல நண்பர்களாகப் பழகறதானாலும் ஒருத்தரைப் பத்தி ஒருத்தர் தெரிஞ்சுக்க வேண்டியது ரொம்ப அவசியம்.

என்னைவிட ஆஸ் எ வுமன்-உங்களால் அம்மாவை சரியாகப் புரிஞ்சுக்க முடியும். புரிஞ்சுப்பீங்களா யமுனா...?''

அந்தக் கேள்வி அவள் மனசைத் தொட்டது. வியப்பும், திகைப்புமாய் மாறிமாறி வந்தது. அவன் சொன்னதெல்லாம் புரிந்த மாதிரி தோன்றியது. புரியாத மாதிரியும் ஒரு கணம் மருட்டியது. சற்று முன் அப்பா சொன்னதை நினைத்துக் கொண்டாள். ''அவனைவிட நல்ல மாப்பிள்ளையாய் என்னால் உனக்குத் தேடித் தரமுடியும்னு தோணலே...'' 'எப்படிச் சொன்னார் அப்பா...! இந்த மாதிரி முடிச்சுப்போட வேண்டுமென்று அவருக்கு எப்படித் தோன்றியது...?'

'சட்டென்று அவன் கையைப் பற்றிக் கொள்ள வேண்டும். ஆறுதலாக ஏதாவது சொல்ல வேண்டும். நிதானமாகப் பேச வேண்டும். வேண்டாம்.எதற்கு? இந்த வார்த்தைகளுக்கெல்லாம் அர்த்தம் தான் என்ன? எதையும் பேசினால்தானா? பேசாமல் புரிய வைக்க முடியாதா?'

நிமிர்ந்து அவனைப் பார்த்தாள். அவன் முகத்தைப் பார்த்தாள். மென்மையாய்ப் பார்க்கிற பார்வை. அன்பாய்ப் பார்க்கிற பார்வை. மனசைத் தொடுகிற பார்வை. 'என்னைப் புரிந்து கொள்ளேன்' என்று கெஞ்சுகிற பார்வை...

அவன் அதைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். அவளை ஒருதரம் அதே மாதிரி பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டான்.

மௌனமாக ஒரு நிமிஷம் போயிற்று. பேரர் காபிக் கோப்பைகளைக் கொண்டு வந்து வைத்தார். மெதுவாகச் சாப்பிட்டுக் கொண்டே நிதானமாகக் கேட்டாள் யமுனா; எந்த ஆர்வமும் இல்லாத குரலில் சாதாரணமாகக் கேட்டாள்:

''அம்மா பேரை நான் தெரிஞ்சுக்கலாமா?''

அவன் லேசான புன்சிரிப்போடு அவளைப் பார்த்தான்.



''ஐ'ம் ஸாரி... இதுவரை பேர் சொல்லாமலே நான் பேசிண்டு போயிருக்கேன் இல்லே. அம்மா பேர் நந்தினி!''

''நந்தினி...!'' -கண்கள் பிரகாசமாகச் சட்டென்று அவனைப் பார்த்தாள் அவள்.

# 9

**ந**ந்தினி!

யமுனாவிற்குத் தான் பார்த்த அந்தக் கன்னடப் படம் ஞாபகத்திற்கு வந்தது. அவார்ட் வாங்கின படம். இவள் வெகு நாட்களாகப் பார்க்க நினைத்த படம். ஒரு ஞாயிற்றுக்கிழமை ஓடியனில் மார்னிங் ஷோவாக வந்திருந்தது. இவள் ஜானகியோடு போயிருந்தாள். ஜானகி முணுமுணுத்துக் கொண்டே கூட வந்தாள்.

''பாஷை புரியாது. கதை என்னன்னு தெரியாது. பேசிக்கிறதைக் கேட்க முடியாது. வெறும் வாயசைப்பைப் பார்த்துண்டு உட்கார்ந்திருக்கணும். அதுலயும் அவார்ட் வாங்கின படம். ஒவ்வொரு 'ஸீனா' ஆமை மாதிரி நகரும். அங்கே போய் உட்கார்ந்து போர் அடிக்கிறதைவிட ஏதாவது இந்திப் படத்துக்குப் போகலாம். இன்னொரு தரம் 'ஷோலே' பார்க்கலாம்...''

இவள் பிடிவாதமாய் அழைத்துக் கொண்டு போனாள். முதல் ஸீனிலேயே நந்தினி ஃப்ரேம் முழுவதும் அடைத்துக் கொண்டு சோளக் கதிரைக் கடித்தபடி அழகாகச் சிரிக்கிற நந்தினி. இடது பக்கத்தின் மூக்குத்தி மின்னிப் பளிச்சிட, விலகின புடவையை அலட்சியமாகத் தள்ளிக் கொண்டு நெல் குத்துகிற நந்தினி. ஈரப்புடவை உடம்பில் ஒட்ட மழையில் நனைந்து கொண்டு வருகிற நந்தினி. கோயில் வாசலில் கை

கூப்பி நின்று தன் பெரிதான கண்களால் சந்நிதியைப் பார்க்கிற நந்தினி. வெட்கமும்-பயமும்-ஆசையுமாய் ராத்திரி தன் கணவனை எதிர்பார்க்கிற நந்தினி. மறுநாள் காலையில் நெற்றியின் பெரிய குங்குமப் பொட்டுக் கலைய முகத்தை மூடிக்கொண்டு விரல் இடுக்குகள் வழியாகப் பார்த்து சிரிக்கிற நந்தினி. கணவன் தன்மீது இன்னும் அதிக ஆசையுடன் இருக்க வேண்டுமென்பதற்காக, பாதி ராத்திரியில் யாருக்கும் தெரியாமல் 'விருக்விருக்'கென்று நடந்து காளி கோயிலுக்குப் போய் பூஜை பண்ணுகிற நந்தினி. எதிர் கிராமத்தின் பணக்கார மிராசுதாரரிடம் சிக்கிக் கொள்கிற நந்தினி. அவன் கைகளில் நசுக்கப்படுகிற நந்தினி. பின் அங்கே அப்படியே உட்கார்ந்து விசும்பலும் கேவலுமாய் அழுகிற நந்தினி...

எத்தனை நந்தினிகள்!

அந்த முகம்-அந்தக் கண்கள்-அதன் பார்வை- சிரிப்பு- 'வெடவெட' வென்று நின்ற உயரம். இறுகக் கட்டின உடம்பு-பளிச்சென்று கண்ணில் அடிக்கிற நிறம்-மாறி மாறி முகத்தில் விழுகிற சோகம். சந்தோஷம், பயம், வெட்கம்...

என்ன முகம் அது!

யமுனா பிரமிப்பும் திகைப்புமாகத்தான் உட்கார்ந் திருந்தாள். திரையிலிருந்து கையைப் பிடித்து அழைத்துக் கொண்டு வந்து நிற்க வைத்து நமஸ்காரம் பண்ணலாம் போலிருந்தது. அந்த அழகில் தெரிந்த கம்பீரம் அசர அடித்தது. இப்படியா... இப்படிக் கூடவா என்று மாய்ந்து மாய்ந்து போனது. மெதுவாகத் திரும்பி ஜானகியைப் பார்த்தாள். அவளும் அசந்து போய் உட்கார்ந்திருக்கிற மாதிரிதான் பட்டது. ஒரு பேச்சு இல்லை. ஒரு முணுமுணுப்பு இல்லை. உடம்பு அசங்கவில்லை. பார்வை திரும்பவில்லை. படம் முடிகிற வரை அப்படித்தான் இருந்தாள். பின்பு குரல் மெதுவாக வந்தது... பிரமிப்பாக வந்தது:



''என்ன அழகு யமுனா அவ! அந்தக் கண்ணையும்-சிரிப்பையும்-உடம்பையும் பார்த்தியா...? சினிமாவிலேர்ந்து அழைச்சுண்டு போய் அலங்காரம் பண்ணி கோவில் சந்நிதியில் நிற்க வைக்கலாம் போல இல்லை?''

அப்படித்தான் தோன்றியது யமுனாவிற்கும். அது சாதாரண அழகாகத் தெரியவில்லை. மனுஷ முகமாகத் தெரியவில்லை. லக்ஷ்மி, சரஸ்வதி, பார்வதி என்று சொல்லலாம் போன்ற முகமாகத்தான் இருந்தது. அப்படிப் பட்ட அழகாகத்தான் தோன்றியது. இந்த அழகு எப்படி சினிமாவிற்கு வந்தது? காமிராவிற்கு முன்னால் வந்தது? கண்ணைக் கூசவைக்கும் விளக்கிற்கு வந்தது? பத்துப் பேருக்கு நடுவில் வந்தது? பணம் காசு பண்ண வந்தது? ஏன் வந்தது? எங்கே அடிபட்டு எப்படி வந்தது?

''அவ பேரு என்னன்னு சொன்னே...?'' -டவர் கிளாக் எதிரில் பஸ்ஸுக்கு நின்றபோது ஜானகி கேட்டாள்.

''யார் பேரு...?''

''அதான், அந்த ஆக்டரஸ் பேரு...''

''நந்தினி!''

அந்த நந்தினியா! சுதாகரின் அம்மாவா அந்த நந்தினி!

அவள் நிமிர்ந்து அவன் முகத்தைப் பார்த்தாள். அவனைப் பார்த்ததில் இருந்து இதுவரை, 'இந்த முகம் யாருடையது... யாருடையது...?' என்று தேடிக் கொண்டிருந் தாள். முதலில் அனில் சௌத்ரி மாதிரி இருப்பதாக நினைத்துக் கொண்டாள். இப்போது பளிச்சென்று நந்தினியின் சாயல் அடித்தது. அந்த மெலிசான உதடுகள்- தீர்மையான மூக்கும்-குவிந்த மோவாயும் அப்படி இருந்தது. நிறம்கூட மினுமினு வென்று கண்ணில் அடிக்கிற நிறம்தான்.

''என்ன யமுனா, பேரைக் கேட்டு விட்டுப் பேசாமல் இருக்கீங்க...?''

''இல்லை, இது எனக்கும் கொஞ்சம் ஆச்சரியமான விஷயமாக இருக்கு. சந்தோஷமானதாகவும் இருக்கு. நான் அம்மா 'அவார்ட்' வாங்கின அந்தக் கன்னடப் படத்தைப் பார்த்திருக்கேன். என்ன அழகுன்னு பிரமிச்சுப் போயிருக்கேன். நீங்க இப்போ அவங்கதான் என் அம்மான்னு சொன்னதைக் கேட்டபோது முதலில் கொஞ்சம் திகைப்பாக இருந்தது. பின் அதுவே சந்தோஷமாயிற்று. அவங்க உங்க அம்மாவாக இருக்கிற சந்தோஷம். அவங்களை நீங்கள் சரியாகப் புரிஞ்சுண்டிருக்கிற சந்தோஷம். நானும் புரிஞ்சுக்க ஒரு சந்தர்ப்பம் கொடுத்த சந்தோஷம். எல்லாத்துக்கும் மேலே அந்த சந்தோஷத்துல எனக்கும் ஒரு பங்கு வரப் போறதுன்னு நினைக்கிறபோது ஏற்படற சந்தோஷம்...''

அவள் புன்சிரிப்பாய் சிரித்துக்கொண்டு அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் தொனித்த அர்த்தத்தை அவன் புரிந்து கொண்டான். மனசு சிலிர்க்க உட்கார்ந்திருந்தான். உள்ளுக்குள் பொங்கிப் பொங்கி வந்தது. 'நிஜமாகவா... நிஜமாகத்தானே யமுனா...?' என்று கேட்கத் தோன்றியது. அவள் கை விரல்களைப் பற்றி அழுத்தத் தோன்றியது. ஆனால், நிதானமாக அவளைப் பார்த்துக் கொண்டு மௌனமாய் இருந்தான்.

யமுனாவும் சிறிது நேரம் பேசவில்லை. மெதுவாக நிமிர்ந்து வானத்தைப் பார்த்தாள். நல்ல கறுத்த நீலத்தில் வெள்ளை வெள்ளையாய் மேகங்கள் நகர்ந்து கொண்டிருந்தன. கும்பல் கும்பலாய்க் கொட்டி இறைத்த நட்சத்திரங்களுக் கிடையில் அவளுடைய ஒற்றை நட்சத்திரம் கண்ணில் பட்டது. அவள் பார்ப்பதைக் கவனித்த சுதாகரும் நிமிர்ந்து பார்த்தான்.



''அதோ தூரத்துல பிரகாசமா தனியாத் தெரியறதே, அதுதான் என்னோட நட்சத்திரம்...'' என்றாள்.

''உங்களோட நட்சத்திரமா...?'' அவன் சிரிப்பும் வியப்புமாய்ப் பார்த்தான்.

''ம்... எனக்கென்று நான் தனியாய் ஒதுக்கி வச்சுண்டிருக்கிற நட்சத்திரம். என்னுடைய கதை எல்லாத்துலேயும் இது வரும்.''

அவன் பதில் சொல்லாமல் சிரித்துக் கொண்டிருந்தான். ஒரு வினாடிக்குப் பின் தயங்கின மாதிரி-அவளுடைய ஆர்வத்தைக் கலைக்கிற மனசு வராமலேயே சொன்னான்:

''ஆனால் இதை நட்சத்திரமில்லேன்னு சொல்றாங்களே... இது ஒரு பிளானெட்-வீனஸ்னு சொல்றாங்க...''

''அப்படியா? இன்னும் யாரோ கூட இந்த மாதிரி என்கிட்டே சொன்னாங்க. ஆனால் என்னைப் பொறுத்தவரை இது நட்சத்திரம் தான்!''

அதற்கும் அவன் சிரித்துக் கொண்டுதான் இருந்தான். அந்தச் சிரிப்பு மறையாமலே கேட்டான்:

''நீங்க பம்பாய் போயிருக்கீங்களா யமுனா?''

அவள் 'இல்லை' என்று தலையாட்டினாள்.

''போகணும். பிர்லா பிளானட்டோரியம் பார்ப்பதற்காகவே போகணும். சர்க்கஸ் கூடாரம் மாதிரி ஒரு இடத்துல நம்மை உட்காரவச்சு இந்த ஆகாசத்தை அப்படியே கொண்டு காமிக்கிறாங்க. முதலில் லேசான நீலத்தில் ஆரம்பிச்சு அப்புறம் கறுத்த நீலத்துக்கு மாறுகிறது. அதுல நீங்க பார்க்கிற இந்த எல்லா நட்சத்திரமும் வர்றது. சப்தரிஷி மண்டலம்-அதோ அந்த திரீ ஸ்டார்ஸ்-குவியலாய்க் கிடக்கிற இந்த நட்சத்திரங்கள்-வாலோடு சேர்ந்த பட்டம் மாதிரி இருக்கிற இது... எல்லாத்தையும் அழகா டெமான்ஸ்ட்ரேட் பண்றாங்க.

அதுலதான் உங்களோட ஒத்தை நட்சத்திரத்தை வீனஸ்னு சொன்னாங்க. நீங்க அந்த பிளானட்டோரியத்தைப் பார்க்க ணும் யமுனா. ஒருதரம் இதற்காகவே நாம் பாம்பே போயிட்டு வரலாம்...''

அந்த 'நாம்' என்பதைக் கேட்டு அவள் தனக்குள் சிரித்துக் கொண்டாள். எவ்வளவு சீக்கிரம் எவ்வளவு இயல்பாய் ஏற்பட்டுவிட்ட உரிமை இது என்று எண்ணிக் கொண்டாள். உடனே அப்பா ஞாபகம் வந்தது. அவர் போய் வெகு நேரமாகிவிட்டது என்பதும் நினைவுக்கு வந்தது.

''இன்னும் அப்பாவைக் காணோமே... நாம் போய்ப் பார்க்கலாமா...?'' என்று கேட்டாள்.

அவன் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான். பதினொன்றுக்கு மேல் ஆகியிருந்தது. பேரரைக் கூப்பிட்டு பில்லில் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தான். பின் அவளைப் பார்த்து, ''போகலாமா?'' என்று கேட்டான். கார் சாவியை எடுத்துக் கொண்டு எழுந்தான். கூடவே அவளும் எழுந்து கொண்டாள்.

'சிலுசிலு' வென்று காற்று வீசியது. உடம்பு ஒருதரம் நடுங்கிற்று. புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்துக் கொண்டு அவனோடு நடந்தது புது அனுபவமாக இருந்தது. அந்தக் குளிருக்கும் நடுங்காமல்-உடம்பை ஒடுக்கிக் கொள்ளாமல் கம்பீரமாக நடந்த அவனுடைய நடையைப் பார்த்தபோது மறுபடியும் நந்தினியின் ஞாபகம் வந்தது. அந்த முகத்தை நேரில் ஒருதரம் பார்க்க வேண்டும் போல் இருந்தது. குரல் தழைய மெதுவாக ஒருதரம் அவனை நிமிர்ந்து பார்த்துக் கேட்டாள்:

''அம்மாவைப் பார்க்கணும் போல இருக்கு. நான் ஒரு நாள் உங்க வீட்டுக்கு வரலாமா...?''



''இது என்ன கேள்வி யமுனா? எப்போது உங்களுக்கு சௌகரியப்படும்னு சொல்லுங்க. நானே வந்து அழைச்சுண்டு போறேன்...''

''எப்போ என்னை நீங்க 'வாங்க போங்க'ன்னு கூப்பிடறதை நிறுத்தப் போறீங்களோ அப்பதான் சௌகரியப் படப்போறது...''

அவன் அதற்குப் பதில் சொல்லவில்லை. லேசான சிரிப்போடு நடந்தான். இவர்கள் கிளப் கட்டடத்திற்குள் நுழைந்து 'பாரு'க்குப் போனபோது, அப்பா கடைசி ரவுண்ட் விஸ்கியில் இருந்தார். ஏதோ சொல்லிச் சிரித்துக் கொண் டிருந்தார். இவர்களைப் பார்த்ததும், ''வாங்கோ...'' என்றார். யமுனாவைக் கூப்பிட்டு ராமனாதனுக்கு அறிமுகப்படுத் தினார். சுதாகரும் அவரைப் பார்த்து 'குட் ஈவினிங்' சொன்னான்.

''அவங்க ரெண்டு பேரும் தேடிண்டு வந்துட்டாங்க. நீங்க கிளம்புங்க. மீதியை நாளைக்கு ஆபீஸ்ல பேசிக்கலாம்'' என்று ராமனாதன் சொன்னதும், அப்பா 'குட்நைட்' சொல்லிவிட்டுக் கிளம்பினார்.

அந்த இருட்டில் பேச்சு எதுவும் இல்லாமல் நடந்தார்கள். மரத்தடிக்கு வந்தபோது இன்னும் இரண்டு மூன்று கார்கள் மட்டுமே நின்று கொண்டிருந்தன. காரில் ஏறி ஹெட்-லைட்டைப் போட்டபோது 'விருட்'டென்று பூனை ஒன்று ஓடி மறைந்தது. சுதாகர் ஹெட்-லைட்டை அணைத்து பார்க் லைட்டைப் போட்டு, கியரை மாற்றி சத்தமில்லாமல் காரைக் கிளப்பினான்.

# 10

'சூள்'ளென்று ஜன்னல் வழியாக வெயில் உள்ளே அடித்தது. பக்கத்து வீட்டு ரேடியோ மீண்டும் தலைப்புச் செய்திகளைச் சொல்லிக் கொண்டிருந்தது. மணி ஏழரையாகப் போவதை நினைத்துப் பரபரவென்று கட்டிலை விட்டு இறங்கினாள் யமுனா. போர்வையை மடித்துக் கொண்டிருந்த போது, சட்டென்று அன்று ஞாயிற்றுக்கிழமை என்பது ஞாபகத்துக்கு வந்தது. அந்தப் பரபரப்பு கொஞ்சம் அடங்க சற்று நிதானமானாள்.

ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இதற்குள் எண்ணெய் தேய்த்துக் குளித்து விட்டிருப்பாள். தலையை அவிழ்த்து உதறித் தளரப் பின்னிக் கொண்டிருப்பாள். அடுப்பில் குக்கரை வைத்துவிட்டு சுறுசுறுப்பாக ஏதாவது செய்து கொண்டிருப் பாள். ஞாயிற்றுக்கிழமைக்கென்று தனியாய் சின்னச் சின்னதாய் ஏதாவது வேலைகள் காத்துக் கொண்டிருக்கும். சாம்பாருக்கு உரிக்க வெங்காயம்-கஞ்சி போட வாயில் புடவைகள்-மாற்றுவதற்குஜன்னல் கர்ட்டன்கள்- கணக்கு சரி பார்க்க வண்ணான் துணிகள்... ஆனால் இன்று எதுவும் செய்ய முடியாது. எழுந்திருக்கும் போதே நேரமாகிவிட்டது. இன்னும் பால் கூட வாங்கவில்லை. காலி பாட்டில்களை ஏற்றிக் கொண்டு பால் வண்டி போயிருக்கும். பால் பூத்துகூட மூடப்பட்டிருக்கும். 'இப்போது பாலுக்கு என்ன செய்வது?'

படுக்கையைச் சரி பண்ணிவிட்டு வந்தபோது அப்பா சமையல் அறையிலிருந்து வெளியில் வருவதைப் பார்த்தாள்.

''மணி ஏழரையாச்சே...! என்னை எழுப்பக் கூடாதாப்பா? இப்படித் தூங்கியிருக்கேனே...''

''நான் ரெண்டு மூணுதரம் வந்து பார்த்தேம்மா! நீ நன்னா அடிச்சுப் போட்ட மாதிரி தூங்கிண்டிருந்தே; சரி... இன்னிக்கு



ஞாயிற்றுக்கிழமைதானேன்னு பேசாமல் போயிட்டேன். உடம்பு ஏதாவது சரியில்லையாம்மா...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லேப்பா...எப்படி இப்படித் தூங்கினேன்னே தெரியலை. மணி ரொம்ப ஆயிடுத்து. பால் வண்டிகூடப் போயிருக்கும்...''

''பால் வாங்கிண்டு வந்தாச்சும்மா! நான் காபி போட்டு கலந்து சாப்பிட்டுட்டேன். உனக்கு மட்டும் கலந்துக் கோம்மா...''

''நீங்க காபி போட்டேளா? ஏம்பா... என்னை எழுப்பியிருக்கக் கூடாது?''

''அதனால என்னம்மா! நீ போய்ப் பல் தேய்ச்சுட்டு சாப்பிடும்மா...''

அவள் பிரஷில் பேஸ்டைப் போட்டுக் கொண்டு தோட்டத்துக்குப் போனாள். மல்லிகைக் கொடி வெள்ளை யாய்ப் பூத்திருந்தது. பக்கத்தில் செடியே தெரியாமல் நீலமும், ஊதாவுமாய் டிஸம்பர் பூக்கள். இன்னும் கொஞ்சம் நேரம் போனால் அதைப் பறிக்க வேலைக்காரியின் பெண் வரும். தாவணி போட்டுக் கொண்டு துறுதுறுவென்று வாயடிக்கும். மினுமினுக்கிற கறுப்பில் அழகாக இருக்கும். பத்து நிமிஷத்துக்குள் ஒரு கூடைப் பூவையும் பறித்து அடர்த்தியாகக் கட்டிவிடும். 'நீங்க வச்சுக்கோங்கோ...' என்று மரியாதைக்காக நீட்டும். அவள் வேண்டாம் என்று தலையாட்டினதும், பாதியைக் கிள்ளித் தோளில் புரளுகிற மாதிரி வைத்துக் கொண்டு மீதிப் பாதியை எடுத்துக்கொண்டு ஓடும். அப்புறம் பார்த்தால் அந்தச் செடிகள் மூளியாய் நிற்கும். 'எத்தனை அழகாக இருந்தது! பெரிதாய் சிரித்துக் கொண்டு நிற்கிற மாதிரி இருந்தது... அந்தச் சிரிப்பைப் பறித்துக்கொண்டு போக எப்படி மனசு வருகிறது? இதற்கு வாசனை கூட இல்லை; வெறும் அழகு மட்டும்தான்! இந்த அழகைப் பறித்துத் தங்களை

அழகாக்கிக் கொள்ள வேண்டுமென்று எப்படித் தோன்று கிறது...?'

அவள் முகத்தைத் துடைத்துக் கொண்டு உள்ளே வந்தாள். பாலைச் சூடு பண்ணி காபியைக் கலந்து கொண்ட போது எப்படித் தூங்கியிருக்கிறோம் என்பதை மீண்டும் நினைத்துக் கொண்டாள். 'எப்படி வந்தது இந்தத் தூக்கம்? நிச்சிந்தையாய் ஒரு புரளல் இல்லாமல், முனகல் இல்லாமல், கனவுகள் எதுவும் காணாமல்... எவ்வளவு நிம்மதியான தூக்கம்! ஏதோ பாரம் நீங்கின மாதிரி இது என்ன தூக்கம்? உண்மையாகவே ஒரு பாரம் நீங்கித்தான் இருக்கிறதோ? வாழ்க்கையைப் பற்றின பயம் தெளிந்து போயிருக்கிறதோ? புதுசாக ஏதாவது பலம் வந்திருக்கிறதோ...?'

அப்படித்தான் தோன்றியது. இந்தப் பலம்-இந்தத் தெளிவு-இந்த நிம்மதி எல்லாம் தேவையாகத்தான் இருக்கிறது. இந்தத் தேவைதான் வாழ்க்கையின் அடிப்படை. இது ஏன் புரியவில்லை சுபாஷிணிக்கு? புரியவில்லையா... இல்லை, தேவையே இல்லை என்று நினைக்கிறாளா...? அப்படி எப்படி நினைக்க முடியும்? அந்தந்த நிமிஷங்களுக்கு வாழ்ந்துவிட்டுப் போய்விட முடியும்? அனில் சௌத்ரி மாதிரி ஒருவனுடைய அன்பை நிராகரிக்க முடியும்...?

'சுபாஷிணி! சின்னச் சின்ன விஷயங்களைக்கூடத் தெளிவாகப் புரிந்துகொள்கிற உன்னால் இதை எப்படிப் புரிந்து கொள்ள முடியாமல் போயிற்று...?'

அவள் வாசல் வராந்தாவுக்கு வந்தாள். அவளைப் பார்த்ததும் அப்பா தான் படித்துக் கொண்டிருந்த குமுதத்தை அவளிடம் நீட்டினார். பின் ஹிந்துவைப் பிரித்துக் கொண்டார். அவள் கூடை நாற்காலியில் உட்கார்ந்து குமுதத்தைப் புரட்டினபோது வாசலில் கேட் திறக்கப்படுகிற சத்தம் வந்தது. நிமிர்ந்து பார்த்தாள். மணி...பால் பூத்தில் இருக்கிற அந்தப்



பையன் வந்து கொண்டிருந்தான். புன்சிரிப்பைச் சிரித்துக் கொண்டிருந்தான்.

''வாங்கோ...'' என்றாள் யமுனா. அவன் இயல்பாய் வந்து நாற்காலியில் உட்கார்ந்து கொண்டான். மெதுவாக அவளைப் பார்த்து, ''நீங்க இருப்பீங்களோ-இல்லையோன்னு நினைச்சுக்கிட்டே வந்தேன்'' என்றான்.

''நான் ஞாயிற்றுக் கிழமையில் அதிகமாக வெளியில் போறதில்லை. அப்படியே போனாலும் இவ்வளவு காலை யில் போறதில்லை...''

அவன் அந்தச் சிரிப்போடு திரும்பி அப்பாவைப் பார்த்தான்:

''என்ன சார், இன்னிக்குப் பாலுக்கு நீங்க வந்தீங்க...?''

''சும்மாத்தான். சீக்கிரம் முழிச்சுது. பாலாவது வாங்கிண்டு போகலாமேன்னு வந்தேன்.''

''அந்தக் குளிர்ல மேல போர்வைகூட இல்லாமல் வந்தீங்களே சார்...''

''எனக்குக் குளிர் விட்டுப் போச்சுப்பா! ஒண்ணும் தெரியலே...'' என்று சொல்லிச் சிரித்தார் அவர்.

அவன் அதற்கு ஒன்றும் சொல்லவில்லை. அவர் முகத்தையே பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தான்.

அப்பா யமுனாவைப் பார்த்தார். ''காபி ஏதாவது கொடேம்மா...!'' என்றார். யமுனா எழுந்து கொண்டபோது அவன் அவசரமாகத் தடுத்தான்.

''வேணாங்க... இப்பத்தான் டீ குடிச்சுட்டு வரேன். அஞ்சு நிமிஷம்கூட ஆகலை. வேணும்னால் போகும் போது குடிச்சுட்டுப் போறேன்.''

''அப்ப சரி... நீங்க பேசிண்டிருங்க. நான் குளிச்சுட்டு வரேன்'' என்று சொல்லிவிட்டு எழுந்து போனார் அவர். அவர்

போனதும் அவன் யமுனாவைப் பார்த்து ஒரு லேசான சிரிப்போடு பேசத் தொடங்கினான்:

''உடம்புக்கு ஒண்ணுமில்லே. கொஞ்சம் தூங்கிப் போயிட்டேன். ராத்திரி நேரம் கழிச்சுப் படுக்கப் போனது. காலமே விடிஞ்சதே தெரியலே...!''

''ராத்திரி முழுதும் தூங்காமல் எழுதினீங்களா...?''

அவள் சிரித்துக் கொண்டே இல்லை என்று தலை யாட்டினாள். தன்னிடம் பேசுகிற யாரும் எதற்கும் எழுத்தைச் சம்பந்தப்படுத்துவதை நினைத்துக் கொண்டாள்.

''என்ன சிரிக்கிறீங்க... எல்லோரும் ஏன் இப்படி எழுத்தைக் காரணமாக்கிப் பேசறாங்கன்னு சிரிக்கிறீங்களா?''

அவள் ஆச்சரியத்தோடு அவனைப் பார்த்தாள்.

''என்ன பார்க்கறீங்க... எழுத்தாளன் கிட்டே எழுத்தைப் பத்தி-நடிகன்கிட்டே நடிப்பைப் பத்தி-பாட்டுப் பாடறவன் கிட்டே பாட்டைப் பத்தி... என்னை மாதிரி ஒண்ணுமில்லா தவன் கிட்டே எதைப் பத்திங்க பேச முடியும்?'' அவன் குரல் தழைந்தது.

''ஏன் ஒண்ணுமில்லாதவன்னு சொல்லிக்கறீங்க? ஒண்ணுமில்லாமல் யாரும் இருக்கிறதில்லை. எல்லோர் கிட்டேயும் ஏதாவது ஒண்ணு இருக்கத்தான் இருக்கும்!''

''இல்லீங்க...'' என்று சட்டென்று மறுத்தான் அவன். ''என்கிட்டே ஒண்ணுமே இல்லீங்க. படிப்பு அதிகம் இல்லை... பி.யு.சி.யோட நின்னது. இப்போ நானாகச் சம்பாதிச்சுப் படிக்கிறதுதான் இந்த பி.காம்.கூட. இது எப்போ நிக்குமோ தெரியலை. வீட்ல கஷ்டம் வந்தால் என் படிப்பு நின்னுடும். நிலையா ஒரு வேலை கிடைச்சால் வீட்டை யும் சரிக் கட்டிண்டு படிப்பையும் பார்த்துக்கலாம். டெம்ப்ரரியா கிடைக்கிற இந்த மாதிரி வேலையை நம்பித்தான்



குடும்பம் இருக்கு. 'இத்தனை வயிறு பசியாக் கெடக்குது. உனக்கு மட்டும் எதுக்குடா படிப்புன்னு?' அம்மா சண்டைக்கு வரும். யோசித்துப் பார்த்தால் அம்மா சொல்றதும் நியாயமாகத்தான் படுது...''

''வீட்ல நீங்க எத்தனை பேர்?''

''என்னோட சேர்த்து அஞ்சு பசங்க. அப்பா இல்லே. போய் ரெண்டு வருஷமாச்சு...''

''அவர் என்னவாக இருந்தார்?''

''ஒரு ஆட்டோமொபைல் ஷாப்லே மெக்கானிக்கா இருந்தார். இப்போ அம்மா ஒரு ஸ்கூல் ஹாஸ்டல்லே வேலை பார்க்கறாங்க. தங்கச்சி ஒண்ணு ஒரு மார்வாடி வீட்ல குழந்தையைப் பார்த்துக்குது. மீதிப் பேரெல்லாம் சின்னப் பசங்க...'' என்றவன், சட்டென்று விழித்துக் கொண்டான்.

''இத பாருங்க. ஏதோ பேச வந்துட்டு எதையோ பேசிகிட்டுப் போறேன்...''

''இருக்கட்டும். அதனால் என்ன? எல்லாம் தெரிஞ்சுக்க வேண்டியதுதானே...''

''தெரிஞ்சுக்கிட்டுக் கதையா எழுதலாம், இல் லீங்களா...?''

யமுனா சிரித்தாள். அவனும் சிரித்தான். பின் அவளது கதையைப் பற்றி ஏதோ சொல்லிக் கொண்டே போனான். அது தன்னைப் பாதித்த விதத்தைச் சொன்னான். அதில் வருகிறவனைப் போல் தானும் படிக்க நினைத்ததைச் சொன்னான். இயலாமற் போய்க் கடைசியில் வேலையில் சேர்ந்ததைச் சொன்னான். யமுனா ஒன்றும் பேசாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

''என்னங்க அப்படிப் பார்க்கறீங்க? உங்க கதையிலே வர்ற மாதிரித்தாங்க நானும். பெரிசா கனவு எதுவும் காணத்

தெரியாதவன். கண் எதிரில் இருக்கிற அழகை நிமிர்ந்து பார்க்கத் தெரியாதவன்...''

அதற்கும் அவள் ஒன்றும் சொல்லவில்லை.

''ஆனால் உங்க கதையிலேர்ந்து ஒரு விஷயத்தைத் தெரிஞ்சுக்கிட்டேங்க, ஹ்யூமன் ரிலேஷன்ஷிப்பைவிடப் பெரிய விஷயம் எதுவுமில்லை. இதைச் சொல்லணும்னு உங்களுக்கு எப்படித் தோணிச்சுங்க...?''

அவன் அதற்குப் பதிலை எதிர்பார்க்காதவனாகத் தெரிந்தான். ஏதோ யோசிக்கிற மாதிரி இருந்தான். யமுனாவும் மௌனமாக உட்கார்ந்திருந்தாள். அந்த மௌனத்தைக் கலைக்கிற மாதிரி அப்பா லேசாக இருமிக் கொண்டு வந்தார். பளிச்சென்று வெள்ளை வேஷ்டியோடும் முழுக்கை ஷர்ட்டோடும் வந்தார்.

''என்னம்மா இது... காபிகூட கொடுக்காமல் இன்னுமா பேசிண்டிருக்கே? அந்தப் பையன் சாப்பிட்டு விட்டு வந்த டீ எப்போதோ ஜீரணமாகியிருக்குமேம்மா...!''

அவன் அவரைப் பார்த்துச் சிரித்துக் கொண்டே சொன்னான்;

''சாப்பிடறேன் சார்! நீங்க சொல்லாட்டிகூட இப்போ கேட்டு வாங்கிச் சாப்பிடறதாகத்தான் இருந்தேன்!''

காபி குடித்ததும், ''வரட்டுமா...?'' என்று கேட்டுக் கொண்டே எழுந்து நின்றான் அவன். ஓரத்தில் விட்டிருந்த செருப்பைப் போட்டுக் கொண்டு நிதானமாக நடந்தான். கேட்டை நெருங்கினபோது உள்ளே நுழைவதற்காக அந்த வெள்ளை ஓல்க்ஸ் வாகன் தயங்கி நின்றது. அவன் அதற்காக அவசரமாகக் கதவைத் திறந்து விட்டான். காரிலிருந்து சுதாகர் சிரித்துக் கொண்டே அவனைப் பார்த்து 'தாங்க்யூ' சொன்னான்.

# 11

'டி.வி'யில் மெலிதாகச் சிரித்துக் கொண்டிருந்தார் நர்கீஸ். உள்ளே நுழைந்ததும் 'பளிச்'சென்று அந்தச் சிரிப்புத் தான் யமுனாவின் கண்ணில் பட்டது. எந்த பாவனைகளும் இல்லாத சாதாரணச் சிரிப்பாகத் தோன்றியது. அந்த சாதாரணம்தான் நர்கீஸின் மிகப் பெரிய அசாதாரணம் என்று நினைத்துக் கொண்டாள். மெதுவாய் அந்தச் சிரிப்பிலிருந்து பார்வையை விலக்கினபோது சோபாவில் உட்கார்ந்திருந்த அவரும் அவளைப் பார்த்தார். தடித்த கறுப்பு ஃபிரேம் போட்ட மூக்குக் கண்ணாடியும்-வெள்ளை மல் ஜிப்பாவும்-முகத்தில் தெரிந்த கம்பீரமும்-சட்டென்று புரிந்து கொண்டாள் யமுனா. அதே மாதிரி அவரும் அவளைப் புரிந்து கொண்டிருக்க வேண்டும். புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டே எழுந்து போனார். நர்கீஸின் சிரிப்பை நிறுத்திவிட்டு வந்தார். ''ஐயம் ராமனாதன்!'' என்று அப்பாவின் கையைப் பிடித்துக் குலுக்கினார். ''உட்காருங்கோ...'' என்று சோபாவில் உட்கார வைத்தார். பின் சுதாகரைப் பார்த்து,

''அம்மா இப்போதான் குளிக்கப் போனாள். ஒரு நிமிஷம்கூட ஆகியிருக்காது. நீ போய் இவர்கள் வந்திருப்பதைச் சொல்லிவிட்டு வாயேன். சீக்கிரம் குளித்து விட்டு வருவாள்'' என்றார். சுதாகர் எழுந்து போனதும் ஏதோ நினைத்துக் கொண்ட மாதிரி, ''ஜஸ்ட் எ மினிட் ப்ளீஸ்...'' என்று சொல்லிக் கொண்டு அவரும் உள்ளே போனார். ஒரு நிமிஷத்துக்கெல்லாம் ஒரு 'ட்ரே'யில் நாலு ஃபாண்டா பாட்டில்களை வைத்து எடுத்துக் கொண்டு வந்தார். யமுனாவுக்கு எதிரில் உட்கார்ந்து சகஜமாகப் பேச்சை ஆரம்பித்தார். அவரோடு பேசுவது அவளுக்குச் சுலபமாக இருந்தது. தயக்கம் எதுவும் இல்லாமல் இயல்பாக இருந்தது. அப்பாவோடு பேசுகிற மாதிரி இதமாகத் தெரிந்தது. அவரும்

அப்படித்தான் இருந்தார். அவர் யாரோடு பேசினாலும் அப்படித்தான் இருப்பார் என்று தோன்றியது. பேச்சு அப்பாவின் ஆபீஸ் பற்றி ஆரம்பித்து, ஒவ்வொன்றாய்த் தொட்டுத் தொட்டுக் கடைசியில் அவளிடம் வந்து அங்கேயே தங்கியது. லைப்ரரி... புஸ்தகங்கள் என்று பொதுவான பேச்சாகத்தான் ஆரம்பித்தது. ''உங்க லைப்ரரியிலே மெடிக்கல் புக்ஸ் நிறைய இல்லேம்மா! டெக்னிகல் புக்ஸே குறைச்சல் தான்னு நினைக்கிறேன்...'' என்றார் அவர்.

யமுனாவுக்கு அது உண்மைதான் என்று பட்டது.

''உங்களுக்கு இருக்கிற இடவசதிக்கும்-பணவசதிக்கும் இன்னும் எவ்வளவோ புஸ்தகங்கள் வரவழைக்கலாம். எங்க மெடிகல் காலேஜிலே நான் லெக்சர் கொடுத்துவிட்டு எந்த புஸ்தகத்தை ரெஃபர் பண்ணச் சொன்னாலும், உடனே ஸ்டுடெண்ட்ஸ் அது கிடைக்கலேன்னு சொல்றாங்க. அந்த மாதிரி புஸ்தகமெல்லாம் நீங்க வாங்கி வைக்கணும். ஜெனரலா ஃபிக்ஷனுக்குக் கொடுக்கிற இம்பார்ட்டென்ஸை நீங்க டெக்னிகல் புக்ஸுக்குக் கொடுக்கிறதே இல்லை...''

யமுனா ஒரு புன்னகையோடு அவரைப் பார்த்தாள். ''நீங்க சொல்றது உண்மைதான். இதைச் சொன்னால் 'டெக்னிகல் புக்ஸ் மூவ் ஆகிறதே இல்லை'' என்ற பதில் தான் வரும். ஸோ... நீங்களே ஒரு நாள் வந்து எங்க சீஃப் லைப்ரேரியனைப் பார்த்து 'ஸஜஸ்ட்' பண்ணுங்களேன்...''

''வரணும்மா... டயம்தான் கிடைக்கிறதே இல்லை. காலேஜ்-ஹாஸ்பிடல்-கிளினிக் என்று நேரம் சரியாகப் போயிடறது. கொஞ்சம் கிடைக்கிற டயத்துல இங்கே வந்துடறேன்...''-அதை அவர் சிரித்துக் கொண்டே சொன்னார். பின் சிகரெட் பாக்கெட்டை எடுத்து அப்பாவிடம் நீட்டியபடி, ''டு யு மைண்ட் ஸ்மோக்கிங்...?'' என்று யமுனாவைப் பார்த்தார்.



''நோ. நாட் அட் ஆல்...'' என்று யமுனா தலை யாட்டினதும், 'தாங்யு' சொல்லிக் கொண்டே லைட்டரால் அப்பாவின் சிகரெட்டைப் பற்ற வைத்து விட்டு தன்னுடைய தையும் பற்ற வைத்துக் கொண்டார். ஒரு நிமிஷத்துக்குப் பின் சாம்பலை ஆஷ்டிரேயில் தட்டிக் கொண்டே, ''நீ எங்கேம்மா படிச்சே?'' என்று கேட்டார்.

யமுனா காலேஜ் பெயரைச் சொன்னாள். ''என் டாட்டர்கூட அங்கதாம்மா படிச்சா. ஆனால் அவ உன்னைவிட ரொம்ப ஸீனியராக இருப்பாள். கல்யாணமாகி இப்போ ஒரு குழந்தை கூட இருக்கு. நீ என்ன போஸ்ட் கிராஜுவேட்டாம்மா?''

அதற்கு அவள் பதில் சொல்ல ஆரம்பித்தபோது சுதாகர் திரும்பி வந்தான். உடை மாற்றி தலைவாரிக் கொண்டு வந்திருந்தான். அந்த ஆழ்ந்த நீலம் அவனுக்கு அழகாய்ப் பொருந்திப் போனதைக் கவனித்தாள் அவள்.

ஒரு வினாடிக்கெல்லாம் நந்தினி காயாமல் விரித்துப் போட்ட ஈரத்தலையோடு அழகாகச் சிரித்துக் கொண்டே வந்தாள். சற்று முன் 'டிவி'யில் பார்த்த நர்கீஸின் சிரிப்பு யமுனாவின் ஞாபகத்திற்கு வந்தது. அதற்கும் இந்தச் சிரிப்பிற்கும் வித்தியாசமே இல்லாத மாதிரி தோன்றியது. அந்தக் கன்னடப் படத்தில் பார்த்த நந்தினிக்கும்-இந்த நந்தினிக்கும்கூட எந்த வித்தியாசமும் இல்லை என்பது தெரிந்தது. அதே மெலிசான உயரமான உடம்பு. நீளமான பெரிய கண்கள். மனசைத் தொடுகிற பார்வை.

''ஐயம் ஸாரி. வந்து ரொம்ப நேரமாச்சா? நீங்க வரத்துக்குள் குளிச்சுட்டு வந்துடலாம்னு போனேன்'' என்று அப்பாவைப் பார்த்தாள்.

''அதனால் என்ன பரவாயில்லே...''-அப்பா தணிந்த குரலில் மெதுவாகச் சொன்னார்.

''ஏதாவது சாப்பிட்டீங்களா இல்லையா...?''

''ஓ.எஸ். எல்லாம் ஆச்சு...''

சிறிது நேரத்துக்கெல்லாம் அறை கலகலப்பாயிற்று. நந்தினி இருக்கிற இடமெல்லாம் இந்தக் கலகலப்பும் சிரிப்பும் இருக்கும் போலிருந்தது. இருட்டே தெரியாமல் நல்ல வெளிச்சமாக அடித்துக் கொண்டிருக்கும். எந்தப் புழுக்கமும் இல்லாமல் காற்று வீசிக் கொண்டிக்கும். 'இந்த வெளிச் சத்துக்கும் காற்றுக்கும் பின்னால் அத்தனை இறுக்கம் இருக்கிறதா, என்ன? இந்த அழகுக்குக்கூட ஹிம்ஸையும் ரணமும் ஏற்பட முடியுமா? ஒருவேளை இந்த மாதிரி அழகுக்குத்தான் எல்லாம் ஏற்படுமோ...?'

''என்ன யமுனா அப்படிப் பார்த்துண்டு உட்கார்ந் திருக்கே? என்ன யோசனை?''-நந்தினி அவளைத் திரும்பிப் பார்த்துக் கேட்டாள்.

''ஒண்ணுமில்லே...'' என்று லேசான சிரிப்பாகச் சிரித்தாள் யமுனா.

''வரயா.. உள்ளே போய் சாப்பிட எல்லாம் எடுத்து வைத்து ரெடி பண்ணலாம்...?''

''ஓ.எஸ்'' என்று உற்சாகமாக எழுந்தாள் அவள்.

போகும்போது ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டே நடந்தாள். எல்லாவற்றிலும் பணத்தின் பளபளப்புத் தெரிந்தது. உறுத்துகிற பளபளப்பாக இல்லாமல் இதமாக இருந்தது. தேர்ச்சி பெற்ற ஒரு ரசனையின் கை தெரிந்தது. அது நந்தினியுடையதாகத் தான் இருக்க வேண்டுமென்று நினைத்துக் கொண்டாள். சமையலறைக்குப் போனதும் நந்தினி காஸ் அடுப்பைப் பற்ற வைத்தாள். சாம்பாரையும்-ரஸத்தையும் சூடு பண்ணிக் கொண்டே பேசினாள்...



''இன்னிக்கு சமையற்கார மாமி வரலை. மாமி மட்டுமில்லை; எல்லா வேலைக்காரங்களும் வரலை. மாசத்துல கடைசி ஞாயிற்றுக்கிழமை எல்லாருக்கும் லீவு கொடுத்துடறது. நானும் எந்த ஷூட்டிங்குக்கும் போற தில்லை. அந்த ஒரு நாள் முழுமையும் எனக்குன்னு ஒதுக்கி வச்சுப்பேன். எல்லா வேலைகளையும் கவனிப்பேன். டிபன், காபி-சமையல் எல்லாம் என்கைப் பாடுதான். ஒவ்வொண்ணும் பாடாகத்தான் படும்...''

யமுனா மெதுவாகப் புன்னகை செய்தாள்.

''என்ன சிரிக்கிறே... உனக்கு சமைக்கத் தெரியுமா?''

''ம். சுமாராகத் தெரியும்.''

''நன்றாகவே தெரியணும் யமுனா! எல்லாம் தெரிஞ்சுக்கணும். நாம் செய்யாமல் போகலாம். ஆனாலும் தெரிஞ்சிருக்கணும்...''

அவள் சாம்பாரையும், ரஸத்தையும் இறக்கி வைத்து விட்டு எண்ணெயில் அப்பளம் பொறிக்க ஆரம்பித்தாள். பேச்சு தடைப்படாமல் வந்து கொண்டிருந்தது.

''நான் ஒவ்வொருத்தருக்காக ஒவ்வொருத்தருக்காக ஒவ்வொண்ணாய்க் கத்துண்டேன் யமுனா. புளியோதரை கலக்க-ஆவக்காய் ஊறுகாய் போட-சக்கைப் பிரதமன் பண்ண-ஐஸ்கிரீம் செய்ய-இப்போ டாக்டருக்கு கேக்-புட்டிங் எல்லாம் பிடிக்கும்னு அதையும் பண்ணக் கத்துண்டேன். நான் கத்துக்காமல் கடைசியா பாக்கி நின்னது இதுதான். அதையும் கத்துண்டாச்சு. இனிமேல் நான் புதுசாகக் கத்துக்க எதுவும் இல்லை. எந்தப் புது மனுஷனும் வரபோறதில்லை...''

சட்டென்று நிமிர்ந்து அவளைப் பார்த்தாள் யமுனா.

''ஆமாம் யமுனா! ஹி ஈஸ் மை லாஸ்ட் மேன், அண்ட் மை மேன். இதைக் கண்டுபிடிக்கத்தான் அலையாக

அலைஞ்சேன். இப்போ எந்த அலைச்சலும் இல்லாமல் நிம்மதியாக சந்தோஷமாக இருக்கேன்...''

அவளை இமைக்காமல் பார்த்துக் கொண்டே நின்றாள் யமுனா.

''என்ன பார்க்கறே...? சுதாகர் உன்கிட்டே எல்லாம் சொன்னதாகச் சொன்னான். நேத்து இந்தக் கல்யாணப் பேச்சு வந்தபோதுதான் ஐ ஃபெல்ட் ஐயம் எ மதர். அதிலும் சுதாகர் மாதிரி ஒருவனுக்கு அம்மாவாக இருக்கிறதுக்கு நிச்சயமாகப் பெருமைப்படணும். என்னை மதிச்சு-என்கிட்டே விஷயத்தைச் சொல்லி-இந்தப் பொறுப்பை அவன் ஒப்படைச்ச போது, நான் மனசுக்குள் அதிர்ந்து போயிட்டேன். அவனுக்காகன்னு-அவனுக்காக மட்டுமேன்னு ஏதாவது செய்யணும்னு தோணித்து. ஆனால் என்ன செய்யறதுன்னு புரியலை. இந்தக் கல்யாணத்தைத் தவிர என்னால் எதுவும் செய்ய முடியாது. இதனால்தான் உன்னை உடனே அழைச்சுண்டு வரச் சொன்னேன். நீ அவனை சந்தோஷமாக வச்சுக்கணும் யமுனா. அந்த மனசு சிணுங்கிப் போகாமல் பார்த்துக்கணும். ஒரு குடும்பத்தை ஏற்று நடத்தறதுங்கறது சாதாரண விஷயமில்லே. அது ரொம்பப் பெரிய விஷயம். ஒரு வேளை எனக்குக் கிடைக்காமற்போனதால் பெரிசாகத் தெரியறதோ என்னவோ...?

''எதுவானாலும் உனக்கு ஒண்ணு சொல்லணும்னு தோணறது. அதை மட்டும் சொன்னால் போதும்னு நினைக்கறேன். ஒருத்தனைக் கல்யாணம் பண்ணிண்டு அவனை சந்தோஷப்படுத்தித் தானும் சந்தோஷமாக வாழறதுங்கறது இருக்கே... தட் ஈஸ் ஸம்திங் கிரேட். அதை நான் இப்போது தான் புரிஞ்சுண்டேன். அதுவும் டாக்டரால் தான் புரிஞ்சுண்டேன். சுதாகரும் டாக்டர் மாதிரி தான்! அமைதியானவன். யாரையும் கஷ்டப்படுத்தத் தெரியாதவன். அதிர்ந்து ஒரு



வார்த்தைகூடப் பேசாதவன். அவன் உன்னை சந்தோஷமாக வச்சுப்பான். அந்த மாதிரி உயர்ந்த மனசெல்லாம் யாரையும் சந்தோஷமாக வச்சுக்கும். அந்த உயரத்தைப் புரிஞ்சுண்டு நீயும் சந்தோஷமாக இருந்து அவனையும் சந்தோஷப்படுத்தணும். செய்வியா யமுனா?''

அவள் 'பரபர'வென்று வேலை செய்து கொண்டே நடுவில் யமுனாவையும் பார்த்தபடி பேசினாள். அவியல், கூட்டு, கீரை என்று ஒவ்வொன்றாக சாப்பாட்டு மேஜைக்குப் போயிற்று. வெள்ளித் தட்டும் தம்ளர்களும் எடுத்து வைக்கப்பட்டது. ஒரு பெரிய ஜக்கில் ஐஸ் வாட்டர் நிரம்பி நின்றது. யமுனா அவள் வேலை செய்கிற அழகையும், பேசுகிற அழகையும் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றாள்.

''என்ன யமுனா பேச்சைக் காணோம்? நான் தப்பாக ஏதாவது சொல்லிவிட்டேனா என்ன...?''

''அதெல்லாம் ஒண்ணுமில்லே. நீங்க பேசின அழகைப் பார்த்துப் பிரமிச்சுப் போய் நின்னுட்டேன்...''

''அப்படின்னா இதையும் ஏதாவது கதையில் எழுதிடுவேன்னு சொல்லு...!''

யமுனா சிரித்தாள். வெகு நாளைக்குப் பின் மனசு விட்டு சந்தோஷமாகச் சிரிப்பதை நினைத்துக் கொண்டாள். நந்தினி சிரித்துக் கொண்டே ஈரக் கைகளைச் சின்ன டவலில் துடைத்துக் கொண்டாள். பின்,

''வா... போய் அவர்களைச் சாப்பிடக் கூப்பிடலாம்'' என்றாள்.

ஹாலுக்கு நடந்து போனபோது அமைதியாய்-சந்தோஷமாய்-எந்த பாரமும் இல்லாமல் தெளிவாகக் கிடந்தது மனசு.

ஏதாவது காரணம் இருக்க வேண்டுமென்று தான் நினைப்பதைக்கூடச் சொன்னாள். அதைக் கேட்டு சுதாகர் ஒரு தரம் சிரித்தான். 'நான் நினைத்ததற்கு மேல் நீ புத்திசாலி' என்கிற மாதிரி இருந்தது அந்தச் சிரிப்பு.

அதனை மேலும் சுதாகருக்கு வலியுறுத்துவது போல மறுநாள் பகலில் நடந்தது மற்றொரு நிகழ்ச்சி... அதனை யமுனாவே அவனிடம் சொல்லியிருந்தாள்...

மறுநாள் லஞ்ச் நேரத்திற்கு மறுபடியும் தயா வந்தான். ''இந்த புஸ்தகத்தைக் கொடுத்து விட்டுப் போக வந்தேன்'' என்று ஏதோ ஒரு புஸ்தகத்தை நீட்டினான். பின் மெதுவாக, ''மிஸ்டர் சுதாகர் வரலே?'' என்று கேட்டான். யமுனா சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். ஒரு நிமிஷம் பதில் சொல்லாமல் இருந்தாள். பின் எதையோ முடிவு பண்ணின மாதிரி பேச்சைத் தொடங்கினாள்,

''இல்லே... அவர் சாயந்திரமாகத்தான் வருவார்.''

''ஓஹோ... ஹி ஸீம்ஸ்டு பி எ நைஸ் பர்ஸன்.''

''ஹி ஈஸ்!'' என்று அழுத்தினாள்.

''ஐ ஸி...'' என்று கொஞ்சம் தயங்கிப் பின் கேட்டான், ''ஈஸ் ஹி ரிலேடட் டு யு...?''

''நோ.. ஒய்...?''

''இல்லே. சும்மாத்தான் கேட்டேன்.''

''பட், இன்னும் கொஞ்ச நாள்லே ரிலேடிவ்வாகப் போகிறவர். ஐ'ம் கோயிங் டு மேரி ஹிம்...''

''ம்... ஹாம்!'' -அப்புறம் அவன் பேசவில்லை. ஒரு நிமிஷத்துக்கெல்லாம் எழுந்து கொண்டான். ''ரைட்டோ'' என்று சொல்லிக் கொண்டான். 'விருட்'டென்று நடந்து வெளியில் போனான். அதன்பின் அவன் வரவில்லை. வெகு நாட்களாக வரவே இல்லை.



அந்தப் புஸ்தகத்தில் வந்த ஒரு கேரக்டர்தான் சுதாகருக்கு தயாவை ஞாபகப்படுத்தியது. கூடவே யமுனா சொன்ன ஒவ்வொன்றும் நினைவுக்கு வந்தது. ''புவர் பாய்!'' என்று சொல்லிக் கொண்டான். 'இவர்களெல்லாம் ஏன் எதையோ எதிர்பார்த்து எல்லாரிடமும் பழகுகிறார்கள்?' என்று நினைத்துக் கொண்டான். மறுபடியும் கவனம் புஸ்தகத்திற்குத் திரும்பினபோது, ''ஹலோ...'' என்ற குரல் கேட்டது. திரும்பிப் பார்த்தான். பளிச்சென்று சிரித்துக் கொண்டு சுபாஷிணி நின்றிருந்தாள். கூடவே யமுனாவும் இருந்தாள். பதிலுக்கு 'ஹலோ' சொல்லிக் கொண்டே காரைவிட்டு இறங்கினான் சுதாகர்.

''ஏன், இப்படிக் கார்ல உட்கார்ந்துண்டிருக்கணும்... உள்ளே வந்திருக்கலாமே...?''

''இல்லே. இங்கே உட்கார்ந்தால் கொஞ்ச நேரம் படிக்கலாம்னு தோணித்து.''

''ஸோ.. எங்க லைப்ரரிக்குள்ள வந்து படிக்கிறதை விட வெளியிலேயே நிறையப் படிக்கலாம்னு சொல்லுங்க?''

''நோ. நோ... நான் அப்படிச் சொல்லலே. எனக்கு இங்கேயே வசதியா படிக்க முடியறதுன்னுதான் சொல்ல வந்தேன்.''

''அது சரி. உள்ளே வந்தால் டிஸ்ட்ராக்ஷனாகத்தான் இருக்கும்! யமுனா இருக்கா இல்லே?'' என்றாள் சுபாஷிணி.

பதில் சொல்லாமல் சிரித்தான் அவன். பின், ''அனில் சௌத்ரி வரலே...?'' என்று கேட்டான்

''இல்லே. ஹி ஈஸ் நாட் இன் ஸ்டேஷன். டேராடூனுக்குப் போயிருக்கார்... ஏதோ ஸீனரி பார்த்துப் பெயிண்ட் பண்ணணுமாம்!''

''ஐ ஸி... அப்படின்னா இஃப் யு டோண்ட் மைண்ட் நீங்களும் எங்ககூட வாங்களேன்...!''

''நீங்க எங்கே போறீங்க...?'' என்று தயங்கினாள் சுபாஷிணி.

''எங்கே போனால் என்ன சுபாஷிணி? நீங்களும்தான் வாங்களேன்...'' என்று யமுனாவும் கூப்பிட்டாள்.

''இல்லே யமுனா? எனக்கு ராமகிருஷ்ணமடம் வரை போகணும். அந்த லைப்ரரியிலிருந்து புஸ்தகம் ஒண்ணு கொண்டு வந்தேன். திருப்பிக் கொடுக்கணும்...''

''ஸோ... உங்க லைப்ரரியில் இருக்கிற புஸ்தகத்தைவிட வெளியில் படிக்க நிறையப் புஸ்தகம் இருக்குன்னு சொல்லுங்க...''

-சுதாகரின் அந்த 'ஹ்யூமரை'ப் புரிந்து கொண்டு பெரிதாய்ச் சிரித்தாள் அவள். சிரிப்பு அடக்கினதும் மெதுவாகச் சொன்னாள்:

''புஸ்தகத்துக்காக மட்டும் நான் அங்கே போறதில்லை மிஸ்டர் சுதாகர்! முக்கியமா அந்த இடத்துக்காகப் போறேன். மனுஷர்களுக்காகப் போறேன். அங்கே போனால் மனசின் பாரமெல்லாம் குறைஞ்சு லேசாகிறது. எல்லாத்தையும் மறந்துட்டு நிம்மதியா இருக்க முடியறது. நீங்க எப்போவாவது போயிருக்கீங்களா, மிஸ்டர் சுதாகர்...?''

'இல்லை' என்று தலையாட்டினான் அவன்.

''போகணும்... ஒரு தரமாவது போகணும். இப்போ உங்களுக்கு முக்கியமான புரோகிராம் எதுவும் இல்லேன்னா என்கூட வாங்களேன்! ஆறேகால் ஆறரைக்கெல்லாம் ஆரத்தி நடக்கும். அதைப் பார்க்கணும். அந்த நிசப்தத்தில் ஆர்மோனியத்தை வச்சுண்டு அவங்க பாடற அந்தப் பாட்டைக் கேக்கணும்!''

''அப்படின்னா போகலாமா யமுனா?'' -சுதாகர் கேட்டதும் தலையாட்டினாள் யமுனா.



காரில் போய்க் கொண்டிருந்தபோது சுபாஷிணி பேலூர் மடத்தைப் பற்றிச் சொன்னாள். அனில் சௌத்ரியும்-அவளும் அங்கு போய் உட்கார்ந்து அலம்பி அலம்பி கங்கை போகிற அழகை மணிக்கணக்கில் பார்த்துக் கொண்டிருந்ததைச் சொன்னாள். மெட்றாஸ் வந்தபின் வாரத்தில் நாலு நாளாவது இந்த மடத்துக்குத் தவறாமல் போவதைச் சொன்னாள்.

அவர்கள் போனபோது ஆரத்தி முடிந்து விட்டிருந்தது. வயதில் சின்னவராய் இருந்த ஸ்வாமிஜி ஒருவர் வெள்ளை உடையோடு சன்னமான குரலில் விவேகானந்தரைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தார். ராமகிருஷ்ண பரமஹம்சரின் படத்தைச் சுற்றித் தரையில் வரிசையாய் அடுக்கு செம்பருத்தியும்- பன்னீர்ப் பூவும் வைக்கப்பட்டிருந்தது. அறை அமைதியாய் இருந்தது. அந்த அமைதி மனசுக்கும் வந்தது. அந்த நிசப்தத்துக்கும்-அதிராமல்-இறையாமல் பாடுகிற பாட்டுக்கும் இடையில் மிதந்து போகிற மாதிரி இருந்தது. பாட்டு முடிந்ததும் சட்டென்று கீழே இறங்கி வந்தாற்போல் தோன்றியது.

பிரார்த்தனை அறையைவிட்டு வெளியில் வந்ததும் கீழே சிமெண்ட் தரையில் உட்கார்ந்திருந்த சுவாமிஜியைப் பார்த்துக் கை கூப்பினாள் சுபாஷிணி. அந்தக் காவி உடையின் மேல் ட்யூப் லைட் வெளிச்சம் பட்டதில் அது கம்பீரமாய் நெருப்பு எரிகிற மாதிரி தெரிந்தது. சுபாஷிணி கை கூப்பினதும் பதிலுக்கு ஸ்வாமிஜியும் கை கூப்பினார். பெங்காலியில் ஏதோ கேட்டார். சுபாஷிணியும் பதிலுக்குப் பெங்காலியிலேயே பதில் சொன்னாள். பேச்சில் அனில் சௌத்ரியின் பெயர் அடிபடவே, அவனைப் பற்றித்தான் ஏதோ கேட்கிறார் என்று புரிந்து கொண்டார்கள் யமுனாவும்-சுதாகரும். சுபாஷிணி அவர்களை அறிமுகப்படுத்தினாள். ஸ்வாமிஜி அதே சிரிப்போடு அவர்களிடமும் மெலிசான குரலில் விசாரித்தார்.

''ப்ளெஸ் தெம் ஸ்வாமிஜி! தே ஆர் கோயிங் டு மேரி'' என்று சொன்னதும், அவர், 'பெஸ்ட் ஆஃப் லக்' சொன்னார்.

பின் ஒரு நிமிஷம் தயங்கி, அவரிடம் மெதுவாக நிதானமாகச் சொன்னாள் சுபாஷிணி.

''நீங்க என்னையும் ப்ளெஸ் பண்ணணும். ஐ ஹேவ் டிஸைடட் டு லிவ் வித் அனில் சௌத்ரி. இதை முத முதல்ல உங்ககிட்ட சொல்லணும்னுதான் முக்கியமா இன்னிக்கு இங்கே வந்தேன்...''

''ஐ ம் வெரி ஹேப்பி மை சைல்ட்! யு பீ ஹேப்பி. அண்ட் மேக் அனில் ஆல்ஸோ ஹேப்பி...''-ஸ்வாமிஜி சிரிப்பு மாறாமல் அதே நிதானத்தோடு பதில் சொன்னார்.

மடத்தை விட்டு வந்ததும் யமுனா சட்டென்று சுபாஷிணியின் கையைப் பற்றிக் கொண்டாள். சந்தோஷமாகச் சிரித்துக் கொண்டே, 'கன்கிராஜுலேஷன்ஸ்' சொன்னாள். ஒன்றும் சொல்லாமல் மென்மையாகச் சிரித்தாள் சுபாஷிணி. அந்தச் சிரிப்பில் புதுசாய் ஒரு தெளிவிருக்கிற மாதிரி பட்டது யமுனாவிற்கு.

## 13

''**ய**முனாம்மா, உங்களைத் தேடிக்கிட்டு யாரோ வந்திருக்காங்க.''

ரிசர்வ் பண்ணின புஸ்தகங்களில் எதையோ தேடிக் கொண்டிருந்த யமுனா திரும்பிப் பார்த்தாள்.

''யாரு தணிகாசலம்?''

''தெரியலீங்க. யாரோ சின்னப் பொண்ணுங்க. இருபது இருபத்தஞ்சி வயது இருக்கலாமுங்க.''

''பேரு ஏதும் சொன்னாங்களா?''

''இல்லீங்க.''



''சரி. உள்ளே வரச் சொல்லு, தணிகாசலம்.''

''சொன்னேங்க. ஆனா அது வர மாட்டேங்குது. உங்களை வெளியில் இட்டாறச் சொல்லுது.''

யமுனா ஒரு நிமிஷம் யோசித்தாள். யார் என்பது புரியவில்லை. அதனால், ''இதோ வரேன்னு சொல்லு'' என்று சொல்லியனுப்பினாள். பின் டைப் அடித்துக் கொண்டிருந்த சுபாஷிணியிடம் சொல்லிக் கொண்டு வராந்தாவுக்கு வந்தாள். அங்கு டோக்கன் கொடுத்துக் கொண்டிருந்த ஏழுமலையைத் தவிர, வேறு யாருமில்லை. வெளிக்கதவைத் தள்ளிக் கொண்டு முதல் படியில் கால் வைத்தபோது நடை சட்டென்று நின்றது. கண் அகன்றது. மனசுக்குள் அதிர்ச்சியாய், ஆச்சரியமாய், பயமாய் ஏதோ ஒன்று எட்டிப் பார்த்தது.

ஜானகி!

அவள் கொஞ்சம்கூட எதிர்பார்க்காத ஜானகி. மறு படியும் பார்ப்போம் என்ற நம்பிக்கைகூட இல்லாத ஜானகி. 'ஜானகிதானா இவள்? அந்த ஜானகியா...? என்ன ஆயிற்று இவளுக்கு? ஏன் இப்படி வந்து நிற்கிறாள்? இத்தனை நாள் எங்கே இருந்தாள்- மெட்ராஸிலா? மெட்ராஸில் இருந்து கொண்டா ஒருதரம் கூட வந்து பார்க்காமல் இருந் திருக்கிறாள்?'

''என்ன யமுனா, பேசாமல் இருக்கே? பேசத் தோணலியா? இல்லே, பேசவே பிடிக்கலையா?'' அவள் குரலைக் கேட்டதும் சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள். அந்த முகத்தையும் கண்களையும்-அதில் தெரிந்த சோகத்தையும் பார்த்த போது தொண்டையை அடைத்தது. வார்த்தை வராமல் குரல் இறுகிற்று.

''என்ன ஜானகி இப்படிப் பேசறே?'' என்று மட்டும் கேட்டாள். அந்தக் கேள்வியிலேயே கண் கலங்கிப் போயிற்று. அதைப் பார்த்துக் கொண்டிருந்த ஜானகியின் கண்களிலும் நீர்

கட்டி நின்றது. உதட்டைக் கடித்துத் தன்னைச் சமாளித்துக் கொள்ளப் பார்த்தாள். முடியாமற் போகவே தலையைக் குனிந்து கொண்டாள். குரல்மட்டும் லேசாக கரகரவென்று வந்தது;

''இல்லே யமுனா... பேசப் பிடிக்கல்லேன்னாலும் தப்பு ஒண்ணுமில்லே. பார்க்கப் போனால் நீ பேசாமல் இருக்கிறது தான் நியாயம். அதுதான் சரி. அதையெல்லாம் எதிர்பார்த் துண்டுதான் நானும் இங்கே வந்திருக்கேன். என்ன பேசி னாலும் கேட்டுக்கறதுங்கற முடிவோட வந்திருக்கேன். இனிமேல் எனக்கு மதிப்பு-மரியாதை-கௌரவம் எல்லாம் எதுக்கு யமுனா?''

'மனசை உலுக்குகிற மாதிரி என்ன கேள்வி இது? இவள் ஏன் இப்படி விரக்தியாய் எல்லாம் வெறுத்துப் போன மாதிரி பேசுகிறாள்?'

''என்ன ஜானகி இது? திரும்பத் திரும்ப இப்படியே பேசிண்டிருக்கே?''

''இப்படிப் பேசாமல் வேற எப்படிப் பேச முடியும் சொல்லு? சந்தோஷமா வந்து பார்த்து சிரிச்சுப் பேசிட்டுப் போகும்படியான காரியத்தையா நான் செஞ்சிருக்கேன்...?''

யமுனா அதற்குப் பதில் சொல்லவில்லை. சொல்ல முடியவில்லை. ஒரு வினாடி மௌனமாக இருந்தாள். பின்,

''தனியாகவா வந்திருக்கே?'' என்று கேட்டாள்.

''ஆமாம்.''

''கூட யாரும் வரல்லே..?''

''இல்லே... உன்கிட்டே பேசணும்னு தயங்கித் தயங்கி மூணு நாளா யோசிச்சுக் கடைசியிலே இன்னிக்குத் துணிஞ்சு வந்துட்டேன். இப்ப உனக்கு நேரமிருக்குமா யமுனா? ஒரு அரை மணி நேர அவகாசம் கிடைச்சால் போறும்...!''



''அரை மணி என்ன...? அரை நாள் லீவே வாங்கிண்டு வந்துடறேன். கொஞ்சம் இருக்கிறயா?''

ஜானகி தலையாட்டினதும் அவள் உள்ளே போனாள். ஒரு நிமிஷத்துக்கெல்லாம் திரும்பி வந்தாள். ''வா போகலாம்'' என்று அழைத்துக் கொண்டு வெளியில் வந்தாள். கேட்டைத் தாண்டினதும், ''வீட்டுக்குப் போகலாமா...?'' என்று கேட்டாள். அதைக் கேட்டதும் ஜானகி சட்டென்று நின்றாள்.

''இல்லே... இப்ப வேணாம். வேற எங்கேயாவது உட்கார்ந்து பேசலாமே?''

''அப்படின்னா 'டிரைவ்-இன்' போகலாமா?'' அவள் தலையாட்டினாள். 'டிரைவ் இன்'னுக்குள் நுழைந்து ஒரு மூலையில் காலியாகக் கிடந்த மேஜையை நோக்கிப் போய் உட்கார்ந்து கொண்டார்கள். அந்த நேரத்தில் கூட்டம் இல்லை. ஓரிரண்டு மேஜைகளைத் தவிர எல்லாம் காலியாகக் கிடந்தன. அதிகச் சத்தமும், இரைச்சலும் இல்லாமல் அமைதியாய் இருந்தது. 'ஹாண்ட்-பேக்'கிலிருந்து கர்சீப்பை எடுத்து முகத்தைத் துடைத்துக் கொண்ட யமுனா, ஜானகியைப் பார்த்து, ''என்ன சாப்பிடறே?'' என்று கேட்டாள். வெறுமை யுடன் எங்கோ பார்த்துக் கொண்டிருந்த அவள், ''ஏதோ ஒண்ணு!'' என்று பதில் சொன்னாள். ஓர் அசதியும் சலிப்பும் தெரிந்தது. முகம் வாடிக் களைத்துப் போயிருந்தது. உடம்புகூட இளைத்து, நிறம், மாறி, கண்ணுக்கடியில் கறுமை படர்ந்து... நாள் கணக்கில் சாப்பிடாத மாதிரி, தூங்காத மாதிரி, ஜுரத்தில் படுத்து எழுந்த மாதிரி... பழைய ஜானகி இல்லை இவள். ரொம்பவும் கஷ்டப்பட்டு வந்திருக்கிற ஜானகி. நிறைய அடிபட்டு ஹிம்ஸைப்பட்டு மனசும் உடம்பும் மரத்துப் போய் வந்திருக்கிறவள். இவளிடம் ஜாக்கிரதையாகப் பேச வேண்டும். அன்பாக நிதானமாக-'உன்னிடம் எனக்கு எந்த வருத்தமும் எந்தக் கோபமும் இல்லை' என்பதைக் காட்டுகிற

விதத்தில்... என்ன பேச வேண்டும்-எப்படிப் பேச வேண்டும் என்பதை மனசுக்குள் தீர்மானித்துக் கொண்டிருந்த போது, இரண்டு டம்ளர் ஐஸ் வாட்டரோடு சர்வர் வந்தார். யமுனா தோசையும், காபியும் ஆர்டர் பண்ணினாள். பின், அவளை நிமிர்ந்து பார்த்து மிகவும் தணிந்த குரலில், மனசைத் தொடுகிற மாதிரி, ''சொல்லு ஜானகி...'' என்றாள்.

அந்தக் குரலும் பார்வையும் ஜானகியைத் தொட்டிருக்க வேண்டும். ஒரு சின்னப் பெருமூச்சோடு மெதுவாகத் தயங்கித் தயங்கிப் பேச ஆரம்பித்தாள்:

''என்ன சொல்றது யமுனா? எதைச் சொல்றது, எதை விடறது? எல்லாத்தையும் சொல்ல முடியுமா யமுனா...? சொன்னால்தான் உன்னால தாங்கிக்க முடியுமா? நீ கதை எழுதறவள்; ஓரளவு கோடி காட்டினால் போதும், முழுசையும் புரிஞ்சுக்க முடியும்!''

அவளைக் கொஞ்சம் ஆச்சரியமாகப் பார்த்தாள் யமுனா.

''நான் கதை எழுதறதெல்லாம் உனக்குத் தெரியுமா?''

''ஏன் தெரியாது? உன்னோட முதல் கதை-ஸாரி, என்னோட கதைன்னா அது-அதைப் படிச்சேன். அதுல வந்திருந்த உன் போட்டோவையும் பார்த்தேன். என்மேல் உனக்கு எவ்வளவு கோபங்கிறதையும் புரிஞ்சுண்டேன்... உன்னை முழுசாப் புரிஞ்சுக்க முடியறது.''

''இல்லே ஜானகி, இப்ப எனக்கு எந்தக் கோபமும் இல்லே. முதல்லதான் ரொம்பக் குழந்தைத்தனமா ஒரு கோபமும் வருத்தமும் வந்தது. இப்போ எதுவும் இல்லே. என்னால இப்போ உன் செய்கையை நியாயப்படுத்திப் பார்க்க முடியறது. அப்ப எனக்கு அந்த அளவு யோசிக்கிற சக்தியும், மெச்சூரிட்டியும் இல்லே. அப்போகூட நீ அப்பாவை ஏமாத்திட்டுப் போன கோவம்தானே தவிர, வேற எந்தக் கோவமும் இல்லே...''



அதைக் கேட்டு ஆழமாய் ஒரு பெருமூச்சு விட்டாள், ஜானகி. ''நான் அப்பாவையும் உன்னையும் ஏமாத்திட்டுப் போனேன்; அவன் என்னை ஏமாத்திட்டுப் போயிட்டான். பாஷை தெரியாத ஊர்ல-உதவிக்குன்னு யாருமில்லாத இடத்துல-கைல ஒரு பைஸாகூட இல்லாத நிலைமையிலே விட்டுட்டுப் போயிட்டான்...''

சட்டென்று அவள் முகத்தைப் பார்த்தாள் யமுனா. கண்களைப் பார்த்தாள். அதில் அழுகை இல்லை. சோகம் எதுவும் இல்லை. பாலைவனத்தைப் பார்க்கிற மாதிரி ஒரு வறட்சி தெரிந்தது. மனத்தின் பசுமை எல்லாம் எரிந்து போயிருப்பது தெரிந்தது. எந்தக் குளிர்ச்சியுமில்லாமல் அடங்கிப் போயிருப்பது தெரிந்தது. எல்லாக் கஷ்டங்களையும்- எல்லாக் கசப்புகளையும்- அனுபவித்து விட்ட அசதி தெரிந்தது. உள்ளுக்குள்ளேயே இறுகிப் போய்விட்ட நிதானம் தெரிந்தது. அமைதி தெரிந்தது. அதுதான் யமுனாவைக் கஷ்டப்படுத்தியது. அந்த இறுக்கமும் அமைதியும் இல்லாமல் அவள் அழுது ஓய்ந்திருந்தால் கூடத் தேவலாம்போல் தோன்றியது. பிடிவாதமாய்த் தன்னைப் போட்டு அவள் மௌனமாக வருத்திக் கொண்டிருப்பதைத் தளர்த்திக் கொஞ்சம் லேசாக்க வேண்டுமென்று நினைத்தாள். மெதுவாக, ''அவன் யாருன்னு நான் தெரிஞ்சுக்கலாமா ஜானகி...?'' என்று கேட்டாள்.

''யாரோ ஒரு அயோக்கியன், போயேன்...!'' என்று சலிப்பான பதிலாக வந்தது.

''அதுக்கில்லே...? ஏதாவது செய்ய முடியுமான்னு பார்க்கலாம்னு தான் கேட்டேன்...''

''இனிமேல என்ன செய்ய முடியும்? இத்தனைக்கும் மேல எது செஞ்சா நன்னா இருக்கும்?'' என்றாள் ஜானகி விரக்தியுடன்.

''இத்தனைக்கும் மேலேன்னு சொல்றியே... அப்படி என்ன நடந்துடுத்து? மனசை விட்டுக் கொஞ்சம் விவரமாகத்தான் சொல்லேன். உள்ளுக்குள்ளேயே வச்சுண்டு ஹிம்ஸைப்பட்டுண்டிருந்தால் எப்படி ஜானகி? எத்தனை நாளைக்குத்தான் அப்படியே இருக்க முடியும்?'' என்றாள் யமுனா.

''நான் உயிரோட இருக்கிற வரைக்கும் அப்படித்தான் இருந்தாகணும். வேற வழி இல்லே. உனக்கு எதுவும் தெரிய வேணாம். உனக்கு மட்டுமில்லே... யாருக்குமே தெரிய வேணாம். நானேகூட மறுபடியும் அதையெல்லாம் நினைச்சுப் பார்க்க இஷ்டப்படலே. ஒவ்வொன்னா நினைக்க ஆரம்பிச்சா பயமா இருக்கும். நெருப்பு எரியற மாதிரி உள்ளெல்லாம் 'திகுதிகு'ன்னு பத்திண்டு எரியும். மனசெல்லாம் கசந்து அந்தக் கசப்பு குமட்டலா வெளியில வரும். ப்ளீஸ் யமுனா! எதையும் கேக்காதே. இதுக்கு மேலே ஒரு கேள்விகூடக் கேட்காதே... உன்னையும் அப்பாவையும் பார்க்கணும்னுதான் இத்தனையும் தாண்டிண்டு-இத்தனைக்கும் சாகாமல்-சாக மனசில்லாமல்-உயிரைக் காப்பாத்திண்டு ஓடி வந்திருக்கேன். இனிமேல் இப்படி ஓட முடியாதுன்னு தெரிஞ்சுண்டு வந்திருக்கேன். எல்லாக் கஷ்டத்தையும் அனுபவிச்சுட்டு வந்திருக்கேன். இந்த உலகம் முழுசுமே பொல்லாத மனுஷாளாகவே இருக்கிற மாதிரி தோணறது யமுனா.

''ஒரு வேளை நான் பொல்லாதவளா இருந்ததனால, நான் பார்த்த மனுஷா எல்லாருமே பொல்லாதாவாளா இருந்தாளோ என்னமோ? இனிமேயும் தனியா நின்னு சமாளிக்க எனக்குத் தெம்பில்லை. ஒரே பயமா இருக்கு. யாரைப் பார்த்தாலும் பயமா இருக்கு. சக்தியெல்லாம் ஒடுங்கிப் போனமாதிரி அசதியா இருக்கு. கூட்டைவிட்டுப் போய் இறக்கையெல்லாம் வெட்டப்பட்டு- ரணமும்-ரத்தமுமா திரும்பி வந்திருக்கிற பட்சி மாதிரி வந்திருக்கேன்.



உன்னையும்-அப்பாவையும் விட்டால் வேற மனுஷா யாருமே இல்லேன்னு தெரிஞ்சுண்டு வந்திருக்கேன். நான் பண்ணினதையெல்லாம் மறந்துட்டு- என்னோட குறையோட என்னைத் திரும்பி ஏத்துப்பீங்களா யமுனா?''

''ஜானகி...'' என்று மேஜை மீது கிடந்த அவள் கையைப் பற்றிக் கொண்டாள் யமுனா. கண் பள பளத்து பார்வையை மறைத்தது. பேச முடியாமல் குரல் நடுங்கியது.

''என்ன பேசறே நீ...?'' என்று மெதுவாக அதட்டினாள்; ''இப்படியெல்லாம் பேசணும்னு எப்படித் தோணித்து? ஏன் தோணித்து? ஏன் உன்னை மட்டும் தனியாப் பிரிச்சுக்க நினைக்கறே? நீ எப்பவும் எங்க ஜானகிதான். எது என்ன ஆனாலும் எங்க ஜானகிதான். உன் வீட்டுக்கு நீ வர்றதுக்கு இத்தனை கெஞ்சல் எதுக்கு? இத்தனை பேச்சு தான் எதுக்கு? இதுக்கு என்னைக் கேட்கணுமா ஜானகி? நேர வந்து கதவைத் தட்ற உரிமை உனக்கு இருக்கு ஜானகி!''

''நீ... நீ சொல்றே... ஆனால் அப்பா? அவரை எப்படிக் கேக்கறது? அவர் மூஞ்சியில் எப்படி முழிக்கிறது? அதுக்கு எனக்கு என்ன தகுதி இருக்கு?''

''டோண்ட் பி ஸில்லி. அப்பாவைத் தெரியாத மாதிரி இது என்ன பேச்சு? நீ இன்னும் அவரை சரியாப் புரிஞ்சுக்கல் லேன்னு தெரியறது. அவரை மாதிரி ஒரு அப்பா யாருக்குமே கிடைக்க முடியாதுன்னு நான் நினைக்கறேன். ரொம்ப உயர்ந்த மனசு அவரோடது. அந்த மனசால இந்த சின்ன விஷயத்தையெல்லாம் பெரிசு பண்ண முடியாது. எந்தக் கோவமும், வன்மமும் வச்சுண்டிருக்கத் தெரியாது. அவரோட விஷயத்துல நீ தப்பு பண்ணிட்டேன்னுதான் நான் நினைக்கறேன். அம்மாவைப் பத்தி தெரிஞ்சுக்க உனக்கு ஆசை இருக்கலாம்... ஆனால் சொல்ல இஷ்டப்படலேன்னா, அது அவரோட இஷ்டம். அவரோட பர்ஸனல் விஷயம். கொஞ்சம் முன்னால

நீ சொன்னயே? 'என்னைப் பத்தி யாருக்கும் எதுவும் தெரிய வேணாம்...'னு அந்த மாதிரி அவரும் நினைச்சிருக்கலாம். அம்மாவைப் பத்தி எதுவும் சொல்லக்கூடாதுன்னு முடிவு பண்ணியிருக்கலாம். அதற்கு ஏதாவது ஒரு ஆழமான காரணம் இருக்கலாம். அதனால, அவரை வற்புறுத்தற உரிமை நமக்கு ஏது ஜானகி?''

''புரியறது யமுனா...''

''அதே மாதிரி அவர் உன் மேலே வச்சுண்டிருக்கிற அன்பையும் நீ புரிஞ்சுக்கணும். ஒரு நாளைக்கு ஒரு தரமாவது அவர் உன்னை நினைச்சுக்கத் தவறினதில்லை. 'குழந்தை எங்கே இருக்காளோ? என்ன பண்றாளோ?'ன்னு அவர் சொல்லிச் சொல்லி மருகின மருகல் எனக்குத்தான் தெரியும். ஸோ-நீ வந்தால் அவர் ரொம்ப சந்தோஷப்பட்டுப் போவார். எங்கேயாவது நீ கண்ணில் பட்டால் போறும்...உன்னை ஒரு தடவை பார்த்தால் போறும்னு தவிச்சுண்டிருக்கிறவர். இப்போ நீ இங்கே வந்திருக்கிறது தெரிந்தால், ஆபீஸ் வேலை எல்லாத்தையும் விட்டுவிட்டு உன்னைப் பார்க்க ஓடி வந்திருப்பார்.''

''யமுனா... யமுனா...'' என்று திணறி மேலே பேச முடியாமல் அழுகையில் முடிந்து போனாள் அவள். சிறிது நேரம் அழட்டும் என்று பேசாமல் இருந்தாள் யமுனா. வெளியில் குரல் கேட்காமல்-குனிந்த தலை நிமிராமல்-கன்னங்களில் நீர் கோடு கோடாய் வழிய அவள் உட்கார்ந் திருப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தாள். உள்ளுக்குள்ளேயே கேவல் சத்தம் அடங்கி ஓய்வதைக் கேட்டுக் கொண்டிருந்தாள். பின் மெதுவாய் அவள் தோளில் கை வைத்தாள். தன் கர்சீப்பை எடுத்துக் கொடுத்தாள். 'மூஞ்சியத் துடைச்சுக்கோ' என்றாள். அவள் துடைத்துக் கொண்டு சிவந்துபோன கண்களோடு நிமிர்ந்து பார்த்ததும், ''வா, வீட்டுக்குப் போகலாம்!'' என்றாள்.



அடம் பிடித்து அடி வாங்கி அடங்கி ஓய்ந்த குழந்தை மாதிரி மறுபேச்சு எதுவுமில்லாமல் எழுந்துகொண்டாள் ஜானகி.

# 14

**வீ**ட்டுக்கு வந்ததும் ஜானகியை உட்காரச் சொல்லி விட்டு அப்பாவுக்குப் போன் பண்ணினாள் யமுனா.

''ஆபீஸ் விட்டதும் வேற எங்கேயாவது போகப் போறீங்களாப்பா...?''

''ம்...ஆமாம்மா! இன்னிக்கு சுதாகரோட அம்மாகிட்டே வர்றதா சொல்லியிருக்கேன். கல்யாணத்துக்கு ஏதோ நாள் பார்த்திருக்காளாம். அது சரிப்படுமான்னு பார்த்துப் பேசிட்டு வரப் போறேன்...''

''அப்படியா? அதை நாளைக்குப் போய்ப் பார்த்துக்கக் கூடாதாப்பா?''

''என்னம்மா? என்ன விஷயம்?''

''கொஞ்சம் நேரா வீட்டுக்கு வர முடியுமாப்பா...?''

''ஏம்மா... ரொம்ப முக்கியமான விஷயமாம்மா?''

''ஆமாம்பா... ஜானகி வந்திருக்கா.''

''என்ன...!''

''ஆமாம்ப்பா!''

''நிஜமாவாம்மா?''

''நிஜமாத்தாம்ப்பா!''

''சரிம்மா. இப்பவே கிளம்பி வந்துடறேன். நீ கொஞ்சம் சுதாகரோட அம்மாவுக்குப் போன் பண்ணி சொல்லிடறியாம்மா...?''

''ஆகட்டும்பா!''

அவர் ரிஸீவரை வைத்ததும் யமுனா, சுதாகரின் வீட்டுக்குப் போன் பண்ணினாள். சுதாகரே போனை எடுத்தான். அப்பா வீட்டுக்கு வரமுடியாததைச் சொல்லி, தன்னாலும் இன்று அவனைச் சந்திக்க முடியாது என்பதைத் தெரியப்படுத்தினாள்.

''பரவாயில்லை. வி வில் மீட் டுமாரோ'' என்ற சுதாகர் ஒரு நிமிஷம் தயங்கிப் பின் கேட்டான்:

''எனிதிங் இம்ப்பார்ட்டெண்ட் யமுனா...?''

யமுனாவும் கொஞ்சம் தயங்கிப் பதில் சொன்னாள்.

''ம்... ஜானகி வந்திருக்கா...''

''ஈஸ் இட்!''

''எஸ்.''

''ஹௌ ஈஸ் ஷி...?''

''ஷி ஈஸ் ஆல் ரைட்.''

''ஓ.கே யு கேரி ஆன் யமுனா! நாளைக்குப் பார்க்கலாம்'' என்று போனை வைத்தான் அவன். யமுனாவும் ரிஸீவரை வைத்துவிட்டு சோபாவுக்குத் திரும்பினாள். ஜானகி தன்னையே கவனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

''என்ன ஜானகி பார்க்கறே?''

ஒன்றுமில்லை என்கிற மாதிரி அவள் தலையசைத்தாள்.

''யார் அந்த சுதாகர்னு யோசிக்கிறியா...?''

''இல்லே... யமுனா...''

''இல்லேன்னாலும் நானே சொல்றேன். அது யார்னு தெரிஞ்சால் உனக்கு ஆச்சரியமாகக்கூட இருக்கும் ஜானகி. யு ரிமெம்பர், நாம ரெண்டு பேரும் ஒரு கன்னடப் படம் பார்த்தோமே... அந்த ஆக்டரஸ் நந்தினியை ஞாபகமிருக்கா? ஹி ஈஸ் ஹர் ஸன். உனக்குகூட அவரைத் தெரியும். நீ ரெண்டு மூணு தரம் அவரைக் க்ளப்ல பார்த்திருக்கே...''



'அப்படியா!' என்கிறாற்போல் ஜானகியின் பார்வை உயர்ந்து ஒரு நிமிஷம் அவள் முகத்தில் தங்கிப் பின் தழைந்தது. அவளிடமிருந்து எந்தப் பதிலும் வராமற் போகவே யமுனா மீண்டும் தணிந்த குரலில் சொன்னாள்:

''ஐ ஆம் கோயிங் டு மேரி ஹிம் ஜானகி...''

அதற்கும் அவள் ஒன்றும் சொல்லவில்லை. இதில் எனக்கு எந்த ஆச்சரியமும் இல்லை என்கிறாற் போல் மௌனமாக இருந்தாள். அவளுடைய அப்போதைய மன நிலையைப் புரிந்து கொண்டு யமுனாவும் மேலே ஒன்றும் பேசவில்லை. ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள். சிறிது நேரத்திற்கு ஹால் அதே அமைதி யில் இருந்தது. கடிகாரத்தின் 'டிக் டிக்' சத்தத்தைத் தவிர வேறு எதுவும் கேட்காத நிசப்தத்தில் கிடந்தது. வாசல் கேட் திறக்கப்படுகிற ஓசையில் -கார் உள்ளே வருகிற சத்தத்தில் அந்த நிசப்தம் சட்டென்று கலைந்து போயிற்று.

''அப்பா வரார்'' என்று எழுந்து கொண்ட யமுனா, டிரைவரிடமிருந்து 'ப்ரீஃப்-கேஸை' வாங்கிக் கொண்டு வர வராந்தாவுக்குப் போனாள். 'ப்ரீஃப்கேஸை' வாங்கிக் கொண்டு டிரைவரை அனுப்பிவிட்டு வந்தபோது, அப்பா ஜானகியைப் பார்த்தபடி நின்று கொண்டே இருப்பதைக் கவனித்தாள். ஜானகியும் தலையைக் குனிந்தபடி நின்று கொண்டுதான் இருந்தாள். அவர்களுக்குள் ஏற்பட்டிருந்த அந்த சங்கடத்தை-மௌனத்தைக் கலைக்கிற மாதிரி யமுனா பளிச்சென்று, ஆனால் மெதுவான குரலில் சொன்னாள்:

''நீங்க உட்கார்ந்து பேசிண்டிருங்கோப்பா! நான் போய் காபி கொண்டு வரேன்.''

அந்தக் குரலில் அவர் சட்டென்று கலைந்து போனார். ''சரிம்மா'' என்று தலையாட்டினார். யமுனா போனதும் சகஜமான குரலில் ஜானகியைப் பார்த்து, 'உட்காரும்மா' என்றார். அவளுக்கு எதிர் சோபாவில் தானும் உட்கார்ந்து கொண்டார்.

ஆனால் ஜானகி உட்காரவில்லை. தலையைக்கூட உயர்த்தவில்லை. எல்லாம் ஒடுங்கிப் போன மாதிரி நின்று கொண்டிருந்தாள். அவளுடைய அந்த மௌனத்தைத் தாங்க முடியாமல்-'என்ன கேட்பது-எப்படிக் கேட்டால் அவள் மனசு புண்படாமல் இருக்கும்' என்று யோசித்துக் கொண்டே, அவர் ஜாக்கிரதையாக-மெதுவாகப் பேச்சை ஆரம்பித்தார்:

''எப்படிம்மா இருக்கே...?''

அவள் மெல்ல அவரை நிமிர்ந்து பார்த்தாள். வார்த்தை வராமல் குரல் இறுகித் தொண்டையை அடைத்தது. மிகவும் மெலிசான குரலில் மெதுவாக, ''இருக்கேம்ப்பா...'' என்றாள்.

''எங்கேம்மா, மாப்பிள்ளை வரலே...?''

மாப்பிள்ளை!

'அப்பா, என்ன மனசு உங்களுக்கு! எப்படி வந்தது அந்த வார்த்தை! எந்தக் கோபமும், எந்த வருத்தமும் இல்லாமல் எப்படி இப்படிக் கேட்கத் தோன்றியது? என்னைப் பார்த்தா? என்னைப் பார்த்துக்கூடவா இப்படிப் பேசத் தோன்றுகிறது? அதற்கு எனக்கு என்ன தகுதி இருக்கிறது?'

''உங்களுக்கு மாப்பிள்ளையாக இருக்கத் தனக்கு எந்தத் தகுதியும் இல்லேன் னு புரிஞ்சுண்டுதானோ என்னமோ, அவன் என்னை விட்டுட்டுப் போயிட்டாம்ப்பா...!''

நெற்றியில் சின்னச் சுருக்கமாய் ஒன்று விழ அவர் அவளை நிமிர்ந்து பார்த்தார். பின், ''என்னம்மா சொல்றே நீ...?'' என்று குரலைத் தாழ்த்திக் கொண்டு கேட்டார்.



அது அவளுக்குப் போதுமானதாய் இருந்தது. மனசை உடைத்துக் கொண்டு அழுகையாய் வந்தது. சட்டென்று அவர் காலடியில் சரிந்து பாதத்தைப் பிடித்துக் கொண்டாள். அவர் பதறிப்போய், ''என்னம்மா... என்னம்மா இது...?'' என்று விலக்கப் பார்த்தார். முடியாமற் போகவே, கண் கலங்க அவள் அழுகையில் ஷூவை நனைப்பதைப் பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தார். அவள் சொல்வதைக் கேட்டுக் கொண்டு மௌனமாய் உட்கார்ந்திருந்தார்.

''ஒண்ணும் கேட்காதீங்கப்பா. ப்ளீஸ். கேட்டு என்னை இதற்கு மேலும் அவமானப் படுத்தாதீங்கப்பா! எனக்கு இனிமேல் அவமானம்னு ஒண்ணும் இல்லே. ஆனால், நான் ஒவ்வொன்னா சொல்ல ஆரம்பிச்சா அது உங்களை அவமானப் படுத்திடுமோன்னு பயமா இருக்கு. எனக்குக்கூட பயம் வந்திருக்குப்பா... எந்த மனுஷாளைப் பார்த்தாலும் பயமாக இருக்கு. இனிமேல தனியா நின்று சமாளிக்கிற சக்தி இல்லே. மனசுலயும் தெம்பில்லை. உங்களை விட்டால் வேற யாரும் இல்லே. நீங்க உதறிடமாட்டீங்கங்கற நம்பிக்கையோட வந்திருக்கேன். ப்ளீஸ் உதறிடாதிங்கப்பா!''

அவர் தன் கண்ணைத் துடைத்துக் கொண்டார். குனிந்து அவள் தோளைத் தொட்டார். தலையை மெதுவாக வருடினார். ''எழுந்துக்கோம்மா!'' என்று எழுப்பி கண்ணைத் துடைத்தார்; ''இது உன் வீடும்மா! உனக்குச் சொந்தமான வீடு. உன்னை எப்படிம்மா உதற முடியும்? அதுவும் என்னால முடியுமாம்மா? ஏம்மா ஒரு வார்த்தை-'அப்பா, இவரை எனக்குப் பிடிச்சிருக்கு'ன்னு ஒரே ஒரு வார்த்தை சொல்லியிருந்தால் எவ்வளவு சந்தோஷத்தோட கல்யாணம் பண்ணி வச்சிருப்பேன்... அவனும் உன்னை இப்படித் தவிக்க விட்டுவிட்டு ஓடிப் போயிருக்க மாட்டான். அப்போ ஒரு பயம் அவனுக்கு இருந்திருக்கும். இப்போ? தட்ஸ் ஆல் ரைட். அதையெல்லாம் இனிமேல் நீ மறந்துடனும். இந்த மாதிரி எதுவுமே

நடக்கலைன்னு நினைச்சுக்கணும். பழைய ஜானகி மாதிரி சிரிச்சுண்டு வளைய வரணும். இந்த அழுகை-ஏதோ பெரிசா தப்பு பண்ணிட்ட மாதிரி மனசுக்குள் குமுறறது எல்லாத்தையும் விட்டுடணும். ஓடற குழந்தை கல் தடுக்கிக் கீழே விழுந்த மாதிரி ஏதோ ஆயிடுத்து. நல்ல வேளை பெரிசா காயம் எதுவும் படலை: அப்படியே பட்டிருந்தாலும் காயத்தைத் துடைச்சு மருந்துபோட்டு ஆறுறவரைக்கும் குழந்தையை சமாதானப் படுத்தணுமே தவிர, 'ஏன் அப்படி குடுகுடுன்னு ஓ டினே'ன்னு கடிஞ்சுக்கக் கூடாது. அந்தக் குழந்தை மாதிரி, நீயும் அழுகையை நிறுத்திவிட்டு, அது கொஞ்ச நேரத்துக்கெல்லாம் விளையாடப் போற மாதிரி சாதாரணமாகப் போயிடணும். சந்தோஷமாக இருக்கணும். புரிகிறதாம்மா...?''

ஜானகி திகைத்துப் போன மாதிரி அப்பாவையே பார்த்துக் கொண்டு ஒன்றும் சொல்லாமல் நின்றாள்.

''என்னம்மா அப்படிப் பார்க்கறே? சொன்னதை யெல்லாம் மனசுல வாங்கிண்டியாம்மா...?''

அவள் தலையாட்டினாள்.

''செய்யறியாம்மா...?''

அதற்கும் தலையாட்டல்தான் பதிலாகக் கிடைத்தது.

''மூஞ்சியத் துடைச்சுக்கோம்மா! கண்ணெல்லாம் எப்படிச் சிவந்து போயிருக்கு பார்...'' அவள் புடவைத் தலைப்பால் துடைத்துக் கொண்டாள். அழுகை மெல்ல மெல்ல அடங்கி ஓய்ந்து போயிருந்தது.

''உட்காரும்மா!'' என்றதும், அவருக்குப் பக்கத்திலேயே உட்கார்ந்து கொண்டாள்.

யமுனா கொண்டு வந்த காபியை எடுத்து அவளிடம் கொடுத்தார். அவள் அதைச் சாப்பிட்டு முடிக்கிறவரை பேசாமல் இருந்தார். பின், ''போம்மா, போய் குளிச்சுட்டு வேற டிரஸ் மாத்திண்டு, தலையை வாரிண்டு வா...'' என்றார்.



அவள் எந்தப் பேச்சுமில்லாமல் உடனே எழுந்து உள்ளே போனாள். அவள் போகிறவரை பார்த்துக் கொண்டிருந்தவர் பின் யமுனாவின் பக்கம் திரும்பினார்:

''யமுனா, உனக்கு நான் ஒண்ணும் சொல்ல வேணாம். ஆனாலும் சொல்றேன். அவ ரொம்ப கஷ்டப்பட்டுட்டு வந்திருக்கா. ஜாக்கிரதையாய்ப் பார்த்துக்கோ. கண்ல தண்ணி வராமல் கவனிச்சுக்கோ... இஃப் பாஸிபிள், யு மேக் ஹர் ஹேப்பி...''

''ஆகட்டும்ப்பா!'' என்றவள், நெகிழ்ந்து போன மனசோடு காபி குடித்து முடிக்கிறவரை அவரையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

## 15

**வா**சல் மண் தரை சுத்தமாகப் பெருக்கப்பட்டிருந்தது. பெரிய அரை வட்டமாய் நீர் தெளிக்கப்பட்டிருந்தது. புள்ளி புள்ளியாய் வைத்து நூலிழையாகக் கம்பிகள் இழுக்கப் பட்டிருந்தன. ஜதை ஜதையாகப் பாம்புகள் சுருட்டிக் கொண்டு நடுவில் பெரிதாய் ஒன்று படமெடுத்தது. கிட்டதட்ட நூறு புள்ளிகளுக்கு மேல் வைத்திருக்க வேண்டும். அரைமணி நேரமாவது குனிந்து கொண்டே அதைப் போட்டிருக்க வேண்டும். முதுகு வலிக்க மெலிசான இழைகளாக இழுத் திருக்க வேண்டும். கோணலாய் இருந்த முக்கோணங் களும் நடுவில் சுழித்த சுழியும் போய் இப்போதெல்லாம் வாசல் அழகாகப் பளிச்சிட்டது. வாசல் மட்டுமில்லை; ஜானகி வந்ததிலிருந்து வீட்டுக்குள்ளும் அதே பளிச்சிடல் தெரிந்தது.

''நீ இனிமேல் சமையல் வேலைக்கெல்லாம் வர வேண்டாம் யமுனா! அதையெல்லாம் நான் கவனிச்சுக்கறேன்''

என்று வந்த மறுநாளே அவள் தன் பொறுப்பை ஏற்றுக் கொண்டு விட்டாள். சமையல் மட்டுமில்லை; வீட்டுப் பொறுப்பு முழுதுமே அவளுடையதாகிவிட்டது. காலையில் யமுனா எழுந்து வருவதற்குள் காபி தயாராகி விடும். குளித்து டிரஸ் பண்ணிக் கொண்டு வந்து பார்த்தால், மேஜை மீது அவளுக்கும் அப்பாவுக்கும் இரண்டு தட்டுக்கள் போட்டு தண்ணீர் எடுத்து வைக்கப்பட்டிருக்கும். அவியல், சாம்பார், கூட்டு என்று விதம் விதமாக வாசனை வரும். ''நீயும் உட்காரேன். ஒன்றாகச் சாப்பிடலாம்!' என்றால், ''இல்லே... நான் உங்களுக்குப் பரிமாறிவிட்டு சாப்பிடறேன்'' என்ற திடமான மறுப்பாக வரும்.

முன்பெல்லாம் ஜானகி வேலை செய்தால் அதில் ஒரு பரபரப்புத் தெரியும். சமையல்கட்டிலிருந்து எப்போதும் சினிமா பாட்டு வரும். 'ணங்ணங்' என்று கரண்டியும் தட்டும் வைக்கப்படுகிற ஓசை கேட்கும். இப்போது அவளிடம் எந்தப் பரபரப்பும் இல்லை. சமையற்கட்டிலிருந்து எந்த ஓசையும் வருவதில்லை. சின்ன முணுமுணுப்பாகக் கேட்டுக் கொண்டிருந்த அந்த சினிமாப் பாட்டுக் கூட இல்லை. நிதானமாய்-பொறுமையாய்-அமைதியாய் வேலை செய்யக் கற்றுக் கொண்டிருந்தாள். எழுந்திருப்பதே தெரியாமல் எழுந்து வாசல் தெளிப்பது, பாலுக்குப் போவது என்று ஒவ்வொன்றாய் தனியாய் செய்து கொண்டிருந்தாள். ஐந்து மணிக்கெல்லாம் அலாரம் அடித்து யமுனா எழுந்து பார்த்தால், டிகாக்ஷன் இறக்கி-குக்கர் வைத்து-சாம்பார் கொதிக்கிற வாசனை வந்து கொண்டிருக்கும்.

''நீ எப்போ எழுந்தே ஜானகி...?''

''தெரியலை... மணி பார்க்கலை.''

''பால்கூட வாங்கிண்டு வந்துட்டியா...?''

''ம்...''



''பாலுக்கு நான் போறேன். அதை மட்டும் என்கிட்ட விட்டுடு...''

ஜானகி மௌனமாகத் தலையசைத்தாள். வீட்டுக்கு வந்ததிலிருந்தே இப்படித்தான். தலையசைப்பும் ஒரு வார்த்தை பதிலும்தான் அவளுடைய பேச்சாக இருந்தது. எப்போதும் மௌனமாக இருப்பது வழக்கமாகி விட்டது. அந்த மௌனம்தான் யமுனாவை அதிகம் உறுத்தியது. உள்ளுக்குள் அழுந்துகிற இந்த அழுத்தமும் இறுக்கமும் மனசில் பட்ட அடிகளால்தான் வந்திருக்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். சட்டென்று பழைய ஜானகி மனசுக்குள் வந்து போனாள்... என்ன சிரிப்பு! கலகலவென்று எத்தனை பேச்சு! துள்ளலும் ஓட்டமுமாய் என்ன நடை! அதெல்லாம் எங்கே போயிற்று? எல்லாவற்றையும் கட்டி மூலையில் போட்டுவிட்டு இவள் ஏன் இப்படி உடைந்து போய் உட்கார்ந்திருக்கிறாள்? ராத்திரி தூக்கமில்லாமல்-மனசில் நிம்மதியில்லாமல் எதற்காக இப்படி அலைகிறாள்? என்ன சொல்லி இவளுக்குப் புரிய வைப்பது? எப்படிப் புரிய வைப்பது? யார் புரியவைக்க முடியும்? உடனே அவளுக்கு சுதாகரின் ஞாபகம் வந்தது. அவனால்தான் இது முடியும் என்று தோன்றியது. அவனைச் சந்தித்தும் கிட்டத்தட்ட ஒரு வாரமாகி விட்டது. ஜானகியைப் பார்க்க ஒரு நாள் வீட்டுக்கு வந்திருந்தான் அவன். அப்பாவும், யமுனாவும் எவ்வளவு சொல்லியும் அவள் சமையல்கட்டை விட்டு வெளியில் வர மறுத்து விட்டாள். சுதாகரும், ''தட்ஸ் ஆல் ரைட். லீவ் ஹெர் இன் ஹர் ஓன் வே!'' என்று சொல்லி விட்டு எழுந்து போனான். 'இந்த வாரத்தில் எப்படியாவது அவனைப் பார்க்க வேண்டும். ஜானகியைப் பற்றிப் பேச வேண்டும்' என்று நினைத்துக் கொண்டாள் யமுனா.

மறுநாள் சீக்கிரமாகவே எழுந்து பாலுக்குப் போன போது ஜானகியும் கூடவே வந்தாள். டெப்போ வருகிறவரை

பேச்சு எதுவும் இல்லை. இரண்டு பேரும் மௌனமாகவே நடந்தார்கள். யமுனாவைப் பார்த்ததும் ஸ்டூலில் உட்கார்ந்து கொண்டிருந்த மணி எழுந்து நின்றான். வெள்ளைப் பற்கள் தெரிய குழந்தை மாதிரி சிரித்தான். கார்டில் தேதி பார்த்து ஓட்டை குத்திக் கொண்டே பேசினான்:

''நாலைஞ்சு நாளா நீங்க வரலையேன் னு பார்த்தேன். இன்னிக்கும் வராமல் இருந்திருந்தீங்கன்னா நானே வீட்டுக்கு வந்திருப்பேன்...''

பதில் சொல்லாமல் சிரித்தாள் யமுனா.

''இவங்க யாருங்க. தங்கச்சிங்களா?''

''.....''

''நினைச்சேன். சாயல் அப்படியே இருக்குங்க!''

பால் நிரம்பின பாட்டில்களை வாங்கிக் கொண்டு ''வரட்டுமா?'' என்று கேட்டாள். அவன் கொஞ்சம் தயங்கி மெதுவாகச் சொன்னான்:

''நான்கூட அனேகமா பெங்களூர் போவேன் போலிருக்கு... அங்க ஒரு கம்பெனியிலே வேலை கிடைக்கிற மாதிரி இருக்கு.''

''அப்படியா? ரொம்ப சந்தோஷம்.''

''என்னங்க. அப்படியான்னு ஒண்ணும் தெரியாத மாதிரி கேட்கறீங்க? உங்களாலதானே எனக்கு இந்த வேலையே கிடைக்கப் போவுது...''

யமுனா கண் அகல அவனை ஒரு தரம் நிமிர்ந்து பார்த்தாள். 'என்ன சொல்றீங்க?' என்கிறாற்போல் புருவங்கள் மெதுவாகச் சுருங்கின.

''நீங்கதானே சுதாகர் சார் கிட்ட சொல்லி வேலை வாங்கித் தந்திருக்கீங்க!''



அவளுக்குச் சட்டென்று ஞாபகம் வந்தது. பேச்சு வாக்கில் ஒரு நாள் மணியைப் பற்றி சுதாகரிடம் சொன்னாள். ஒரு தடவை வீட்டுக்கு வந்திருந்தபோது அறிமுகப்படுத்தியும் வைத்தாள். ஆனால் வேலை எதுவும் கேட்கவில்லை. சுதாகரே மணிக்கு அதைச் செய்திருக்க வேண்டும். 'வாட் எ மேன் ஹி ஈஸ்!' என்று முனகிக் கொண்டாள். அந்த முணுமுணுப்பு காதில் கேட்டு ''என்னங்க?'' என்றான் மணி.

''ஒண்ணுமில்லே... வரட்டுமா?''

''சரிங்க. போறதுக்கு முன்னால வீட்டுக்கு வரேங்க.''

''வாங்க'' என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தாள் யமுனா.

அன்று மாலை நிச்சயம் சுதாகரைப் பார்க்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டாள். லைப்ரரிக்குக் கிளம்பின போது அப்பாவிடம் வீட்டுக்குச் சீக்கிரம் வரச்சொல்லிக் கேட்டுக் கொண்டாள். சுதாகரைச் சந்திக்கப் போவதைச் சொன்னாள். ''ஜானகி தனியாக இருப்பாளா... நீங்க வந்தா துணையாக இருக்கும்'' என்றாள். ''சரிம்மா. நான் வந்துடறேன். நீ கவலைப்படாமல் போம்மா!'' என்றார் அவர்.

அதே மாதிரி ஜானகியிடமும் சாயந்திரம் வர நேரமாகும் என்பதைத் தெரியப்படுத்தினாள்.

''இன்னிக்கு சுதாகரைப் பார்க்கப் போகலாம்னு நினைச்சுண்டிருக்கேன் ஜானகி... உனக்குத் துணைக்கு அப்பா வந்துவிடுவார்'' என்றாள்.

ஒரு நிமிஷம் ஒன்றும் பேசாமல் நின்று கொண்டிருந்த ஜானகி பின் மெதுவாக யமுனாவின் முகத்தைப் பார்த்தாள்.

''உன்கிட்டே ஒன்று சொல்லலாமா யமுனா?'' என்று குரலைத் தழைத்துக் கொண்டு கேட்டாள். அவள் அப்படி வாயைத் திறந்து பேசினதே யமுனாவிற்கு சந்தோஷமாக இருந்தது.

''சொல்லு ஜானகி!'' என்று அவள் முகத்தை மென்மையாகப் பார்த்தாள்.

''லைப்ரரி விட்டதும் எனக்காக நீ ஏன் இப்படி வீட்டுக்கு ஓடி வரே? அது எனக்குக் கஷ்டமாக இருக்கு. நீயும் அப்பாவும் என்னை இப்படித் தாங்கறது வேதனையாகக்கூட இருக்கு. 'எனக்கா? எனக்குப் போய் இந்த உபசாரமா'ன்னு மனசு கூசிப் போறது. ப்ளீஸ் யமுனா! எனக்காக நீ உன்னைக் கஷ்டப் படுத்திக்காதே... உன்னோட சாயந்திரத்தை என்னை நினைச் சுண்டுப் பாழாக்கிக்காதே. என் வாழ்க்கை அனேகமாக முடிஞ்சு போன மாதிரிதான். நீ அப்படியில்லே. இனிமேதான் உனக்கு எல்லாமே இருக்கு. சுதாகர் மாதிரி ஒருத்தரைப் பாக்கறது ரொம்பக் கஷ்டம். நீ ரொம்ப அதிர்ஷ்டம் பண்ணி யிருக்கே! அதனால்தான் அந்த மனசு உனக்குக் கிடைச்சிருக்கு. அதை நீ நோகடிச்சுடாதே...''

''என்ன பேசறே ஜானகி... உன்னோட இருந்தால் சாயந்திரமெல்லாம் பாழாகிப் போறதா அர்த்தமா?''

''ஆமாம்! எனக்காக யார் எது செஞ்சாலும் அது வீண் தான். அதுவுமில்லாமல் நீ என்னோடேயே இருந்துண்டிருக்க முடியாது யமுனா! இன்னும் கொஞ்ச நாள்ல நீ இந்த வீட்டை விட்டுப் போகப் போறவள். அப்புறம் நான் தனியாகத்தானே இருக்கணும்... இப்படித்தானே வானத்தைப் பார்த்திண்டு உட்கார்ந்திருக்கணும்...!''

''ஏன் இப்படிப் பேசறே ஜானகி?''

''இல்லே யமுனா... செஞ்சதையெல்லாம் நினைச்சு அழ எனக்குத் தனிமைதான் வேணுமே தவிர வேற எதுவும் வேணாம். அன்னைக்கு சுதாகர் சொன்ன மாதிரி, 'லீவ் மி இன் மை ஓன் வே...' தனியா உட்கார்ந்து யோசிச்சு யோசிச்சுப் பார்க்கிற போதுதான் நான் செஞ்ச தப்பெல்லாம் எனக்கு நன்னாப் புரியறது. துணி தோய்க்கிற கல் மேலே உட்கார்ந்து



ஆகாசத்தைப் பார்த்துண்டு அப்படியே நானும் ஒரு கல்லா உறைஞ்சு போயிடமாட்டேனான்னு தோணறது. அதனால இந்தக் கல்லுக்காக உன் சந்தோஷத்தையெல்லாம் விட்டுட்டு ஓடிவராதே... ப்ளீஸ்.''

யமுனாவிற்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. தயங்கிக் கொண்டே பேசாமல் நின்றாள். அவள் சங்கடத்தைப் புரிந்து கொண்ட ஜானகி,

''நேரமாச்சு பார். நீ கிளம்பு'' என்று பொட்டலமாகக் கட்டியிருந்த டிபனை எடுத்துக் கொடுத்தனுப்பினாள்.

அன்று முழுதும் யமுனாவிற்கு வேலையில் மனசு போகவில்லை. ஜானகி பேசினதெல்லாம் நினைவுக்கு வந்தது. கை மட்டும் இயந்திரம் போல் 'மளமள'வென்று வேலை பார்த்தது. ஒவ்வொரு கார்டாகத் தேதி பார்த்து எண்ட்ரி போட்டது. புஸ்தகங்களைப் பார்த்து வாங்கி வைத்தது. லஞ்ச் நேரம் வருகிறவரை அப்படித்தான் போயிற்று. பின் மெதுவாக ஸீட்டை விட்டு எழுந்து சுதாகருக்கு போன் பண்ணினாள். மறு பக்கத்திலிருந்து வந்த அவனுடைய 'ஹலோ..'வைக்கேட்டதும் சட்டென்று மனசு சந்தோஷமாயிற்று. உதட்டில் லேசான புன்சிரிப்பாய் ஒன்று எட்டிப் பார்த்தது.

மெலிசான குரலில் அவளும் 'ஹலோ' சொல்லி, அன்று சாயந்திரம் பார்க்க முடியுமா என்று கேட்டுக் கொண்டாள்.

அவன் 'சரி' என்றதும் போனை வைத்து விட்டு சுபாஷிணியைப் பார்க்கப் போனாள்.

# 16

சரியாக ஐந்து மணிக்கு வந்து விட்டான் சுதாகர். யமுனா அவனுக்காக லைப்ரரி வாசலில் காத்துக் கொண்டு நின்றாள். அவனைப் பார்த்ததும் மெதுவாகப் புன்னகை செய்தாள். காரின் முன் பக்கக் கதவைத் திறந்து ஏறிக் கொண்டாள். காரைக் கிளப்பிக் கொண்டே, ''எங்கே போறோம் யமுனா?'' என்று கேட்டான் அவன்.

''பீச்சுக்குப் போகலாமா...?''

''ஓ எஸ்'' என்று இடது பக்கம் திருப்பி காரின் வேகத்தை அதிகப்படுத்தினான்.

''என்ன யமுனா அவ்வளவு அவசரமா பார்க்கணும்னு போன் பண்ணினே...?''

''ஒண்ணுமில்லே... ஒரு வாரமா பார்க்கலையே! இன்னிக்குப் பார்க்கணும்னு தோணித்து. உங்களுக்குத் தோணலியா...?''

அவன் அவளைத் திரும்பி மென்மையாகப் பார்த்தான்.

''தோணாமல் இருக்குமா யமுனா? நீதான் ஜானகி மனசு சரியில்லாமல் இருக்கா. அவகூட இருக்கணும்னு சொன்னே. அதனால்தான் நான் வரலே. வீட்டுக்கு வரலாம்னு பார்த்தால், நான் வர்றது ஜானகியைச் சங்கடப்படுத்தறதோன்னு சந்தேகமாக இருந்தது. அந்தத் தயக்கத்துல பேசாமல் இருந்துட்டேன்...''

''அதைப் பத்தித்தான் முக்கியமாக உங்ககிட்டப் பேசணும்னு நினைச்சுண்டிருக்கேன்.''

''என்ன யமுனா?''



''மணல்ல போய் உட்கார்ந்து நிதானமாகப் பேசலாமே. இப்படி ஓடற கார்ல சொல்லிடற விஷயமில்லே!''

அதற்கு மேல் அவன் ஒன்றும் கேட்கவில்லை. காந்தி சிலை பக்கத்தில் காரைத் திருப்பி உள்ளுக்குள் போய் ஒரு ஓரமாக நிறுத்திப் பூட்டினான். சிறிது தூரம் மணலில் நடந்து கூட்டமில்லாத இடத்தில் உட்கார்ந்து சுற்றிப் பார்த்தாள். மஞ்சள் வெயிலில் பீச் அழகாகத் தெரிந்தது. அலை ஓசை ஒரு நல்ல சங்கீதமாகக் கேட்டுக்கொண்டிருந்தது. தூரத்தில் பத்து வயதுச் சிறுமி ஒருத்தி நோஞ்சான் குதிரை மீது சவாரி பண்ணிக் கொண்டிருந்தாள். வண்ணக் காகிதத்தில் நிறைய காற்றாடிகள் விமானமாகப் பறந்து கொண்டிருந்தன. நாலைந்து மீனவச் சிறுவர்கள் 'சடுகுடு' விளையாடிக் கொண்டிருந்தார்கள். முறுக்கு சுண்டல் விற்கிற பையன் ஒருவன் 'வியாபாரமே ஆகலை சார், போணி பண்ணுங்க சார்!' என்று கெஞ்சிக் கொண்டு நின்றான்.

'இல்ல தம்பி, வேணாம்' என்று அவனை அனுப்பி விட்டு சுதாகரின் முகத்தைப் பார்த்தாள் யமுனா. ''எத்தனை தரம் வந்தாலும் இந்த பீச் மட்டும் அலுக்கறதே இல்லை. இல்லே?'' என்று கேட்டாள்.

''ஆமாம்'' என்று தலையாட்டினான் அவன். ''எத்தனையோ நாள் நான் ராத்திரி பன்னிரண்டு மணி வரைக்கும் இங்கேயே இருந்திருக்கேன். மல்லாந்து படுத்து வானத்தைப் பார்த்துக் கொண்டு பசி, தாகம்கூட எடுக்காமல் கிடந்திருக்கேன். அப்புறமும் வீட்டுக்குப் போக மனசில்லாமலேதான் எழுந்து போயிருக்கேன்...''

''அதுதான் உங்களுக்கிருக்கிற ஒரு வசதி. யு மென் ஆர் வெரி லக்கி இன் தட் ஆஸ்பெக்ட். உங்களால் நினைச்ச இடத்துக்கு நினைச்ச நேரத்துக்குப் போக முடிகிறது. எத்தனை நாழி வேணும்னாலும் தங்க முடிகிறது. ஆனால், எங்களால்

அதெல்லாம் முடியறதே இல்லை. சில அற்பமான ஆசைகள் கூட நிறைவேறுகிறதில்லை...''

''உண்மைதான் யமுனா! இதைப் பத்தி நான்கூட நினைச்சுப் பார்த்திருக்கேன். இதற்காக ரொம்ப ஃபீல் பண்ணியிருக்கிறேன். நிறைய விஷயங்களை நீங்க மிஸ் பண்றீங்கன்னு தோணும்.''

''ஆமாம் சுதாகர், நிறைய விஷயங்களை மிஸ் பண்ணத்தான் வேண்டியிருக்கு. சில இடங்களில் ரோட் ஓரமா இருக்கிற சின்ன காம்பௌண்ட் சுவரின் மேல் நிறைய யங் பாய்ஸ் உட்கார்ந்து பேசறதைப் பார்த்திருக்கேன். அந்த மாதிரி நாலைந்து கேர்ள்ஸ் உட்கார்ந்து பேசறதைப் பார்க்கணும்னு எனக்கு ரொம்ப நாளா ஒரு ஆசை. ஆனால், அந்த மாதிரி ஏன் யாரும் உட்கார்ந்து பேசறதில்லைன்னு தெரியலை. அப்படிப் பேசற தைரியம் வரலையோ-இல்லே, உட்காரணும்னு தோணறதே இல்லையோ என்னவோ?''

''தோணாமல் இருக்காது யமுனா! இப்போ உனக்குத் தோணறதே, ஆனால் உன்னால உட்கார முடியறதா? அந்த மாதிரி நிறையப் பேருக்குத் தோணி இருக்கலாம். இது இங்கே சகஜமான விஷயமாக இல்லாததால் ஆசையை அடக்கிண்டிருக்கலாம். ஆனால் பாம்பேயில் இது ரொம்ப சாதாரணம் யமுனா. சாயந்திரமானால் வீட்டு காம்பௌண்ட் சுவரின் மேல் வரிசையா நிறையப் பெண்கள் உட்கார்ந்து பேசறதைப் பார்க்கலாம்.''

''அப்படியா?''

''அதுமட்டுமில்லை யமுனா; அங்கே பெண்கள் இன்னும் தைரியசாலிகளாய், இன்ஹிபிஷன்ஸ் அதிகம் இல்லாதவங்களா இருக்கிறதைக் கவனிச்சிருக்கேன். ராத்திரி பன்னிரண்டு மணிக்குக் கூட தனியா நிறையப் பேர் சாதாரணமாக நடந்து போறதைப் பார்க்கலாம்!''



''இதையெல்லாம் கேட்கிறபோது எனக்கும் பம்பாய்க்குப் போகணும் போல இருக்கு.''

''போகலாம் யமுனா!''

அதன்பின் பேச்சு எங்கெங்கோ போயிற்று. யமுனா, மணியைப் பற்றிக் கேட்டாள். அவனுக்கு வேலை வாங்கிக் கொடுத்ததற்காகத் தன் சந்தோஷத்தைத் தெரியப்படுத்தினாள்.

''சரியான மனிதனுக்கு சரியான நேரத்தில் செய்யற உதவி ரொம்பப் பெரிய விஷயம் சுதாகர்! யு நோ, இட் வில் ஹெல்ப் ஹிம் எ லாட்.''

''ஐ நோ. அவனைப் பத்தி நீ சொன்னதிலிருந்தே அவனுக்கு ஏதாவது செய்யணும்னு நினைச்சுண்டிருந்தேன். பெங்களூர்ல எங்க பேக்டரியிலே ஒரு வேகன்ஸி இருந்தது. உடனே அவனை ஒரு அப்ளிகேஷன் எழுதித் தர சொல்லி ஃபிக்ஸ் பண்ணிட்டேன். ஐ ஆம் ஸாரி யமுனா. உனக்குச் சொல்லணும்னு நினைச்சேன். வேலை ஞாபகத்துல மறந்து போயிட்டேன்.''

''தட்ஸ் ஆல் ரைட். அதனால் என்ன இப்போ? அதே மாதிரி ஜானகிக்கும் எங்கேயாவது ஒரு வேலை வாங்கித்தர முடியுமான்னு கேட்கலாம்னுதான் இன்னிக்கு உங்களை வரச் சொன்னேன்.''

''ஜானகிக்கு வேலையா! என்ன யமுனா?''

யமுனா மெதுவாக அவனிடம் ஜானகியைப் பற்றிச் சொன்னாள். உள்ளுக்குள் அவள் உடைந்து கொண்டிருப்பதைச் சொன்னாள். பேச்சில்லாத மௌனத்தில் அழுந்திக் கொண்டிருப்பதைச் சொன்னாள். துவைக்கிற கல்லில் உட்கார்ந்து எப்பொழுதும் வானத்தை வெறித்துக் கொண்டிருப்பதைச் சொன்னாள்.

''அவளை அப்படிப் பார்க்கிறபோது ரொம்பக் கஷ்டமாக இருக்கு சுதாகர்! எப்படி இருந்தவள் இப்போ எப்படி ஆயிட்டாள்னு நினைச்சு வேதனையா இருக்கு. அவளுக்காக ஏதாவது செய்யணும்னு தோணறது. ஆனால் என்ன செய்ய முடியும்னு புரியலே...?''

சுதாகரிடமிருந்து சின்னப் பெருமூச்சு ஒன்று வெளிப்பட்டது. ''புவர் கேர்ள். அவ மனசுக்குள்ள தான் பண்ணினது ஒரு பெரிய குற்றம் என்கிற எண்ணம் இருக்கு. 'இது குற்றம் எதுவும் இல்லே... சாதாரணத் தவறுதல்தான்'னு எடுத்துச் சொல்லிப் புரிய வைக்கணும். நிதானமாக-இதமாகப் பேசித் தெரிய வைக்கணும்...''

''அதை நீங்கதான் செய்யணும் சுதாகர்... உங்களால் தான் செய்ய முடியும்!''

''நானா...?''

''ஆமாம்! உங்களால் முடியும் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கு.''

''ஆனால் அவள் என்கிட்டே பேசக்கூட மாட்டேன் என்கிறாளே யமுனா!''

''உங்ககிட்டே மட்டுமில்லை; அவ யார் கிட்டேயும் பேசறதில்லை. ஆனாலும் நாம் முயற்சி பண்ணி அவளுடன் பேசியே ஆகணும். அவள் மனசைக் கொஞ்சம் தெளிவு படுத்தணும்...''

சுதாகர் கொஞ்சம் யோசித்தான். இதை அவசரப் படாமல் நிதானமாகச் செய்ய வேண்டும் என்று முடிவு பண்ணிக் கொண்டான்.

''நீ ஒண்ணு பண்றியா யமுனா? இந்த மாதிரி ஒரு நாள் அவளை பீச்சுக்குக் கூட்டிண்டு வாயேன்! நாம் உட்கார்ந்து பேசலாம்.''



யமுனா வருத்தமாய் புன்னகை செய்தாள்: ''அவள் வீட்டை விட்டு எங்கேயும் வரமாட்டேன் என்கிறாள். 'என்னை இப்படியே விட்டுடுங்கோ... மை லைஃப் ஈஸ் ஓவர்'னு பிடிவாதம் பிடிக்கிறாள். இன்னிக்கு மத்தியானம் இதை யெல்லாம் சுபாஷிணிகிட்டே சொன்னேன். அவள் யோசிச்சு ஒரு வழி சொன்னாள். அவளும் அனில் சௌத்ரியும் வருகிற ஞாயிற்றுக்கிழமை மூன்லைட் டின்னர் சாப்பிட ஏற்பாடு பண்ணியிருக்காளாம். அவர்கள் அடிக்கடி இப்படி சாப்பிடப் போகிற வழக்கமாம். ஃபோர்ஷோர் எஸ்டேட் பக்கத்துல பீச்சுல சந்தடியே இல்லாமல் ஏதோ இடம் இருக்கிறதாம்! 'அது தான் எங்க இடம். இந்த தரம் நீயும் சுதாகரும் ஜானகியை அழைச்சுண்டு அங்கே வந்துடுங்க. அப்புறம் பேச வேண்டியதை மெதுவாகப் பேசலாம்' என்றாள்..''

அவன் அரை வினாடி யோசித்தான். ''அது சரியாகத் தான் படறது யமுனா!'' என்றான். ''ஜானகியைக் கூட அழைச்சுண்டு வர்ற பொறுப்பை நான் ஏத்துக்கறேன். என்ன யமுனா?'' என்று கேட்டான்.

அவள் பதில் சொல்லவில்லை. அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். காலையில் ஜானகி அவனைப் பற்றிப் பேசினது நினைவுக்கு வந்தது. 'அந்த மாதிரி மனசு கிடைச்சது உன் அதிர்ஷ்டம்' என்று சொன்னதை நினைத்துக் கொண்டாள். எத்தனை உண்மையான வார்த்தை அது!

''என்ன யமுனா, அப்படிப் பார்க்கறே?''

''ஒண்ணுமில்லே...'' என்று சொல்லிக் கொண்டே மெதுவாகத் தலை குனிந்தாள் அவள். கை மணலில் அளைந்து கொண்டிருந்தது. ஆள்காட்டி விரல் 'சுதாகர்' என்று அழகாக ஆங்கிலத்தில் எழுதியது.

அதைப் பார்த்த அவன் புன்சிரிப்பாகச் சிரித்துக் கொண்டான்.

# 17

**அ**ன்று பௌர்ணமி. பிசிறே இல்லாத நீலப் பின்னணியில் முழுசாய் நிலவு பளிச்சிட்டது. சந்தடி எதுவும் இல்லாமல் அந்த இடம் அழகாகத் தெரிந்தது. அலைகளின் ஓசை தெளிவாகக் கேட்டது. ஒவ்வோர் அலையும் இரைச்சல் போட்டு ஆர்ப்பாட்டத்தோடு ஓடி வந்தது. பின் கரையில் மோதி அந்த வெறி அடங்கித் தணிய அமைதியாய் மீண்டும் திரும்பிப் போயிற்று.

அதைப் பார்த்துக் கொண்டிருந்த சுதாகரின் மனசை சொல்ல முடியாத ஒரு சோகம் கவ்விக் கொண்டது. எத்தனை கம்பீரமாக ஓடி வந்தது, பின் எவ்வளவு சாதுவாக அடங்கித் திரும்பிப் போய்க் கொண்டிருக்கிறது! அதைப் பார்த்ததும் ஜானகியின் ஞாபகம் வந்தது. அவளும் அந்த மாதிரியே அடங்கிப் போனதாகப் பட்டது. 'பாவம் ஜானகி' என்று நினைத்துக் கொண்டான். மெதுவாக நிமிர்ந்து அவளைப் பார்த்தான். அந்த நிலவின் மஞ்சள் வெளிச்சத்தில் அவள் நிறம் இன்னும் பளிச்சிட்டது. சோகமான அந்த முகம் மிகவும் அழகாகத் தெரிந்தது. வந்ததிலிருந்து ஒரு வார்த்தைகூடப் பேசாமல் புடவைத் தலைப்பால் போர்த்துக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் அவள். அதிகமான அசைவு எதுவும் இல்லாமல் பார்வை கூட உயராமல் அப்படியே இருந்தாள். சுபாஷிணி அவளைப் பேச வைக்க வேண்டுமென்று பிரயத்தனப்பட்டாள். ஏதேதோ கேள்விகள் கேட்டாள். அதற்கெல்லாம் தலையாட்டலும், ஓரிரு வார்த்தையுமாகத் தான் பதில் வந்தது. இந்த நிலாச் சாப்பாட்டிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமுமில்லை என்கிறாற் போல் இருந்தது. அவள் தன்னை அந்நியப்படுத்திக் கொண்டு நிற்பது புரிந்தது.



காரிலிருந்து சுபாஷிணியும், யமுனாவும் பெட் ஷீட்டைக் கொண்டு வந்து விரித்தபோது மட்டும் கூட வந்து உதவி செய்தாள். அனில் சௌத்ரி சாப்பாட்டுத் தூக்குகளை எடுத்துக் கொண்டு வருவதைப் பார்த்ததும், அதை வாங்கி பெட்ஷீட்டின் நடுவில் வைத்தாள். அதன் பின்னால் சற்று ஒதுங்கி ஓரமாக உட்கார்ந்தவள்தான்... சலனம் எதுவும் இல்லாமல் அப்படியே இருந்தாள். சாப்பிடும்போது அனில் சௌத்ரி ஒரு தரம்...

''மிஸ் யமுனா... உங்க ஸிஸ்டர் ரொம்ப அழகா இருக்காங்க. ரவிவர்மாவின் படத்துல இருக்கிற பெண்களின் கிரேஸ்ஃபுல்நெஸ் உங்க ஸிஸ்டர் கிட்டே இருக்கு. அவங்க முகத்தைப் பார்க்கிறபோது அதை வரையணும்னு தோணறது. வரைஞ்சு, 'தி ப்யூட்டி ஆஃப் ஸாரோ'ன்னு டைட்டில் கொடுக்கணும் போல இருக்கு...'' என்றான். அதைக் கேட்டதும் அடிபட்ட மாதிரி ஜானகியின் பார்வை ஒருதரம் உயர்ந்தது. உதடு மெல்ல அசங்க அனில் சௌத்ரியைப் பார்த்தது. வார்த்தை எதுவும் வரவில்லை. பின் சட்டென்று மறுபடியும் தலை கவிழ்ந்து கொண்டது.

அதைக் கவனித்த சுதாகர் மிகவும் சங்கடப்பட்டான். இவளை இப்படி வற்புறுத்தி அழைத்துக் கொண்டு வந்து கஷ்டப்படுத்துகிறோமோ என்று வேதனைப்பட்டான். ஆனாலும் வேறு வழி இல்லை. அவளோடு அவன் பேசியாக வேண்டும். அந்த மனசின் அடைந்து போன கதவுகளைத் திறந்துவைக்க வேண்டும். அந்தப் புழுக்கத்தையும், இறுக்கத்தையும் குறைக்க வேண்டும். முக்கியமாய் அவள் நினைத்துக் கொண்டிருக்கிற மாதிரி இது பெரிய குற்றம் ஒன்றும் இல்லை என்பதைப் புரியவைக்க வேண்டும்.

''என்ன மிஸ்டர் சுதாகர்! ஜானகிக்குத் துணையா நீங்களும் பேசாமல் இருக்கிறதுன்னு முடிவு பண்ணிட்டீங்களா...?''

சுபாஷிணியின் குரல் கேட்டு அவன் நிமிர்ந்து பார்த்தான். இயல்பாகச் சிரித்துக் கொண்டே,

''ஆமாம்... நீங்கள்லாம்தான் கலகலன்னு பேசிண்டிருக்கீங்களே... அதனால நான் ஜானகிக்குத் துணையா இருக்கலாம்னு பார்க்கறேன்...''

''ஆனால் அது உங்களால் முடியாது. நீங்க நிச்சயமா தோற்றுப் போயிடுவீங்க... பேசாமல் இருக்கிறதில் ஜானகியோடு போட்டி போட யாராலும் முடியாது. இல்லை ஜானகி...?''

அவனிடமிருந்து பதிலை எதிர்பார்க்காத சுபாஷிணி மேலே ஏதோ பேசிக் கொண்டு போனாள். தான் பண்ணிக் கொண்டு வந்திருந்த பெங்காலி தித்திப்புக்களைக் காகிதத் தட்டில் வைத்து எடுத்துக் கொடுத்தாள். அதையெல்லாம் எப்படிப் பண்ணுவது என்று விளக்கிச் சொன்னாள். பின் பேச்சு மெதுவாக எங்கெங்கோ திரும்பிற்று. ஸிந்தி-பார்ஸி-மலையாளி-தமிழ் என்று யார் யாரையோ தொட்டது. சட்டென்று ஒரு வினாடி பேச்சு நின்று அமைதியானபோது சுபாஷிணி சொன்னாள்:

''அனில் பாடி நீங்க யாரும் கேட்டதில்லையே...? ரொம்ப இனிமையான குரல். முகேஷ் பாடற மாதிரி உருக்கமாக இருக்கும். அந்த ஹிந்துஸ்தானியையும் உருது கஸலையும் கேட்டா வானத்துல பறந்து போற மாதிரி-மனசெல்லாம் ஒண்ணுமே இல்லாமல் ஆயிட்ட மாதிரி தோணும்...''

''அப்படியா? நீங்க நல்ல பெயிண்டர்ன்னு தெரியும். ஆனால், நல்ல ஸிங்கர்ன்னு தெரியவே தெரியாதே!'' என்று ஆச்சரியமாய் அனில் சௌத்ரியைப் பார்த்தான் சுதாகர்.



''என் பாட்டைக் கேட்காமலே எப்படி 'நல்ல'ங்கற வார்த்தையைச் சேர்த்துச் சொல்றீங்க... வேணும்னால் நான் ஒரு ஸிங்கர்ன்னு சொல்லுங்க.....'' என்று மறுத்தான் அனில் சௌத்ரி.

''ஓகே. நீங்க பாடுங்க. அதைக் கேட்டதுக்கப்புறம் அந்த நல்லங்கறதைச் சேர்த்துக்கலாமா, கூடாதான்னு நான் சொல்றேன்...'' என்று சிரித்தான் சுதாகர்.

ஒரு நிமிஷ மௌனத்துக்குப் பின் அனில் சௌத்ரி பாட ஆரம்பித்தான். சன்னமாய் குரல் வழுக்கிக்கொண்டு போயிற்று. உச்ச ஸ்தாயியிலிருந்து சட்டென்று கீழே இறங்கிற்று. அந்த அசைவுகளும், இழுப்புகளும்... அந்த நிசப்தத்தில் அந்த உருது கஸல் அற்புதமாகக் கேட்டது. ஒவ்வொரு மனசையும் மெதுவாக உருக்கிற்று. பத்து நிமிஷம்வரை அந்தக் குரல் எல்லாரையும் கட்டிப் போட்டது. கடற்கரையின் மோனமான அழகுக்கும், நிலா வெளிச்சத்துக்கும், 'சில்'லென்று வீசுகிற காற்றுக்குமிடையில் அந்தக் குரலைக் கேட்டுக் கொண்டு அப்படியே செத்துப் போய்விட வேண்டுமென்று தோன்றியது. இந்த நாளை இந்த நிமிஷத்தை மறக்கவே முடியாது போலிருந்தது!

பாட்டு முடிந்ததும் சட்டென்று அந்த இடத்தின் அமைதி அதிகமானாற் போல் தெரிந்தது. எல்லார் மனசையும் சொல்ல முடியாத ஒரு சோகம் இறுக்கிக் கொண்டது. யாரும் எதுவும் பேசவில்லை. எந்தச் சலனமுமில்லை. சுபாஷிணியின் கன்னத்தில் கண்ணீர் கோடாக வழிந்து பளபளத்தது. தாங்க முடியாதவளாகி ஜானகி சரேலென்று எழுந்து கொண்டாள். மெல்ல நடந்துபோய் அலைகளைப் பார்த்துக்கொண்டே கரையோரம் நின்றாள்.

ஒரு நிமிஷத்துக்கெல்லாம் சுதாகரும் எழுந்தான். ''நீங்க பேசிண்டிருங்க, நான் போய் ஜானகி கிட்ட பேசிட்டு வரேன்'' என்று சொல்லிவிட்டு நடந்தான். ஜானகியின் அருகில்

போனதும் மென்மையான குரலில் அவளைக் கூப்பிட்டான். அவள் திடுக்கிட்ட மாதிரி திரும்பிப் பார்த்தாள்.

''ஐ ஆம் ஸாரி. உங்களை பயமுறுத்திட்டேனா?'' என்று கேட்டான்.

அவள் பதில் சொல்லாமல் இருந்தாள்.

''ஏன், இப்படி வந்து தனியா நின்னுண்டிருக் கீங்க?'' அதற்கும் அவளிடமிருந்து பதில் இல்லை. சுதாகரும் ஒரு வினாடி பேசாமல் இருந்தான். நிலவின் வெளிச்சத்தில் அலைச் சுருள்கள் வெள்ளியாகப் பிரதிபலிப்பதைப் பார்த்துக் கொண்டிருந்தான். பின் குரலைத் தழைத்துக் கொண்டு மெதுவாகப் பேசினான்,

''உங்ககிட்டே பேசணும்னுதான் நான் எழுந்து வந்தேன் ஜானகி... இது உங்களுக்குப் பிடிக்காமற் போனால் கூட என்னைக் கொஞ்சம் பொறுத்துக்கணும். எதுக்கும் நீங்க பதில் சொல்லணும் என்கிற அவசியமில்லே... பொறுமையாகக் கேட்டுண்டால் மட்டும் போதும்!''- சொல்லிவிட்டு அவன் கொஞ்சம் தயங்கி மீண்டும் ஆரம்பித்தான்:

''நீங்க இப்படி மனசுக்குள்ளேயே ஹிம்ஸைப் படறதை என்னாலேயே தாங்கிக்க முடியலை. அப்படி இருக்கிறபோது அப்பாவாலும் யமுனாவாலும் எப்படித் தாங்கிக்க முடியும் சொல்லுங்க? அவர்களுக்காகவாவது நீங்க கொஞ்சம் சுலபமா இருக்கப் பழகிக்கணும். மனசுல இருக்கிற இறுக்கத்தை யெல்லாம் தளர்த்தி விட்டுக்கணும். கொஞ்சம் சந்தோஷமா சிரிக்கப் பார்க்கணும். எல்லாத்துக்கும் பழக்கம்தான் காரணம். இதெல்லாத்தையும் பழகிண்டா அப்புறம் எல்லாமே சுலபமாயிடும்..'' -அவன் மெல்ல அவள் முகத்தைப் பார்த்தபோது அவள் தலையைக் குனிந்து கொண்டு விட்டாள். கால்கட்டை விரலால் மணலில் கோலம் போட்டுக் கொண்டிருந்தாள். அவன் தொடர்ந்தான்;



''ஜானகி... நீங்க லைஃப்பை ஒரு ப்ராப்ளமாப் பார்க்கறீங்க. அதே பார்வையோடு அப்ரோச் பண்றீங்க. ஆனால், நீங்க நினைக்கிற மாதிரி வாழ்க்கை ஒரு ப்ராப்ளமே இல்லை... இட் ஈஸ் எ ச்சேலஞ்ஜ். அவ்வளவுதான். அந்த ச்சேலஞ்சை நாம் ஸ்போர்டிவ்வா அக்ஸெப்ட் பண்ணிக்கணும். அதுல ஜெயிக்கப் பார்க்கணும். மனசுலயும்-உடம்புலயும் தெம்பில்லாதவங்கதான் பந்தயத்தை ஏத்துக்கப் பயப்படு வாங்க. பட், யு ஆர் நாட் லைக் தட் ...''

''நோ... ஐ ஆம் லைக் தட். எனக்கு மனசுலயோ, உடம்புலயோ தெம்பில்லை. எதைத் தாங்கிக்கிற சக்தியும் இல்லே. ஐ ஆம் டயர்ட் ஆஃப் எவ்வரி திங். வெரி வெரி டயர்ட்.''

''ஓ.கே. நீங்க களைப்பாக இருந்தால் கொஞ்சம் 'ரிஃப்ரெஷ்' பண்ணிக்கோங்க. முகத்துல தண்ணியை வாரி அடிச்சுண்டு சுறுசுறுப்பாக்கிக்குங்க. எல்லாத்தையும் மனசுக்குள்ள மூடி வச்சுண்டு ஏன் இப்படி அவஸ்தைப் படறீங்க... எதுக்காகப் படணும்? கொஞ்சம் மனசைத் திறந்து வச்சுண்டு பாருங்க. ஜிலுஜிலுன்னு காத்து வீசற மாதிரி- எல்லாப் புழுக்கமும் அடிச்சுண்டு போற மாதிரி தாராளமாகத் திறந்து வச்சுக்கணும். அப்படி வச்சுண்டால் வாழ்க்கையோட இந்தப் பந்தயத்துல சுலபமா ஜெயிச்சுடலாம். நீங்க இதைப் புரிஞ்சுக்கணும் ஜானகி... பிடிவாதமா புரிஞ்சுக்கக் கூடாதுன்னு நினைக்காமல் தாராள மனசோட புரிஞ்சுக்கணும்.

''வீணை இருக்கு. அதை உறையில் போட்டு மூடி வச்சுட்டால் அதுலேர்ந்து எந்தப் பாட்டும் கேட்கறதில்லை. எந்த ராகமும் வர்றதில்லை. அதனால அதுல ராகமே இல்லேன்னு அர்த்தமாயிடுமா என்ன? தூங்கிண்டிருக்கிற ராகத்தை நாம்தான் மீட்டணும். வீணையை எடுத்து மடியில் வச்சுண்டு-தந்தியைச் சரிபார்த்து-விரலால் மெதுவாகத் தட்டி

மீட்டணும். மீட்டத் தெரியணும். மீட்டற திறமை இருக்கணும். அப்புறம் ஒவ்வொரு ராகமா வாசிக்க வரும். அற்புதமாக வரும். அதே மாதிரிதான் நம்ம மனசும். அதுகூட ஒரு வீணைதான்! அதுக்குள்ளேயும் அன்பு, ஆசை, பாசம், கோபம்னு நிறைய ராகமாகத் தூங்கிண்டிருக்கு... நாம் தட்டி எழுப்பற ராகம் வெளியில் வர்றது. ஏதோ ஒருதரம் உங்க தட்டலில் அபஸ்வரம் வந்துடுத்துங்கறதாலே, எப்பவும் அபஸ்வரம் தான் வரும் என்கிற அர்த்தமில்லை. நாமதான் ஜாக்கிரதையாய் இனிமேல் அபஸ்வரம் வராமல் பார்த்துக் கணுமே தவிர, வீணையைப் போட்டு உடைச்சுடக் கூடாது. மூட்டை கட்டி மூலையிலே போட்டுடவும் கூடாது. உங்களால அழகா அற்புதமாக வாசிக்க முடியும் என்கிற நம்பிக்கை எனக்கிருக்கு... வாசிப்பீங்களா ஜானகி?''

மனசு ஒரு தரம் சிலிர்த்து அடங்க ஜானகி அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள். கண் லேசாக மினுங்கிற்று. உதடு மெல்ல நடுங்கியது. பற்களால் அழுத்திக் கடித்துக் கொண்டாள். 'என்னமாகப் பேசுகிறான்! இப்படிப் பேச வேண்டுமென்று எப்படித் தோன்றியது? ஏன் தோன்றியது? ஒவ்வொரு வார்த்தையும் எத்தனை சிரத்தையாய் மனசுக்குள்ளிருந்து வருகிறது? இப்படிப்பட்ட பிரியத்திற்காக எதைச் செய்தால்தான் என்ன?' ஜானகி நெகிழ்ந்து போய்ப் பேச்சு வராமல் நின்றாள்.

அவன் விடவில்லை.

''என்ன ஜானகி பேசாமல் இருக்கீங்க...? செய் வீங்களா?''

'செய்வதாக'அவள் தலை ஆடியது....

''தலையாட்டினால் மட்டும் போறாது! கட்டாயம் செய்யறேன்னு கையில் அடிச்சுச் சொல்லுங்க...''



அவன் தன் வலது கையை நீட்டினான். அவள் தயங்கின மாதிரி பார்த்தாள்.

''என்ன பார்க்கறீங்க... இஷ்டமில்லேனா சொல்லிடுங்க. நான் வற்புறுத்த மாட்டேன்.''

அவள் சட்டென்று அவன் உள்ளங்கையில் தன் வலது கைவிரல்களை வைத்து அழுத்தினாள்.

''தாங்யு ஜானகி... தாங்க்யு.. ஸோ மச்!'' என்று அவள் கையை சந்தோஷத்தோடு பற்றினவன் சட்டென்று விலக்கிக் கொண்டான்.

அதன் பின் பேச்சு எதுவும் இல்லை. அப்படியே சிறிது நேரம் நின்றார்கள். அலைகள் பெரிதாக எழும்பிச் சுருளுவதைப் பார்த்துக் கொண்டு நின்றார்கள். ஒரு நிமிஷம் இரண்டு நிமிஷம் என்று போயிற்று. பின் அவளைத் திரும்பிப் பார்த்துச் சுதாகர், ''போகலாமா?'' என்று கேட்டான்.

அவள் தலையாட்டினதும் அதே மௌனத்தோடு மெதுவாக நடந்து திரும்பி வந்தார்கள்.

அந்த இடம் ரொம்பவும் அடங்கி எந்த சந்தடியும் இல்லாமற் போனதும், சுதாகர் கைக்கடிகாரத்தில் மணி பார்த்தான். பதினொன்றரை ஆகியிருந்தது. ''போகலாமா?'' என்று கேட்டான்.

''இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாமே?'' என்று குழந்தை மாதிரி கெஞ்சுகிற குரலில் அவனைப் பார்த்தாள் சுபாஷிணி. அன்று அவள் மிகவும் சந்தோஷமாக இருக்கிற மாதிரி பட்டது சுதாகருக்கு. தன் வாழ்க்கையைத் தொடங்க ஆரம்பித்ததிலிருந்தே அவள் இப்படித்தான் இருக்கிறாள். எந்தக் களைப்பும் எந்தக் கஷ்டமும் இல்லாமல்-எல்லா பாரமும் நீங்கின மாதிரி-இதுதான் சாசுவதம் என்று உணர்ந்து கொண்டு விட்டவளைப் போல் நிம்மதியாக இருக்கிறாள்.

அவளின் சிரிப்புகூட மனசிலிருந்தே வருகிற நிஜமான சிரிப்பாகத் தெரிகிறது. இந்தச் சிரிப்பு மட்டும் அவள் கூடவே பிறந்த மாதிரி தோன்றுகிறது. எல்லாக் குழந்தையும் அழுது கொண்டுதான் பிறக்கும். ஆனால் சுபாஷிணி மட்டும் சிரித்துக் கொண்டு பிறந்திருக்க வேண்டும். இந்தச் சிரிப்புதான் அவளுடைய பலம். இதில்தான் அவள் கஷ்டங்களை விரட்டக் கற்றுக் கொண்டிருக்க வேண்டும். எதையும் யாரையும் சமாளிக்கத் தெரிந்து கொண்டிருக்க வேண்டும். எதற்கும் போராடிக் கொண்டிருக்காமல் எல்லாவற்றோடும் அனுசரிக்கப் பழகிக் கொண்டிருக்க வேண்டும்.

இந்த அனுசரித்தலைத்தான் அவன் சற்று முன்பு ஜானகிக்குச் சொல்லிக்கொண்டிருந்தான். அதைக் கேட்டு அவள் கண்கள் பளிச்சிட்டதை அவனால் பார்க்க முடிந்தது. முகம் தெளிவடைந்ததையும் கவனிக்க முடிந்தது. அந்தத் தெளிவு மனசுக்குள் ஏற்பட்ட தெளிவாகத் தோன்றியது. 'இது போதும்' என்ற நம்பிக்கை ஏற்பட்டது. இனிமேல் ஜானகி இப்படி இல்லாமல்-வாழ்க்கை பற்றின பயம் எதுவும் இல்லாமல்-வெறுப்புமில்லாமல் வாழ்க்கையைஅதன் போக்கில் ஏற்றுக் கொள்வாள் என்கிற நம்பிக்கை வந்தது. அதில் அவன் மனசு சந்தோஷப்பட்டது. அந்த சந்தோஷத்தை அனுபவித்துக் கொண்டு-கைகளை மடித்துத் தலைக்கு வைத்துக் கொண்டு-மல்லாந்து படுத்து வானத்தைப் பார்த்துக் கொண்டு மணிக்கணக்கில் அப்படியே கிடக்க வேண்டும் போலிருந்தது. ஆனால் அதற்கு மேல் அந்த இடத்தில் இருப்பது அவ்வளவு புத்திசாலித்தனமான விஷயமில்லை என்று தோன்றவே-

''போகலாம் சுபாஷிணி. மணி ரொம்ப ஆயிடுத்து. அதுவுமில்லாமல் இதெல்லாம் கொஞ்சம் ரிஸ்கி ப்ளேஸ். இதற்கு மேல் இங்கே இருப்பது, ஈஸ் நாட் அட்வைஸபிள். நீங்க மூணு லேடீஸ் வேற இருக்கீங்க...'' என்றதும், அனில் சௌத்ரியும், ''நீங்க சொல்றது சரிதான். லெட் அஸ் ஸ்ட்டார்ட்'' என்று எழுந்து கொண்டான். ஜமுக்காளத்தின் மணலை உதறி மடித்துக் கொண்டான். தண்ணீர் ஜக்கையும், மற்ற சாமான்களையும் எடுத்துக் கொண்டு அவர்கள் காருக்கு வந்தபோது மணி பனிரெண்டாகி விட்டது.



# 18

முதலில் சுதாகர் சுபாஷிணியையும், அனில் சௌத்ரியையும் அவர்கள் வீட்டில் இறக்கி விட்டான். பின் யமுனாவையும், ஜானகியையும் காலிங்பெல்லை அழுத்தி கதவு திறந்து உள்ளே போகிறவரை கேட்டிலிருந்தே பார்த்துக் கொண்டிருந்துவிட்டுக் காரைக் கிளப்பினான்.

''என்னம்மா, பிக்னிக் எல்லாம் எப்படி இருந்தது...?'' என்று கேட்டு விட்டு அப்பா படுக்கப் போய்விட்டார்.

''நன்னா இருந்ததுப்பா...'' என்று பதில் சொல்லிக் கொண்டே யமுனா தன் அறைக்கு வந்தாள். புடவையை அவிழ்த்து சாதாரண வாயில் புடவை ஒன்றைக் கட்டிக் கொண்டாள். நன்றாகக் காற்று வரும்படி ஜன்னல் கர்ட்டன்களை ஓரத்தில் ஒதுக்கி விட்டாள். ட்யூப் லைட்டை அணைத்து நிலா வெளிச்சம் அறைக்குள் அடிப்பதைப் பார்த்துக் கொண்டே நின்றாள். சட்டென்று ஜானகி இன்னும் அறைக்குள் வராதது ஞாபகத்துக்கு வந்தது. 'புடவையைக் கூட மாற்றாமல் என்ன செய்கிறாள்?' என்று நினைத்துக் கொண்டே சமையல் அறைக்குப் போனாள். விளக்குப் போடாமல் இருட்டாக இருக்கவே அங்கே இருக்க மாட்டாள் என்று பின்பக்கம் தேடிக்கொண்டு போனாள்.

தோட்டத்துக் கதவு திறந்திருந்தது. தாழ்வாரத்தில் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருந்தாள் ஜானகி.

அந்த இடத்தில் லேசாய் நிலவு வெளிச்சம் அடிக்க-முகத்தின் பாதி இருட்டில் நனைய அவள் உட்கார்ந்திருந்த விதம் மிகவும் அழகாக இருந்தது. உடனே அனில் செளத்ரி அவளைப் படமாக வரைய ஆசைப்பட்டது நினைவுக்கு வந்தது. படமாக வரையக்கூடிய அழகுதான்... பார்க்கிறவர்களை அசர அடிக்கிற அழகு!

இந்த அழகை விட்டுப்போக அவனுக்கு எப்படி மனசு வந்தது? ஜானகி சொன்ன மாதிரி அவன் அயோக்கியனாகத் தான் இருக்க வேண்டும். வெறும் இந்த உடம்பின் மீது ஆசைப்பட்டு அவளை அழைத்துக் கொண்டு போயிருக்க வேண்டும்... ஒரு மாசமோ இரண்டு மாசமோ சலிக்கிறவரை இருந்துவிட்டுப் பின் ஓடிப் போயிருக்க வேண்டும்...

பக்கத்தில் போய்த் தோளில் கை வைக்கிறவரை ஜானகி அவளைப் பார்க்கவில்லை. பின் திடுக்கிட்ட மாதிரி சட்டென்று நிமிர்ந்து பார்த்தாள்.

''ஏன்... இங்கே வந்து இப்படித் தனியா உட்கார்ந்துண் டிருக்கே, ஜானகி...?''

''ப்ச்சு... சும்மாத்தான்...''

''தூக்கம் வரலையா...?''

''இல்லே...''

யமுனாவும் அவளுக்கெதிரில் சுவரில் சரிந்து உட்கார்ந் தாள். தென்னையின் சலசலப்பை சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தாள். பின் ஜானகியைத் திரும்பிப் பார்த்தாள்.

''உன்கிட்ட நான் கொஞ்சம் மனசு விட்டுப் பேசலாமா ஜானகி?'' என்று நிதானமாகக் கேட்டாள். ஜானகி பதில் சொல்லவில்லை. அவள் முகத்தையே பார்த்துக் கொண்டு பேசாமல் இருந்தாள்.

''என்ன ஜானகி அப்படிப் பார்க்கறே! நான் பேசறது உனக்குப் பிடிக்கலேன்னா பேசலை...''



''இல்லே...நீ என்ன பேசப்போறேன்னு யோசிச்சேன். கொஞ்ச நேரத்துக்கு முன்னால சுதாகர் என்கிட்ட சொன்ன அதே விஷயத்தைத்தான் நீயும் சொல்லுவேன்னு தோணித்து-''

''கிட்டத்தட்ட அதேதான்னு வச்சுக்கோயேன். ஆனால் நீ என்னைப் புரிஞ்சிக்கணும் ஜானகி... உன்மேல் இருக்கிற பிரியத்தாலே, அக்கறையினாலேதான் நாங்களெல்லாம் இப்படிப் பேசறமே தவிர, உன்னைக் கஷ்டப்படுத்தணும்கிற நோக்கத்தோட இல்லே...''

''நான் அப்படி நினைக்கவேயில்லை யமுனா...''

''நீ நினைக்கலைன்னாலும் நானே சொல்றேன். இந்த மாதிரி நீ இருக்கிறது எங்களுக்கெல்லாம் எவ்வளவு கஷ்டமா இருக்கு தெரியுமா? அப்பா வெளியில சொல்லாமல் உள்ளுக்குள்ளேயே ரொம்ப வேதனைப்படறார்... அவர் உன்மேல அளவு கடந்த ஒரு பிரியத்தை வச்சுண்டிருக்கார். உன்னை இப்படிப் பார்க்கிறபோதெல்லாம் மனசு உடைஞ்சு போறார். எங்களுக்காக இல்லாமற் போனாலும் அவருக் காகவாவது நீ உன்னை மாத்திக்கணும் ஜானகி...''

ஜானகி தூரத்து இருட்டை வெறித்துக் கொண்டு மௌனமாக இருந்தாள். யமுனாவும் ஒரு வினாடி ஒன்றும் பேசவில்லை. பின் மிகவும் தணிந்த குரலில் ஆரம்பித்தாள்.

''நடந்தது நடந்து போச்சு! நீ உன்னை இப்படி ஹிம்ஸைப் படுத்திண்டு, மனசெல்லாம் காயப்பட்டுண்டு உட்கார்ந்திருந்தால் அது நடக்கலைன்னு ஆயிடுமா ஜானகி? சில விஷயங்களை நமக்கு மறக்கத் தெரியணும். இல்லேன்னா லும் செத்துப் போன மனுஷா மாதிரி ஞாபக மிருந்தால்கூட அந்த ஞாபகத்தின் வலியும் நோவும் இல்லாம லாவது இருக்கணும். நீ பெரிசா எந்தத் தப்பும் பண்ணிடலை ஜானகி. 'தப்பு-சரி' என்கிறதெல்லாம் அவாவாளோட மனசைப் பொறுத்த விஷயம். சூழ்நிலையைப் பொறுத்த விஷயம்.

அப்போ இருந்த உன்னோட மனநிலையில்-அந்தச் சூழ்நிலையில் அப்படிப் போகணும்னு தோணியிருக்கு. இப்போ கூட இப்படி ஆய்ட்டதனால தான் இது உனக்குத் தப்பாப் படறது. இல்லேன்னா பட்டிருக்காது. ஒருவேளை அவன் உன்னை அப்படி விட்டுவிட்டு ஓடிப் போகாமல்- கல்யாணம் பண்ணிண்டு சந்தோஷமாக வச்சுண்டிருந்தால் நீ இதைத் தப்புன்னு சொன்னால்கூட ஒத்துண்டிருக்க மாட்டே. இப்படியெல்லாம் ஆனதால்தான் உனக்கு இந்தக் குற்ற உணர்ச்சி வந்திருக்கு. இல்லாவிட்டால் வந்திருக்காது.''

அடிபட்ட மாதிரி ஜானகி அவளை நிமிர்ந்து பார்த்தாள். கண் இரண்டும் லேசாக மின்னி நீரில் மிதந்தது. உதடு மெதுவாக அசங்கியது. ஏதோ சொல்ல வாயெடுத்து சட்டென்று உதட்டைக் கடித்துக் கொண்டாள்.

''என்ன ஜானகி, நான் சொன்னது உன்னைச் சங்கடப் படுத்திடுத்தா? ஆனாலும் உண்மை அதுதானே ஜானகி?''

அதற்கும் அவளிடமிருந்து பதிலில்லை.

''இன்னொரு விஷயம்கூடச் சொல்லணும். அதை நீ தப்பாப் புரிஞ்சுக்காமல் சரியாகப் புரிஞ்சுக்கணும். இந்த ஒரு வருஷத்துல நீ அவன்கூட ஒரு மாசம்-இரண்டு மாசம்-சரி ஆறு மாசம் வாழ்ந்ததாகக்கூட வச்சுக்கோ, அந்த வாழ்க்கை ஒண்ணும் பெரிய விஷயமில்லே. சரீரத்தால் வாழ்ந்த வாழ்க்கை வாழ்க்கையாயிடாது. மனசாலயும் வாழணும்; அதனால அதை நீ பெரிசா நினைச்சுண்டு கஷ்டப்படாதே...''

சரேலென்று திரும்பி அவளைப் பார்த்தாள் ஜானகி. அந்தப் பார்வையில் தெரிந்தது வெறுப்பா, விரக்தியா, கோபமா என்று யமுனாவால் புரிந்து கொள்ள முடியவில்லை. ஏதாவது தவறாகச் சொல்லி விட்டோமோ என்ற சந்தேகத்தில், ''என்ன ஜானகி... அப்படிப் பார்க்கறே...?'' என்று மிருதுவாகக் கேட்டாள்.



''நான் அவனோட வாழ்ந்தது நீ சொல்ற மாதிரி வெறும் சரீர வாழ்க்கை மட்டுமில்லே. அப்படி இருந்திருந்தால் எப்போதோ அதை மறந்து போயிருப்பேன். என்னைப் பொறுத்தவரை நான் அதிகம் மனசாலதான் வாழ்ந்தேன். உடம்பால வாழ்ந்தபோதுகூட மனசும் சேர்ந்துதான் வாழ்ந்தது. அவன்தான் எல்லாம்னு நினைச்சது. அவனுக்காக எதையும் செய்யலாம்னு தோணித்து. அப்படி அவனோட முழுசா ஐக்கியப்படுத்திண்டதனால்தான் இப்போ இப்படி மறக்க முடியாமல் திண்டாடறேன். அவனுடைய பேச்சு, பார்வை, சிரிப்பு எதையுமே மறக்க முடியலே. இதுக்கு நான் என்ன செய்ய முடியும் சொல்லு யமுனா...?''

அவள் சட்டென்று யமுனாவின் மடியில் சரிந்து முகத்தைப் புதைத்துக் கொண்டாள். கண்ணீர் கசிந்து மடியை நனைத்தது. சின்னச் சின்ன விசும்பலாகக் கேட்டது. உடம்பு லேசாகக் குலுங்கியது. அவள் முதுகை மெல்லத் தடவிக் கொண்டிருந்த யமுனா அதிர்ந்துதான் போனாள். இதை அவள் எதிர்பார்க்கவில்லை. அவன் அவள் மனசில் இவ்வளவு ஆழமாகப் பதிந்து போயிருப்பான் என்று நினைக்கவில்லை. அவனோடு வாழ்ந்த அந்த வாழ்க்கைக்காக அவள் வெட்கப் படுவதாகத்தான் நினைத்தாள். வேதனைப் படுவதாக நினைத்தாள். ஆனால் இப்போது...? இதற்கு என்ன செய்ய முடியும் என்பது தெரியாமல் பேசாமல் இருந்தாள். மடியில் படுத்துக் கொண்டு குழந்தை மாதிரி அழுகிற அவளைப் பார்த்த போது மிகவும் வேதனையாக இருந்தது. விழியோரம் கசிந்தது. மெதுவாக அவள் தலையை வருடி, ''அழாதே ஜானகி...'' என்று மட்டும்தான் சொல்ல முடிந்தது.

மெல்ல மெல்ல ஜானகி அடங்கிப் போனாள். ஐந்து நிமிஷத்துக்கெல்லாம் முகத்தைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தாள். ஏதோ தெளிவு ஏற்பட்ட மாதிரி மெதுவாகப் பேச ஆரம்பித்தாள்.

''ஐ ஆம் ஸாரி யமுனா... இதையெல்லாம் சொல்லி உன்னைக் கஷ்டப்படுத்தக் கூடாதுன்னு நினைச்சுண்டிருந்தேன். இன்னிக்கு எப்படியோ என்னையும் மீறி வந்துடுத்து. ஆனால் நான் இப்படி அழுதது இதுவே கடைசித்தரமாக இருக்கும். இனிமேல் இப்படி இருக்க மாட்டேன்னு சுதாகருக்கு கையில் அடிச்சு சத்தியம் மாதிரி சொல்லியிருக்கேன். அதைக் காப்பாத்தியே ஆகணும். ஒரு நல்ல மனசுக்குக் கொடுத்த வாக்கை நிறைவேத்தணும். அதைக் கஷ்டப்படுத்திடக் கூடாது. அதனால இனிமேல நான் சாதாரணமாக இருப்பேன் யமுனா. என்னையும் கஷ்டப்படுத்திக்காமல் வேற யாரையும் கஷ்டப்படுத்தாமல் இருப்பேன். சந்தோஷமாகவும் இருக்கப் பார்ப்பேன். சிரிக்கவும் பழகிப்பேன். போறுமா யமுனா?...''

யமுனாவுக்கு அவளை அப்படியே சேர்த்துக் கட்டிக் கொள்ள வேண்டும் போலிருந்தது. 'இதுக்கு மேல எதுவும் சொல்லாதே ஜானகி, என்னால தாங்கிக்க முடியாது' என்று சொல்ல வேண்டும் போலிருந்தது. ஆனால் எதுவும் சொல்லவில்லை. அவள் கைவிரல்களை மட்டும் பற்றி மெதுவாக அழுத்தினாள். அவளைப் புரிந்து கொண்டவளாக ஜானகியும் அந்தக் கையை விடாமல் பற்றிக் கொண்டாள். அப்படியே சிறிது நேரம் இருந்தார்கள். பத்து நிமிஷம்வரை அதே மௌனத்தில் போயிற்று. தெருக்கோடியில் கூர்க்கா இரண்டாம் தடவையாய் தட்டிக் கொண்டு வருவது கேட்டது. பேசாமலேயே எழுந்து கதவை சாத்தித் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு வந்தார்கள்.

படுக்கப் போனபோது ஹால் கடிகாரம் இரண்டடித்து ஓய்ந்தது.

# 19

மறுநாள் காலையில் யமுனா எழுந்தபோது கொஞ்சம் நேரமாகி விட்டது. அவசரமாய்க் குளித்து, சாப்பிட்டு அவள் பஸ் ஸ்டாப்பை நெருங்கினபோது பஸ் போய்விட்டிருந்தது. அடுத்த பஸ் குறைந்தது இருபது நிமிஷங்களாவது ஆகும். அதனால் ஒரு ஆட்டோ பிடித்தாள். சரியாக லைப்ரரி நேரத்திற்குப் போய் விட்டாள். யமுனாவைப் பார்த்ததும் சுபாஷிணி சிரித்துக் கொண்டே அருகில் வந்தாள்.

''என்ன யமுனா. ஈஸ் தேர் எனி ச்சேஞ்ச்?'' என்று ஜானகியைப் பற்றிக் கேட்டாள்.

யமுனா ராத்திரி நடந்த பேச்சைப் பற்றிச் சொன்னாள். கடைசியில் ஜானகி சொன்னதையும் சொன்னாள். ஒரு புன்னகையோடு எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டிருந்த சுபாஷிணி, ''ஐ ஆம் ஸோ ஹேப்பி யமுனா!'' என்றாள்.

''ஐ ஆம் ஆல்ஸோ'' யமுனாவிற்கு சுதாகர் ஞாபகம் வந்தது.

இந்த சந்தோஷத்துக்கெல்லாம் காரணமான அவனைப் பார்க்க வேண்டும் என்று தோன்றியது. அதுவும் உடனே பார்க்க வேண்டும். ஆனால் அப்போது அவனோடு போனில் கூடப் பேச முடியாது. வேலை அவளை பாரமாக அழுத்திக் கொண்டிருந்தது. எப்போதுமே திங்கட்கிழமை காலையில் இப்படித்தான் லைப்ரரி நெரிசல் படும். எண்ட்ரி கௌண்டரில் க்யூ வரிசையாய் நீளும். திரும்பி வந்த புஸ்தகங்கள் குவிந்து போகும். ரிசர்வ் அலமாரியின் புஸ்தகங்கள் குறைந்து கொண்டே வரும்.

மத்தியானம் வரை யமுனாவிற்கு வேலை சரியாக இருந்தது. லஞ்ச் நேரத்தில் கொஞ்சம் ஓய்வு கிடைத்தது.

உடனே சுதாகருக்கு போன் பண்ணினாள். அவனுடைய அந்த 'ஹலோ'வைக் கேட்டதும் பதில் சொல்ல முடியாமல் நின்றாள். மனசுக்குள் சின்ன சிலிர்ப்பாக ஒன்று ஓடியது. அந்தப் பக்கத்திலிருந்து பதில் வராமற் போகவே அவள் மறுபடியும் ''ஹலோ, சுதாகர் ஹியர்!'' என்றான்.

''நான்தான் யமுனா பேசறேன்.'' -அவள் தன்னை சமாளித்துக் கொண்டு சொன்னாள்.

''லைன் சரியாக இல்லை போலிருக்கு யமுனா. முதல்ல நீ 'ஹலோ' சொன்னது கூடக் கேட்கலை...''

''நான் முதல்ல 'ஹலோ' சொல்லவே இல்லை.''

''சொல்லலையா? போன் பண்ணிட்டு பேசாமல் இருந்தால் எப்படி?''

''என்னால் பேச முடியலை.''

''பேசமுடியலையா? ஏன் யமுனா?'' அவன் குரல் கொஞ்சம் கவலையோடு ஒலித்தது.

''ஒண்ணுமில்லே. உங்களுக்கு எப்படித் தாங்க் பண்றதுன்னே புரியலே...''

''எனக்குத் தாங்க் பண்ணணுமா, எதுக்கு யமுனா?''

''இல்லே ஒரு வித்தைக்காரனோட லகாவத்தோட ஜானகிகிட்ட பேசி அவளுக்கு எல்லாத்தையும் புரிய வச்சதுக்காக.''

''அதுக்கு நீ எனக்குத் தாங்க் பண்ணணுமா? வாட் ஈஸ் திஸ்? அவ உன்னோட ஸிஸ்டர்னா எனக்கும் ஸிஸ்டர் தான். அதனால ஐ ஹேவ் டன் ஒன்லி மை ட்யூட்டி.''

அவள் மறுபடியும் பேசாமல் இருந்தாள்.

''என்ன யமுனா. சத்தத்தையே காணோம்!''



''உங்களோட இந்தப் பேச்சைக் கேட்கறப்போ மன செல்லாம் சிலிர்த்துப் போறது. அதனால உடனே பதில் சொல்ல முடியலே. என்ன பதில் சொல்றதுன்னும் தெரியலை...''

''லீவ் இட். இன்னிக்கு சாயங்காலம் பார்க்க முடியுமா சொல்லு?''

''எனக்கும் உங்களை அவசியம் பார்த்தாகணும்!''

''அப்போ அஞ்சு மணிக்கு வரட்டுமா...?''

''ம்...''

''ஸீ யு தென்.''

அவன் போனை வைத்து விட்டான். யமுனாவும் ரிஸீவரை வைத்து விட்டுத் திரும்பினபோது, கௌண்டர் பக்கத்தில் தயா நின்று கொண்டிருப்பதைப் பார்த்தாள்.

அவன் சிரித்துக்கொண்டே ''ஹலோ...'' சொன்னான்.

கண் அகல அவனை ஒருதரம் பார்த்தாள் யமுனா.

''எங்கே உங்களை இத்தனை நாளாகக் காணோம்?''

''வர சந்தர்ப்பப்படலே. ஆபீஸ்ல மூச்சுக்கூட விட முடியாமல் ஒரே வேலை. மனசெல்லாம் வெறுத்துப் போறது...''

''அப்படி வெறுக்காமல் இருக்க ஏதாவது பண்ணுங்க ளேன்!''-யமுனா சிரித்துக் கொண்டே சொன்னாள்.

''ஓ.எஸ்... பண்ணியாச்சு. அதைச் சொல்லிட்டுப் போகலாம்னுதான் வந்தேன். ஐ ஆம் கெட்டிங் மேரிட்.''

இது யமுனாவைக் கொஞ்சம் ஆச்சரியப்படுத்தியது. அவன் தன் காதல் தோல்வி பற்றி சொன்னது ஞாபகத்துக்கு வந்தது. கண் கலங்குகிற மாதிரி குரலில் ஒரு சோகம் தெரிய கையில் சிகரெட் புகையப் புகைய அவன் அந்த ராஜியைப் பற்றிப் பேசின வேகம்... இப்போ வந்து நின்று, 'ஐ ஆம் [illegible]''

கெட்டிங் மேரிட்' என்று குளுமையாய் சிரித்துக் கொண்டு நிற்கிற இந்தத் தோற்றம்... 'ஒரு வேளை இவன் கல்யாணம் பண்ணிக் கொள்ளப்போகிற பெண், அந்த ராஜிதானோ...?'

சிரித்துக் கொண்டே அவள், ''வெரி குட்; கன்கிராஜுலேஷன்ஸ்!'' என்றாள்.

''தாங்க்யு!''

''கடைசியில நீங்க ஜெயிச்சுட்டீங்கன்னு சொல்லுங்க...''

''எதுல...?''

''உங்க ராஜியைத் தேடிக் கண்டு பிடிக்கிறதுல...''

''இல்லே அந்தத் தோல்வி மட்டும் எனக்குள் ஏற்பட்ட நிரந்தரமான தோல்விதான்!''

''அப்படின்னா கல்யாணம் ராஜியோட இல்லையா?''

''இல்லை. அவ எனக்குக் கிடைக்கப் போறதில்லேன்னு நிச்சயமாகத் தெரிஞ்சப்புறம்-வாட் ஈஸ் தி யூஸ் ஆஃப் மை வெயிட்டிங்? தட் டு வென் ஐ பேட்லி வாண்ட் எ பார்ட்னர்...''

யமுனா ஒன்றும் சொல்லவில்லை. அவனே தொடர்ந்து பேசினான்;

''மனசு ராஜிக்காகக் காத்துண்டிருக்கலாம்னு நினைச்சாலும் பிஸிகலா முடியலை. எத்தனை நாள் இப்படியே ஹிம்ஸைப் படறதுன்னுதான் இந்த முடிவுக்கு வந்தேன். இப்போ நான் பார்த்திருக்கிற இந்த ஜெயலஷ்மி ரொம்ப சாதாரணமானவள். என்னைக் கேள்விகள் கேட்டுத் திணறடிக்காதவள். நான் ஆபீஸ்லேருந்து வர்றதுக்காகக் காத்துண்டிருந்து -வாங்கிண்டு வர்ற ரெண்டு முழ மல்லிகைப் பூவிலே திருப்திப் படறவள். ஒரு நைலக்ஸ் புடவையில் சந்தோஷமாகி என்னையும் சந்தோஷப்படுத்தக் கூடியவள்...''

யமுனா ஒரு லேசான புன்னகையோடு அவனையே பார்த்தாள்.

''என்ன பார்க்கறீங்க...?''



''ஒண்ணுமில்லே. கடைசியில் 'இண்டலெக்ட்'டுன்னு சொல்லிக்கிற நீங்கள்லாம்கூட இப்படித்தானே பேசறீங்க!''

''வேற வழி இல்லே...''

''வழி இல்லாமல் இல்லை. கொஞ்சம் புத்திசாலியா இருக்கிற பெண்களைப் பார்த்தால் உங்களுக்குப் பயமாக இருக்கு.''

''எஸ்!''

அந்த 'எஸ்' அவளைக் கொஞ்சம் அயர அடித்தது.

''என்ன?'' என்று லேசாகப் புருவங்கள் சுருங்க அவனைப் பார்த்தாள்.

''ஆமாம். எனக்குக் கேள்விகள் கேட்டு என்னை சங்கடப்படுத்தற பெண் அவசியமில்லே. புத்திசாலித்தனம் தேவை இல்லே. அதெல்லாம் வெறும் சினேகிதமா இருக்கிறதுன்னா சரிதான். கல்யாணம் பண்ணிக்க லாயக்குப் படாது. சந்தோஷமா குடும்பம் நடத்தணும்னா மூளையைவிட கொஞ்சம் மக்குத்தனம்தான் சரியா இருக்கும். என்னோடது சாதாரணமான பிராமணக் குடும்பம். அந்தமாதிரி குடும்பங்கள்லே இருக்கற எல்லாக் கஷ்டங்களும் என் குடும்பத்துலேயும் இருக்கு. வீட்டுக்கு மூத்த பையன் நான். எனக்கப்புறம் கல்யாணத்துக்கு ரெண்டு தங்கை இருக்கா. எஸ்.எஸ்.எல்.சி முடிச்சுட்டு வீட்டுலேயே இருக்கா. வக்கிரம் பிடிச்சுப் போய் எப்போப் பார்த்தாலும் சிடுசிடுத்துண்டு-குழம்புல ஒரு கல் உப்பு தூக்கலானாக்கூட 'ஓ'ன்னு இறைஞ்சுண்டிருக்கிற ரிடையர்ட் ஆன அப்பா இருக்கார். பிள்ளைக்கு வரதட்சணை வாங்கி அந்தப் பணத்துல ரெண்டு பெண் கல்யாணத்துக்கும் நகைகள் பண்ணி வச்சுடணும்கிற பேராசையோடு இருக்கார். அமாவாசை, கிருத்திகை, சனிக்கிழமை, ஏகாதசின்னு ராத்திரி டிபனுக்கு தோசைக்கும், இட்லிக்கும் ஒட்ட ஒட்ட மாவு அரைச்சு அரைச்சுப் போடற நாட்டுப்பெண் வேணும்னு

நினைக்கிற அம்மா இருக்கா. இவா இத்தனை பேரையும் நான் சரிக்கட்டிண்டு போகணும். அவாளைத் திருப்திப் படுத்தியாக ணும். அதெல்லாம் ஒரு சாதாரணப் பெண்ணாக இருந்தால் தான் முடியுமே தவிர வேற எந்தப் பெண்ணாலும் முடியாது. அந்தக் குடும்பத்தை விட்டு என்னால பிச்சுண்டும் போயிட முடியாது. அப்படி இருக்கிறபோது வேற என்ன செய்ய முடியும் சொல்லுங்கோ?'' என்றான் தயா.

தயாவின் பேச்சைக் கேட்டபோது சட்டென்று யமுனாவின் மனசில் ஒரு சோகம் கவிழ்ந்து கொண்டது. அவனைப் பார்த்தபோது பாவமாக இருந்தது. அந்த 'என்ன செய்ய முடியும் சொல்லுங்கோ?' அவளைப் பாரமாக அழுத்திற்று. ஆனாலும் அதையெல்லாம் வெளிக்காட்டாமல் மெல்ல மனசைத் தொடுகிற மாதிரி சிரித்துக் கொண்டே அவனைப் பார்த்தாள்.

''நீங்க எப்போ வாழ்க்கையை அதன் நிஜங்களோட அப்படியே 'அக்ஸெப்ட்' பண்ணிக்கறதுன்னு முடிவு பண்ணீங்களோ அப்ப அதை சந்தோஷமா ஏத்துக்கணும்கிற முடிவுக்கும் வரணும்.''

''சந்தோஷமா ஏத்துண்டுதான் கல்யாணம் வரைக்கும் வந்திருக்கேன். அவளையும் சந்தோஷப்படுத்தி-என்னையும் சந்தோஷமா வச்சுக்க எனக்குத் தெரியும் யமுனா!''

''அப்படின்னா ஐ ஆம் ஆல்ஸோ ஹேப்பி எபௌட் இட் மிஸ்டர் தயா!''

''தேங்க்யு. பை தி பை மிஸ்டர் சுதாகர் எப்படி இருக்கார்?''

''ஓ எஸ். ஹி ஈஸ் பைன்.'''

''அவரைக் கேட்டதாகச் சொல்லுங்கோ. அவருக்கும் ஒரு இன்விடேஷன் தரேன். கட்டாயம் ரெண்டு பேரும் வந்துடணும்!''



''வராமல் இருப்போமா? மாப்பிள்ளை அழைப்புக்கே வந்துடறோம்!''

''அப்ப கிளம்பட்டுமா?'' என்று எழுந்து நின்ற அவன் கொஞ்சம் தயங்கியபடி கேட்டான்:

''உங்க கல்யாணம் எப்போ இருக்கும்னு தெரிஞ்சுக்கலாமா?''

''ஓ.எஸ். அனேகமா அடுத்த மாசம் பத்தாம் தேதி இருக்கலாம்!''

''அப்படியா? பத்திரிகை அனுப்ப மறந்துடாதீங்கோ...''

''நோ...நோ. மறக்கவே மாட்டேன்.''

பின் அவன் போவதைப் பார்த்துக் கொண்டு பேசாமல் நின்றாள் அவள்.

# 20

**ஆ**காசவாணி செய்தியறிக்கையைச் சொல்லிக் கொண்டிருந்தது. இந்த பட்ஜெட்டில் விலை உயர்ந்த பொருட்களை வரிசைப்படுத்திக் கொண்டிருந்தது.

''பெட்ரோல் திரும்பவும் விலையேறி இருக்குப்பா. லிட்டருக்குப் பதிமூணு பைஸா கூடியிருக்கு...''-என்று சொல்லிக் கொண்டே வராந்தாவுக்கு வந்த யமுனா அந்த வெள்ளை ஒல்க்ஸ் வாகனைப் பார்த்து விட்டாள். சுதாகர் தானே கீழே இறங்கி கேட்டைத் திறந்து கொண்டிருந்தான். போர்ட்டிகோவின் கோலத்தைக் கலைக்காமல் சற்று முன்னாலேயே காரை நிறுத்தினான். அப்பாவுக்கு 'ஹலோ' சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான்.

''என்ன சுதாகர் இவ்வளவு கார்த்தாலே வந்திருக்கே?''

''முக்கியமான ஒரு வேலையா வந்திருக்கேன்.''

'என்ன' என்கிறாற் போல் அப்பா அவனைப் பார்த்தார்.

''ஜானகிக்கு என்னுடைய ஆபீஸிலேயே ஒரு வேலை வாங்கிக் கொடுக்கறதா முடிவு பண்ணி இருக்கேன். இன்னிக்குக் கூடவே அழைச்சுண்டு போய் எல்லாத்தையும் சொல்லிக் கொடுத்து அப்பாயிண்ட்மெண்ட் பண்ணிடலாம்னு நினைச்சுண்டிருக்கேன்.''

அப்பா சட்டென்று மௌனமானார். ஒன்றும் பேச வில்லை. பேச முடியவில்லை... என்ன பிள்ளை இவன்! என்று சந்தோஷப்பட்டுக்கொண்டிருந்தார். எந்த ஜென்மத்திலோ இவன் எனக்குப் பிள்ளையாகப் பிறந்திருக்கணும் என்று நினைத்துக் கொண்டார். ஒரு நிமிஷம் கழித்து,

''அழைச்சுண்டு போயேன். இதோ ஜானகியைக் கூப்பிடறேன். நீயே சொல்லு...''என்றார்.

அவர் கூப்பிட்ட உடனே ஜானகி வந்தாள். சுதாகரைப் பார்த்துப் புன்னகை செய்தாள். பின் 'என்னப்பா?' என்று அப்பாவிடம் கேட்டாள்.

''சுதாகர் என்னவோ சொல்றார் பாரும்மா. உன் மனசுக்கு சம்மதப்பட்டுப் போக இஷ்டம்னா போம்மா?''

''எங்கேப்பா...?''

''என்னோட ஃபேக்டரிக்குத்தான்! ஃபேக்டரின்னா அதனோட ஆபீசுக்கு. அங்கே உங்களுக்கு ஒரு வேலை காலியிருக்கு. இப்படி எத்தனை நாளைக்கு வீட்டு வேலையை செஞ்சுண்டு போரடிச்சுண்டு இருப்பீங்கன்னு, இப்படி ஒரு ஏற்பாடு பண்ணியிருக்கேன்...!''

ஜானகி பேசாமல் நின்றாள். மீண்டும் சுதாகரே சொன்னான்:

''இதுல உங்களுக்கு விருப்பமில்லைன்னா, நான் வற்புறுத்த இஷ்டப்படலே.''



அவள் அதற்குப் பதில் சொல்லாமல் அப்பாவைப் பார்த்தாள். ''என்னப்பா?'' என்று கேட்டாள்.

''உனக்கு இஷ்டம்னால் போம்மா...''

''இஷ்டம்தாம்ப்பா!''

''அப்படின்னா குளிச்சுட்டு டிரஸ் மாத்திண்டு கிளம்பும்மா''

''இதோ'' என்று அவள் உள்ளே போனாள். அதற்குள் யமுனா காபி கொண்டு வந்தாள். அவர்கள் காபி குடித்து முடிப்பதற்குள் ஜானகி புடவை மாற்றிக் கொண்டு பளிச்சென்று வந்தாள். வெள்ளை ஆர்கண்டி புடவையும், அதன் சிவப்பு நிற ரோஜாப் பூக்களும் அவளுக்கு அழகாகப் பொருந்திப் போனதைக் கவனித்தான் சுதாகர். இப்போ தெல்லாம் அவள் யமுனா மாதிரி மாறிக்கொண்டு வருவதாக நினைத்தான். அதே மாதிரி கம்பீரம்-அதே அளவான பேச்சு-யாரையும் தள்ளி நிறுத்திப் பழகுகிற சாமர்த்தியம். எத்தனை விஷயங்களைக் கற்றுக்கொண்டு விட்டாள் என்று நினைத்தான். எவ்வளவு சீக்கரம் தெரிந்து கொண்டு விட்டாள்!

காரில் போனபோது அவன் அவள் செய்ய வேண்டிய வேலைகளை விளக்கிச் சொன்னான். தன்னுடைய ஆபீஸ் பற்றி சொன்னான். மற்றவர்களிடம் பழக வேண்டிய விதத்தை விளக்கினான். பின் அவள் வேலை பார்த்துக் கொண்டே மேலே படிக்க வேண்டும் என்பதையும் வற்புறுத்தினான்.

''இதுக்கு மேல எனக்கு படிப்பு எப்படி வரும்?''என்று சந்தேகமாகக் கேட்டாள் அவள்.

''வரும்; வரணும். எதுலயும் ஒரு நெகடிவ் அப்ரோச்சே இருக்கக்கூடாது ஜானகி. எதுவும் நம்பளால் முடியும்; முடியணும்னு நினைச்சுக்கணும்.''

''சரி, நினைச்சுக்கறேன்.''

''அப்புறம் இன்னொரு விஷயம். கூடுமானவரைக்கும் வேலையில் தப்பு இல்லாமல் பார்த்துக்கணும். அப்படியில்லாமல் நீங்க ஏதாவது தப்பு பண்ணினால், 'எனக்கு வேண்டியவங்க...அதனால எந்தத் தப்புப் பண்ணினாலும் நான் கண்டுக்க மாட்டேன்'னு யாரும் பேசிடக் கூடாது.''

''புரியறது.''

கார் ஒரு பெரிய கட்டிடத்தின் முன்னால் நின்றது. ''வாங்க''என்று அவளை அழைத்துக்கொண்டு இறங்கினான். வாசல் கூர்க்காவிலிருந்து எதிரில் வந்த எல்லாரும் அவனுக்கு விஷ் பண்ணினார்கள். அவனும் பதிலுக்கு விஷ் பண்ணிவிட்டு ஒரு பெரிய ஹாலின் கண்ணாடிக் கதவைத் தள்ளிக் கொண்டு உள்ளே போனான். லிஃப்டில் ஏறி நாலாவது மாடியில் இருந்த ஆபீசுக்குள் நுழைந்தான். தன்னுடைய ஏர்-கண்டிஷன் அறைக்குப் போனதும் அவளை உட்காரச் சொல்லி பஸ்ஸரை அழுத்தினான். காரியதரிசியை வர வழைத்து ஜானகியை அவரோடு அனுப்பினான்.

''அக்கௌண்டெண்ட் கிட்ட சொல்லி இவங்களை சாரதாம்பாள் ஸீட்ல உட்கார வையுங்க. வேலைக்குப் புதுசு. அதனால பொறுமையா நிதானமா எல்லாத்தையும் கத்துக்கொடுக்கச் சொல்லுங்க.''

அக்கௌண்டெண்ட் நாயுடு அவளை எல்லாருக்கும் அறிமுகப்படுத்தினார். ஒவ்வொன்றாய்ப் பொறுமையாய் சொல்லிக் கொடுத்தார். அவள் எல்லாவற்றையும் சுலபமாய்ப் புரிந்து கொண்டாள். லெட்ஜரில் டோட்டல் போடத் தொடங்கினாள். பைலில் ஒவ்வொரு கடிதமாகப் பார்த்து கிளிப் பண்ணினாள். ஸ்டேட்மெண்ட்களைத் தயாரிக்க ஆரம்பித்தாள்.

ஒரு பார்வையிலேயே அவளுக்கு அந்த ஆபீசும்-அதன் மனிதர்களும் பிடித்துப் போயிற்று. எல்லாரும் கம்பீர



மானவர்களாக இருந்தார்கள். பார்வையும் பேச்சும் கண்ணியமாக இருந்தது. அவர்களோடு வேலை செய்வது சுலபமாக இருக்கும் என்று தோன்றியது. சுவாரஸ்யமாகவும் இருந்தது. மனசுக்குள் சுதாகருக்கு நன்றி சொல்லிக் கொண்டாள். அவன் சொன்ன மாதிரி மனதைத் திறந்து வைத்துக் கொண்டால் எத்தனை விஷயங்கள் புரிகின்றன! எவ்வளவு அழகுகள் தெரிகின்றன! வாழ்க்கை எப்படி சுலபமானதாக இருக்கிறது...

சாயந்திரம் பஸ் பிடித்து வீட்டுக்குப் போன போது வாசல் வராந்தாவில் யமுனா உட்கார்ந்து கொண்டிருப்பதைப் பார்த்தாள். எதிரில் பிரம்பு நாற்காலியில் மணி உட்கார்ந்திருப்பதையும் பார்த்தாள். அவளைப் பார்த்ததும் மணி புன்சிரிப்பாகச் சிரித்தான். சிரித்துவிட்டு 'குட் ஈவினிங்' சொன்னான். பதிலுக்கு ஜானகியும் 'குட் ஈவினிங்' சொன்னாள்.

''வேலையெல்லாம் எப்படி இருந்தது?'' என்று கேட்டாள் யமுனா. ஜானகி அவளெதிரில் ஒரு கூடை நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தபடி, ''ரொம்ப இன்ட்ரெஸ்டிங்கா இருக்கு யமுனா! ச்சேலன்ஜிங் காகக்கூட இருக்கு. எனக்குப் பிடிச்சிருக்கு'' என்றாள்.

அந்த பதில் யமுனாவை சந்தோஷப்படுத்தியிருக்க வேண்டும். அது அந்தச் சிரிப்பில் தெரிந்தது. அந்த சிரிப்புடன், ''உனக்குக் காபி கலந்துண்டு வரட்டுமா?'' என்று கேட்டாள்.

''இப்ப வேணாம். வேணும்னால் நானே கலந்துக் கறேன். நீ பேசிண்டிரு''என்றாள்.

''இவர் நாளைக் காலையில் பெங்களூருக்குப் போகிறார். அதனால சொல்லிண்டு போகலாம்னு வந்திருக்கார்...''

''அப்படியா?'' என்று அவனைப் பார்த்தாள் ஜானகி. ''எதுல போறீங்க, பிருந்தாவன் எக்ஸ்பிரஸ்லயா...?''

''ஆமாம்ங்க. உங்களையெல்லாம் விட்டுட்டுப் போறதுனால கஷ்டமா இருக்குங்க. அதுலயும் உங்க தங்கச்சி வீட்டுக்காரருக்காகவாவது மெட்ராஸை விட்டுப் போகக் கூடாதுன்னு தோணுது!''

''அடடே, இப்பவே அவர் அவ வீட்டுக்காரரா யிட்டாரா? அடுத்த மாசம் பத்தாம் தேதி தாங்க கல்யாணம்'' என்று சிரித்தாள் ஜானகி.

''கல்யாணம் என்னங்க பெரிய விஷயம்? இந்த மாதிரி மனசு பொருந்திப் போறதுதாங்க பெரிய விஷயம்...''

அது உண்மை தான் என்று பட்டது ஜானகிக்கு. எத்தனை பெரிய விஷயத்தை எவ்வளவு சுலபமாகச் சொல்லி விட்டான் இவன்...!

''அப்போ நான் வரட்டுமா...?'' என்று எழுந்து நின் றான் அவன். யமுனாவும் ஜானகியும் கூட எழுந்து கொண்டார்கள்.

''அப்பாகிட்டே சொல்லிடுங்க. அவரைத்தான் பார்க்க முடியலை...''

''நாங்க சொல்றோம்.''

''பெங்களூருக்கு வந்தால் நான் ஒருத்தன் இருக்கேங் கறதை மறந்துடாதீங்க...''

''மறக்க முடியுமா என்ன?'' என்று புன்னகை செய்தாள் யமுனா.

''தவறாமல் கல்யாண இன்விடேஷன் அனுப்புங்க. ஒரு வாரத்துக்கு முன்னாடி அனுப்புங்க. முன்னாலேயே வந்துடறேன்.''

அதன் பின் யமுனாவும் அவனோடு வாசல்படிவரை போனாள். '' வீ விஷ் யு ஆல் யு விஷ்'' என்று சிரித்துக் கொண்டே சொன்னாள்.



அவனும் சிரித்தபடி மெதுவாக நடந்து சத்தப் படுத்தாமல் கேட்டைத் திறந்தான். வெளியில் போய் தாழ்ப்பாளைப் போட்டுவிட்டு மெல்ல நடந்தான்.

காம்பௌண்ட் சுவரில் அவன் தலை மறைகிற வரை நின்று பார்த்து விட்டுத் திரும்பி உள்ளே போனாள் யமுனா.

# 21

இன்றைக்கு சீக்கிரம் விழிப்பு வந்து விட்டது. இன்று மட்டுமில்லை; தினமும் இப்படித்தான். கல்யாணமாகி யமுனா சுதாகரின் வீட்டுக்குப் போனதிலிருந்து ஒவ்வொரு நாளும் இப்படித்தான். ராத்திரி மணி ஒன்றுக்கும், இரண்டுக் கும் தூக்கம் கலைந்து போகிறது. பார்வை சட்டென்று பக்கத்துப் படுக்கைக்குத் திரும்புகிறது. அது காலியாய் கிடப் பதைப் பார்த்ததும் யமுனா இல்லை என்பது ஞாபகத்துக்கு வருகிறது. மனசில் ஒரு பள்ளம் விழுந்த மாதிரி சட்டென்று வெறுமையாகிறது. அந்த வெறுமை அடங்க இன்னும் கொஞ்ச நாளாகும் என்று தோன்றியது.

யமுனா போய் கிட்டத் தட்ட இரண்டு மாசமாகிறது. ஆனாலும் நேற்றுதான் அவள் வீட்டை விட்டுப் போன மாதிரி இருக்கிறது. சுதாகரோடு அப்பா காலில் விழுந்து நமஸ் கரித்து-'நீங்களும் ஜானகியும் மட்டும் எதுக்காகப்பா தனியா இருக்கணும்? கூட வாங்களேன்பா! அவர்தான் இத்தனை தடவை கூப்பிடறாரே! அவரோட அம்மாவும் டாக்டரும் கூட வந்து சொல்லிட்டுப் போனாளேப்பா... வாங்கப்பா...' என்று அவள் கெஞ்சிக்கொண்டு கண் கலங்க நின்றது-அப்பா அவள் தலையை மெல்ல வருடி, 'என்னம்மா நீ, குழந்தை மாதிரி பேச ஆரம்பிச்சுட்டே. நான் என்ன காத தூரத்திலயா இருக்கேன்...? நினைச்சுண்டால் பத்து நிமிஷத்துல உன்னைப் பார்க்க வந்து

நிற்பேன். இதுக்குப் போய் அழலாமா? கண்ணைத் துடைச்சுண்டு சமர்த்தாகக் கிளம்பும்மா...' என்று சமாதானப் படுத்தினது எல்லாம் நேற்று நடந்த மாதிரி தான் இருக்கிறது. இதற்குள் இரண்டு மாசம் ஓடிப்போனதை நம்பத்தான் முடியவில்லை.

இந்த இரண்டு மாசத்திற்குள் யமுனா நிறைய தரம் வீட்டுக்கு வந்து விட்டாள். அவள் வருகிற சமயத்தில் வீடு கலகலப்பாகும். சிரிப்பு சத்தம் கேட்கும், ' நீ நகரு ஜானகி... இன்னிக்கு நான் காபி போட்டுத் தரேன்' என்று காபியைக் கலந்து கொடுப்பாள். 'உனக்குப் பிடிக்குமேன்னு கொண்டு வந்தேன். இன்னிக்கு சமையற்கார மாமி திரட்டுப் பால் கிளறினார்' என்று ஒரு ஸ்பூன் எடுத்துக் கையில் வைப்பாள். 'சீக்கிரம் கிளம்பு. மூணு டிக்கெட் ரிசர்வ் பண்ணிட்டேன்...' என்று வற்புறுத்தி சினிமாவுக்கு அழைத்துக் கொண்டு போவாள். அந்தப் பிரியத்தில் மனசும் உடம்பும் அழுந்திப் போகும். விழியோரம் லேசாக நனையும். யமுனா வராத நாட்களில் வீடும் மனசும் வெறிச்சிடும். அதைப் புரிந்து கொண்டு தானோ என்னவோ அப்பா அவளை பீச் வரை வாக்கிங்கிற்கு அழைத்துக் கொண்டு போவார். ஏதேதோ பேசிக் கொண்டே நடப்பார். இவள் வெறுமனே தலையை மட்டும் ஆட்டுவாள். இல்லாவிட்டால் 'உம்'கொட்டுவாள். காந்தி சிலை வரை நடந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினதும் அப்பா சாப்பிட்டு முடித்துப் படுக்கப் போய் விடுவார். பத்து நிமிஷத்துக்கெல்லாம் தூங்கியும் போவார்.

ஆனால் ஜானகிக்குத் தூக்கம் வராது. அவளுடைய தூக்கமெல்லாம் போய் எத்தனையோ நாளாகிவிட்டது. அப்படியே தூங்கினாலும் அது அயர்ந்த தூக்கமாக இருப்பதில்லை. அந்தத் தூக்கம்கூட இப்படி நடுராத்திரியில் கலைகிற போது ஜன்னலுக்கடியில் முழங்காலைக் கட்டிக் கொண்டு உட்கார்ந்திருப்பாள். அந்த இருட்டை வெறித்துக் கொண்டு, தென்னையின் சலசலப்பையும்-எங்கோ போகிற கார்



ஹாரனின் ஓசையையும் கேட்டுக் கொண்டு மணிக்கணக்கில் உட்கார்ந்திருப்பாள்.

அப்படி உட்கார்ந்திருக்கிற போது, சில சமயம் அவன் ஞாபகம் வரும். அந்த உயரமும்-நிறமும்-நெற்றியை மறைக்கிற முடியும்-கண்களும்-முகம் முழுசும் சிரிக்கிற மாதிரி தோன்றுகிற சிரிப்பும்...' எப்படிச் சிரித்தான் அவன்! எவ்வளவு பேசினான்! 'ஜானு.. ஜானு' என்று எத்தனை உரிமையோடு கூப்பிட்டான்! அவனா? அவனா இப்படிச் செய்தான்? ஒருவேளை இப்படிச் செய்வதற்காகவே அப்படி நடந்து கொண்டானோ? சிரித்துக் கொண்டே இவ்வளவையும் செய்து விட்டானே? எப்படி முடிந்தது அது? முகம் முழுசும் சிரிப்பும்-மனசு நிறைய...

இது என்ன ஞாபகம்? நினைக்கவே கூடாது என்று எத்தனை பிடிவாதமாக இருந்தாலும் இது எப்படி இப்படித் திருட்டுத்தனமாக எட்டிப் பார்க்கிறது? கூடாது. இனிமேல் அவன் ஞாபகமே வரக்கூடாது. அப்படி வருகிற போதெல்லாம் அப்பா சொன்ன மாதிரி 'ராமஜெயம்' சொல்லணும். மனசைத் துடைச்சு சுத்தமாக வச்சுக்கணும். ஆகாசம் மாதிரி நிர்மலமா இருக்கணும். எப்போதாவது அவனைப் பார்க்கிற சந்தர்ப்பம் ஏற்பட்டால்கூட சிரிச்சுண்டே, 'ஹலோ' சொல்கிற பக்குவம் வரணும்...'

அவள் ஜன்னலை விட்டுப் படுக்கைக்குப் போனாள். கழுத்துவரை இழுத்துப் போர்த்திக் கொண்டு, 'ராமா ராமா' என்று சொல்ல ஆரம்பித்தாள். நூற்றுப் பத்துவரை விரல் விட்டு எண்ணிக் கொண்டே வந்தாள். பின் மெல்ல அப்படியே தூங்கிப் போனாள்.

காலையில் ஐந்து மணிக்கு அலாரம் அடித்தபோதுதான் மறுபடியும் விழிப்பு வந்தது. முகத்தை மட்டும் அலம்பிக் கொண்டு, புடவைத் தலைப்பை இழுத்துப் போர்த்திக் கொண்டு பாலுக்குக் கிளம்பினாள். வாசல் கதவைத் திறந்ததும்

சில்லென்று காற்று முகத்தில் அடித்தது. மார்கழிக் குளிர் உடம்பை நடுக்கியது. பக்கத்துக் காம்பௌண்ட் ஓரத்திலிருந்து மரமல்லிகை வாசனை வந்தது. கேட் பக்கத்தில் கொத்துக் கொத்தாய் அரளி பூத்திருந்தது. பக்கத்திலேயே நத்தியாவட்டை நட்சத்திரங்கள் மாதிரி பளிச்சிட்டது.

தூரத்துக் கோவிலிலிருந்து திருப்பாவை இசைத்தட்டு கேட்டது. உடனே அவளுக்கு யமுனாவின் ஞாபகம் வந்தது. யமுனாவிற்குத்தான் இந்தக் குளிரும் இருட்டும் பிடிக்கும். அரளியும் நந்தியாவட்டையும் கண்ணில் படும். நட்சத்திரங்களின் சிமிட்டல் புரியும். இப்போதெல்லாம் தனக்கும் இதெல்லாம் மெதுவாகப் புரிவதை நினைத்துக் கொண்டாள். ஒவ்வொன்றாய் ரசிக்க வருவதை தெரிந்து கொண்டாள். 'தான் யமுனா மாதிரியே மாறிக் கொண்டு வருகிறோமோ' என்று தோன்றியது.

அவள் போனபோது, 'பால் பூத்'தில் இருந்த அந்தக் கிழவன் இருமிக் கொண்டிருந்தான். இருமி ஓய்ந்ததும் அவளைப் பார்த்துச் சிடுசிடுத்தான். பால் பாட்டில்களை ஓசைப் படும்படி 'டங்டங்' என்று வைத்தான். பாட்டில்கள் உடைந்து விடுமோ என்று அவளுக்குப் பயமாக இருந்தது. சட்டென்று மணியின் ஞாபகம் வந்தது. அந்தச் சிரிப்பும், குழந்தை முகமும், மரியாதையாகச் சொல்கிற 'குட் மார்னிங்'கும்... எத்தனை பேருக்குத் தாங்கள் செய்கிற வேலையை அழகாகச் செய்யத் தெரிகிறது? எந்தச் சலிப்புமில்லாமல் சந்தோஷமாகச் செய்ய வருகிறது?

வீட்டுக்கு வந்ததும் 'மடமட'வென்று, பில்டரில் பொடியைப் போட்டுத் தட்டினாள். பாலைக் காய்ச்சி இறக்கினாள். இரண்டு தம்ளர்களில் காபியைக் கலந்தாள். அப்பாவை எழுப்பி அவர் பல் தேய்த்துக் கொண்டு வந்ததும், ஒரு தம்ளரைக் கொடுத்து விட்டுத் தானும் குடித்தாள். பின் குக்கரை வைத்து முடித்து குளிக்கப் போனாள். குளித்து விட்டு வந்ததும் கை 'பரபர'வென்று வேலை பார்த்தது. சாம்பாரை



பால். பாத்திரத்தையும் கொதிக்க வைத்து இறக்கியது. சின்ன உருளைக்கிழங்கை முழுசாய் வேகவைத்து உரித்துக் கறி பண்ணியது. மத்தியான டிபனுக்கு சப்பாத்தி பண்ணி அப்பாவுக்கும், தனக்குமாய் இரண்டு பொட்டலங்களைக் கட்டி வைத்தது. பின் தலை வாரி, புடவையை மாற்றிக் கொண்டு வந்தபோது அப்பாவும் டிரஸ் பண்ணிக்கொண்டு வந்தார். இரண்டு பேரும் ஒன்றாகச் சாப்பிட்டார்கள். வீட்டைப் பூட்டிக்கொண்டு கிளம்பினபோது,

''இன்னிக்கு கிளப்புக்கு போகலாம்னு இருக்கேன். நீயும் வரியாம்மா?'' என்று கேட்டார் அப்பா.

''இல்லேப்பா! இன்னிக்கு கொஞ்சம் வேலை அதிகம் இருக்கும்னு நினைக்கறேன். அதனால நீங்க போயிட்டு வாங்கப்பா...''

''சரிம்மா. நான் வரேன்...'' என்று காரில் ஏறிக் கொண்டார் அவர்.

அவள் பஸ் ஸ்டாப்பை நோக்கி நடக்க ஆரம்பித்தாள். யமுனா மாதிரி அவளும் பஸ்ஸில்தான் போகிறாள். தன்னுடன் காரில் வரும்படி அப்பா அவளை இரண்டு மூன்று தரம் கேட்டுப் பார்த்தார். அதற்கு மேலும் வற்புறுத்த இஷ்டப் படாமல் விட்டு விட்டார்.

அவள் பஸ் ஸ்டாப்பை நெருங்கினதும் அவளுடைய பஸ்ஸும் ஊர்ந்து கொண்டு வந்து நின்றது. முன்பு மாதிரி இல்லாமல் இந்த பஸ் அழகாக இருந்தது. அகலமாய் விசாலமாய் இருந்தது. சிவப்பு நிறமில்லாமல் கண்ணுக்குக் குளிர்ச்சியான நீலத்தில் பளபளத்தது. அவள் ஏறி உட்கார்ந்ததும் கண்டக்டர் சில்லறை கொடுத்தார். சிரித்துக் கொண்டே முப்பது பைசா டிக்கெட் ஒன்றைக் கிழித்துக் கொடுத்தார். பின் அதே சிரிப்போடு மற்றவர்களுக்கு டிக்கட் கொடுக்கப் போனார். அவள் ஜன்னல் வழியாக வெளியில் பார்த்துக் கொண்டு வந்தாள். தினமும் பார்க்கிற அதே காட்சிகள், கட்டடங்கள்

தான்! ஆனாலும், ஒவ்வொரு நாளும் அலுக்காததாகத் தெரிகிறது. பார்வைக்குப் புதுசாய் ஏதாவது ஒன்று படுகிறது. இந்த பஸ் பிரயாணம் மிகவும் சுவாரஸ்யமானதுதான்! எத்தனை தரம் போனாலும் அலுக்காததுதான்...

அவள் தன்னுடைய ஸ்டாப்பிங்கில் இறங்கி ரோடைக் கடந்து எதிர்ப்பக்கம் போனாள். ஆபீசுக்குள் நுழைந்து 'லிப்ட்' பட்டனை அழுத்தி விட்டுக் காத்துக் கொண்டிருந்தாள். கீழே இறங்கின 'லிஃப்டி'லிருந்து அக்கௌண்ட்டெண்ட் நாயுடு வெளியில் வந்தார். இவளைப் பார்த்ததும்,

''மிஸ் ஜானகி... நான் லீவு போட்டுட்டு அவசரமா வீட்டுக்குப் போறேன். என் டாட்டரை டெலிவரிக்கு ஆஸ்பத்திரியிலே அட்மிட் பண்ணியிருக்கு. இன்னிக்கு நீங்க கொஞ்சம் செக்ஷனைக் கவனிச்சுக்கோங்க'' என்று சொல்லிக் கொண்டே நகர்ந்தார்.

அவள் மீண்டும் 'லிப்ட்' பட்டனை அழுத்தி-அது கீழே வந்ததும் ஏறிக் கொண்டாள். எல்லாருக்கும் 'குட்மார்னிங்' சொல்லிக் கொண்டே தன் ஸீட்டுக்குப் போனாள். மேஜையை சுத்தம் பண்ணி டைப்ரைட்டரின் உறையைக் கழற்றினாள். காகிதங்களை கார்பனோடு செருகி ஃப்ரம்-டு எல்லாம் அடித்து, 'டியர் ஸார்' என்று அன்றைய முதல் கடிதத்தை டைப் பண்ண ஆரம்பித்தாள்...

**முற்றும்**